# நல்லைக் குமரன் மலர்

# 1999



வெளியீடு :

யாழ்ப்பாண மாநகராட்சிமன்ற சைவ சமய விவகாரக்குழு

University of Jaffna
235.505
NAL
132129(AR; Main)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லைக் குமரனுக்கு அரோகரா !
நல்லையம்பதி முருகனுக்கு அரோகரா ! !
நடன முருகனுக்கு அரோகரா ! ! !

## மக்கள் தந்த மனமுவந்த ஆதரவில்



# ராஜா கிறீம் ஹவுஸ்

இத்தனை நீண்ட காலமாக நாம் நிலைத்து
நிற்பதற்கு எமது தயாரிப்புக்களின்
தரம் உயர்வே காரணம்

எமது ஐஸ்கிறீம் தயாரிப்புக்களுக்கு என்றும் முதல்தரமான பால்மா, சீனி மற்றும் உலகப் புகழ்பெற்ற இலண்டன் புஸ்போக் (Bush boke) கம்பனியாரின் உணவுத் தயாரிப்புக்களுக்கு பாவிக்கப்படும் வகையறாக்களை மட்டுமே பயன்படுத்துகிறோம்.

எக்காலத்திலும் இதில் மாற்றம் செய்யப்படுவதில்லை.

மேலும் எமது தயாரிப்புகளை குழந்தைகள் முதல் பெரியோர் வரை அருந்துவதால் நீங்கள் என்றும் சுகதேகிகளாக இருப்பீர்கள்.
காரணம் ! சுத்தம், சுகாதாரம் இவையே
எமது ஸ்தாபனத்தின் முதன்மையான நோக்கம்.

## ராஜா கிறீம் ஹவுஸ்

**இல. 36, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

கிளை:

இல. 64, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
குமாராய நம

235-505
NAL
AR
2007




ARCHIVES
REFERENCE
ARCHIVES
UNIVERSITY OF JAFFNA ★ LIBRARY ★

# நல்லைக் குமரன் மலர்

# 1999

பதிப்பாசிரியர்:
நல்லையா விஜயசுந்தரம்
B. A. (Spe. in Eco.)

132129
132129

சைவசமய விவகாரக் குழு
மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்.

University of Jaffna
132129
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்
மாநகராட்சி மன்றத்தின்

# சைவசமய விவகாரக்குழு உறுப்பினர்கள் - 1999

காப்பாளர்:
**திரு. வே. பொ. பாலசிங்கம்**
மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்

தலைவர்:
**வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரன்**
சுகாதார வைத்திய அதிகாரி,
மாநகராட்சி மன்றம், யாழ்ப்பாணம்.

கௌரவ செயலாளர்:
**திரு. இ. இரத்தினசிங்கம்**
பொதுசனத்தொடர்பு உத்தியோகத்தர்,
மாநகராட்சி மன்றம், யாழ்ப்பாணம்.

கௌரவ பொருளாளர்:
**திரு. து. சோமசுந்தரம்**
சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்,
மாநகராட்சி மன்றம், யாழ்ப்பாணம்.

நிர்வாகசபை உறுப்பினர்கள்:
**திரு. பொ. சிவப்பிரகாசம்**
பிரதம போது சுகாதாரப் பரிசோதகர்
மாநகராட்சி மன்றம், யாழ்ப்பாணம்.

**திரு. க. கிருஷ்ணகுமார்**
பாதுகாப்பு மேற்பார்வையாளர்,
மாநகராட்சி மன்றம், யாழ்ப்பாணம்.

**திரு. இ. தயாபரன்**
எழுதுவினைஞர்,
மாநகராட்சி மன்றம், யாழ்ப்பாணம்.

**திரு. நா. இரகுமார்**
சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்,
மாநகராட்சி மன்றம், யாழ்ப்பாணம்.

கௌரவ ஆலோசகர்;
**தெல்லியூர் செ. நடராசா**
14, குமாரசாமி வீதி, யாழ்ப்பாணம்.

பதிப்பாசிரியர்:
**திரு. ந. விஜயசுந்தரம்**
ஆசிரியர், யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி,
பகுதிநேர விரிவுரையாளர்,
உயர் தொழில் நுட்ப நிறுவகம், யாழ்ப்பாணம்.

பாரதி பதிப்பகம், 430' கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல- 3081

UNIVERSITY OF JAFFNA LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# நல்லைக் குமரன் மலர்

நாளென் செயும்வினை தானென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயுங்கும ரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்குமுன் னேவந்து தோன்றிடினே.

— கந்தரலங்காரம் —

சைவ சமய விவகாரக் குழு
மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்,

1999

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்த்தோற்சவத்தில் பஞ்ச மூர்த்திகள்



ஆறுமுகன் தேரேற வருகிறான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* சமர்ப்பணம்

* அழிவைத் தடுக்கும் இறைசிந்தனை
  வைத்தியகலாநிதி இ. தெய்வேந்திரன்

* பொது வரவேற்பும் பட்டமளிப்பும்......
  இரா. இரட்ணசிங்கம்

* ஆசியுரைகள்

* கவிதா மண்டலம்
  நா. க. சண்முகநாதபிள்ளை
  தங்கமாமயிலோன்
  த. ஜெயசீலன்
  எஸ். இராஜேந்திரா
  நல்லைக்குகன்

* யாழ்ப்பாணத்துச் சைவக் கோயில் 25
  பேராசிரியர் அ. சண்முகதாஸ்

* திருவாரூர் 30
  திரு. பொ. சிவப்பிரகாசம்

* நல்லூர் அன்றும் இன்றும் 38
  பேராசிரியர் வி. சிவசாமி

* ஏல் - ஓர் - எம்பாவாய் 42
  கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

* பண்பாட்டுக் கண்ணோட்டத்தில் நல்லூர்கள் 46
  திரு. பரராஜசிங்கம் கணேசலிங்கம்

* பழையரிற் பழையனாம் பரமன் சிறுவன் 54
  திரு. க. சொக்கன் M. A.

* சைவாலய வழிபாட்டு மரபில் - சிவாச்சாரியார்
  மகத்துவம் நிலைபெற...... 67
  திருமதி கலைவாணி இராமநாதன்

* வள்ளி மணாளன் 71
  செல்வி சற்சொரூபவதி

* திருமுறைகளில் கிரியைகள் பற்றிய சில சிந்தனைகள் 73
  ஸ்ரீபதிசர்மா கிருஷ்ணானந்தசர்மா

* பேதமில்லா இனிய நெறியே சைவம் 77
  சமூகஜோதி கா. கணேசதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* மேன்மைகொள் சைவநீதி 80
மதிவாணர் செ. மதுசூதனன்

* முருகவழிபாடும் அருணகிரிநாதரும் 82
செல்வி விக்னேஸ்வரி சிவசம்பு

* சண்டேசுவரர் வழிபாடு 87
பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர்

* சிறப்புமிகு சைவசித்தாந்தம் 92
மட்டுவில் ஆ. நடராசா

* சமய வாழ்வு 96
திருமதி சுகந்தினி முரளிதரன்

* மனிதப் பிறவியின் மாண்பு 101
திரு. மு. திருநாவுக்கரசு

* வல்வினையின் வேர் தடிய 104
திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

* முருகன் பெருமை 107
பிரம்மஸ்ரீ காரை சிவராஜசர்மா

* இளைஞர் வாழும் வழி 111
தெல்லியூர் செ. நடராஜா

* நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயம் 115
திருமதி மாலினி வேதநாதன்

* நல்லூர்க் கந்தன் கலிவெண்பா 121

* நல்லூர் முருகன் திருப்புகழ் 124

* பண்ணிசைப் போட்டிக்கான பொது விதிகள் 126

* சமய அறிவுப் போட்டிக்குரிய பொதுவான பாடத்திட்டம் 128

* கற்றதனாலாய பயன் 129
திரு. இ. மா. சிவசுப்பிரமணியம்

* எட்டுக்குடியேசல் 132

* நன்றி 136

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

### பிரமாதி வருஷம் ஆடி மாதம்

## நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் மஹோற்சவ

# விசேட தினங்கள் - 1999

### 16-08-99 முதல் 11-09-99 வரை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **16-08-99** | திங்கள் | கொடியேற்றம் | பகல் | **10.00** மணி | (**1**ம் திருவிழா) |
| **25-08-99** | புதன் | மஞ்சம் | மாலை | **5.00** மணி | (**10**ம் திருவிழா) |
| **02-09-99** | வியாழன் | கார்த்திகை உற்சவம் | மாலை | **5.00** மணி | (**18**ம் திருவிழா) |
| **04-09-99** | சனி | சந்தானகோபாலர் உற்சவம் | காலை | **7.00** மணி | (**20**ம் திருவிழா) |
| | | கைலாச வாகனம் | மாலை | **5.00** மணி | (**20**ம் திருவிழா) |
| **05-09-99** | ஞாயிறு | கஜவல்லி மஹாவல்லி உற்சவம் | காலை | **7.00** மணி | (**21**ம் திருவிழா) |
| | | வேல்விமான உற்சவம் | மாலை | **4.00** மணி | (**21**ம் திருவிழா) |
| **06-09-99** | திங்கள் | தெண்டாயுதபாணி உற்சவம் | காலை | **7.00** மணி | (**22**ம் திருவிழா) |
| | | ஒருமுகத்திருவிழா | மாலை | **5.00** மணி | (**22**ம் திருவிழா) |
| **07-09-99** | செவ்வாய் | சப்பரம் | மாலை | **5.00** மணி | (**23**ம் திருவிழா) |
| **08-09-99** | புதன் | தேர் | காலை | **7.00** மணி | (**24**ம் திருவிழா) |
| **09-09-99** | வியாழன் | தீர்த்தம் | காலை | **7.00** மணி | (**25**ம் திருவிழா) |
| **10-09-99** | வெள்ளி | பூங்காவனம் | மாலை | **5.00** மணி | (**26**ம் திருவிழா) |
| **11-09-99** | சனி | வைரவர் உற்சவம் | மாலை | **5.00** மணி | (**27**ம் திருவிழா) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

நல்லூர்ப் பதியில் வீற்றிருந்து நம்மையெல்லாம் அருளாட்சி செய்யும் ஆறுமுகக் கந்தனுக்கு இது ''ஏழாவது மலர்'' நல்லைக் குமரன் மலரின் தொடர்ச்சியான மலர்வுக்குக் கந்தனின் கருணையே காரணம். கார்த்திகைப் பெண்களின் கரங்களில் தவழ்ந்த கார்த்திகேயன் புகழ்பாடும் இம்மலர் தொடர்ந்து வெளிவருவது சைவத் தமிழ் மக்களுக்குப் பெருமை தரவல்லது.

தமிழ்க் கடவுள் முருகனின் பெருமை பேசும் பல ஆக்கங்கள் இம் மலரிலே இடம் பெற்றுள்ளது. இதன் மூலம் எமது சைவத் தமிழின் பெருமையை, இனிமையை, உலகும், வருங்கால சந்ததியும் அறியும் ஆவணமாக இம்மலர் துலங்கும் என்பதில் ஐயமில்லை.

எமது சைவத் தமிழ்ப் பண்பாட்டிற்குத் தனிச் சிறப்புண்டு, பிறப்பு முதல், இறப்பு வரை சமயக் கிரியைகளை எம் வாழ்வோடு பிணைத்தவர்கள் நாம். இறைவனை வேண்டியே எக்கருமத்தையும் ஆற்றும் உயர்வு சைவத் தமிழர்களுக்கே உரியது. தமிழர்களின் தனித்துவத்தை, அவர்களின் இல்வாழ்வுச் சிறப்பை உணர்ந்த உலகத்தார், அதனைக் கடைப்பிடிக்கத் தொடங்கிவிட்டனர். ஆனால் நாம் அவற்றை யெல்லாம் ஒதுக்கி விடும் அளவிற்கு வந்து விட்டோம். காலாகாலமாகப் போற்றிப் பாதுகாத்த எமது கலாசார விழுமியங்களைக் காக்கத் தவறுகின்றோம்.

இன்று நம் மத்தியிலே பேசப்படுகின்ற பெருங்குறைபாடு ஆலயங்களிலே எமது கலாசாரத்தைப் பாதுகாக்கத் தவறி விடுகின்றோம் என்பதாகும். குறிப்பாக இளைஞர் குழாம் எமது சமயத்தின் மகிமையைப் பேணாது — தாம் எண்ணிய வழியில் நடந்து கொள்வதைப் பொறுக்காத, நல்லார் மனம் துன்பப்படுவதைக் காண்கிறோம். இவ்வாறு ஒரு சமூகம் தனக்கே உரித்தான ஒழுக்க நெறியை விடுத்து, புறநெறியில் செல்வதற்கு காரணம் யார்? தனியே சமய, சமூக சீரழிவுக்கு ஒரு சாராரைக் காரணம் காட்டி விட்டு நாம் வெளியில் நின்றுவிடுவது நியாயமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலா காலமாகக் கட்டிக் காக்கப்பட்ட சமய சமூக விழுமியங்களில் தேய்வு ஏற்படுகிறதெனில் அதற்கு முழுச் சமூகமுமே பொறுப்பு. இப் பொறுப்பிலிருந்து யாரும் விலகி விடமுடியாது. சமகாலத்தில் ஏற்பட்டுள்ள யுத்த அனர்த்தங்களும் அதன் விளை வான கூட்டு வாழ்வுக் குலைவும், குடியகல்வும் சமுதாயச் சீரழிவில் கணிசமான பங்கை ஆற்றியுள்ளது. எனினும், பண்பாடு விலக்கப்பட்ட பரீட்சை நோக்கிலான கல்வியின் அறுவடையே இன்றைய சமூக சீரழிவு என்றால் அது மிகையில்லை, ஒரு சமூகம் தனது கனதியான பண்பாட்டு விழுமியங்களை சமயத்தின் மூலமும், மொழி மூலமுமே பேண முடியும். சமயநெறிகள் — சமய சிந்தனைகளில் என்று புரழ்வு ஏற்படுகிறதோ அன்று அநீதியும், ஊழலும், ஊதாரித்தனமும் எழுந்து சமூகத்தை வேட்டையாடும். ஆலயச் சூழல்களில் நடைபெறும் விரும்பத்தகாத செயற்பாடுகள் இதன் வெளிப்பாடே.

இன்றைய இளைஞர் குழாத்தை மூன்று வகையில் பிரித்து நோக்கலாம். ஒரு சாரார் நிறைந்த இறைபக்தி உடையவர்கள். இவர்கள் தம் இறையுணர்வை வெளிப் படுத்துவார்கள். இன்னோர் சாரார் சமய, சமூகப்பணிகளில் உள்ள விருப்பு, வெறுப்பை வெளிப்படுத்தாது இருப்பர். இத் தரப்பினரை ஆலயங்களில் காண்பது கடினம். இவர்கள் தம் நேரத்தை வீடுகளிலும், நூலகங்களிலுமே செலவிடுவர். மூன்றாவது குழுவினர் வித்தியாசமானவர்கள், நாம் கவலைப்படும் சமூகச் சீரழிவுக் கும் இவர்களுக்குமேநெருங்கிய தொடர்புண்டு. இக் குழுவினரே ஆபத்தானவர்கள் அட்டகாசத்தின் மூலம் தம்மை அறிமுகப்படுத்த விரும்புபவர்கள். இத் தரப்பினரின் அட்டகாசத்தையே சமூகச் சீரழிவு என்கிறோம்.

ஒருபுறம், வைகறைப் பொழுதிலே நல்லூர் மண்ணிலே ''அரோகரா'' என்ற ஒலியுடன் அங்கப்பிரதிஷ்டடம் செய்யும் இளைஞர் குழாம் தெய்வீகத்தைப் பரப்புகின் றனர். எமது சைவத்தின் மகிமையை எண்ணி உள்ளம் சிலிர்க்கிறது. மறுபுறத்தில், மாலைப் பொழுதில் இன்னோர் இளைஞர் குழாம், அவர்களின் செயல் மனதை நோகடிக்கிறது. எனவே இது விடயத்தில் சமய, சமூக அமைப்புக்கள் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை மேற்கொள்வது காலத்தின் தேவையாகும். இதற்கு இந்து அமைப் புக்கள் யாவும் ஓரணியில் திரண்டு திட்டமிட்ட செயற்பாட்டை நடைமுறைப்படுத்த வேண்டும்.

''நல்லூரான் திருவடியை'' நினைத்த மாத்திரத்தில் எல்லாம் மறக்கும் பேரின்ப நிலையை இளம் சமூகத்திற்கு எடுத்துரைக்க வேண்டும். நல்லூர் மண் ஞானிகளும், யோகிகளும் நடமாடிய மண். அவர்கள் பேசிய ஞானமொழிகள் இன்றும் அப்பதியில் அவை அதிர்வாய் உள்ளதை அடியார் குழாம் நன்குணர்வர். பாதை மாறிச் செல்லும் இளைஞர் குழாம் பக்குவப்படுத்தப்பட்டால் இவ் வையகம் பெறும் பயன் ஏராளம், என்பதை நல்லைக்குமரனின் ஏழாவது மலரின் கருப்பொருளாகத் தந்து, அந்த உயரிய இலக்கு, நிறைவுபெற்று எல்லோரும் இன்புற்று வாழ, எம் சைவத்தின், தமிழின் பெருமை ஓங்க தமிழ் வேளை வேண்டி, குன்றேறி நின்ற நல்லைக் குமரனின் திருவடிகளில் இம் மலரைச் சமர்ப்பிக்கின்றோம்.

''மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலக மெல்லாம்''

சைவசமய விவகாரக்குழு,
யாழ். மாநகராட்சிமன்றம்.

**பதிப்பாசிரியர்**
நல்லைக்குமரன் மலர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழிவைத் தடுக்கும் இறை சிந்தனை

"அன்பர் பணி செய்ய வெனை
ஆளாக்கி விட்டு விட்டால்
இன்ப நிலை தானே வந்தெய்தும் பராபரமே."

என்பது தாயுமான சுவாமிகள் கண்ட முடிவு. இதனை மக்கள் பணியே மகேசன் பணி என்ற வாக்கும் வலியுறுத்துகிறது. இன்று உலகம் முழுவதிலும் ஏதோ ஒரு வகையில் பேரழிவுகள் இடம்பெற்றுக் கொண்டிருப்பதை நாம் காண்கிறோம். அப் பேரழிவுகளைத் தடுப்பதற்குப் பதிலாக மேலும் ஊக்குவிக்கும் ஆரவாரங்கள் நடைபெறுவது கண்கூடு. அருமையான இப் பூமியில், பெருமையாக வாழவேண்டிய மனித இனம் அழிவை நோக்கி "ஆரோகணத்தில்" அடியெடுத்து வைப்பதற்கு அடிப்படையாக அமைந்தது எது? என்ற வினா நம் உள்ளத்தில் எழவே செய்கிறது. இதற்கு இராமலிங்க சுவாமிகள் அருமையான பதிலைத் தந்துள்ளார்,

"ஒருமையுடன் நினது திருமலரடி
நினைக்கின்ற உத்தமர் தம்
உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறமொன்று
பேசுவார் உறவு கலவாமை வேண்டும்........."

இதன்மூலம் நாம் எதை அறிகிறோம் எனில், இறைவனின் திருவடிகளை நினைக்கின்ற உத்தமர்களின் உறவு நமக்குக் கிடைக்க வேண்டும். பொய்வேடம் தாங்கி உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் வஞ்சகர் உறவு சேராதிருக்க வேண்டும். அப்போதுதான் தனிவாழ்வும், உலகவாழ்வும் உய்வுபெறும். ஆனால் இன்று இந்நிலை மாறி, தன்னலம் ஓங்கி ஆணவம் செருக்கேறி, மாயை வலையில் சிக்குண்டு "மனிதம்" மறைந்து போவதைக் காண்கிறோம். மானிடம் தோற்றால், மனிதப் பண்பு மங்கினால் விளைவு அழிவு என்பதை நம் முன்னோர் தந்த இதிகாச புராணங்கள் மிகத் தெளிவாக எடுத்துக் கூறுகின்றன. இதனை நாம், உலகில் நடந்தேறிய நடந்துகொண்டிருக்கும் இன, மத, மொழி, நிற பேத யுத்தங்களால் உணர முடியும்.

இத் துர்ப்பாக்கிய நிலையில் இருந்து மனித இனத்தை மீட்டெடுக்கும் சக்தி சமயங்களுக்கே உண்டு. மனித மனங்கள் பண்பட்டால் மட்டுமே உலகில் புனிதம் தோன்றும்.

நிலத்தைப் பண்படுத்திய பின்பே பயிர் செய்கின்றோம். பண்பட்ட மண்ணில் விளை பயிர்கள் செழிப்புடன் வளர்ந்து நாட்டிற்கு நல்விளைச்சலைத் தரும். இதற்காக, மண்ணை வெட்டி, புரட்டி, களை அகற்றி பக்குவப்படுத்துகிறோம். இதனைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதற்குக் கருத்தாவும் கருவியும் வேண்டும். விளைபயிரும், களையும் ஒரே மண்ணில் வளர்ந்தால் பயிருக்கே கெடுதி. இதனைத் தடுக்க விவசாயி களையகற்றுகிறான். இதன் மூலம் நன்மையை அவன் பெறுகிறான்.

இதே போன்றுதான் நாமும் இம் மனிதப் பிறவியை எடுத்ததன் பயனை அடைய வேண்டுமாயின் எங்களை நாங்களே பண்படுத்திக் கொள்ளவேண்டும். மனத்தின் கண் உள்ள அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் எனும் களைகளைக் களைய வேண்டும்.

அப்போதுதான் உள்ளம் எனும் நிலத்தில் அன்பெனும் பயிர் செழித்து வளரும். அதனால் இவ்வையகம் இன்புறும். அப்படியாயின் நம் உள்ளத்தைப் பண்படுத்தும் வழிதான் என்ன? என்ற கேள்வி நம் மனத்திடை எழுவது நியாயமே, அதற்கான பதிலை ஞானிகளும் யோகிகளும் தந்துள்ளனர்.

''இமைப் பொழுதும் என் நெஞ்சில்
நீங்காதான் தாள் வாழ்க''

என்றார் மணிவாசகப் பெருந்தகை. இறைவனை சதா நினைப்பதன் மூலமே எம் உள்ளத்திடை குடிகொண்டிருக்கும் மாசுகளை அகற்ற முடியும். அவன் திருவருள், நம்முட் புகுந்துவிட்டால், இன்பமே எந்நாளும். துன்பமில்லை. இதனை நாம் உணர்ந்துகொள்வதோடு, சிறுபராயத்தில் இருந்தே பிள்ளைச் செல்வங்களுக்கு இறை நம்பிக்கை, ஆலய வழிபாடு, சமயத்தொண்டு, ஆகியவற்றைப் புகட்டிவிடுதல் வேண்டும். இளமைப் பராயத்தில் ஏற்படும் இறை நம்பிக்கை, இறை சிந்தனை மருவா நெறிக்கு வழிவகுக்கும்.

இவ்வுயரிய நிலையை ஏற்படுத்தும் நன்நோக்குடனேயே யாழ். மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழு ஆண்டுதோறும் ''நல்லைக் குமரன்'' மலரை வெளியிட்டு வருகிறது. இம் மலரின் பயனைப் பெற்று நல்வாழ்வு வாழவேண்டுமென்பது எமது பேரவா. அத்துடன் சைவசமய விவகாரக் குழு யாழ்ப்பாணத்திலுள்ள சைவ அமைப்புக்களை ஒன்றிணைத்து ஆலயங்களில் எமது சைவத் தமிழ்ப் பண்பாட்டு விழுமியங்களைப் பாதுகாக்கத் திடசங்கற்பம் பூண்டுள்ளது. இதற்கான காத்திரமான நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. இதன் முதற்கட்டச் செயலாக நல்லைக் கந்தனின் மகோற்சவத்தின் போது எமது தொண்டர் குழாம் ஆலயப் பணியில் ஈடுபடவுள்ளனர்.

இவர்களின் பணி சிறக்க அனைவரினதும் ஒத்துழைப்பையும் வேண்டிநிற்கின்றோம்.

''இன்பமே சூழ்க
எல்லோரும் வாழ்க''

மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்.

**வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரன்**
தலைவர்,
சைவசமய விவகாரக் குழு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண மாநகரசபையின் பொது வரவேற்பும், பட்டமளிப்பு விழாவும்

### - ஒரு நன்நோக்க சிந்தனை மீட்பு

இலங்கையில் இராமகிருஷ்ண மிசன் ஆரம்பிக்கப்பட்ட நூற்றாண்டு நிறைவை யொட்டி யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்த மதுரை செங்கல்பட்டு இராமகிருஷ்ண மிசன் செயலர் சுவாமி ஸ்ரீமத் விருபாக்ஷானந்தாஜி மஹராஜ் அவர்களுக்கும், இராமகிருஷ்ண மிசன் இலங்கைக் கிளையின் உபதலைவர் சுவாமி ஆத்மகணானந்தாஜி மகராஜ் மற்றும் மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்த சுவாமி அஜராத்மானந்தாஜி மகராஜ் ஆகியோருக்கு பொது வரவேற்பும், தமிழுக்கும் சைவத்துக்கும் அருந்தொண் டாற்றிவரும் பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு பட்டமளிப்பும் 10-09-98 வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு யாழ். மாநகரசபையின் இந்து விடுதி அலுவலகத்தில் மாண்புமிகு மாநகர முதல்வர் பொ. சிவபாலன் அவர்களின் தலைமையில் நடைபெற ஏற்பாடாயிற்று.

பிற்பகல் 4.00 மணிக்கு ஆரம்பமாக விருந்த நிகழ்ச்சி சுவாமிகளின் தாமதமான வரவு காரணமாக பிற்பகல் 6.00 மணிக்கே ஆரம்பமாயிற்று. சரித்திரப் பிரசித்தி பெற்ற நல்லூர் வீரமாகாளியம்மன் ஆலயத்திற்கு வருகைதந்த சுவாமிகள் அம்பாளைத் தரிசித்த பின்னர் அங்கிருந்து மங்கள வாத்தியங்கள் முழங்க மாநகரசபை உத்தியோ கத்தர்கள், பொது மக்கள் புடைசூழ விழா மண்டபமான நல்லூர் இந்துவிடுதி அலு வலகத்திற்கு அழைத்து வரப்பட்ட வேளையில், மாநகர முதல்வர் அவர்கள் இந்து விடுதி அலுவலக முன்றலில் மலர்மாலை அணிவித்து பொட்டிட்டு மலர்தூவி வரவேற்று மண்டபத்தினுள் சுவாமிகள் மூவரையும் அழைத்துச் சென்றார்.

முதல் நிகழ்ச்சியாக மண்டபத்தினுள் வைக்கப்பட்டிருந்த சுவாமி விவேகானந்த ரின் திருவுருவப் படத்தினை சுவாமி ஸ்ரீமத் விருபாக்ஷானந்தாஜி மஹராஜ் அவர்கள் திரைநீக்கம் செய்துவைத்த பின்னர் சுவாமிகள் மூவரும், நல்லை ஆதீன முதல்வர், செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் விழா மேடைக்கு மாநகர முதல்வரினால் அழைத்து வரப்பட்டு அவர்களுக்கென ஒதுக்கப்பட்டிருந்த ஆசனங்களில் அமரவைக்கப்பட்டனர்.

தேவார பாராயணத்தைத் தொடர்ந்து மன்றக்கீதம் இசைக்கப்பட்ட பின்னர் மாண்புமிகு மாநகர முதல்வரின் வரவேற்பு மற்றும் தலைமையுரையைத் தொடர்ந்து செங்கல்பட்டு இராமகிருஷ்ணமிஷன் செயலர் சுவாமி ஸ்ரீமத் விருபாக்ஷானந்தாஜி மஹ ராஜ் அவர்கள் நிகழ்த்திய அறிவுரையில் நாம் எவ்வாறு இறைவணக்கம் செய்தல் வேண்டுமென்பதை மிக அழகாக - செய்முறையாகத் தெளிவுபடுத்தினார். இரு கைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் கூப்பியவாறு பெருவிரல்களை ஒன்றில்மேல் ஒன்றாக வைத்து இதயத்தைத் தொட்டவாறு கைகளை உயர்த்திப் பிடித்து வணங்க வேண்டுமென்பதே அவரது செயல்முறையாக இருந்தது. அதனால் இதயத்திற்கும் இறைவனுக்கும் தொடர்பு ஏற்படுமென்பதே அவரது ஆணித்தரமான கருத்தாகும்.

அவரைத் தொடர்ந்து கொழும்பு இராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்த சுவாமி ஆத்மகணானந்தாஜி அவர்கள் தமது சிறப்புரையில் சுவாமி விவேகானந்தரின் போதனைகளை இளையதலைமுறையினரிடையே பரப்புதல் வேண்டுமென்பதை வலியுறுத்தினார். அவரைத் தொடர்ந்து மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்த சுவாமி அஜராத்மானந்தாஜியும், பருத்தித்துறை சாரதா சேவாச்சிரமத்தைச் சேர்ந்த சுவாமி சித்ரூபானந்தா அவர்களும் சிற்றுரை பகர்ந்தார்கள். நல்லை ஆதீன முதல்வர் அருளுரை வழங்கும் போது செங்கல்பட்டு சுவாமி வலியுறுத்திய இறைவழிபாட்டு முறையை நாம் அனைவரும் கைக்கொள்ள வேண்டுமென்றார்.

அடுத்து செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களிடம் ''சைவத் தமிழ்ப் பேரரசி'' என்ற பட்டமடங்கிய பேழை மாண்புமிகு மாநகர முதல்வரால் கையளிக்கப்பட்டு சைவத்துக்கும் தமிழுக்கும் தனியொருவராக நின்று ஆற்றிவரும் சேவையைப் பாராட்டி மேற்படி சிறப்புப் பட்டமளிக்கப்பட்டது என முதல்வர் அறிவித்தார்.

அதனைத் தொடர்ந்து மாநகர முதல்வரும், அவரைத் தொடர்ந்து அப்போதைய பதில் ஆணையாளரும் சுவாமிகள் மூவரது பாதங்களில் வீழ்ந்து வணங்கி ஆசி பெற்றதைத் தொடர்ந்து விழாவிற்கு வருகைதந்திருந்தவர்களில் பெரும்பாலானோர் அவ்வாறே ஆசிபெற்றனர்.

ஈற்றில் நன்றியுரைக்கு முன்பதாக 1998 ஆம் ஆண்டு சைவசமய விவகாரக் குழுவினால் வெளியிடப்பட்ட 'நல்லைக் குமரன் மலரினை' குழுவின் செயலாளர் சுவாமிகளுக்கு அன்பளிப்புச் செய்வாரென முதல்வர் அறிவித்தமையைத் தொடர்ந்து நான் மேடையிலே வீற்றிருந்த சுவாமிகளின் பாதங்களில் வீழ்ந்து வணங்கி எமது மலரைக் கையளித்ததன் பின்னர் இறுதி நிகழ்ச்சியாக நன்றியுரை என்னால் பகரப்பட்டது. பசித்தால் புசித்து, வியர்த்தால் குளித்து, நிழல் கண்டால் துயின்று, ஓட்டையும் பொன்னையும் ஒப்ப நோக்கும் தூய மனம் கொண்ட சுவாமிகளின் வரவால் இம்மண் மேலும் புனிதமடைகிறது என்ற கருத்தை முதன்மையாகக் கொண்ட எனது நன்றியுரை நிறைவேறியது.

விழா முடிவுற்றதன் பின்னர் மாநகர முதல்வர், பதில் ஆணையாளர் அமரர் பத்மநாதன் அவர்களையும் என்னையும் அழைத்து ''இன்றைய விழா சிறப்பாக நடைபெற உங்கள் இருவரதும் பங்களிப்பே முக்கிய காரணம்'' உங்களுக்கு எனது நன்றியும், பாராட்டும் என்றார்.

வாழ்த்தியவரும் வாழ்த்தப்பட்டவர்களில் ஒருவரும் ஏனையவர்கள் 10 பேரும் மறு நாள் மாநகர சபையின் இந்துவிடுதி அலுவலகத்தில் இடம் பெற்ற குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டார்கள். முதல் நாள் ஆசி பெற்றவர்கள் மறுநாள் இவ்வுலக வாழ்வை நீத்தனர். என்னே விதியின் விளையாட்டு!

தமிழ் மூதாட்டி கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு யாழ். மாநகரசபை 'சைவத் தமிழ்ப் பேரரசி' எனப் பட்டமளித்த செய்தி பொதுமக்களை முழுமையாகச் சென்றடையாத காரணத்தினாலேயே இச்சிந்தனை என்னால் முழுமையாக மீட்கப்படுகிறது.

மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்.

இரா. இரத்தினசிங்கம்,
செயலாளர்,
சைவசமய விவகாரக் குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர ஆணையாளரின்

## வாழ்த்துச் செய்தி

நல்லைக்குமரன் மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதை ஒரு பாக்கியமாகக் கருதுகின்றேன்.

இந்துக்களாகிய நாம் சகல மேம்பாடுகளுக்கும் இறை திருவருளே மூலகாரணம் என்பதை நம்புகிறோம். அதன் வழியே ஆன்மீக மேம்பாட்டுக்கும் எம்மை அர்ப்பணிக்கின்றோம்.

இந்துமதம் தொன்மையானது என்கின்ற நம்பிக்கை பல்துறை அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையின் அடிப்படையில் அமைந்ததாகும். எனினும் இந்து மதக் கோட்பாடுகள், நெறிமுறைகள் சமகாலப் பிரச்சினைகட்கெல்லாம் வழிகாட்ட வல்லன என்பதை உறுதியாக ஏற்றுக் கொள்ள தயங்கும் நிலை ஒன்று காணப்படுகின்றது என்பதையும் ஏற்றுக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

பல பிரச்சினைகட்கு முகங்கொடுக்கும் குடாநாட்டு மக்களை ஆன்மீக வழியில் அழைத்துச் செல்வதற்கு பல முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் எமது மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழு கடந்த 7 வருடங்களாக நல்லைக்குமரன் மலரை தவறாது வெளியிட்டு இந்து சமயிகட்கு பயனுள்ள சேவையை ஆற்றி வருவது மனம் கூரத்தக்கது. இந்நூல் அறிஞர்கள், வரலாற்று ஆசிரியர்கள், ஆய்வாளர்கள், மதப் பெரியார்கள், மாணவர்கள் ஆகியோரின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்துள்ளது என்பது மட்டுமல்ல, நூலகங்களில் உசாத்துணைப் பகுதிகளில் பெரிதும் வேண்டப்படுகின்றது என்கின்ற நிலை பெரிதும் நயக்கத்தக்கதாக உள்ளது.

மென்மேலும் 'நல்லைக்குமரன்' இந்து சமயிகட்கு சேவையாற்ற வேண்டும் எனவும் இப்பெரு முயற்சியை ஆற்றி வரும் குழுவுக்கும், விசேடமாக அதன் தலைவர் வைத்திய கலாநிதி அவர்களுக்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'நல்லைக் குமரன்' மென்மேலும் பிரகாசிக்க வேண்டுமென எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகிறேன்.

யாழ்ப்பாணமாநகரசபை,
யாழ்ப்பாணம்.

**வே. பொ. பாலசிங்கம்**
மாநகர ஆணையாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ சந்திர மௌளீச்வராய நம:

ஸ்ரீ சங்கர பகவத் பாதாசார்ய பரம்பராகத

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி

## ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய ஸ்வாமிகள்

அவர்களின்

# ஆசிச்செய்தி

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழுவினர் வழக்கம்போல இவ்வாண்டும் நல்லைக்குமரன் வருடாந்த உற்சவத்தை யொட்டி மலர் வெளியிட விருப்பது அறிந்து மகிழ்கின்றோம்.

குமரன் கருணையருவி பெருகும் பல திருத்தலங்கள் இலங்கையில் உண்டு. அவற்றுள் ஒன்றாகத் திகழ்வது நல்லூர். இங்கு வாழ்கின்ற அன்பர்களுக்கு அருள் பாலிக்கும் நல்லைக்கந்தன் திருவருளால் அரிய - அபூர்வச் செய்திகள் நிரம்பப் பொலிவுறும் நல்லைக்குமரன் மலர் ஆன்மீகத்தையும், முருக பத்தியையும் வளர்த்து நல்வாழ்விற்கு வழிகாட்டுவதாக விளங்க ஆசீர்வதிக்கின்றோம்.

நாராயணஸ்ம்ருதி

1, சாலை தெரு,
காஞ்சிபுரம் - 631502
13 - 03 - 1999

ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள்
ஸ்ரீ மடம் ஸமஸ்தானம்.
போன்: (STD 04112) - 222115



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் வழங்கும்

# "அருளாசிச் செய்தி"

அன்புசார் பெருந்தகையீர்!

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழு இவ்வருடமும் நல்லைக்குமரன் மலரை வெளியிட இருப்பதையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றோம். நல்லூர் முருகனுக்கு நடைபெறும் திருவிழாவை சிறப்பிக்கும் முகமாக வெளிவரும் நல்லைக் குமரன் மலர், சைவ மக்கள் மத்தியில் பெரு எழுச்சியையுண்டு பண்ணியுள்ளது. சமயக் கருத்துக்களையும், தத்துவ உண்மைகளையும் விளக்கும் கட்டுரைகள், கவிதைகளைத் தாங்கி வரும் இம்மலர் வெளிவருவது மனநிறைவைத் தருவதாகும்.

அலங்காரக்கந்தனாக எழுந்தருளி, யாழ்ப்பாண மக்களை மட்டுமன்றி, உலக மக்கள் யாவரையும் தன் அருட்கண் பார்வையினால் காத்து வரும் முருகப்பெருமானை அலங்கரிக்கும் முகமாக, யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக்குழு நல்லைக் குமரன் மலரை வெளியிட்டு ஆற்றும் அரும்பணியானது, சைவ மக்கள் செய்த பெரும் பேறாகும்.

ஒவ்வொரு ஆண்டும் இம் மலரினைவெளியிட்டு வரும் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினருக்கும் சைவ மக்களுக்கும் இறைவனுடைய ஆசிகள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

''என்றும் வேண்டும் இன்ப அன்பு''

நல்லூர்,
யாழ்ப்பாணம்.

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய ஸ்வாமிகள்**
இரண்டாவது குருமஹா சந்நிதானம்.

## மாவையாதீனம்

அவர்களின்

# ஆசிச்செய்தி

சரவணப்பொய்கையிலே ஆறு குமாரர்கள் திருவிளையாடல்களை நடாத்துகிறார்கள். கார்த்திகைப் பெண்களிடம் பாலருந்துகிறார்கள் கங்கை தாங்கிவந்து சரவணத்தில் சேர்த்ததனாலேயே சரவணப்பொய்கையும், கார்த்திகை பெண்களும் ஆறு திருக்குமாரர்களுக்கு ஆகவேண்டியதைச் செய்யும் அதிஷ்டமும் கிட்டியது. இத் திருக்குமாரர்களுக்கு நாமகரணஞ் செய்ய முற்பட்டபோது சிவபிரான் உமையம்மையையும் அழைத்து சரவணப்பொய்கையில் விளையாடும் திருக்குமாரர்களைக் காட்டவும், உமை, குமாரர்களை ஒன்றுசேர்த்தபோது ஆறுமுகம் படைத்த ஆண்ணல் தோன்றினார். இவருக்கு நாமகரணஞ் செய்வதற்கு சிவபிரான் எவ்வாறு துணிந்தார் என்பதனை கச்சியப்ப சிவாச்சாரியார் கூறுவதைச் சைவர்கள் கட்டாயமாக அறிந்து அப்பாடல்களையும் மனனஞ்செய்ய வேண்டியதவசியம்.

''சங்கன நமது கண்ணி னெய்திய குமரன் கங்கை
தாங்கினள் கொண்டு சென்று சரவணத் திடுதலாலே
காங்கேய னெனப் பேர் பெற்றான் -
காமர்பூஞ் சரவணத்தின் பாங்கரில் வருதலாலே
சரவணபவ னென்றானான் —
தாயெனவாரால் போந்து தனங்கொள் பாலருந்தலாலே
ஏயதோர் கார்த்திகேயன் என்றொரு தொல் பேர் பெற்றான்
சேயவன் வடிவமாறுந் திரட்டி நீ யொன்றாய்ச் செய்தாய்
ஆயதனாலே கந்தனாமெனு நாமம் பெற்றான்'.'

(கந்தபுராணம்)

ஆத்மாக்களுக்கு நாமகரணம் எவ்வாறு செய்யப்படல் வேண்டுமென முசுகுந்தச் சக்கரவர்த்தி வசிஷ்டரை வினாவிய போது, தெய்வத் திருவருளுக்காக ஏங்கிநிற்கும் ஆத்மாக்கள் அத் தெய்வங்களின் ஆயிரம் ஆயிரம் நாமங்களிலிருந்து ஒன்றைத் தேர்ந்தெடுத்து தகுந்தாற் போல் அந்தந்த ஆத்மாவிற்கு நாமகரணம் செய்வது தான் முறைமை அவ்வாறு செய்யும் போது அடிக்கடி தெய்வ நாமங்களின் உச்சாடனத்தால் அவை ஆயிரமாகி இலட்சமாகி, கோடியாகி, அத்தெய்வங்களது திருவருட்சக்திகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கும் வியாபித்து மக்களையும், சூழலையும், நாட்டையும் தெய்வீகமாக்க வல்லமை கொள்ளும்,'' எனக் கூறினார். ''மாயை மனிதனது மனதை மாற்றுவிக்க எத்தனிக்கும் போது உலோகாயத இன்பங்களில் அவனை ஈர்த்துவிட்டு மானிடத்தின் அழிவையும் அவனால் உலகம் எதிர்நோக்கும் துயரங்களையும், அத்துயரங்களால் ஆற்றும் பாதகங்களின் பேறால் திருவருட் சக்திகளைப் பரப்பும் காந்தமும் அற்றுப்போய் எங்கும் எதிலும் மெல்லமெல்ல அழிவைக் காணலாம். எனவேதான் ''மனம்'' என்ற ஒன்றைப் பெற்ற மனிதனானவன் தனது ஆத்மாவிற்கு தெய்வீக நாமங்களைச் சூட்டவேண்டும்'' எனக்கூறினார்.

எமது ஈழநாடு சிவபூமியென ஆன்றோரால் நாமமிடப்பட்டது. 15 ஆம் நூற்றாண்டில் இங்கு நுழைந்த மாயாவாதப் பரங்கியரால் ஈழநாட்டின் தெய்வீகம் குன்றியது. அவர்கள் எம்நாட்டிலிருந்து தொலைந்தாலும், அவர்களின் வழிநின்று இன்றும் உலோகாயதங்களை வளர்த்துநிற்கும் ஆயாதிகளது தந்திரமாயாஜாலங்களால் ஈர்க்கப்பட்டவர்கள் தமது நாமங்களையும் தமக்குரியவர்களது நாமங்களையும் தெய்வீகத் திருநாமங்களாக அமைக்காது துர்த்தேவதைகளின் பெயர்களை வைத்திருப்பதால் இன்றைய நாடு தர்மத்திற்கும் அதர்மத்திற்குமிடையேனின்று தத்தளிக்கிறது.

இதற்கு தக்க பரிகாரம் காணவேண்டுமாயின் ஆலயங்களில் எழுச்சி நிகழ்வுகள் எழல் வேண்டும் நல்லூர்க் கந்தப்பெருமானின் திருவருள் போன்று எங்கும் திருவருள் பொங்கும் மார்க்கமாக ஆலயங்களில் ஆயிரமாயிரமாக கந்தப்பெருமானின் நாமங்கள், பஜனையாகப் பாடவேண்டும். அந்தவகையில் நல்லைக்குமரன் மலரும் ஆற்றுப்படுத்த வேண்டும்.

சமயத்துறையில் பாரத பூமிக்கு வழிகாட்டியாக விளங்குகிறது நல்லைக்குமரன் மலர். இம்மலரை இவ்வளவு சிறப்பாக வளரச் செய்யும் யாழ் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினர் நேரத்தைப் பாராது சிரமங்களைப் பொருட்படுத்தாது ஆற்றும் சிவதொண்டுகளோ போற்றுதற்குரியது. மாவையாலயத்தையும், மற்றும் பூட்டப்பட்டுள்ள ஆலயங்களையும் திறந்து வழமையான சமய ஆராதனை, வழிபாடுகளை செயற்படுத்த இம் மன்றம் துணிந்து ஆற்றிய கருமங்களை மறக்கவே முடியாது.

நீடூழி வாழ்ந்து ஆன்றோர் சுட்டிக்காட்டிய சிவபூமியை மீண்டும் பெற யாழ் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினர் அயராது முயல வேண்டுமெனவும், அதற்காக கலியுகவரதன் கந்தசுவாமியாரது திருவருட்துணை இவர்கட்கு கிட்ட வேண்டுமெனவும் பிரார்த்தித்து ஆசீர் வதிக்கின்றேன்.

மாவையாதீனம்,
மாவிட்டபுரம்.

**மஹாராஜஸ்ரீ**
**சு. து ஷண்முகநாதக் குருக்கள்**
மாவையாதீனகர்த்தா.

சிவத்தமிழ்ச் செல்வி

துர்க்கா துரந்தரி அவர்களின்

## ஆசிச் செய்தி

நல்லைக் கந்தப் பெருமானின் மகோற்சவத்தை முன்னிட்டு யாழ் மாநகராட்சி மன்றம் ஆண்டுதோறும் பெருவிழா எடுத்து வருகிறது. இம்மன்றத்தின் சைவசமய விவகாரக்குழு வெளியிட்டு வரும் நல்லைக் குமரன் மலர் இதற்கொரு சான்றாகும். ஆயிரம் ஆயிரம் அடியவர்களைத் தன்னகத்தே அடக்கி பேரருள் பாலித்து வரும் பெருமான் நல்லூர் முருகன் என்பதை இந்த நாடும் ஏடும் நன்கு அறியும். நாம் துயரமின்றி வாழ வேண்டுமானால் திருவருளே எமக்குத் துணையாக அமைய வேண்டும். திருவருளில் தோய்ந்தவர்களுக்கு ''இன்பமே எந்நாளும் துன்பமில்லை'' என்ற அனுபவம் பிறக்கும். கலியுக வெப்பத்திலிருந்து எம்மைக் காத்தருளி தண்ணளி சுரக்கும் பெருமானாக விளங்குபவன் முருகனே. இந்த உண்மையை சங்ககாலம் தொடக்கம் இன்று வரை காணக் கூடியதாக உள்ளது. சங்க இலக்கிய நாயகனாகவும் புராண நாயகனாகவும், இதிகாச நாயகனாகவும், பிள்ளைத் தமிழ் நாயகனாகவும் பலபடப் புகழ்ந்து பேசப்பட்டவன் முருகன். இந்த அற்புதத்தை நல்லைக் குமரன் திருக்கோயில் வழிபாட்டின் மூலம் மேலும் மேலும் நாம் உணர முடிகிறது. மகோற்சவ காலத்தை முன்னிட்டு இங்கு வெளியிடப்படும் நல்லைக் குமரன் மலரை நாம் பாராட்டுகிறோம், வாழ்த்துகிறோம், இதற்குப் பொறுப்பாகவுள்ள யாழ் மாநகராட்சி மன்றத்தின் தூய பணிகளைப் போற்றி அமைவதும் எமது தலையாய கடனாகும்.

**கலாநிதி. செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி**
சமாதான நீதிபதி,
தலைவர்.

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை, ஸ்ரீ லங்கா

இந்து சமய கலாசார பணிப்பாளரின்

## வாழ்த்துச் செய்தி

இன்றைய சூழ்நிலையில் நல்ல சமுதாயம் உருவாக வேண்டுமானால் சமய அறிவும், இறைபக்தியும் சமூகத்தில் வளர்க்கப்பட வேண்டியது மிகமிக அவசியமாகும். ஆன்மீக வாழ்வுதான் என்றென்றும் ஆனந்தம் தரும் வாழ்வாகும். ஆன்மீகவாழ்வுக்கு வழிகாட்டும் பணிகளை முன்னெடுத்துச் செல்லும் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழு கடந்த பல ஆண்டுகளாக மாணவ, மாணவியர் இடையே சமயஅறிவுப் போட்டிகளையும், பண்ணிசைப் போட்டிகளையும் நடாத்தி மாணவரிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் சமய மணம்பரப்பும் ''நல்லைக்குமரன் மலர்'' பெறுமதி நிறைந்த விடயங்களை தாங்கி வெளிவரும் சிறந்த மலராகும்.

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவின் பணிகள் யாவும் சிறப்புப்பெற வாழ்த்துகின்றேன்.

அன்புடன்

சி. தில்லைநடராஜா
பணிப்பாளர்.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.
கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் முருகன் திருப்படையாட்சி

(2)

தலையது தாழ்ந்து நல்லூர் முருகன்
தாளது வணங்குகவே
சந்ததம் வேலின் தத்துவம் உணர்ந்து
சந்நிதி வணங்குகவே
நிலையுறு கண்கள் நீருறக் கந்தன்
நீளெழில் காணுகவே
நித்தமும் ஆறு முகத்தொளிர் கருணையில்
நிம்மதி காணுகவே
அலையொலி செவிகள் ஓமெனும் நாதம்
ஆர்த்திடக் கேட்குகவே
அன்பரின் இன்ப அனுபவப் பண்களின்
அஞ்சலி கேட்குகவே
கலைபயில் நாசி கடம்பனின் சுகந்த
கந்தம் நுகருகவே
கன்னியர் இருவர் காதலில் சேந்தனின்
கமழ்புகழ் நுகருகவே.

(2)

வாயது நாத்தழும் பேறிட நல்லூர்
வரதனை வாழ்த்துகவே
வள்ளிதெய் வானை இருபுறம் மயிலில்
வந்திட வாழ்த்துகவே
தூயதாய் நெஞ்சு சுடர்வடி வேலனின்
சோதியைத் துலக்குகவே
துயரெலாம் களைந்திடத் தூயபொற் பதஎழில்
துணைவரத் துலக்குகவே
அயர்விலாச் செயல்களால் ஆக்கமோ டெம்மைகள்
அவன்பணி செய்குகவே
அவன்பெரும் அன்பரோ டிணைந்துநற் கருத்தொடு
அறச்செயல் செய்குகவே
ஆக்கையின் பயனௌ அவன்திரு வீதிகள்
ஆர்வமாய் வருகுகவே
அவன்திருப் புழுதியில் உடம்பினை உருட்டியே
அமைந்திட வருகுகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3)

| | | | |
|---|---|---|---|
| கால்களும் | தேரடி<br>கனிவுடன் | களித்துப்<br>நடக்குகவே | பதித்து(க்) |
| காதலாற் | கசிந்துமே<br>கருத்துடன் | கண்ணீர்<br>நடக்குகவே | மல்கிடக் |
| வேல்தரு | காட்சி<br>வினைகளை | கண்டதன்<br>ஓட்டுகவே | ஒளியில் |
| வெற்றி | வேற்கையை<br>விரட்டியே | வேண்டிப்<br>ஓட்டுகவே | பகையெலாம் |
| நூல்களில் | ஆகம<br>நுண்மையை | நுணுக்கங்<br>உணருகவே | களில்வேல் |
| நூதனன் | வினோதன்<br>நுகர்வினை | நல்லூர்<br>உணருகவே | முருகனின் |
| சூல்உறை | வேலும்<br>சுடவினை | சுடரொளிக்<br>போகிடுமே | கண்ணும் |
| சுந்தர | வடிவாய்<br>தோன்றிடச் | நல்லூர்<br>சுகம்வருமே. | முருகன் |

(4)

| | | | |
|---|---|---|---|
| உன்னடி | யார்கள்<br>உருப்படை | அன்பரும்<br>திருப்படையே | பக்தர் |
| உள்ளமர் | நல்லூர்<br>உயிர்ப்பவர் | வேலநின்<br>திருப்படையே | தொண்டில் |
| சென்னியில் | அஞ்சலி<br>திழைப்பவர் | கூப்பியே<br>திருப்படையே | திருமுன் |
| சேவடி | தொழுது<br>செபிப்பவர் | முருகனின்<br>திருப்படையே | நாமம் |
| உன்னியே | உள்ளம்<br>ஒளிர்பவர் | கள்ளம்<br>திருப்படையே | இலாமல் |
| ஓங்கிய | பற்றில்<br>உறுபவர் | தேங்கிநல்<br>திருப்படையே | அன்பில் |
| பன்னிரு | கையனைப்<br>பணிந்திடு | பயபக்<br>களிப்புறவே. | தியுடனே |
| பாங்கினில் | ஓங்கிடும்<br>பங்குறு | திருப்படை<br>பயன்பெறவே. | ஆட்சியில் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுதோறும் நல்லைக் குமரன் கொடியேற்ற, அவன் புகழ்பாட
யாழ். மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழு வெளியிடும் மலருக்கு
எமது உளங்கனிந்த வாழ்த்துக்கள்

COMMERCIAL BANK

# COMMERCIAL BANK

யாழ். மக்களின் சேமிப்பு ஆற்றலை அதிஉன்னத நிலைக்கு
இட்டுச் செல்லும் ஒரே வங்கி

# இலங்கை வர்த்தக வங்கி

இந்த ஆற்றலை தூண்டும் நோக்குடன் இலங்கை வர்த்தக வங்கி
அறிமுகப்படுத்தி வெற்றி நடைபோட்டுக் கொண்டிருக்கும்
புதியதோர் திட்டமே

## "முற்போக்கு சேமிப்புக் கணக்குத் திட்டம்"

உங்களது நாளாந்த நிலுவைக்கு வட்டி கணிக்கப்படும்

இன்றே இணையுங்கள்!
சேமிப்பு ஆற்றலை வளருங்கள்!!

உங்கள் ஆதாயமே எங்கள் குறிக்கோள்

## கொமஷல் வங்கி

யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லைக் குமரன் அழகு முருகன் அவன் புகழ்பாடும்
யாழ். மாநகராட்சி மன்ற சைவ சமய விவகார குழு
வெளியிடும் " நல்லை குமரன் " மலருக்கு எமது உளம் கனிந்த வாழ்த்துக்கள்

# யாழ். வைத்திய நிலையம்

166, 1ம் குறுக்குத்தெரு, — யாழ்ப்பாணம்.
(வேம்படி மகளிர் கல்லூரி முன்பாக)

❊ வெளி நோயாளர் பிரிவு காலை 8-30 மணி — மாலை 6-30 மணி வரை
— வைத்திய கலாநிதிகளினால் (MBBS)

❊ உள்ளக நோயாளர் பிரிவு
— வைத்திய நிபுணர்களின் கீழ்

❊ ஆய்வு கூட வசதி ❊ மருந்தகம்

❊ வைத்திய நிபுணர்கள் சேவை

-- நிர்வாகி —

---

" நல்லூர் வேல் முருகா,
மக்கள் நிம்மதி பெற நற்கருணை புரிவாய் "

## யாழ். மாநகரில் ஓர் சிறந்த ஸ்தாபனம்

★ பிஸ்கட் வகைகள்

★ பால்மா வகைகள்

★ பலசரக்குப் பொருள் கள்

மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்

# வி. எஸ். பி. குறூப்

99, 105 மின்சார நிலைய வீதி, — யாழ்ப்பாணம்.

# V. S. B. GROUP

99, 105 Power House Road, — JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பற்றறி பாவனையாளர்களே !

உங்களுக்கு வேண்டிய (All Sizes) இறக்குமதி செய்யப்பட்ட லூக்காஸ் வெள்ளை பற்றறிகளையும் (White Lucas Imported Battery) சிலோன் கறுப்பு வெள்ளை பற்றறிகளையும், சகல மோட்டார் சைக்கிள் பற்றறிகளையும் தரமான அசிட் (Acid) டையும் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள

## 'செல்வம்ஸ்' SELVAMS

உங்கள் மோட்டார் வாகனங்களுக்கு பொருத்தப்படும் "லூக்காஸ்" பற்றறிகளுக்கு உத்தரவாதத்துடன் (Gurantee) அக்காலப் பகுதிக்கு இலவச சேர்வீஸ் செய்து கொடுப்பவர்கள்

## "செல்வம்ஸ்"

நீண்டகால பாவனைக்கு தரமான "லூக்காஸ்" பற்றறிகளையே கேட்டு வாங்கிக் கொள்ளுங்கள். உங்கள் பற்றறிகளை சிறந்த முறையில் சார்ஜ் (Recharging) செய்வதற்கு

## செல்வம்ஸ்

கிளை :-

**செல்வம்ஸ்**
220 A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**"செல்வம்ஸ்"**
443, கே. கே. எஸ். வீதி,
சிவலிங்கப்புளியடி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல. **2642**

# சிற்றி ரெலிகொம் அன்ட் கொம்பியூட்டர் சேவீஸ்

அபைபர்கள், வாடிக்கையாளர்களுக்கு ஒரு நற்செய்தி !

உள்ளூர், வெளியூர் தொலைத் தொடர்பு, பக்ஸ் (Fax), மின் அஞ்சல் (E-mail) மற்றும் கொம்பியூட்டர் சேவைகளை 24 மணி நேரமும் பெற்றுக்கொள்ள

| | | |
|---|---|---|
| உள்ளூர் T. P. No. | 021-2104, | 021-2608 |
| வெளியூர் T. P. No. | 0094-21-2104, | 0094-21-2608 |
| பக்ஸ் (Fax) | 021-2104 | 021-2608 |

**E-mail** CITYMO @ SLTNET . LK

❊ கொம்பியூட்டர் பிறின்ரிங் ❊ திருமண அழைப்பிதழ்கள்

❊ மின் தபால் **(E-mail)**

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள உங்கள் உறவினர்கள் நண்பர்களுடன் உடனுக்குடன் மின் தபால் மூலம் **(E-mail)** குறைந்த கட்டணத்துடன் தொடர்பு கொள்ள நாடுங்கள்,

மேலதிக தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும்:

## சிற்றி ரெலிக்கொம் அன்ட் கொம்பியூட்டர் சேவீஸ்

இல. 11, பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி, — யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லையம்பதி நல்லைக் குமரனுக்கு அரோகரா

'நல்லைக் குமரன்' மலருக்கு

நல்லாசிகளுடன்
உள்நாட்டிலும், உலகின் அனைத்து நாடுகளிலும் உள்ள
உற்றார், உறவினர், நண்பர்களுடன்
உடனுக்குடன் தொடர்பு கொள்ள
யாழ்நகரில் உகந்த ஓரிடம்

**பகவான் உலகத்**

**தொலைத் தொடர்புச் சேவை**

***342,* ஆஸ்பத்திரி வீதி, — யாழ்ப்பாணம்.**

**Bagawan World Link Communication**

342, Hospital Rd., — Jaffna.

நீங்கள் அனுப்பும் செய்திகள் உடனுக்குடன் உரியவர்களுக்கு
இலவசமாகக் கையளிக்கப்படும்

தொலைபேசி எண்கள்
**021 — 2507**
**021 — 2513**
**FAX: 021 — 2986**

---

With the Best Compliments From

**ESWARA BAGAWAN & COMPANY**

General Merchants
&
Commission Agents
Transporters & Shippers
to
Colombo — Jaffna

***Head Office*:**
**100, Hospital Rd.,**
**Jaffna.**

***Branch:***
**102 C, Dam Street,**
**Colombo - 12.**
**T. P. 074 - 719799**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் முருகன் ஆலய வருடாந்த உற்சவம்
சிறப்புற நடைபெற பிரார்த்திக்கிறோம்!

**பக்கச் சார்பற்ற நடுநிலைச் செய்திகளுக்கு தினமும் படியுங்கள்**

# தினக்குரல்

An Independent Daily Voice in Tamil

**Published by:**

## United Newspapers (Pvt) Ltd.,

68, ELLIE HOUSE ROAD, COLOMBO - 12
Tel: General 522555, 523216
Advertising / Circulation 074 - 618938
Editorial 074 - 618939

---

நல்லைக் கந்தன் அவன் அர்ச்சனைக் கந்தனாம்
அவன் புகழ்பாடும் மக்கள் இன்புறவேண்டும் முருகா

**நல்லைக் கந்தனை தரிசித்தபின்**

## சந்தியாவிடம்

**வந்து விட்டுப் போங்கள்**

அழகுசாதன, அன்பளிப்பு, பாடசாலைப் பொருள்கள், பிளாஸ்டிக் பொருள்கள்,
விளையாட்டுப் பொருள்கள், வாழ்த்து மடல்கள், வர்ண படங்கள்
மற்றும் உங்கள் தெரிவிற்கும்

பட்டின், பக்கிள் கவரிங் செய்திடவும்

**சந்தியா**
**மல்ரி கோட்யாட்**

**SANTHIYA**
Multi Courtyard

531, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லைக் கந்தா உன் அடி சரணம்!

நாளுக்கோர் புதுமை! நாடுவது உண்மை!

இவற்றை அளிப்பதுதான்

# நியூ சண்முகானந்தா

றெக்ஸ்ரைல்

23, (58), பெரியகடை, — யாழ்ப்பாணம்.

நங்கையர் விரும்பும் நவநாகரிகமான
பிடவைத் தினிசுகள், கூறைச்சேலை வகைகள், கைத்தறிப் பிடவைகள்,
சேட்டிங் சூட்டிங் சிறுவர்களுக்கான ஆடைவகைகள்
போன்றவற்றிற்கு கைராசியான ஸ்தாபனம்

**NEW SHANMUGAANANDA TEXTILE**

23 (58), Grand Bazaar, — Jaffna.

---

நல்லைக் குமரா, வள்ளி மணவாளா
மயிலேறி வந்து, ஆறுமுகமாகி
தேரினில் காட்சி தந்து துன்புறும்
மக்களை இன்புறச் செய்வாய் முருகா!

# RUPA VERSATILE TRADES

*Distributors for:-* SmithKline Beecham Mackwoods Ltd.
Gamma Pharmaceuticals (Pvt) Ltd.
Delmage Forsyth & Co. Ltd.
Hemas Marketing Ltd.
Ceylon Biscuits Ltd.

No. 104 A, Stanley Road, — Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறு தசாப்தங்களாக அர்ப்பணச் சேவையில் ஈடுபட்டு வரும்
இலங்கை வங்கியிடமிருந்து உங்களுக்குக் கிடைக்கிறது.

# ரன் கினும் வாசனா

கீழே குறிப்பிட்டுள்ள கணக்குகளில் ஏதேனும் ஒரு கணக்கு
அல்லது கணக்கு முறைகள் உங்கள் வசம் இருந்தால்
சீட்டிழுப்புக்குத் தகு பெறலாம்.

- சாதாரண சேமிப்புக் கணக்கு
- காந்தா ரன் கினும் (மகளிர் பொற்கணக்கு)
- ரன்கொவி தன்பத்து கணக்கு
- ரணவிறு ரன்கினும், மற்றும்
- ரன் கதெல்ல குடும்பக் கணக்குத் தொகுதி

தேசிய ரீதியிலான சீட்டிழுப்பிற்குத் தகுதி பெற
நீங்கள் செய்யவேண்டியது இதுவே.

1999 ஏப்ரல் மாதம் 01ந் திகதி முதல் ஜூன் மாதம் 30ந் திகதிக்குட்பட்ட காலப்பகுதியில் ரன் கதெல்ல தொகுதி ஒன்றில் 12,000/- ரூபா அல்லது மேலே குறிப்பிட்ட மற்றைய கணக்குகளில் 10,000/- ஆகக் குறைந்த கணக்கு மீதியாக வைத்திருப்பது மட்டுமே!

## முதலாம் பரிசு

2.5 மில்லியன் ரூபா பெறுமதியான வீடொன்று அல்லது
அதன் பெறுமதி பணமாக

## இரண்டாம் பரிசு

1.2 மில்லியன் ரூபா பெறுமதியான சொகுசுக்கார் ஒன்று வீதம் 2 பரிசுகள்

## மூன்றாம் பரிசு

5 இலட்சம் ரூபா பெறுமதியான கார் ஒன்று வீதம் 3 பரிசுகள்

## ஆறுதல் பரிசுகள்

20 வர்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள்

20 குளிர்சாதனப் பெட்டிகள்

20 துணி துவைக்கும் இயந்திரங்கள்

BANK OF CEYLON

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இ. ச. பேரம்பலம் சகோ நிறுவனம்

50, 52 & 54 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பக்ஸ்: 2368 தொலைபேசி: 2988

மிதிவண்டி, உதிரிப்பாக இறக்குமதியாளர்கள், லோட்டஸ் மிதிவண்டி ரயர், ரியூப்களிற்கான ஏக விநியோகஸ்தர்கள், மோட்டார் சைக்கிள் உதிரிப் பாகங்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள் கலர் பிலிம் றோல்ஸ், வீடியோ ஓடியோ கசற்கள் மற்றும் பல்பொருள் விற்பனையாளர்கள்

உங்கள் தேவைகளுக்கு இன்றே நாடுங்கள்

## இ. ச. பேரம்பலம் சகோ நிறுவனம்

---

# கஜமுகன் ஹாட்வேயர்

147, 149 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 2833

பெயின்ற் வகைகள், இரும்பு, கட்டிடப் பொருள்கள், மற்றும் மின்சார உபகரணங்கள் இறக்குமதியாளர்கள்.

உங்கள் தேவைகளுக்கு இன்றே நாடுங்கள்

## கஜமுகன் ஹாட்வெயர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவகாம சுந்தரி அம்மன்

# திருவியற் கண்ணிகள்

நமோஸ்துதே நமோஸ்துதே - ஜெய
சிவகாம சுந்தரி நமோஸ்துதே.

சீர்மேவுந் தீர்த்த நீர்மேவுந் தெய்வத்
தார்மேவுந் தன்மைத் தாயாளே.
நமோஸ்துதே நமோஸ்துதே ... ...

தானே தனியே தாங்கிடுந் தாயே
மானே மயிலே மரகத மணியே.

செழுந்தவ ருளந்தொறுமெழுந்தரு ளுந்திரு
அழுந்தொறும் விழுந்தொறு மணைத்தரு ளுந்திரு.

ஆறவைக்கும் அருள் தேறவைக்குந் தவம்
ஏறவைக்கும் எழில் வானமுதே.

பூமேவும் பூவின் தேன்மேவும் புகழ்
நாமேவும் நன்மை நாள்மேவும்.

சூரழிக்குஞ் சுடர் வானளிக்குஞ் சுத்த
நீரளிக்குந் தெய்வ நீறளிக்கும்.

உதயச் சூரிய வொளியாகுங் குளிர்
மதனச் சந்திர மகிழாகும்.

ஆனந் தந்தரு மற்புத முந்தருந்
தேனந் தந்தருந் திருமுறை யுந்தரும்.

தொன்மைத் தமிழ்மறைத் தூமணியே யுயர்
நன்மைக் குவைதரு நாரணியே.

சதுர்வேத நாயகி சாந்தஸ்வ ரூபிணி
பொதுநடத் துள்வளர் போதாந்த பூரணி

விண்ணும் மண்ணும் விளங்கிடுங் வீரம்
கண்ணுங் கருத்துங் களித்திடும் கானம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடல் கூடல் உவர்ப்புத் தித்திப்பு
பாடல் ஆடல் பரிமளப் பண்மணி.

மூவகை யுலகும் முகிழ்த்திடும் மூதருள்
பூவகை கனிவகை பூத்திடும் பூமணி

எண்ணான் கறங்களும் ஏழிசைப் பதங்களுங்
கண்ணார் கவின்களுங் கற்பகமுங் கனி.

உயிரோ ரறிவொடு மூர்த்துவ தாண்டவம்
உயிரோ வியமாய் உள்ளத் துதிப்பது.

ஊனக் கண்ணிருள் உழன்றிடு முன்முக
ஞானக் கண்ணொளி நயன்றரு நாயகி.

பிஞ்செழுத் தாயும் பேசெழுத் தாயும்
நெஞ்செழுந் தருணிலை நீர்மைத்து ணிற்பது.

பஞ்சாட் சரமாய்ப் பரம்பொரு ளாய்த்தவச்
செந்தாட் சிவம்வளர் சின்மய ரூபிணி.

எண்ணும் எண்ணத் துண்ணின் றினிப்பது
நண்ணும் பேரருள் நண்ணத் தருவது.

தீப மங்களத் திருவிளக்கே செழுந்
தூப மெழுஞ்சுகத் துநினைவே.

அந்தியுஞ் சந்தியும் அன்பர்கள் நெஞ்சத்தில்
முந்தியும் பிந்தியும் மூதருள் முகிழ்ப்பது.

வேதாந்த சித்தாந்த விடிவிளக்கே வெளி
நாதாந்த தத்துவ நான்முகியே.

அகத்தமி ழிலங்கிடு மாரமுதே இன்பச்
சுகத்தினி லூறிடு சூக்குமமே.

தர்மார்த்த காமந் தளிரமுதே தொன்மை
மர்மார்த்த மெல்லாம் மலரமுதே.

சூக்குமை பைசந்தி வைகரிநுண் ணோசை
வாக்கு வளந்தரு வாலாம் பிகையே.

மாரி கோடை வளரிள வேனில்
பாரி காரி படைக்கும்பல் லாயிரம்.

குங்கும சந்தனக் குலக்கொழுந்தே தினந்
தங்கிடுந் தாய்மனத் தவக்கொழுந்தே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெம்பசி தீர்த்திடும் விண்ணமுதே நலச்
செம்பசி சேர்த்தருள் தெள்ளமுதே.

ஐவகை நிலங்களும் மாறா தறங்களுந்
தைவத முத்தொடு தைரிய முந்தரும்.

கற்கண்டு வெல்லங் கனிரசம் நெய்தேன்
சொற்கண்டு சோபிக்குஞ் சூர்தடி சூலினி.

மாயா தந்திர தநுவினுள் வந்த
காயா காரியக் கருந்துடக் கழிப்பது.

இல்லற துறவற ஈரியல் வாழ்வையும்
நல்லற மாக்கிடு ஞானஸ்வ ரூபிணி.

ஓம்படு நிலைக்கு ஓம்பட எம்மை
ஓம்படு மொருமை ஒருநிலை யவளே.

ஊருணி யாஞ்சிவ ரூபிணியாந் தமிழ்க்
காருணி யாங்கற்ப காலமெலாம்.

செம்மலர் நோன்றாள் சென்னியி லஞ்சலி
மும்மல மூர்க்கம் மூர்த்திடு மூர்த்தம்.

அருளொளி பொங்க ஆரத்தி மங்களம்
திருவரு ளோங்கச் சிவமய மாஞ்சீர்.

நமோஸ்துதே நமோஸ்துதே — ஜெய
சிவகாம சுந்தரி நமோஸ்துதே.

## பிரதட்சணம் செய்வதன் பயன்

- காலையில் பிரதட்சணம் செய்தால் வியாதிகள் நீங்கும்.
- மத்தியானத்தில் பிரதட்சணம் செய்தால் விரும்பியதெல்லாம் சித்தி.
- சாயங்காலத்தில் பிரதட்சணம் செய்தால் சர்வ பாவங்களும் நீங்கும்.
- அர்த்த யாமத்தில் பிரதட்சணம் செய்தால் மோட்ச சித்தியும் உண்டாகும் என்று சகலாகம சாரசங்கரகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசைவலை அறுக்க ஆருடம்சொல் நல்லூரா!

ஆசையெனும் வெள்ளத்தில் அலைக்கழியும் நுரையாக
நானடைந்த துன்பங்கள் நாளும் எனைத்துரத்த
ஓடிடுவேன் ஓய்வெடுக்க! ஓய்வெடுத்து ... ... முடிப்பதற்குள்
மீசையிலே ஆசைவந்து மீண்டும் மீண்டும் குந்துவதால்
காந்தம் இரும்பைக் கவருதல்போல் ... ... நான்போலி
வாழ்க்கைக் கவர்ச்சி வலைவீழ்ந்த மானாகி
''ஆடிக் கழித்தென்ன'' என்றளந்த தத்துவம் ... ... வாய்
மூட; பழையபடி மோகத்தில் மூழ்கிடுவேன்!

ஈன அழுக்கெல்லாம் எங்கிருந்தோ வந்து ... ... மன
மூலையினைநிறம் மாற்றும். மூளையே வெட்கமுறும்
மோக நினைவுடலை மொய்த்திடையில் ... ... துர்நாற்றம்
வீசும்; பிறர் உரித்தை ... ... அனுபவிக்கும் ஆவேசம்
வேசமிட்டபடி வீதியிலே நாயாகும்.
காணுவதை எல்லாம் கற்பனையில் கற்பழிக்கும்
தாகம் விசமாகி; உளம் சேற்றுக் குட்டையாகி;
வாற்பேய், நுளம்பு, புழு, மனமெங்கும் நெளிந்தசையும்.

ஞானக் கொழுந்தெழுந்து நியாயத்தைக் கற்பித்து
ஈன அழுக்கையெல்லாம் எரித்து, மனச்சிலையைப்
பூசி மினுக்கிவிட்டால் ... ... புனிதம் குடிபுகுந்தென்
தேகம் சிலிர்த்துயிர்த்துத் தெய்விகத்தில் கலந்திடுமாம்!
ஆனால் ... ... விதியென்னும் அந்தகனோ ... ... சூழலென்னும்
தேரேறி வந்தென் 'மனக்கோயில் 'சுடலையாக'
ஆசைப் பிணங்களினை அள்ளி அள்ளி வீசிடுவான்.
ஞானத்தை மறக்கவைத்து ஈனத்தைப் பரப்பிடுவான்.

என் செய்வேன்? செக்கில் கிடந்தலறும் இலுப்பைவிதை
என்றாவேன்! இடிவேன்!! எனைநானே மீட்டெடுக்கேன்!
துன்பப் புயலைத் துணிந்தெதிர்த்துக் கலைத்தடிக்கும்
வன்மங்கள் இன்றி; அவை வாலாட்டின் வாடிப் ... ... பேர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பத்திற்காய்த் துடிப்பேன். ''நல்லூரா'' ... ... மனமென்னும்
''தொன்மையான மர்மத்தின் சூக்குமத்தை'' ... ... நீ ஒளித்துக்
கொண்டஇடம் தானேநின் கோயிலாச்சு! அதைத்தேடி
விண்வெளிக்கு முன் தினமும் வந்து விழி சொரிகின்றேன்.

எதுஇல்லை என்றாலிவ் உலகம் இயங்காதோ
எதுஇல்லை என்றாலெவ் உயிரும் உதிக்காதோ
எதுஇல்லை என்றாலே காற்று கதைக்காதோ
எதுஇல்லை என்றாலென் கவிதை உயிர்க்காதோ
எதுஇல்லை என்றால் கனிகள் பழுக்காதோ
எதுஇல்லை என்றாலக் கடலே இரையாதோ
எதுஇல்லை என்றாலென் மனமே மகிழாதோ
'அது' ... நீ என்றறிகின்றேன் அருள்வாயே நல்லூரா!

எதுஇல்லை என்றால்எப் படையும் ஜெயிக்காதோ
எதுஇல்லை என்றால் எத் திருவும் கொழிக்காதோ
எதுஇல்லை என்றாலெப் பொருளும் நிலைக்காதோ
எதுஇல்லை என்றாலெவ் எழிலும் செழிக்காதோ
எதுஇல்லை என்றாலெவ் மொழியும் வளராதோ
எதுஇல்லை என்றாலெவ் இனமும் நிமிராதோ
எதுஇல்லை என்றாலெவ் வழியும் பிறக்காதோ
அது ... நீ என்றறிந்திட்டேன் அருள்வாய் வடிவேலா!

## குருவாய் வருவாய்

உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்க்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குகனே.

— கந்தரநுபூதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ். இராஜேந்திரா SPHI (D)

# அஞ்சேல் என்று அறை ஆறுமுகா

நல்லூரக் கந்தன் கோவில் மணி
நாதஒலி கேட்டு உள்ளம் சிலிர்க்கிறது
நல்லைநகர் ஆவணியில் அழகொழுகும்
அலங்காரக் கந்தனுக்கு அபிசேகங்கள்
நால்வர்தமிழ் நாதஒலி உயர் வேதமும்
குழலும் முழவும் முரசும் முழங்கும்
கந்தனவன் வாகு கண்டு புவனேகனும்
கட்டி வைத்தான் கோவில் நல்லூரிலே
வந்தனை செய்து சீவ முத்தர்களும்
தொழச் சிவந்த பாதம் பெற்றவனே
எண்ணத்திலே நீயும் வந்து விட்டால்
எமக் கிடரேது என்றும் தழர்வேது

தேவரைச் சிறைமீட்ட சேனாபதி நீ
தேவயானை பெற்ற திருமாங்கனி
வள்ளியைத் தினைப் புனத்தில் தேடிக்கண்டாய்
புள்ளி மயிலேறிக் கண்ணுக்கு இனிமை தந்தாய்
பாலில் குழித்துவரும் பார்ப்பனரும் உன்னைத்
தோழில் சுமந்து வரும் கழல் கொண்டவரும்
ஓடிச் சுமந்து வரும் காட்சியெலாம் இன்று
ஒற்றுமைத் தேவை கோடி காட்டி நிற்பாய்
தாளம் பிசகாத காவடியும், மயில்
தழந்து நடம் பயிலும் சேவடியும்
பூதலம் காணாத காட்சியெடா கந்தா
புண்ணியம் சேர்ப்பவர் நாம் எல்லோடா

செம்மலர்க் காந்தள் சூடும் சேந்தனே
இன்று நீ ஏன்
செம்மணிக் கபால மாலை சூடவும்
சித்தம் கொண்டீர்

கைம்மலர் மொட்டு நீட்டிக் கதறிடும்
எம்மைக் கண்டும்
கண்களை இறுகப் பூட்டிக் கடும்தவம்
செய்யலாமா
கண்ணீரும் சென்நீரும் காவிரியாய் ஓட
என்னேரமும் பார்க்க உனக்கென்ன விளையாட்டா
பன்னிருதோழ் அழகா பாவங்களைப் போக்கி
சென்னியில் கைகுவிக்கும் சேய்களைக் காப்பாயே !

சங்கத்திருந்து தமிழ் வளர்த்தவன் நீ
சங்கை இழந்த நிலை அறியாயோ
பழனிமலையில் சென்று பளை கொண்டியோ
பயம் இல்லாமல் செய்இன்று உன்வீட்டிலே
நெஞ்சிருக்கும் கையும் நெடி துயர்த்தி
அஞ்சேல் என்று அறை ஆறுமுகா

## இறைவனை அடைய.......

**இயமம்:** பொய்யாமை, கள்ளாமை, அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல் இல்லாமை.

**நியமம்:** உடல் உளத்தூய்மை, இறைவனிடத்தில் தன்னை ஒப்படைத்தல்

**ஆசனம்:** தியானத்திற்காய் உட்காரும் முறை

**பிராணாயாமம்:** ஜீவசக்தியை ஒழுங்குபடுத்தல்

**பிரத்தியாகாரம்:** மனதை பிற இடங்களிற் செல்லாது தடுத்து நிறுத்தல்

**தாரணை:** மனதை ஒருவழிப்படுத்தல்

**தியானம்:** ஒன்றையே தியானித்தல்

**சமாதி:** நனவு நிலைக்கு அதீதமான நித்திரை

தொகுப்பு: **சி. சதாசிவம்**
மட்டுவில்,

# வேண்டும் வரம் தருவாய்

ராகம்: ராகமாலிகை

தாளம்: திஸ்ரசாபு

வேலைக் கையில் உடையாய்! — முருகா
வேண்டும் வரம் தருவாய்!
நாடி வந்தோம் உன்னை — எமக்கு
நாளும் அருள் புரிவாய்!

ஓடி வந்து அருள்வாய்! — முருகா
ஓம்கார வடிவேலா
ஆறுமுகம் உடையாய்! — எமக்கு
ஆறுதல் தந்திடுவாய்!

மயிலினில் வந்திடுவாய்! — என்னையே
மன்னித்துக் காத்தருள்வாய்!
சஞ்சலம் தீர்த்து வைப்பாய்! — எமது
சண்முக வடிவேலா!

தேரேறி வந்திடுவாய்! — சண்முகா
தேன் தமிழ் தலைவன் ஐயா
தங்க மயில் வேலா முருகா! —
தஞ்சமென்று நாடி வந்தோம்

சூரனைக் கொன்றொழித்தாய்! — குமரா
சூழ்ச்சியை அகற்றுமைய்யா!
நால் நிலம் ஆள்ந்திடுவாய்! — அழகன்
நாமத்தைக் கூறிடுவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வளமான வருங்காலத்திற்கு வழிகாட்டும்

# 'தேசிய சேமிப்பு வங்கி'

காலத்திற்கேற்ப பயனளிக்கும் எமது சேமிப்பு திட்டங்கள்

- சாதாரண சேமிப்புக் கணக்குகள் — மாதாந்த வட்டி வீதம் மிகக்குறைந்த பணத்தொகையில்
- நிலையான வைப்பு — உயர் வட்டி வீதம்
- அறக்கொடைத் திட்ட கணக்குகள்
- தேசிய சேமிப்புச் சான்றிதழ்கள்
- பரிசூதிய சேமிப்புச் சான்றிதழ்கள் (ரிதீ ரேகா)
- புஞ்சிஹப்பன், ஹப்பன் சேமிப்புக் கணக்குகள்
- 'பிரார்த்தனா' — சின்னஞ்சிறுவர்க்கான சிறந்த பரிசு

வாடிக்கையாளருக்கு வழங்கப்படும் விசேட சலுகைகள்

01. நிலையான வைப்புகளுக்கெதிரான கடன் வழங்கல்
02. சேமிப்பு, நிரந்தர வைப்புகளுக்கு உயர் வட்டி வீதங்கள்
03. பணம் மீளப் பெறுவதற்கு முத்திரை வரிவிலக்கு
04. மாதாந்த வட்டிக் கொடுப்பனவு
05. வட்டி இழப்பின்றி ஒரு கிளையிலிருந்து இன்னொரு கிளைக்கு கணக்குகளை மாற்றும் வசதி
06. பின்னுரித்தாளரை நியமிக்கும் வசதி
07. தபால் மாற்று

மேற்குறித்த சகல அனுகூலங்களுக்கும் அரசாங்கம் பாதுகாப்பளிக்கின்றது.

'நாளை நலமுற இன்றே சேமியுங்கள்'

# - தேசிய சேமிப்பு வங்கி -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் முருகனுக்கு அரோகரா !
காவடிக் கந்தனுக்கு அரோகரா !
மக்கள் படும் துன்பத்தை
அழித்திடுவாய்
ஆறுமுகத்தரசே

இன்றைய அறிமுகம் — நாளைய நாகரிகம்
கலயாண முகூர்த்தப பட்டாடைகள், கூறைச் சேலைகள்,
இன்னும் பல வர்ண ஆடைகள், ரெடிமேட் அலங்கார உடைகள்
சங்கமித்த இடம்

**ராசி சில்க்ஸ்**

ஜவுளி உலகிலே தெரிவுக்கு ஒரு புதுமையான இடம்

**“ ராசி சில்க்ஸ் ”**

70, 71A, நவீன சந்தை (உட்புறம்) — யாழ்ப்பாணம்.

---

நல்லைக் குமரன அவன் அழகு முருகன்
அல்லற்பட்ட மக்களுக்கு அடைக்சலம கொடுத்த முருகன்
ஆறுமுகமாக தேரேறி வந்து காத்தருளையா ஈழமக்களை

“ நல்லைக் குமரன் ” மலரை வாழ்க
வாழ்கவென வாழ்த்துகிறோம்.

**நல்லி சில்க்ஸ்**

சிறுவர் தொடக்கம் பெரியவர்கள் வரை கவர்ந்திழுக்கும்
பலவர்ண அமைப்பு, டிசைன்களில் ரெடிமேட் ஆடை அணிகள்
நாடுங்கள்

**“ நல்லி சில்க்ஸ் ”**

(விசாலமான காட்சிக் கூடம்)

121/1, மின்சார நிலைய வீதி, - யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடிவா முருகா நாம் பாடி வருவோம் உனை காண
மயில் ஏறிவா முருகா, நம் கவலைகள் ஒழித்திட
ஆறுமுகமாகி நீ தேரேறி வா, நாம் கண்டு இன்னல்கள் தீர.
பார்த்தால் வாங்குவீர்கள்! வாங்கியதும் திருப்தியடைவீர்கள்!!!

கண்ணைப் பறிக்கிறது என்னை இழுக்கிறது
வண்ணம் நூறு விதமோ!
விண்ணோடும் மண்ணோடும் இல்லாத வண்ணங்கள்
பட்டோடும் நூலோடும் மிளிர்கிறது.

# மகாநதி புடவை அகம்

முகூர்த்தப் பட்டுப் புடவைகளுக்கு
அதிஷ்டமான இடம்

# MAHANATHY TEX

The Ultimate Destination for Sarees

4, NEW MARKET, CHAVAKACHCHERI.
16, NEW MARKET, JAFFNA.

---

கண்டவுடன் அகம் மகிழ காட்சி தரும் முருகையா
ஆனந்தக் கண்ணீருடன் அண்டினோம் நல்லூர் எம்பதியை
ஆறுதல் தந்திடுவாய் தேரேறி வந்திடுவாய்.

கண்டவுடன் அகமகிழ்ந்து கொண்டவுடன் அணிந்து மகிழ
ஆடவருக்கான சேட்டிங் — சூட்டிங்
நங்கையர்களுக்கான ஸ்கேட்பிளவ்ஸ். சேலைகள, பஞ்சாபி
சிறுவர்களுக்கான எழில்கொஞ்சும் அழகான ஆடைகள்
மற்றும் மங்கள வைபவங்களுக்கு வேண்டிய

## பட்டுப் புடவைகளுக்கு

மனம் விரும்பிய டிசைன்களில் தெரிவு செய்ய
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம

# கோபிகா ஆடையகம்

4. 5 (3A) நவீன சந்தை, (உட்புறம் — யாழ்ப்பாணம்.
தொ. பேசி: 2377

பால் மணக்குது பழம் மணக்குது பழனி மலையிலே
பக்தி ததும்புது, அருள் சுரக்குது நல்லூர் முருகன் பதியிலே.
"நல்லைக குமரன்" மலருக்கு எமது உளங்கனிந்த வாழ்த்துக்கள்

எம்மிடம் சகலவிதமான

★ காகிதாதி வகைகள் அச்சக பேப்பர் வகைகள்
★ அச்சக மை வகைகள்

மற்றும்

பாடசாலை அப்பியாசக் கொப்பிகள் ஆபீஸ் அலுவலக உபகரணங்கள்
மலிவாகவும், தரமானதாகவும் பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டிய இடம்

# அற்புதா றேடிங் கொம்பனி

T. P. 2057 – 2505

193, ஆஸ்பத்திரி வீதி, (பஸ் நிலையம் முன்பாக)
யாழ்ப்பாணம்.

★ **அத்தோடு எம்மிடம் உள்நாட்டு, வெளிநாட்டு தொலைத் தொடர்புச் சேவைகளையும் உடனுக்குடன் பெற்றுக் கொள்ளலாம் என்பதையும் அறியத் தருகின்றோம்.**

---

நல்வினை தருபவன், தீவினை அறுப்பவன் அவன்
நல்லைக் குமரனாம் அவன் புகழ் பாடுவோம்.

"நல்லைக் குமரன்" மலருக்கு எமது இனிய வாழ்த்துக்கள்

யாழ் நகர் வந்ததும் பளிச்செனத் தெரிவது

# சிறி ராஜன் பான்சி ஹவுஸ்

## அன்பளிப்புப் பொருள்கள் வாங்குவதற்கு மக்கள் நாடுவதும் இங்கே தான்

பலவிதமான அன்பளிப்புப் பொருள்கள், பாடசாலை உபகரணங்கள்,
பலவித மாணவர் புத்தக பைகள், எவர்சில்வர்,
பிளாஸ்ரிக் அலுமினியப் பாத்திரங்கள், அழகு சாதன பொருள்கள்,
மற்றும் வாசனைப் பொருள்களும் பெற்றுக் கொள்ள
சிறந்த இடம்.

66, நவீன சந்தை, — யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹற்றன் நஷனல் வங்கியின்
## சில்வர்லைன்

ஆயுளுக்கும் தொடர்ச்சியான மாதாந்த வருமானத்துக்கும்
ஓர் உததரவாதம் நினைவில் வைத்திருங்கள்!

**நீங்கள் பெறும் பயன்கள் உங்கள் கணக்கை விட நீண்ட காலம் நீடிப்பவை**

- ஹற்றன் நஷனல் சில்வர்லைன் நீங்கள் வேலையைவிட்டு விலகிய பின்னும் உங்கள் மாதாந்த வருமானத்துக்கு உத்தரவாதம் அளிக்கும்.
- ஹற்றன் நஷனல் சில்வர்லைன் உங்கள் ஆயுள் முழுவதற்கும் மாதாந்த வருமானத்துக்கு உத்தரவாதம் அளிக்கின்றது. நிரந்தர வருமானம் இல்லாத உங்கள் தொழிலில் பெறமுடியாத வாய்ப்பு இது.
- வாழ்வின் முக்காற் பங்குக் காலத்தை தொழில் புரியும் இடங்களில் செலவிடாது கணவனுடனும் குழந்தைகளுடனும் உங்கள் முழு நேரத்தையும் கழித்து அவர்களை அன்போடு பேணிப் பாதுகாத்து வளர்க்க உதவும் திட்டம்.
- ஓய்வூதியம் பெறும் வயது வருமுன்னரே ஓய்வூதியம் பெறும் பாதுகாப்பான ஆபத்தில்லாத முதலீட்டுத் திட்டம்.
- நீங்கள் பெற்ற செல்வத்துக்கு நல்லதொரு பாதுகாப்பும், ஆயுள் காப்புறுதியும் இயலாமை வேளைக்காப்பும் மேலதிகமாக எந்தச் செலவும் இன்றிக் கிடைக்கும்.
- நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களும் ஒளிமயமான எதிர்காலத்தைப் பெறுவதற்கு ஹற்றன் நஷனல் சில்வர்லைன் துணை நிற்கும்.

★ தொடர்ச்சியான வருமானம்

★ ★ பெரும் தொகைப் பணம்

மேலும் விபரங்களுக்கு ஹற்றன் நஷனல் வங்கி முகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும்.

# ஹற்றன் நஷனல் வங்கி

— உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி —

HATTON NATIONAL BANK HNB LIMITED


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லைக் குமரனைப் போற்றிடுவோம்
அவன் தாள் வணங்கிடுவோம்
மக்கள் கூட்டமது இழுக்குது தேர்வடத்தை
ஒழிந்தது மக்கள் துன்பம் ஆறுமுகனின் தேர்க்காட்சி.

நியாய விலையில்
மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள

# சிங்கம் வர்த்தக நிலையம்

**பாடசாலை உபகரணங்கள், மாணவ மாணவிகளுக்கு கவர்ச்சியான பைகள்,
காரியாலய உபகரணங்கள், காகிதாதிகள் உட்பட அச்சுக்கூடங்களுக்குத்
தேவையான மை வகைகள் (உள்ளூர், வெளியூர் தயாரிப்புகள்) பல வர்ண
காகிதாதிகள் அனைத்திற்கும் நாடவேண்டிய ஒரே இடம்**

## SINGAMM INDUSTRIES

T. P. No **2783**

## சிங்கம் வர்த்தக நிலையம்

290, ஆஸ்பத்திரி வீதி, — யாழ்ப்பாணம்.

---

*முருகன் எந்தன் இறைவன் — அவன்
தமிழ் உலகை ஆழும் தலைவன்
அவன் தாள் வணங்கி போற்றிடுவோம்
முருகன் வேல் கொண்டு வினை அழித்திடுவான்.*

சகலவித பெயின்ட் வகைகளும், சுண்ணாம்பு
கட்டிடப் பொருள்கள் விற்பனையாளர்

நீங்கள் நாடவேண்டிய இடம்

# “VEL MURUGAN TRADERS”

## வேல் முருகன் வணிக நிலையம்

56A, மணிக்கூட்டு வீதி, — யாழ்ப்பாணம்,

கிளை: புதிய முருகன் வணிக நிலையம்
58 P, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் கந்தன் அருளை

என்றும் வேண்டி நிற்கும் யாழ் மக்கள்

MALAYAN CAFE

மலாயன் கபே

36, 38 பெரியகடை வீதி, - யாழ்ப்பாணம்.

---

நல்லூர் முருகா ! நாளும் பொழுதும் உன்னை
எல்லோரும் தொழுதேத்த வைத்தாய் — நானோ
சொல்லோர் பூட்டி உழுது பக்தி விதைத்தேன்
சொல்வாய் அருளாம் தேரேறி விளைவு தந்திடுவாய் முருகா.

புடவை ரெடிமேற் ஆடைகள்

❋ பேபி சூட் ❋ சாறிக்கேற்ற பிளவுஸ் பீஸ்
❋ தையல் வேலைகளுக்கு ஏற்ற பொருள்கள்
❋ எல்லா சைஸ்களிலும் பொலிதீன் ❋ மேசை விரிப்பு
❋ குறோசறி பாக் சைஸ்கள்

அனைத்தையும் ஒரே இடத்தில் மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

அங்கலின் ரெக்ஸ்ரைல்

43, 48 நவீனசந்தை, — யாழ்ப்பாணம்.
கிளை: 55, பெரியகடை வீதி, — யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு தோறும் நல்லூர்க் கந்தன் அருள் பரப்ப சைவசமய விவகாரக்குழு வெளியிடும் "நல்லைக் குமரன்" மலருக்கு
எமது இதயம் கனிந்த வாழ்த்துக்கள்
யாழ் நகரில் நாளைய நாகரிகத்தினை இன்றே அறிமுகம் செய்து நவீன கட்டிங் அமைப்புடன் எடுப்புற தைத்து பெற்றுக் கொள்ள
அன்றும்! இன்றும்! என்றும்!

CITY TAILORS

(Specialist in Wedding Coats & Suits)
அனைத்து ரகமான ஆடைகளையும் உங்கள் எண்ணம் போல்
தரம்! நவீன தெரிவு! நிதான விலையில்!
பெற்றுக் கொள்ள கைராசியான நிறுவனம்

சிற்றி ரெக்ஸ் & ரெயிலர்ஸ்

(புடவை தினுசுகளின் ராஜமுத்திரை)
T. P. 2671
73, பெரியகடை வீதி, — யாழ்ப்பாணம்.

---

நாத மணி நாலரைக்கு கேட்கையிலே
நான் துயில் எழும்பி உனை வந்து வணங்கையிலே
நீ அருளைப் புரிந்திடுவாய் — முருகா!

சிறந்த தெரிவுகள்! நிதான விலை!

மங்கள வைபவங்களுக்கேற்ற
கூறைச்சேலைகள், மணிப்புரி, காஞ்சிபுரம், பட்டு வேட்டிகள்
உள் நாட்டு, வெளிநாட்டு சாறி வகைகள், அதற்கேற்ற பிளவுஸ் துணி வகைகள் அனைத்திற்கும்

சோதி ரெக்ஸ்ரைல்ஸ்

14, நவீனசந்தை, மின்சார நிலைய வீதி, — யாழ்ப்பாணம்
தொலை பேசி இல: 021 — 2139

SOTHI TEXTILES

14, New Market, Upstairs, Power House Road, — Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ்
கலைப் பீடாதிபதி,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், இலங்கை.

# யாழ்ப்பாணத்துச் சைவக்கோயில்கள்

இலங்கையிலே யாழ்ப்பாணத்தின் அமைவிடம், குடாநாடு என்றநிலையிலே பல பழமையான பண்பாடுகளைப் பேணுவதற்கும் வாய்ப்பாயிருந்தது. தென்னிந்தியாவிலுள்ள சைவக்கோவில்களை விட யாழ்ப்பாணத்துச் சைவக் கோவில்களின் வழிபாட்டு நடைமுறைகளிலே வேறுபட்ட பண்புகள் காணப்படுவதற்கும் இது காரணமாயமைந்ததெனலாம். பிற சமயங்களின் செல்வாக்கும் யாழ்ப்பாணத்திலே பரவுவதற்கும் அதன் அமைவிடம் வாய்ப்பளித்தது. வரலாற்றுக் காலங்களிலே புத்தசமயம், கிறிஸ்தவசமயம் போன்றவற்றின் செல்வாக்கும் ஏற்பட்டுள்ளது. எனினும் சைவக் கோயில்களின் தொகையும் வகையும் யாழ்ப்பாணத்தில் சைவசமயம் பெற்றிருந்த சிறப்பான நிலையை அறிய உதவுகின்றன.

யாழ்ப்பாணத்துச் சைவக்கோவில்கள் என்று கூறும்போது 'சைவ' என்ற சொல்லின் பொருள் ஒரு தனித்துவமான பொருளில் யாழ்ப்பாணத்தில் வழங்கப் படுவதையும் இங்கு குறிப்பிட வேண்டும். இன்று இந்துசமயம் என்று குறிப்பிடும் போது சைவத்தையே சுட்டும் தன்மையும் காணப்படுகிறது. இது எவ்வாறு பொருந்தும் என்பதை கா. கைலாசநாதக்குருக்களின் விளக்கம் காட்டுகிறது.

இந்துசமயம் என்ற பெயர் கூறி எம் சமயத்தைச் சுட்டும் வழக்கம் இன்று நிலவி வருகின்றது. இந்து என்ற பெயரை எங்கள் சமய நூல்களெல்லாவற்றிலும் காணமுடியாது. இந்தியா என்ற பெயர் பாரத நாட்டிற்கும் 'இந்து' என்ற பெயர் பாரதப் பண்பாட்டிற்கு ஏற்றதாய் விளங்கும் சமயத்திற்கும் வழங்கத் தலைப் பட்டது. இந்துசமயம் என்று கூறும்போது இந்தியாவுக்கே உரித்தான ஆயின் சார்வாகம், பௌத்தம், சமணம் ஆகிய அவைதிக மதங்கள் நீங்கலான சமயங்களைத் தொகுத்துச் சுட்டும். சுருங்கக் கூறின் வைதிக மரபைத் தழுவி நிற்றலால் வேதங்கள் ஊடுருவிப் பிணைத்து நிற்கும் மதங்களின் தொகுதியே இந்துமதமாகும். சைவம், வைணவம், சாக்தம், காணபத்தியம், கௌமாரம், சௌரம் என்னும் பெரும் உட்பிரிவுகளைக் கொண்டமைவதும் சைவசித்தாந்தம், சாங்கியம், யோகம், நியாயம், வைசேடிகம், பூர்வமீமாம்சை, உத்தரமீமாம்சை முதலிய தத்துவநெறிகளை விதந்துரைப்பதும் இந்துமதம் என்னும் பெரிய விருட்சத்தின் நடுத்தண்டாக விளங்குவது சைவம். சைவத்தை அதன் பல அம்சங்களையும் கருத்திற் கொண்டு ஆராய்ந்து அறிபவன் இந்து சமயத்தின் பல அம்சங்களையும் அறிபவன் ஆகிறான். வைணவம், சாக்தம் காணபத்தியம், கௌமாரம் சௌரம் என்றும் பல்வேறு மதங்களையும் சைவம் தன்னுள் அடக்கி நிற்கும்.

இவ் விளக்கத்தால் சைவசமயிகள் என்று கூறும்போது வைணவ, சாக்த, காணபத்திய, கௌமார, சௌர வழிபா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டையோரையும் உள்ளடக்க முடிகிறது. யாழ்ப்பாணத்துச் சைவக் கோயில்களுமே அடக்கப்பட்டுள்ளன.

இலங்கை பிரதேச அபிவிருத்தி இந்து கலாசார அமைச்சு வெளியிட்ட இலங்கைத் திருநாட்டின் இந்துக்கோயில்கள் என்னும் நூலில் யாழ்ப்பாண மாவட்டம் என்ற பரப்பினுள் யாழ்ப்பாணத்துச் சைவக் கோவில்கள் பற்றிய தகவல்கள் வெளிவந்துளளன. அந்நூலில் தொகுக்கப்பட்டுள்ள கோவில்களின் பெயரும் அமைவிடமும் இக் கட்டுரையின் பின்னிணைப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளன. இந்நூலில் குறிப்பிடப்பட்ட கோவில்களிலே சிவன், அம்பாள், சுப்பிரமணியர், பிள்ளையார், வைரவர், துர்க்கை, விஷ்ணு என்னும் தெய்வங்களுக்குரிய கோவில்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. பிரதேச நிலையிலே யாழ்ப்பாணம், நல்லூர், வேலணை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில், சுன்னாகம், ஏழாலை, தெல்லிப்பழை, பருத்தித்துறை, கரவெட்டி, கோப்பாய், சாவகச்சேரி, பூநகரி, பச்சிலைப்பள்ளி, பளை, கிளிநொச்சி போன்ற இடங்களிலேயுள்ள கோயில்களின் பெயர்களும் பூசை நடைமுறைகளும் குறிக்கப்பட்டுள்ளன. இந்நூலிலே குறிப்பிடப்பட்டுள்ள கோயில்களை வகைப்படுத்திப் பார்க்கும்போது பின்வருமாறு அமையும்.

1. சிவன் கோவில்கள்
2. அம்மன் கோவில்கள்
3. பத்திரகாளி அம்பாள்கோவில்
4. பிள்ளையார் கோவில்கள்
5. முருகன் கோவில்கள்
6. கிருஷ்ணன் கோவில்கள்
7. ஐயனார் கோவில்
8. நாகதம்பிரான் கோவில்
9. கண்ணகை அம்மன் கோவில்
10. வைரவர் கோவில்
11. பேச்சியம்மன் கோவில்
12. பூதராயர் கோவில்
13. துர்க்கையம்மன் கோவில்கள்
14. முனியப்பர் கோவில்
15. ஆழ்வார் கோவில்

இவ்வகைப் - பாட்டினுள்ளும் மேலும் சில பெயர் நிலையான வகைப்பாடுகளையும் காணலாம். எடுத்துக் காட்டாக ஒன்றை வகுத்துக் காட்டலாம்.

**சிவன் கோயில்:**

1. வைத்தீஸ்வரன் கோயில்
2. ஸ்ரீ நடேசர் கோயில்
3. பொன்னம்பலவாணேஸ்வரர் கோவில்
4. கைலாசநாதர் கோவில்
5. காசி விஸ்வநாதர் கோவில்
6. கதிரைமலைச் சிவன் கோவில்
7. அம்பலவாணேஸ்வரர் கோவில்
8. பசுபதீஸ்வரர் கோயில்
9. தான்தோன்றீஸ்வரர் கோவில்
10. நடராஜ ராமலிங்க சுவாமி கோவில்

சிவனுடைய வேறுபட்ட பெயர்களை இவை கொண்டழைக்கப்படுகின்றன. இவ்வாறே ஏனையவற்றையும் வகைப்படுத்தலாம். இக்கோவில்களின் பெயர்கள் தலவிருட்சத்தின் அடிப்படையிலும் பெயர் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆல், அரசு, வேம்பு, மருது, மா, மகிழ், இலந்தை, இத்தி போன்ற மரங்களுடன் இணைந்து பெயர்பெற்ற கோவில்களும் பல உள பஞ்சாங்கம் இப்பெயர்களை ஓரளவு தொகுத்துத் தந்துள்ளது.

இதுவரை சைவக் கோவில்கள் பற்றி நடைபெற்ற ஆய்வுகளின் தேவையை நோக்கும்போது அவை நான்கு நிலைகளில் நடைபெற்றுள்ளன.



★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

235.505
NAL AR.



## 1. புனர் நிர்மாணப் போது:

யாழ்ப்பாணத்துச் சைவக்கோயில்களிற் பல இயற்கை நிலையாலும் செயற்கைநிலையாலும் அழிவுக்குள்ளாக்கப்பட்டுள்ளன. அவ்வாறு அழிந்த கோயில்களை மீண்டும் புனர்நிர்மாணம் செய்யும்போது அந்நிகழ்வினை ஆவணப்படுத்துகின்ற நிலையிலே மலர்கள் வெளியிடப்படுவதுண்டு. அம்மலர்களில் கோவிலின் வரலாறும், கோயில் பற்றிய ஏனைய செய்திகளும் தொகுத்து நூல் வடிவாக்கப்படும். கோயிலின் வரலாற்றை இத்தேவைக்காக ஆராய்ந்து எழுதும்போது முழுமையான தகவல்களைப் பெறமுடியாத நிலையுண்டு. இலங்கையிலுள்ள சைவக்கோயில்கள் எல்லாம் புனர் அமைப்புப் பெறுவதில்லை. ஆனால் யாழ்ப்பாணத்துச் சைவக்கோயில்களில் பல கோவில்களுக்கு இத்தகைய புனர்நிர்மாணம் நடைபெற்றதுண்டு. அதனால் அக்கோவில்களின் வரலாற்றைத் தேடுகின்ற நிலையும் ஏற்பட்டது.

## 2. வரலாற்று ஆவணநிலை:

யாழ்ப்பாணத்திலே உள்ள சைவக் கோவில்களிற் சில வரலாற்றுடன் தொடர்புடைய கோவில்களாகவும் உள்ளன. எடுத்துக்காட்டாக நல்லூர், கைலாசபிள்ளையார் கோவில், இணுவில் பரராசசேகரப்பிள்ளையார் கோவில், மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் போன்றவற்றைக் குறிப்பிடலாம். யாழ்ப்பாணத்து வரலாற்றுடன் இக்கோவில்கள் தொடர்புற்றவாற்றை அறிவதற்கான ஆய்வுகள் சில நடைபெற்றுள்ளன. வரலாற்று ஆசிரியர்கள் அதனைச் செய்யமுற்பட்டுள்ளனர். சில ஆலயங்களிலே காணப்பட்ட கல்வெட்டு, செப்பேடு, தலபுராணம் என்பனவும் அவர்கள் இத்தகைய ஆய்வைச் செய்வதற்குக் காரணமாக இருக்கின்றன.

## 3 கர்ணபரம்பரைச் செய்திகளின் உண்மை நிலையறியும் அவா.

பல கோயில்களிலே கர்ணபரம்பரைக் கதைகள் உண்டு. அவற்றின் உண்மைத் தன்மையை அறியும் அவாவிலும் சில ஆய்வுகள் நடைபெற்றுள்ளன. இக்கர்ண பரம்பரைக் கதைகள் கோவிலின் பெயருடன் தொடர்புபட்டுள்ளன. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் இத்தகைய கர்ண பரம்பரைக் கதையுடன் அமைந்தது. கோயில் வழிபாட்டின் தொடக்க காலத்தைக் கணித்துக் கோயிலின் பழமையை நிறுவுவதற்கும் உரிமையைப் பேணுவதற்கும் கூட கர்ணபரம்பரைக் கதைகள் கோயிலுடன் இணைக்கப்பட்டுள்ளன. பழைய புராண இதிகாசக் கதைகளைக் கோயிலுடன் தொடர்புறச் செய்து மக்களிடையே வழிபாட்டு நடைமுறைகளில் நம்பிக்கையூட்டுவதற்கும் இக்கதைகள் தற்போது கோயில்களிலே சுவர்களில் சித்திர வடிவாகத் தீட்டப்பட்டுள்ளன. அவையும் ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றன.

## 4 வரலற்றுச் சான்று ஒப்பீடு.

கோவில்களை வரலாற்றுச் சான்றுகளுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்யும் முயற்சியும் உண்டு. சமூக வரலாற்று நிலையிலே கோயிலுக்கும் சமூகத்திற்கும் உள்ள தொடர்பு நிலையை விளக்குவதற்கும் ஆய்வு நடைபெறுகின்றது. கோவில்களின் பங்களிப்பு சமூகத்தின் குறை நிறைகளைப் போக்கும் இலக்கிலும் இனறு காணப்படுவதை இத்தகைய ஆய்வு மூலம் வெளிக்கொணரமுடியும். பழைய வழிபாட்டு முறைகளும் நம்பிக்கைகளும் எவ்வாறு புதிய முகங்களுடன் செயற்படுகின்றன என்பதை விளக்கவும் இன்று ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. நா. சண்முகலிங்கன் மேற்கொண்ட கலாநிதிப் பட்ட ஆய்வு இவ்வகையிற் குறிப்பிடத்தக்கது. பண்டைய வழி



132129
ARCHIVES
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டு மரபுகள் இன்றுவரை பேணப்பட்டு வருவதையும் எடுத்துக்காட்டும் ஆய்வுகளும் நடைபெற்றுள்ளன.

யாழ்ப்பாணத்துச் சைவக்கோவில்கள் பற்றிய ஆய்வுகளை வரலாற்று நோக்கிலே வைத்து மதிப்பீடு செய்வதற்குப் பெருந் தடையாக உள்ளவை இருஅம்சங்களாகும். ஒன்று இதுவரை செய்யப்பட்ட ஆய்வுகள் பற்றிய தரவுகள் மிகக்குறைவாகவே உள்ளன. மற்றது கோவில்கள் பற்றிய ஆய்வுகள் மேலோட்டமாகவே நடைபெற்றுள்ளன. முழுமையான நூல் வடிவில் ஆய்வுகளாக வெளிவந்திருக்கும் நூல்கள் மிகச் சிலவே. இதைவிடக் கட்டுரை வடிவாக வந்த கருத்துக்கள் குறிப்பிட்ட கோவிலின் மேற்காட்டிய அம்சத்தில் ஏதாவது ஒன்றையே தொட்டுக்காட்டுவதாக உள்ளன. கோயில் பற்றிய செய்திகளை ஓரளவு தொகுத்து ஆய்வு நோக்கில் வெளியிடப் பட்ட நூல்கள் என்ற வரிசையில் **இத்திமரத்தாள், ஆற்றங்கரையான், ஆழ்கடலான், நல்லூர்க் கந்தசாமி கோவில்** என்பவற்றைக் குறிப்பிடலாம். இன்னும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை சிறப்புப் பயில் மாணவர்கள் யாழ்ப்பாணத்துச் சைவக்கோவில்கள் சிலவற்றை ஆய்வு செய்துள்ளனர். இந்த ஆய்வுகள் பட்டத்துக்குரிய மதிப்பீட்டு நிலையிலே அமைவதால் நூல்களாக வெளிவருவதில்லை. எனவே அவை பற்றி ஏனையோர் அறிவதுமில்லை. பல்கலைக்கழக ஆய்வாளர்களாலும் ஆங்காங்கே உதிரியாகக் கட்டுரைகள் பல எழுதப்பட்டுள்ளன. எனினும் அவை பிரசுரத் தேவைகளுக்கேற்ப எழுதப்பட்ட கட்டுரைகளாகவே அமைந்துள்ளன. யாழ்ப்பாணச் சைவக் கோயில்கள் பற்றிய ஆய்வு முனைப்போடு எழுதப்பட்ட கட்டுரைகள் மிகச் சிலவே எனலாம்.

இலங்கையிலே சமயம் ஒரு பாடமாகப் பள்ளிக் கூடங்களிலே கற்பிக்கப்பட்டு வருகிறது. மாணவ நிலையிலே சமயப் பயிற்சி என்பது அருகிவிட்டது. சமயநடைமுறைகள் விஞ்ஞான யுகத்திற்கேற்ப மாற்றமும் பெற்றுள்ளன. இதனால் சமயம் பற்றிய சிந்தனையும் விஞ்ஞான ஆய்வு போலத் திசைமாறியுள்ளது. சைவக்கோயில்களின் வரலாறு சமயப் பேணலில் மிகவும் இன்றியமையாதது என்பது உணரப்படுவதில்லை. வரலாற்றுப் போக்கிலே கோயில்களின் முன்னைய வரலாற்றைத் தேடும் நிலை இன்றில்லை. கோயில்களைப் பரிபாலனம் செய்யும் தர்ம பரிபாலன சபைகளும் மனித நிலையான பதவிகளைப்பேணி அதிகாரம் செய்கின்ற சபைகளாகவே இருக்கின்றன. ஒருசில கோவில்களில் இவற்றின் நிர்வாகம் சிறப்பாக இருந்தபோதும் கோவிலின் வரலாற்றை ஆராய்ந்து எழுதிப்பேணும் நிலை இன்னமும் வரவில்லை. யாழ்ப்பாணம் தெல்லிப்பழையிலுள்ள துர்க்கையம்மன் கோவிலில் பெண்மணி ஒருவரே அறங்காவல் சபைத் தலைவராக இருந்து நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. எனினும் கோவில் பற்றிய முழுமையான ஆய்வு நிலையான பதிவு அங்கு இன்னமும் செய்யப்படவில்லை.

யாழ்ப்பாணத்துச் சைவக்கோயில் பற்றிய ஆய்வு கடந்த காலங்களிலே செய்யப்பட வேண்டும் எனப் பலராலும் கருதப் பட்டுள்ளது. ஆனால் அது முழுமையான ஊக்கத்துடன் செயற்பாடு பெறவில்லை. கோவில்களிலே பெறப்படுகின்ற வருமான மூலம் கோவில் பற்றிய ஆய்வினை முழுமையாகச் செய்து ஆவணப்படுத்த முடியும். பல கோயில்கள் பொருள் வளமுடையனவாக இருந்தபோதும் இம்முயற்சியில் ஈடுபடாதது பெருங்குறையாகவே உள்ளது. முற்காலத் தல புராணங்களையும், ஊஞ்சற் பதிகங்களையும் பாடுகின்ற மரபு



ARCHIVES
132129
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய் இக்காலத் தேவைக்கேற்ற வகையிலே கோவில்கள் பற்றிய பதிவுகள் செய்யப்பட வேண்டும். யாழ்ப்பாணத்திலே பிரித்தானியருடைய நிர்வாகம் நடைபெற்ற காலத்தில் 'தோம்பு' எனப்படும் பதிவுமுறையிலே அக்காலத்துக் கோவில்கள் பற்றிய செய்திகள் அவணப்படுத்தப்பட்டுள்ளன. இன்று அவை கோவிலின் உரிமையை நிலை நாட்டத் தேடிப் போகின்ற பதிவுச் சான்றாகவே உள்ளன. கால மாற்றத்துக்கும் தேவைக்கும் ஏற்ப கோவில் பற்றிய ஆய்வு செய்யப்பட்டு அவை நூல்களாக ஆவணப்படுத்தப்பட வேண்டும். பண்டைய மரபு மாறிப் புதிய நிலையிலே விஞ்ஞானக் கருவிகளுடன் உதவி கொண்டு இது செய்யப்பட வேண்டும். கோவில் பற்றிய எல்லாச் செய்திகளையும் வழிபாட்டு முறைகளையும் நம்பிக்கைகளையும் காலமாற்ற நிலைகளையும் கணித்துப் பதிவு செய்ய வேண்டும். ❋

UNIVERSITY OF JAFFNA ★ LIBRARY ★

உ

## அருகம் புல்

அகரம் எப்படி எழுத்துக்களுக்கு முதலாவதாக திகழ்கிறதோ, அதே போல் உலகில் முதன் முதலில் தோன்றியது அருகம் புல். அந்த அருகம் புல் தொன்மைக் கடவுளாகிய விநாயகருக்கு உகந்ததாயிற்று. பல்வேறு நறுமலர்கள் இருந்தாலும் விநாயகப் பெருமானுக்கு மிகவும் உகந்தது, அவரின் அர்ச்சனைக்கு உரியது அருகம் புல். ''ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரூன்றி'' என்று வாழ்த்துவது வழக்கம். அருகு முளைத்து, பல இடங்களில் வேரூன்றி நீண்டு வளர்ந்து கொண்டு போவது, பச்சனவாக தென்படுவது மனத்திற்கு நிம்மதி தரும்.

ஸ்ரீரங்கம் கோவில் வாசலில் விநாயகப் பெருமானுக்கு என்று அருகம் புல்லும் ஸ்ரீ ரங்கநாதருக்கு துளசியும் விற்பனைக்கு இருக்கும்.

**பொ. சிவப்பிரகாசம்**

பிரதம பொது சுகாதாரப் பரிசோதகர்,
யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்.

# திருவாரூர்

திருச்சிற்றம்பலம்

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி ஆனாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தை
தன்னை மறந்தாள்தன் நாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே!

திருச்சிற்றம்பலம்

— அப்பர் சுவாமிகள்

## வரலாறு:

சோழ வேந்தர்கள் காலத்தில் கோவில்கள் கட்டி எழுப்பப்பட்டன. பக்தி மார்க்கத்திற்கு ஆக்கமும், ஊக்கமும் அரச அவையால் பெரிதும் கிடைத்தன. சிற்பக்கலை வளர்ந்தது. நீற்றின் பெருமை உய்த்து உணரப்பட்டது. பெரிய புராணம் போன்ற சைவ நூல்கள் எழுந்தன. தேவார திருவாசகங்களைக் கோவில்களில் பண்ணோடு ஒத ஓதுவா மூர்த்திகள் நியமனம் பெற்றனர். திருக்கோவில்களை அண்டி குடியிருப்புக்கள் எழுந்தன. உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய நீர்ப்பாசனம் விருத்திஅடைந்தது. போக்குவரத்திற்கு வசதிகள் பெருகின.

பராந்தகன் - I திருவாரூர் பூங்கோவிலுக்கு விளக்கிடப் பொன் வழங்கினான். இராச இராசன் III திருவாரூர் கோவிலுக்கு நிலம் விட்டான். திருவாரூர் கோவிலுக்கு 6000 ஏக்கர் நிலமுண்டு. இந்த நெல் வருவாய் கொண்டு திருவாரூர் கோவில் நித்திய நைமித்தியங்கள் சிறப்புற நடைபெற்றன. பராந்தகன், இராசராசன், முதல் இராசேந்திரன், இராசாதிராசன், முதற்குலோத்துங்கன், இரண்டாம் இராசேந்திரன், விக்கிரம சோழன், இரண்டாம் குலோத்துங்கன் முதலியோருடைய கல்வெட்டுக்கள் மூலம் திருவாரூரின் பழைய சிறப்பை அறிய முடியும். திருவாரூரில் மாடமாளிகைகள், கூடகோபுரங்கள், உயர் கட்டிடங்கள் பல



★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணியோடு கூடிய சபைகள் பல இருந்தன. திருவாரூரை சோழ அரசர்கள் நேரே கண்காணித்தனர். சிவபெருமான் சோழ அரசனாக இருந்து அரசு புரிந்தார். பரம்பொருளின் திருவிளையாடல்கள் பல கண்ட இடம் திருவாரூர்.

தமிழ்ப் பெரும் காப்பியங்கள் புகழ் மனுநீதி கண்ட சோழன் திருவாரூரில் இருந்து நீதி வழுவாது அரசு செய்தான். அந்த மனுநீதி ஈற்றில் மனுதர்ம சாஸ்திரமானது. திருவாரூரில் செங்கோல் ஒரு போதும் ஒரு பாற்சாயவில்லை. மன்னன் மனுவின் செவிப் புலத்து பசு இழுத்து அடித்த மணி ஓசை கேட்டபோது ''பழிப்பறை முழக்கோ? வார்க்கும் பாவத்தினொலியோ? என்கிறார் சேக்கிழார் சுவாமிகள். அதாவது பழியினது பறைச் சத்தமோ? அல்லது பாவத்தின் சத்தமோ? என்று சிந்தை கலங்கினான் மன்னன். திருவாரூர் ஒரு தெய்வத் திருநகர். திருவாரூர் பிறந்தார்க்கு இயம வேதனை இல்லையென்பது எம்மவர் நம்பிக்கை. திருவாரூர் சப்த 'விடங்க' தலங்களில் ஒன்று. 'விடங்க' என்றால் கையால் புனையாதது. சிற்பி கைபடாச் சிலை. கர்நாடக சங்கீத மும்மூர்த்திகளான முத்துசாமி தீட்சதர், தியாகராஜ சுவாமிகள், சியாமசாஸ்திரிகள் பிறந்த பெருவிடம் திருவாரூர்.

### திருநகரச் சிறப்பு:

பஞ்ச பூதங்களில் ஒன்றாகிய பூமி கடினமாகி யாவற்றையும் தாங்கி நிற்கிறது. இதேபோலத் திருவாரூர் பிருதிவித் தலமாய் யாவற்றையும் தாங்கி உளது. பிறக்க முத்தி தருவது திருவாரூர். தமிழ் நாட்டில் தஞ்சாவூர் மாவட்டத்தில் திருவாரூர் என்னும் பாரிய சிவத்தலம் உண்டு. காவிரி பாயும் வளமான சோழ நாட்டில் ஒரு பகுதி திருவாரூர். நாகபட்டினத்தில் இருந்து மேற்குத் திசையில் 14 கல் தொலைவில் திருவாரூர் உளது. திருவாரூர் ஒரு புகைவண்டிச் சந்திப்பு. இந்தப் புகைவண்டிச் சந்திப்பில் இருந்து ஒரு கல் தொலைவில் இச்சிவத்தலமுண்டு. 'நிறை செல்வத் திருவாரூர்' என்ற சிறப்புப் பெயர் பெற்றது. திருவாரூரை மூலாதாரம் என்பர். காவிரிப் புதுநீர் வயல்களில் புகுவதால் சம்பா நெல் செழித்து வளரும். கரும்பும், கமுகும், கதலியும் மலிந்து விளையும். மல்லிகையும், முக்கனியும் திருவாரூரில் நிறைந்து குறைவற்று இருக்கும்.

நீர்ப்பூக்களான வெண்தாமரை, செந்தாமரை, ஆம்பல், அல்லி, நீலோற்பலம் குமுதம், செங்குவளை, செங்கழுநீர், கருங்குவளை மலர்ந்து நிறைந்திருக்கும். திருவாரூர் சோழப் பேரரசர்கள் இருந்து கோலோச்சிய வரலாற்றுச் சிறப்புமிக்க பெருநகரம். திருவாரூரின் செழுமை மிக்க வரலாற்றைக் காட்டும் கல் தேரும் பசு, அதன் கன்று, அரசிளங்குமரன் ஆகிய உருவங்கள் இங்கே தனி இடத்தில் காண முடியும். திருவாரூர்த் தேரழகு, பாவ நாசம் படி அழகு, திருவிடை மருதூர் தெரு அழகு என்று கூறுவர். புறநகரிலே கூத்தாடும் அரங்குகளும், மாடமாளிகைகளும் இருந்தன. திருவீதிகளிலே வாத்திய ஓசை, செழுமணித்தேரொலி, யானை ஒலி, குதிரை ஒலி கேட்கும். மாதவங்கள் நல்கியது திருவீதி நான்கும் ஆடும் மாதர்களின் சிலம்பொலியும் கேட்கும். சிவன் அடியார்களையும், சிவபெருமானையும் அன்றி வேறு பதியில்லாத உருத்திர கணிகையர் மாளிகைகள் திருவாரூர் திருநகரைச் சிறப்பித்தன.

திருவாரூர் தேர் மிகப் பழையது. இதனை ஆழித் தேர் என்பர். அத்தேர் இன்று இல்லை. தியாகப் பெருமான் தேரில் எழுந்தருளும் காட்சியை அப்பர் சுவாமிகள் மிக அழகாக;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஊழித்தீ அன்னானை
ஓங்கொலி மாப் பூண்டதோர்
ஆழித் தேர் வித்தகனை
நான் கண்ட ஆரூரே:**

தியாகப்பெருமான் தேருக்கு எழுந்தருளும் போது பொன் பூ, வெள்ளிப் பூ, இறைப்பு நடைபெறும். அந்த வீதியைப் பொன் பரப்பிய திரு வீதி என்பர். நகரச் சிறப் பிற்கு சேக்கிழார் பெருமான் திருவாரூரை மிகச் சிறப்பாக எடுத்து இயம்புகிறார்;

**'வேத வோசையும் வீணையி
னோசையும்,
சோதி வானவர் தோத்திர
வோசையும்
மாத ராடன் மணிமுழ வோசையும்
கீத வோசையும் மாய்க்கிளர் வுற்றவே,**

## நமி நந்தி அடிகள்

திருவாரூர் பிறந்தார் யாவராயினும் சிவ கணங்களாகவும், சிவன் அடியார்க ளாகவும் கருதப்பெறுவர். இங்கே சாதி வேறுபாடில்லை. உயர்வு தாழ்வு இல்லை. இது திருவாரூரின் சிறப்பு. இவர்கள் தொகை அடியார்களாகப் பாராட்டப் பெறுகின்றனர். ஒரு முறை சிவனடியாரான நமிநந்தி அடிகள் நாயனார் திருவாரூரில் நடைபெற்ற பங்குனி உத்தரத் திருவிழா விற்கு வந்திருந்தார். அங்கு பல சாதியின ரும் வந்திருந்தனர். திருவிழா முற்றுப் பெற்றதும் தம் ஊருக்குத் திரும்பிச் சென் றபோது நள்ளிரவாகிவிட்டது. வெளித் திண்ணையில் படுத்துக் கொண்டார். மனை வியிடம் பல சாதியினரும் திருவிழாவிற்கு வந்திருந்தமையால் நீராடாமல் உண்பது தவறு என்று கூறிவிட்டார். அன்றைய தினம் இரவிலே பரம் பொருள் தோன்றி 'திருவாரூரில் பிறந்தவர்கள் எல்லோரும் சிவகணங்கள், ஆகையால் வேற்றுமை பாராட்டாதே என்றார். இது திருவாரூர் மக்களின் ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டிற் கும், வழி வகுத்தது எனலாம். நமிநந்தி அடிகள் செய்த நெய் விளக்கு ஏற்றும் திருப்பணி இன்றும் தருமபுர ஆதினத் தால் தொடர்கின்றது.

## திருவாரூர்த் திருக்கோயில்

மூன்று பிரகாரங்களைக் கொண்டது. நான்கு கோபுரங்கள் அணி செய்யும் மிகப் பெரிய கோவில். திருவாரூரை 'கமலால யம்' என்றும் 'பூங்கோவில்' என்றும் கூறுவர். திருவாரூர் நகரத்திற்கு அக மலர் போல்வது பூங்கோவில். அப்பூங் கோவில் திருமதில் வாயிலை அடுத்து கோவிலுக்குள் முதல் காணப்படுவது தேவாசிரிய மண்டபம்.

கோவில் 5 வேலி, குளம் 5 வேலி, செங்கழுநீர் ஓடை 5 வேலி ஆகும். கமலா லயம் என்ற தெப்பக் குளம் கோவிலின் மேற்குப் பக்கமாக வுள்ளது. இதன் நடுவில் ஓர் தீவும், அழகான ஆலயமும் உண்டு. தாமரைகள் மிகுந்து படர்ந்திருந்தமை யால் 'கமலாலயம்' என்ற பெயர் நிலைத் திருக்கலாம். தென்கரையில் அரண்மனை பங்களா உண்டு.

திருவாரூர் வடக்கு கோபுரம் கருணா கரத் தொண்டமான் திருப்பணி கோவி லுக்குள் நுழைந்தவுடன் உயர்ந்த நீண்ட கற்றூண்கள் மட்டும் நிற்கும். இது ஆயி ரக்கால் மண்டபம் எனப்படும். திருவிழாக் காலங்களில் இவற்றின் மீது காவணம் (ஓலைப்பந்தல்) போடுவர். இந்த ஆயிரங் கால் மண்டபத்தில் இருந்துதான் சுந்தரர் திருத்தொண்டத்தொகையை அருளினார். கீழைக்கோபுரம் 118'. இக்கோபுரம் சோழர் காலத்தது. மேலைக்கோபுரம் 101'. கோவில் நிலப்பரப்பு தெற்கு வடக்கு ஆக 666' கிழக்கு மேற்காக 846'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாற்புறமும் 30' உயரக் கருங்கல் மதில் உண்டு. திருவாரூரில் மிகப்பெரிய நாயனம் உண்டு. நாதஸ்வரம் பாரி, மத்தளம் சுத்த மத்தளம், வாத்தியம் பஞ்சமுக வாத்தியம், பிள்ளைத் தண்டு மாணிக்கத் தண்டு, நடனம் அசபை, கொடி தியாகக் கொடி, சிம்மாசனம் இரத்தின சிம்மாசனம் சபை தேவசபை. திருவாரூரின் மறு பெயர்கள் கமலாலயபுரம், முசுகுந்தபுரம், ஆடகேசபுரம், சத்திபுரம் ஆகும். திருவாரூர் வாயிலில் எல்லாத் தேவர்களும் கூடிக் காத்திருப்பர். உள்ளே மாதவர்களாகிய அடியார் திருக்கூட்டம் நிறைந்திருக்கும். அடியார்கள் முழு நீறு பூசி உருத்திராக்கம் அணிந்து திருவைந்தெழுத்து ஓதி நிற்பர்.

## திருமூலட்டானம்.

தில்லையில் திருச்சிற்றம்பலம் போல திருவாரூரில் திருமூலட்டானம், மூலத்தானத்தில் புற்றிடமாக வன்மீகநாதர் என்ற திருநாமம் பூண்டு சுயம்பு மூர்த்தியாக அருள்பாலிக்கின்றார். திருமூலட்டானம் என்ற பெரிய திருக்கோயில் இரண்டாம் பிரகாரத்தில் மேற்குத் திசையில் உள்ளது. புற்றிடங் கொண்டார். ஆதி தேவராய் உள்ளார். இறைவன் விரும்பி எழுந்தருளியிருப்பது இந்தப் பூங்கோவில் என்னும் திருவாலயம். புற்றிடம் கொண்டு இறைவன் எழுந்தருளிய காரணத்தாலே இது பிருதிவித்தலமாயிற்று. வன்மீகநாதருக்கு தெய்வேந்திரனே பூசை செய்வதாக ஐதீகம். புற்றிடங் கொண்டார். கருவறையில் வெள்ளிக் கவசம், நாகாபரணம் அணிந்து அருகே சோமகுசாம்பாள் என்ற போக சக்தி அம்மன் அர்த்த மண்டபத்தில் நாலு யாளிகள் தாங்கிய மேடையில் அமர்ந்திருக்கிறாள். மண்டபத் தூண்கள் மிகுந்த வேலைப்பாடு உடையன. இரண்டாம் பிரகாரத்தில் தெற்கு நோக்கியவாறு நீலோத்பலாம்பிகை தனிக் கோயில் கொண்டுள்ளார். உள்ளே திரு மூலத்தானத்தில் எழுந்தருளியிருக்கும் புற்றிடங் கொண்டாராயும் உள்ள பெருமானே வீதியில் எழுந்தருளுவர். ஆதலின் வீதி விடங்கர் எனப் பெயர் பெறுவர்.

"அணியுடைய நெடுவீதி நடப்பர் போலும்
அணியாரூர்த் திரு மூலட்டான னாரே'

அதாவது, திருமூலட்டானத்திலே எழுந்தருளி இருப்பதைவிட்டுத் திருவாரூர்த திரு வீதியிலே வந்து விழாக் கொள்வர். என்ற கருத்துப் பெற அப்பர் சுவாமிகள் அருளினார்.

## சப்த விடங்கர்.

திடுவாரூர், திருநள் ளாறு, திருநாகைக் காரோணம், திருக்காறாயில், திருக்கோளிலி, திருவாய்மூர், திருமறைக்காடு ஆகிய ஏழு சிவத்தலங்களும் சப்த விடங்க தலங்களாகும். திருவாரூர் தியாகேசர் சந்நிதி மிகச் சிறப்பானது. திருவிழாக் காலங்களில் தியாகருடைய திருநடனம் காணக் கண்ணாயிரம் வேண்டும். தியாகப் பெருமான் எழுந்தருளியாக இரத்தினசிம்மாசனத்தில் முன்னே இரண்டு வாட்படையும் நடுவில் ஒரு மலர்ச்செண்டும் உண்டு. இங்கே எழுந்தருளிய அம்பிகை இருவர். ஒருவர் அல்லியங்கோதை, மற்றவர் கமலாம்பிகை, (தவக் கோலத்தில்) காண முடியும். பராசக்தி பீடங்களில் இத்தலமும் ஒன்று. தியாகராஜர் சந்நிதியில் இருபுறமும் துவாரபாலகர்கள் வார்ப்பு விக்கிரகங்கள் வாயில் காப்போனுக்கு வேண்டிய இறுகிய தேகம், உறுக்கும் சிங்க விழிகள், நாக குண்டலங்கள், பயங்கரமான பற்கள், நந்தி சடாமுடி, நெற்றிக்கண், நாகாபரணம், மான், மழு ஆகிய சிவ சின்னங்களோடு கூப்பிய கைகள மூலவர்க்கு எதிரே எழுந்தருளி உள்ளனர். தியாகராஜர் சந்நிதியில் நந்தி நின்ற நிலையில் உளது. இங்கே ஓர் மரகதலிங்கமுளது அவர் சப்த விடங்கரில் ஒருவர். தியாகே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சருக்கும் வான்மீகநாதருக்கும் இடையில் ஐங்கலக்காசு விநாயகர் காட்சி தருகிறார். திருவாரூர் கோவிலில் சோமஸ்கந்த மூர்த்தமாகிய தியாகேசப் பெருமானே உற்சவர்.

## திருவாரூர் சம்பந்தமான நூல்கள்

1. கமலாயச் சிறப்பு.
2. திருவாரூர்ப்புராணம்.
3. தேரூர்ந்த சோழபுரம.
4. தியாகராசர் குறவஞ்சி.
5. திருவாரூப் பன்மணிமாலை.
6. கமலாம்பிகை பிள்ளைத் தமிழ்.
7. திருவாரூர் மாலை.
8. கமலாம்பிகை மாலை.
9. திருவாரூர் அந்தாதி.
10. தியாகராச லீலை.
11. திருவாரூர்நான் மணிமாலை.
12. தியாகராசர் பள்ளு.
13. திருவாரூர் ஒரு துறைக்கோவை.
14. தியாகராசர் கழி நெடில்.
15. திருவாரூர் உலா.
16. திருவாரூர் மான்மியம்.
17. திருவாரூர்க்கோவை.
18. திருவாரூர் பாதி — திருவொற்றி — யூர் பாதி.

## திருவாரூர்த்தியாகேசர்

திருவாரூர் சோழவள நாட்டின் சிவத் தலங்களுள் மிகப் பழமையும், சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததும் ஆகும். தியாகேசர் சந்நிதியை தேவசபை என்பர். கருவறையில் உள்ள வன்மீகநாதரை விட புகழ் மிக்கவர் தியாகேசர்.

**"மாடமொடு மாளிகைகள் மல்குதில்லை**
**மணி திகழும் அம்பலத்தே மன்னிக் கூத்தை**
**ஆடுவான் புகுதற்கு முன்னோ பின்னோ**
**அணி ஆரூர் கோயிலாக் கொண்ட நாளே"**

என்று அப்பர் சுவாமிகள் திருவாரூரின் தோற்றத்தை காலத்தை சிந்தனை செய்தார். ஞானசம்பந்தர் ஐந்து தேவாரப் பதிகங்களையும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் எட்டுத் தேவாரப் பதிகங்களையும், அப்பர் சுவாமிகள் இருபத்தி ஒரு தேவாரப் பதிகங்களையும், பாமாலை ஆகச் செய்து திருவாரூரை அலங்கரித்தனர்.

தியாகேசர் திருவுருவத்தில் முகத்தை மட்டும் காணமுடியும். மற்றவை அலங்காரத்தில் மறையும். பங்குனி உத்தரம், மார்கழித் திருவாதிரை ஆகிய தினங்களில் தியாகேசரின் பாத தரிசனம் செய்யலாம். தியாகேசப் பெருமான் ஆழித் தேர் விழா முடித்து, தேவாசிரிய மண்டபத்தில் மகா அபிஷேகங் கொண்டு அருளுவர். பங்குனி உத்தரத்தில் இவை நிகழும். தேவ தீர்த்தம் கமலாலயம் ஆகும். சபாபதி மண்டபத்தில் புராண படனம் நாள் தோறும் நிகழும். கோவில் மேற்கு வீதியில் வாதாபி விநாயகரைத் தரிசிக்க முடியும்.

தியாகரின் புராண வரலாறு மிகவும் சுவையானது. திருமாலின் மார்பில் பாற்கடலில் தியாகப் பெருமான் இருந்த போது, திருமாலின் உச்சுவாச, நிச்சுவாசத்தினால் மார்பு அசைய அந்த அசைவிற்கேற்ப தியாகப் பெருமான் ஆடினவர். அதனால், 'இருந்தாடழகர்' என்ற பெயரும் தியாகேசருக்கு உண்டு. அந்த நடனத்திற்கு 'அசபா நடனம்' என்று பெயர். சிவன், உமையாள், வேலவன் ஆகிய மூவரையும் ஓர் பீடத்தில் இருத்தி, பரம்பொருளை சோமாஸ்கந்த மூர்த்தமாக திருமால் வழிபட்டு வந்தவர் அந்த சோமஸ்கந்த மூர்த்தத்தை திருமாலிடம் பெற்று, இந்திரன் அதற்கு தியாகப் பெருமான் என்ற திருநாமம் இட்டு, பூசனை புரிந்து வந்தான். முன் ஒரு போது நடந்தேறிய போரில் முசுகுந்தச் சோழான் இந்திரனுக்கு உதவியிருந்தான். இதற்குப் பரிசாக முசுகுந்தன் தியாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமானைக் கேட்க, அந்த தியாகப் பெருமானைக் கொடுக்க மனமில்லாத இந்திரன் அதற்கு தியாகப் பெருமான் போல ஆறு உருவங்கள் புனைந்து, தான் பூசிக்கும் தியாகப் பெருமானையும் இணைத்து, அவற்றுள் எதையாவது எடுத்துச் செல்லுமாறு முசுகுந்தனை வேண்ட, இறைவன் அருளால் இந்திரன் பூசித்த தியாகரையே முசுகுந்தன் எடுத்தான். இதன்பின் இந்திரன் அந்த ஏழு உருவங்களையும் முசுகுந்தனிடம் அளித்தான்.

தேவலோகத்தில் இருந்து கொண்டு வந்த தியாகப்பெருமானை முசுகுந்தச் சோழன் திருவாரூர் என்னும் திவ்விய சேத்திரத்தில் எழுந்தருளச் செய்தான். இந்திரன் பூசித்த திருவுருமே திருவாரூரில் உளது. ஏனைய ஆறு திருவுருவங்களையும் திருநள்ளாறு, திருநாகைக்காரோணம், திருக்காறாயில் திருக்கோளிலி, திருவாய்மூர், திருமறைக்காடு ஆகிய தலங்களில் எழுந்தருளச் செய்தான்.

## சுந்தரரும் திருவாரூரும்

'திருத்தொண்டத் தொகை' பாட சுந்தரருக்கு 'தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கு அடியேன்' என்று அடியெடுத்துக் கொடுத்தவர் திருவாரூர்த் தியாகேசப் பெருமானே! திருத்தொண்டத் தொகை எழுந்த இடமும், அதற்கு பொருளாகிய அடியார் திருக்கூட்டமும் எழுந்தருளிய இடம் திருவாரூராகும். திருவாரூரில் உள்ள தேவாசிரியன் மண்டபத்தில் தான் சுந்தரர் தாம் பாடிய திருத்தொண்டத் தொகையை அருளினார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் விருத்தாசலத்தில் தாம் இறைவனிடத்தில் பெற்ற பொன்னை, அங்குள்ள மணிமுத்தாற்றில் இட்டு வைத்தார். அந்தப் பொன்னை திருரூரில் உள்ள கமலாலயத்தில் பெற இறைவனிடம் அனுமதி வேண்டினார். இறைவனும் இசைந்தார். அதன்படியே அப்பொன்னை சிவபெருமான் மீது பதிகம் பாடி கமலாலயக்குளத்தில் பெற்றார். பொன்னை மறுத்துரைத்த போது சரியாக இருந்தது. ஒரு போது சிவபெருமான் குண்டையூர்க் கிழாரின் கனவில் தோன்றி 'ஆரூரனுக்கு நெல் தந்தோம்' என்றார். மறுநாள் குண்டையூர் முழுதும் நெல்மலையாகத் தென்பட்டது. இதனைக் கிழார் சுந்தரரிடம் கூற, சுந்தரர் திருக்கோளிலிக்கு வந்து, குண்டையூர்க் கிழார் அளித்த நெல்லைத் திருவாரூக்குக் கொண்டு செல்ல ஆள் உதவி வேண்டி.

**''நீளநினைந் தடியேனுமை நித்தலுங்**
**கைதொழுவேன்**
**வானள கண்மடவா ளவள் வாடி**
**வருந்தாமே**
**கோளிலி யெம்பெருமான் குண்டையூர்ச்**
**சில நெல்லுப்பெற்றே**
**னாளிலை யெம்பெருமா னவையட்டித்**
**தரப்பணியே''**

என்று பதிகம் பாடினார். அந்த நெல்லை திருவாரூருக்குக் கொண்டு சென்றார். சுத்தரருக்கு திருவாரூர் தெற்கு கோபுர வாயிலின் அருகில் தனிக் கோயில் உண்டு.

## தூது சென்ற அற்புதம்

சுந்தரர் திருநாவலூரில் பிறந்து, திருவெண்ணை நல்லூரில் இறைவனுக்கு ஆட்பட்டு, இறைவனோடு தோழமை பூண்டு, தம்பிரான் தோழராக வாழ்ந்தார், தம்பிரான் தோழரான சுந்தரர் திருவாரூரில் தங்கியிருந்த போது இறைவன் திருவருட்பாங்கின் படி பரவையார் என்ற ருத்திர கணிகை மீது காதல் கொண்டு, அவளை மணம் புரிந்தார். பரவையார் வாழ்ந்த வீட்டில் பரவையாருக்கு தனிக்கோயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டு. அந்த கோயில் திருவாரூர் தெற்கு கோபுர வாயிலின் அருகே உண்டு. யார் இந்தப் பரவையார்? உலக மாதாவாகி உமை அம்மையாரின் சேடியரில் ஒருவரா கிய கமலினியார் தான் பின் பரவையா ராக அவதரித்தார். பரவையார் கோவில் உள்வீதியை செந்தாமரை நாறும் வீதி என்பர்.

**"வன் றொண்டர்க்கு தூது போய் நடந்த செந்தாமரை யடி நாறுமால்"**
— பெரியபுராணம்

சிவபெருமான் பாதம் சிவக்க நடந்து தூது சென்ற வீதி அல்லவா?. சிவபெரு மான் சுந்தரமூர்த்தி சுவாமிகட்காக ஒரு முறைக்கு இரு முறை பரவையாரின் ஊட லைத் தணிக்கத் தூது சென்றதால் பரம் பொருளின் பாதம் சிவந்தது.

சுந்தரர் திருவொற்றியூர் சென்ற போது சங்கிலியாரையும் விரும்பி மணந்து கொண்டார் இதனால்தான் திருவாரூரில் பரவையார் ஊடல் கொண்டார். பர வையாரின் ஊடலைத் தணிக்க சுந் தரர் இறைவனை இரவில் தூது அனுப்பினார். பரவையாரின் ஊடல் தணிந்தது. இறைவன் பரவையார் இல்லத் திற்குத் தூது சென்றதை புலவர் ஒருவர், சிவபெருமானின் அடியும், முடியும் காண வேண்டி திருவண்ணாமலையில் அயனும், அரியும் திணறி இருக்கின்றார்களே! அந்த அயனும், அரியும், இந்தப் பரவையார் வீட்டு வாயிலிற்கு வந்திருந்தால் பரம் பொருளின் அடியையும் முடியையும் சுலப மாக ஐயன் தூது வந்த போது கண்டிருக் கலாம்.

**"ஆனார் இலையே அயனும், அரியும் காணா**
**அடி முடி முன் காண்பதற்கு -மேனாள்**
**இரவு திருவாரூரில் எந்தை பிரான் சென்ற**
**பரவை திருவாயில் படி"**

## மனுநீதிச் சோழன்

மனுநீதி கண்ட சோழன் திருவாரூரில் செங்கோல் செலுத்தி வந்த காலத்தில், அரண்மனை வாயிலில் ஆராய்ச்சி மணி தொங்கிற்று. மனுவின் செங்கோல் ஆட்சி யில் தவறு நேர்ந்தால் ஆராய்ச்சி மணி ஒலிப்பது வழமை. ஒரு போது மனு நீதி கண்ட சோழனின் மகன் தேரில் திருவா ரூர் நகரை வலமாக வரும் வேளையில் துள்ளிச் சென்ற இளம் பசுக்கன்று ஒன்று தேர்ச்சில்லில் அகப்பட்டு உயிர் நீத்தது. தாய்ப்பசு துயருற்று ஆராய்ச்சி மணியை தனது கொம்பினால் அசைத்து அடித்தது. இது சோழ அரச நீதி முறை. அஃறிணை யாயினுஞ்சரி, உயர்திணையா யினுஞ்சரி வேறு எவரின் உதவியும் இன்றி தமது குறையை அரசனுக்கு அறிவித்துக்கொள் ளும் வழக்கம் திருவாரூரில் இருந்தது. இதை சேக்கிழார் பெருமான் மிக அழ காக-;

**"தன்னுயிர்க் கன்று வீயத் தளர்ந்த**
**வாத் தரியா தாகி**
**முன்னெருப் புயிர்த்து விம்மி முகத்**
**தினிற் கண்ணீர் வார**
**மன்னுயிர் காக்குஞ் செங்கோன்**
**மனுவின் பொற்கோயில் வாயிற்**
**பொன்னணி மணியைச் சென்று**
**கோட்டினாற் புடைத்த தன்றே"**
— பெரியபுராணம்

மணியோசை கேட்ட சோழ மன்னன் ஆராய்ச்சி மணி அடித்ததன் காரணத்தை நன்றாக ஆய்ந்து அறிந்து, அஃறிணையா யினுஞ்சரி செங்கோல் சாயாமல் நீதி வழங் கும் முகமாகத் தன் ஒரே மகன் என்றும் பாராது தேர்க்காலில் இட்டு தேர் ஊர்ந் தான். இதை சேக்கிழார் சுவாமிகள் மிக நீதி வழுவா முறையில்;-

ஒரு மைந்தன் தன் குலத்துக் குள்ளா
னென் பதுமுணரான்
தருமத்தன் வழிச்செல்கை கடனென்று
தன்மைந்தன்
மருமந்தன் றேராழி யுறவூர்ந்நான்
மனுவேந்தன்
அருமந்த அரசாட்சி அரிதோ? மற்றெ
ளிதோ! தான் -

— பெரியபுராணம்

கடைச் சங்ககாலத்திற்கு பிற்பட்ட தமிழிலக்கிய நூலான சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் இந்த நிகழ்வை மேலும் விபரிக்கிறார் :-

" வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சு சுட
தான் தன்
அரும் பெறற் புதல்வனை ஆழியின்
- மடித்தோன்.

— சிலப்பதிகாரம் வழக்குரை காதை

திருவாரூரில் சோழர்கள் ஆட்சி, அவர்களின் வரலாறு, திருவாரூர் நகர் சிறப்பு அங்கே உயர்வு, தாழ்வு இல்லாமை, திருவாரூர் திருக்கோயிலின் சிறப்பு, திருமூலட்டானம், சப்த விடங்கர்' திருவாரூரில் எழுந்த நூல்கள், தியாகேசரின் புராண வரலாறு, சுந்தரரும் திருவாரூரும், தூது சென்ற சுவையான நிகழ்வு, மனு நீதி கண்ட சோழன் செங்கோல் சாயாமை பற்றி விபரித்தோம்.

## தொகுத்து எழுத உதவிய நூல்கள்


1. பெரிய புராண விளக்கம்- கி. வா. ஜகநாதன். எம் . ஏ.
2. திருத்தொண்டர் புராண உரை -திரு சி. கே. சுப்பிரமணியமுதலியார்-பி.ஏ.
3. சிறப்பு மிக்க சிவாலயங்கள் - புலவர் சி. முத்துப்பிள்ளை.
4. கலைக்களஞ்சியம் தொகுதி 6.
5. மூவர் தேவாரம்.
6. சிலப்பதிகாரம் - இளங்கோ அடிகள்.
7. தேரூர்ந்த சோழபுரம்.
8. திருவாரூர்ப் புராணம்.


உ

## வில்வ மரத்தில்

இலக்குமி வாசம் செய்கிறாள். ஒரு வில்வதளம் சிவனுக்கு அர்ப்பணித்தால் பாவங்கள் நீங்கும். நன்மை உண்டாகும். வில்லை வளர்த்தால் கங்கை முதலிய புண்ணிய நதிகளில் நீராடிய பலன் கிடைக்கும். காசி முதல் இராமேஸ்வரம் வரை வழிபட்ட பலன் கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பேராசிரியர் வி. சிவசாமி**

# நல்லூர் அன்றும் இன்றும் - சில குறிப்புகள்

இலங்கைத் தமிழர்களின் உள்ளங்களைக் கவரும் இடங்களிலே நல்லூர் தனிச்சிறப்பு வாய்ந்ததாகும். குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டினை மையமாகக் கொண்டு கி. பி. 13ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி தொடக்கம் 1619 வரை நிலவிய தமிழ் அரசின் தலைநகராக, அக்காலத் தமிழ் அரசியல், சமூக, இந்துசமய, பண்பாட்டு, பொருளாதார மையமாக விளங்கிய பெருமை இதற்குரியதாகும். இலங்கை வரலாற்றில் மேற்குறிப்பிட்ட தமிழரசு ஒருபிராந்திய அரசு போலக் காணப்பட்டாலும், இதற்கு முற்பட்டகால, சமகால, பிற்காலப் பகுதிகளிலே நிலவிவந்த சிங்கள அரசுகள் போல, இதுவும் இலங்கை முழுவதிலும் தனது ஆதிக்கத்தினை செலுத்த முயற்சித்தது என்பது சமகால கோட்டகம (14ம் நூற்றாண்டு குருநாகலில்) தமிழ் சாசனம், கம்பளையிலே மெடவெலவிலுள்ள சிங்கள சாசனம், கி. பி. 1344 ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்த மொறோக்கோ நாட்டுப் பயணியின் பிரயாணக் குறிப்புகள், சமகாலச் சிங்கள நூல்கள் சில தரும் சான்றுகளால் புலப்படும். மொறோக்கோ பயணியான இபின்பத்தூத்தாவின் கூற்றுப்படி சமகால யாழ்ப்பாணத்தமிழரசனான ஆரியச் சக்கரவர்த்தி பாரசீகமொழி உட்பட்ட பலமொழி விற்பன்னராகவும், சிறந்த பண்பாளராகவும், அரசியல் குறிப்பாகப் பொருளாதார பலமும் உள்ளவனாக விளங்கினான் என அறியப் படுகின்றது. அரசன் அவனைப் பத்தலவில் (புத்தளம் அல்லது வத்தளையில்) சந்தித்தான். அரசனின் பரந்து பட்ட வர்த்தகம் பற்றிய குறிப்பும் பிரயாணக் குறிப்புகளிலே காணப்படுகிறது.

இவ் அரசு காலத்திய நூல்களில் கைலாயமாலை 'நல்லை மூதூர்' என நல்லூரை வருணிப்பதிலிருந்து நல்லூரின் தொன்மை துலங்குகிறது. முன்னைய நல்லூர் இன்றைய சங்கிலித்தோப்பினைப் பெரும்பாலும் மையமாகக் கொண்டு சுமார் இரண்டு மைல் விட்டார்த்தமுள்ள பிரதேசத்தினை உள்ளடக்கியிருந்ததெனலாம். இதில் இன்றைய சங்கிலித்தோப்புப் பகுதி பிரதான மையமாக விளங்கியிருக்கலாமென்பதற்குச் சான்றுகள் உள்ளன. ஏற்கனவே பல நூற்றாண்டுப் பழமை வாய்ந்த நகரமாக இது திகழ்ந்து பின்னர் மேலும் முக்கியத்துவம் அடைந்திருக்கலாம். யாழ்ப்பாண அரசு தோன்றுவதற்கு இரு நூற்றாண்டுகளுக்கு முன்பே சோழப் பெரு மன்னர் காலத்திலே (கி. பி. 11ம் நூ.) வட இலங்கையில் இது ஒரு உப தலைநகராக எழுச்சி பெற்றிருக்கலாம். இதற்கு ஒரு சான்றாக யாழ்ப்பாணம் கோட்டையிலே கண்டுபிடிக்கப்பட்ட முதலாம் ராஜேந்திரனின் தமிழ்க் கல்வெட்டினைக் குறிப்பிடலாம். இதற்கு முன்பும் இது ஓரளவு முக்கியத் துவம் பெற்றிருக்கலாம்.



★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இலக்கிய சகாப்தமெண்ணூற்றெ ழுபதாம்'' எனத் தொடங்கும் கைலாய மாலைச் செய்யுளின்படி நல்லூரிலே கந்த னுக்கு, கி. பி. 10 ஆம் நூற்றாண்டளவிலே புவனேகபாகு என்னும் மன்னன் கோயில் கட்டினான் எனக் கூறப்படுகிறது. சிலர் இதிலே கூறப்பட்டுள்ள ஆண்டு கி. பி. 13 ஆம் நூற்றாண்டைக் குறிப்பதாகக் கொள்ளுவர். எனினும் தமிழரின் பிரபல்யமான தெய்வமாக முருகன் விளங்குகின்றபடியால் இங்கு நீண்டகாலமாக வாழ்ந்து வந்த தமிழர் மத்தியில் இவ் வழிபாடு நிலவியதில் வியப்பில்லை.

நல்லூர் (நல்ல ஊர்) எனும் பெயர் தமிழ்நாட்டிலே சில இடங்களுக்கு உண்டு. பாண்டி நாட்டிலுள்ள செவ்விருக்கை நாட்டிலே சக்கரவர்த்தி நல்லூர் என்னும் இடமுண்டு. இங்கு கி. பி. 13 ஆம் நூற்றாண்டுப் பாண்டியப் பெருமன்னரின் சேவையிலிருந்த ஆரியச் சக்கரவர்த்தி குடும்பத்தைச் சேர்ந்த ஒருவன் பாண்டியப் பெருமன்னரின் ஆதரவுடன் யாழ்ப்பாணத்திலே தமிழரசினை நிறுவினான் என வரலாற்றாசிரியர் கூறுகின்றனர். ஓரிடத்திலிருந்து பிறிதொரு இடத்துக்குச் சென்று குடியேறுவோர் தம் தாய் நாட்டுப் பெயர்களைப் புதிய இடத்திலும் சூட்டுதல் வழக்கமாகும். ஆரியச் சக்கரவர்த்தி எனும் பெயர் குடும்பப் பெயராகவும், சிறப்புப் பெயராகவும் யாழ்ப்பாண மன்னர்களால் தரிக்கப்பட்டது. இவர்களின் ஆட்சிக் காலப்பகுதியிலே கி, பி. 1450 — 1467 வரை கோட்டையரசனான ஆறாம் பராக்கிரமபாகுவின் ஆதிக்கம் யாழ்ப்பாணத்திலும் நிலவியது. அவனுடைய நம்பிக்கைக்குரியவனும், கேரளத்தைச் சேர்ந்த பிரதானி ஒருவனின் மகனுமான சபுமால் குமாரய (சண்பகப் பெருமாள்) இங்கு தேசாதிபதியாக இருந்தான். அவன் பின்னர் கோட்டை அரசனாகி புவனேகபாகு என்னும் பெயருடன் ஆட்சி செலுத்தினான். இவனே நல்லூர் கந்தன் ஆலயத்தை நிறுவினான் என ஒரு சாரார் கருதுவர். எனினும் புதிதாக நிறுவினான் எனக் கொள்ளுதலிலும் பார்க்க பழைய ஆலயத்தினை விரிவாக்கி அமைத்தான் எனக்கொள்ளுதல் பொருத்தமானதெனவும் கூறப்படுகிறது. ஆறாம் பராக்கிரமபாகு காலத்தில் அவனைப் புகழ்ந்து எழுதப்பட்ட கோகில சந்தேய எனும் சிங்களத் தூதுப் பிரபந்தத்திலே அப்போதைய நல்லூரின் சிறப்பும் வருணிக்கப்படுகிறது. மேலும் யாழ்ப்பாணம் பிரதான வீதியிலிருந்த தேநீர்க்கடையிலே கண்டுபிடிக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட அரசனின் தமிழ்ச் சாசனமும் குறிப்பிடற்பாலது. இக்கல்வெட்டுத் தமிழில் உள்ளமை அம்மன்னன் இப்பகுதியில் வாழ்ந்த தமிழ் மக்களின் மொழிக்கு மதிப்பளித்தான் எனபதையும் சுட்டிக் காட்டுகின்றது.

மேற்குறிப்பிட்ட தமிழ் அரசிலே இந்துசமயம், தமிழ், வடமொழி, வைத்தியம், சோதிடம், நுண்கலைகள் முதலியன நன்கு போற்றப்பட்டன. தமிழை வளர்ப்பதற்குத் தலைநகரான நல்லூரிலே மன்னர் சங்கம் நிறுவினர். வைத்திய, சோதிட நூல்களைத் தொகுப்பித்தனர். இவ்வகையிலே பரராசசேகரம், செகராசசேகரம் போன்ற நூல்கள் குறிப்பிடற்பாலன. அரச குடும்பத்தைச் சேர்ந்த அரசகேசரி காளிதாசரின் வடமொழி ரகுவமிசத்தினைத் தழுவித் தமிழிலே அதனை ஒரு பெரிய காவியமாக இயற்றினார். எவ்வாறாயினும் இஃது ஒரு புதிய ஆக்கமாகவே இலங்குகின்றது. வையாபாடல், கைலாயமாலை, இராசமுறை, பரராஜசேகரன் உலா முதலியன இக்காலத்திய ஆக்கங்களே. துரதிர்ஷ்டவசமாகப் பின்னைய இரண்டும் கிடைக்கவில்லை. இவ் அரசிலேகட்டிடக்கலை, சிற்பம், ஓவியம், இசை, நடனம் முதலிய



★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுண்கலைகளும் சமகாலத் தமிழகத்திற் போன்று குறிப்பிட்ட வரையறையிலே நன்கு பேணிப் போற்றப்பட்டன எனலாம். இந்துசமயமும் நன்னிலையிலே விளங்கிற்று. ஆனால் ஏற்கனவே குறிப்பிட்ட போர்த்துக்கீசரின் சமய சகிப்பின்மை, சுதேசக்கலை அழிவுக் கொள்கையாலே மேற்குறிப்பிட்ட கலைகள் நன்கு பாதிப்புற்றன.

எனினும் சமகாலத் தமிழகத்திலே பழமையான தமிழரசுகள், மங்கியிருந்த காலத்திலே தமிழையும், இந்துசமயத்தினையும், கலைகளையும் போற்றி வளர்த்த பெருமை இத்தமிழரசர்களைச் சாரும். இம்மன்னர் தமது தனித்துவத்தினை வெளிப்படுத்தும் வகையில் நந்தி இலச்சினையும், சேது எனும் வாசகமும் பொறித்த நாணயங்களை வெளியிட்டுள்ளனர். இம்மன்னர் பலர் வீரதீரமுள்ளவர்களாகவும், திகழ்ந்தனர். இம்மன்னர் மரபிலே கடைசியாக ஆட்சி செய்த சங்கிலியும் தேசபற்றும், வீரமும் கொண்டிலங்கினான். இவன் சமகாலத்திய யாழ்ப்பாணத்திலேற்பட்ட போர்த்துக்கீசரின் ஆதிக்கப்படர்ச்சியை இயன்றவரை எதிர்த்துப் போராடித் தோல்வியுற்று சிறைப்படுத்தப்பட்டுக் கோவாவிலே இறந்தான் எனினும் அவனின் வீர உணர்வும், சுதந்திரப்போக்கும், தேசப்பற்றும் இன்று வரை நன்கு விரிவாக ஆராயப்பட்டதாகத் தெரியவில்லை. அவனைப் பற்றி அனுதாபமற்ற வகையில் தமிழிலும், போர்த்துக்கீசர் முதலிய பிறநாட்டவர் எழுதியுள்ள நூல்களிலும் ஆவணங்களிலும் காணப்பட்ட தகவல்களையும் கொண்டெழுதப்பட்டனவற்றிலே அவனைப்பற்றிய மதிப்பீடு செவ்வனே அமையவில்லையெனக் கருதப்படுகின்றது. இக்கட்டுரையாசிரியர் பேராதனைப் பல்கலைக்கழகத்திலே பட்டதாரி மாணவனாகவும், பின்னர் சிறிது காலம் வரலாற்று விரிவுரையாளராகவும் இருந்த காலப்பகுதிகளிலே சில சிங்கள சக மாணவர்களும், சக விரிவுரையாளர்களும் மேற்குறிப்பிட்ட சங்கிலி மன்னனின் தேசப்பற்று, பிறநாட்டவரின் ஆதிக்கப்படர்ச்சியை எதிர்த்தமை போன்றவற்றைப் பாராட்டிக் கூறியுள்ளனர். அதே வேளையிலே சமகாலத்திலே கோட்டையிலாட்சி செய்த சிங்கள மன்னனான தர்மபாலன் மேனாட்டு நாகரிகமயமானது மட்டுமன்றி அரச உரிமையையே போர்த்துக்கீச மன்னனுக்கு வழங்கியமையும் அவர்கள் கண்டித்துக் கூறியுள்ளனர். ''எங்களுடைய மன்னன் போலன்றி உம்முடைய மன்னனின் தேசப்பற்றும், வீர சுதந்திர உணர்வும் மகத்தானவை'' என அவர்களிற் சிலர் கூறியமை யதார்த்தமே. இத்தகைய அரசனைப் பற்றிய விபரங்கள் எத்தனை பேர் அறிந்துள்ளனர்? அவனுக்குச் சங்கிலித் தோப்பிலே சிலையெழுப்பியதுடன் நம்மவர் திருப்தியடைந்துள்ளனர் போலும். அவனை பற்றி அறிய விரும்புவோருக்கு அவனைப் பற்றிய முழுமையான நூல்கள் எதுவும் இல்லை. இந்நிலை மாற வேண்டும்.

போர்த்துக்கீசர் ஆட்சியின் போதும், பின்னர் ஏற்பட்ட ஒல்லாந்தர் ஆட்சியின் போதும் யாழ்ப்பாணக் கோட்டையும் அதனை அடுத்துள்ள கிழக்கு மேற்குப் பகுதிகளும் முக்கியத்துவம் பெற்றன. அடுத்து ஏற்பட்ட பிரித்தானியர் காலத்திலே சமகால கச்சேரிப் பகுதி நிருவாக மையமாயிற்று. இந்நிலை தொடர்கிறது. எனினும் இப்பகுதிகளும் நல்லூரை அண்மித்த பகுதிகளே.

ஏற்கனவே குறுப்பிட்டவாறு ஒல்லாந்தர் காலத்தின் பிற்பகுதியிலும் (18 ம் நூ.) பிரித்தானியர் காலத்திலும், அதன் பின்னரும் படிப்படியாக நல்லூரிலே மீண்டும் பழைய இந்து ஆலயங்கள் அமைக்கப்பட்டு, அவற்றுட் பல விரிவாக்கப்பட்டு உள்ளன. அதேவேளையிலே புதிய ஆலயங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றுள்ளே நல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லூர் கந்தசுவாமி ஆலயம் மிகப் பிரபல்யமடைந்துள்ள கோவிலாகும். இப்பகுதியிலே ஏற்கனவே இருந்து திருத்தி விரிவாக்கப்பட்ட கோவில்களைவிட நல்லூர் சிவன்கோவில், நல்லை ஆதீனம், நாவலர் மணி மண்டபம், யாழ்ப்பாண நூதனசாலை, கம்பன் கோட்டம், இந்து இளைஞர் பேரவை அலுவலகம். இந்துப் பேரவை அலுவலகம். நல்லூர் சிவன் கோவிலைமையாமகக் கொண்டியங்கும் நியந்திரீ துர்க்கா மணி மண்டபம். யாழ்ப்பாணமாநகரசபை அலுவலகம், நூலகம் போன்றனவும் குறிப்பிடத்தக்கவை.

இத்தகைய சூழ்நிலையிலே நல்லூரின் பழைமையையும், புதுமையையும் எடுத்துக் காட்டும் வகையில் ஒரு பெரிய நூதனசாலை அமைக்கப்படுதல் சாலவும் நன்று. இதிலே குறிப்பாக, தலைநகராக விளங்கிய நல்லூரினைச் சேர்ந்த தொல்லியல் சின்னங்கள் குறிப்பாக இடம்பெற வேண்டும், இன்று சங்கிலித்தோப்பிலுள்ள யமுனாரியும், கல்லாலான தோரண வளைவும், மந்திரி மனையென அழைக்கப்படும் கட்டிடமுமே இங்குள்ள பழைய சின்னங்கள் எனக் கருதப்படினும், பின்னைய இரண்டும் பிற்காலத்தவை எனவும் கருதப்படுகின்றன. எனினும் இவை நன்கு பேணப்பட வேண்டியவை. யாழ்ப்பாண அரசர் பயன்படுத்திய பல்வேறு வகையான நாணயங்கள், அவர்கள் காலத்திய, முற்பட்ட, பிற்பட்ட கால நல்லூர் பற்றிக் கூறும் பல்வேறு மூலங்கள் — நூல்கள், ஆவணங்கள், கல்வெட்டுக்கள் சிலைகள் போன்றனவும், இங்கு வாழ்ந்து தமிழுக்கும், சைவத்திற்கும் தொண்டாற்றிய புலவர்கள், நாவலர் பெருமான் போன்ற சைவசமயச் சான்றோர்கள், பிற அறிஞர்கள், கலைஞர்கள் முதலியோர் பற்றிய தகவல்கள், அவர்களின் ஆக்கங்கள் முதலியனவும் மேற்குறிப்பிட்ட அரும்பொருட்காட்சியகத்திலிடம் பெறுதல் சாலவும் நன்றே. தொல்லியற்சான்றுகள் மிகக் குறைவாக இருக்கின்றபடியால் அவை பற்றிய வரைபடங்கள், புகைப்படப் பிரதிகள் போன்றவையும் இங்கு இடம் பெறுதல் மிகப் பொருத்தமாகும். இவற்றுடன் பழைய தலைநகரான நல்லூர் எப்படி அமைந்திருக்கும் என்பது பற்றிய வரைபடம், மாதிரி உருவ அமைப்பு போன்றவையும் இதில் இடம் பெறலவசியம். மேற்குறிப்பிடப்பட்டவை காலவரையறையடிப்படையிலும், விடயங்களின் அடிப்படையிலும் வகைப்படுத்திஅமையும் போதுதான் எம்மவர் மட்டுமன்றி, இங்கு வரும் வெளிநாட்டவரும் இவ்வாறுதான் பழைய தலைநகர் நல்லூர் விளங்கிற்று; பின்னர் என்ன மாற்றங்கள் அடைந்தது; தொடர்ந்து இன்றைய நிலை முதலியன வற்றை நேரிலே ஓரிடத்திலே பார்த்து அறியக்கூடியதாயிருக்கும். இன்று கிடைக்காத தொல் பொருட்களுக்கு வரைபடங்கள், மாதிரி உருவங்களும் அமைத்துக் காட்சிக்கு வைக்கலாம். இவற்றுடன் நல்லூர் பற்றிய வரன்முறையான முழுமையான கைந்நூல் ஒன்று தயாரித்தல் அவசியமாகும். இது தமிழில் மட்டுமன்றி ஆங்கிலம் சிங்களமாகிய மொழிகளிலும் எழுதப்படல் பயனுடைத்தாகும்.

மேற்குறிப்பிட்டவற்றுடன் நல்லூரின் குறிப்பிட்ட பிரதேசத்தை - நல்லூர் கந்தசுவாமி கோவிலைச் சூழவுள்ள பிரதேசத்தை அனுராதபுரம் போன்ற பிற இடங்களைப்போலப் புனித நகரமாகவும் அரசாங்கம் பிரகடனம் செய்யும் வகையில் மக்கள் ஒன்று சேர்ந்து செயலாற்றல் நன்று.

இலங்கையிலிருந்த முற்பட்ட காலத் தலைநகரங்கள் போல நல்லூரின் சிறப்பை அனைவரும் அறியும் வகையிலும், பேணிப் பாதுகாக்கும் வகையிலும் அரசும் மக்களும் செயற்படல் நன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்
வருகை விரிவுரையாளர்,
தமிழ்த் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

# ஏல் - ஓர் - எம் - பாவாய்

மார்கழி மாதம் மழை பொழியத் தொடங்கி விட்டது. கொட்டும் மழையும் குளிரும் மாரிகாலத்தைக் காட்டிநிற்கின்றன. மனிதர் வாழ்க்கையில் மழையால் வளம் பெருகும். மழை உரிய காலத்திலே பொழியாவிட்டால் எல்லா உயிரினங்களும் இடர்ப்பட நேரிடும். எனவே மழையை வேண்டி இயற்கையைப் பணிந்து மனிதன் வழிபட மார்கழி நீராடல் வழிபாட்டு நடைமுறையாயிற்று. பெண்கள் பண்டுதொட்டு மார்கழி நீராடல் செய்வது ஒரு வழக்கமாக இருந்தது என்பதைப் பழைய தமிழ் இலக்கியங்கள் விரிவாய் விளக்கவில்லை. சங்க காலப் பாடல்கள் சிலவற்றில் சில குறிப்புகளே காணப்படுகின்றன. தைநீராடல், அம்பா ஆடல் எனக் குறிப்பிடப்படும் நீராடல் முறைகள் தான் பின்னர் மார்கழி நீராடலாக அமைந்தது எனக் கருதப்படுகின்றது.

முதன்முதலில் இந்த மார்கழி நீராடல் பற்றிய நடைமுறையை ஆவணப்படுத்திய பெருமை ஆண்டாளைச் சாரும். ஆண்டாள், தான் பாடிய திருப்பாவையில் முப்பது பாடல்களிலே இந் நடைமுறையினை விளக்கியுள்ளார். பாடல்களின் இறுதித் தொடர் அமைப்பு அவருடைய நோக்கத்தைச் சுட்டி நிற்கின்றது. ''ஏலோரெம்பாவாய்' என்னும் இத்தொடர் ஆண்டாளின் கூர்மையான அறிவைக் காட்டிநிற்கின்றது. வழிபாட்டு நடைமுறை ஒன்றை வருங்காலத்தவர்க்கு ஆண்டாள் பயிற்ற எண்ணி உள்ளார். மனித வாழ்வியலிற் கலந்திருந்த ஒரு வழிபாட்டு நடைமுறையையும் அதன் நோக்கத்தையும் ஆண்டாளின் திருப்பாவைப் பாடல்கள் தெளிவாக விளக்கியுள்ளன. எனினும் ஆண்டாளின் திருப்பாவைப் பாடல்களை பார்வைப்பாட்டு எனக் கொண்டு அக்காலப் பாமர மக்களுடைய நாட்டுப் பாடலெனக் கருதுவோரும் உளர். ஆனால் ஆண்டாள் தன்னுடைய காலத்து வழிபாட்டு நடைமுறை ஒன்றினை நம்பிக்கையோடு கடைப்பிடித்தவர். கண்ணனையே தனது கணவர் னாக எண்ணி அவனை அடைய வேண்டி மார்கழி நோன்பு நோற்றவர். நோன்பு நோற்கும் பெண்கள் ஒருவரையொருவர் வீடு வீடாகச் சென்று துயிலெழுப்பி விடிகாலையிலே நீராடச் செல்லும் வழக்கத்தை மனிதர்கள் எல்லோரும் கடைப்பிடிப்பது நன்று என ஆண்டாள் எண்ணியுள்ளாள். அதனால் அவ்வாறு பெண்களைத் துயிலெழுப்பும்போது பரிமாறப்படும் செய்திகளைப் பாடல் வடிவில் அமைத்துள்ளார். பாடலின் இறுதித் தொடரில் ஏல் - ஓர் - எம் பாவாய் எனப் பிரிந்து அமைவது ஒரு நல்ல கருத்துப்பரிமாற்ற



★

முறைமையைக் காட்டுகிறது. ஏல் - ஏற்றுக் கொள், ஓர் - எண்ணிப்பார், எம் - எம்மைச் சார்ந்த, பாவாய் - பெண்ணே. ''நான் கூறும் இக்கருத்துக்களை நீ ஏற்று, அதாவது செவியிலே ஏற்று, எண்ணிப் பார்த்துப் பின் முடிவுசெய். எம் கூட்டத்தைச் சேர்ந்த பெண்ணாக இருந்தாலும் நீ கருத்து வேறுபாட்டைக் கொண்டிருக்கலாம். எனவே உன் குழப்ப நிலையிலிருந்து தெளிவுபெற வேண்டி நாம் உணர்ந்தவற்றை உனக்குக் கூறுகின்றோம்'' என்றே ஆண்டாள் விளக்கந் தந்துள்ளார்.

இன்று திருப்பாவைப் பாடல்கள் சம்பிரதாய முறைப்படி பாடப்படுகின்றன. மார்கழி மாதத்தில் வைணவ ஆலயங்களிலே ஓதப்படுகின்றன. முப்பது பாடல்களையும் ஓத முடியாவிட்டால் ''சிற்றஞ் சிறுகாலே'' என்னும் 29 ஆம் பாடலை மட்டும் ஓதினால் நன்று என்று கருதப்படுகின்றது. ஆனால் வழிபாட்டு நடைமுறை என்ற நிலையில் ஆண்டாளின் திருப்பாவையை நாளும் கேட்பதே நல்லது. ஆண்டாள் பாடல்களின் அமைப்பை நோக்கும்போது முதற் பாடலிலேயே சுருக்கமாகத் தன் முழு நோக்கத்தினையும் கூறியிருப்பதனை உணரமுடிகின்றது.

**''மார்கழித் திங்கள் மதிநிறைந்த**
**நன்னாளால்**
**நீராடப் போதுவீர் போதுமினோ**
**நேரிழையீர்**
**சீர்மல்கு மாய்ப்பாடிச் செல்வச்**
**சிறுமீர்காள்**
**கூர்வேல் கொடுந்தொழிலன்**
**நந்தகோபன் குமரன்**
**ஏரார்ந்த கன்னி யசோதை**
**இளஞ்சிங்கம்**
**கார்மேனிச் செங்கண் கதிர்மதியம்**
**போல்முகத்தான்**
**நாராயணனே நமக்கே பறைதருவான்**
**பாரோர் புகழப் படிந்தேலோர்**
**எம்பாவாய்.''**

இப்பாடலில் நோன்புக்கு உரியவர்கள் இளஞ்சிறுமிகள், நோன்புக்கு உரிய காலம் மார்கழி மாதம், நோன்பின் தொடக்க நாள் நிறைநிலவு நாள், நோன்பினால் அடையும் பலன் நாராயணனைச் சேர்தல். என ஆண்டாள் குறிப்பிட்டுள்ளார். பிற்காலத்தில் மார்கழி நோன்பின் நோக்கம் நல்ல கணவரைப் பெறுதல் எனவிளக்கங் கொடுப்பதற்கும் இந்த முதலாவது பாடலே காரணமாயிருந்தது போலும். நெய்யுண்ணாமல் பாலுண்ணாமல் நாட்காலையில் நீராடி மையிட்டு எழுதாமல் மலரிட்டுக் கூந்தல் முடியாமல் செய்யாதன செய்யாமல் தீமைதரும் கோள் சொல்லாமல் அன்னக்கொடை செய்து நோன்பு நோற்றதை ஆண்டாள் பாடியுள்ளார். பெண்களின் வாழ்வியலில் மார்கழி நோன்பு எவ்வாறு இணைந்திருந்ததென்பதைத் திருப்பாவைப் பாடல்கள் தெளிவாக கூறுகின்றன. பெண்மையின் குண இயல்புகளை ஒரு பெண்ணே எடுத்துக் கூறுவது நல்லது. இவ்வகையில் ஆண்டாள் துயில் எழுப்பும்போது எழுந்திராது தொடர்ந்து தூங்கும் பெண்ணைப் பற்றிய இயல்புகளை எல்லோரும் அறியக்கூறி மீண்டும் துயில் எழுப்புகின்றாள். திருப்பாவையின் முப்பது பாடல்களில் ஆறாவது பாடல் தொடக்கம் பதினைந்தாவது பாடல் வரை இத்தகைய பெண்ணின் வேறுபட்ட குண இயல்புகளே கூறப்பட்டுள்ளன.

எனவே திருப்பாவை ஒரு காலத்துப் பெண்களின் வாழ்வியல் நடைமுறைகளை அக்காலத்துப் பெண்ணொருத்தியே வருங்காலப் பெண்களுக்குப் பயிற்றுவதாக அமைந்தது எனக் கருதமுடிகின்றது. பெண்களின் வழிபாட்டு நடைமுறைகள் அவர்களைச் சார்ந்தோர்களையும் அவர்கள் வாழும் சமூகத்துமக்களையும் நன்னிலைப் படுத்தும் என்பதை ஆண்டாள் அனுபவ



★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயிலாக அறிந்திருந்தார். திருப்பாவையின் 29 ஆவது பாடலில் பெண்களின் வழிபாட்டின் அடிப்படையாக அமையும் இறைபக்தியைக் குறிப்பிட்டுள்ளார்.

"எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும்
உன்தன்னோடு
உற்றோம் ஆவோம் உனக்கேநாம்
ஆட்செய்வோம்
மற்றைக் காமங்கள் மாற்றுஏல்
ஓர்எம்பாவாய்"

இறைவழிபாட்டிலே பெண்கள் முழுமையாக ஈடுபடவேண்டும் என்னுங் கருத்தையே ஆண்டாள் தன்னுடைய திருப்பாவைப் பாடல்களிலே செறியவைத்துள்ளார். இறைவனுக்குமட்டுமே பணிந்து வாழ வேண்டுமென்ற ஆண்டாளின் உயர்ந்த கருத்தைத் தெளிவாக விளங்கிக் கொள்ள முடியாதவர்கள் உலகியல் வாழ்விலே நல்ல கணவனை அடையவேண்டும் என்னும் நோக்கத்திற்காகப் பெண்கள் மார்கழி நோன்பு நோற்பதாக விளக்க முற்படுகின்றனர். இதற்கு ஆண்டாளுக்குப் பின்னர் திருவெம்பாவை பாடிய மாணிக்கவாசகரும் ஒருவகையில் காரணமாகின்றார்.

மாணிக்கவாசகர் பாடிய திருவெம்பாவை ஆண்டாளின் திருப்பாவைப் பாடல்களை அடியொற்றியே பாடப்பட்டுள்ளது. ஆனால் பாடல்களின் எண்ணிக்கை இருபதாக அமைந்துள்ளது. ஆண்டாள் வைணவ வழிபாட்டைப் பாட, மாணிக்கவாசகர் சிவ வழிபாட்டைப் பாடுகின்றார். பெயர் நிலையிலும் அவை முறையே திருப்பாவை திருவெம்பாவை என அழைக்கப்படுகின்றன. மாணிக்கவாசகர் தம்முடைய பாடல்களிலே இரண்டு நோக்கங்களை உட்கிடையாக்கியுள்ளார். ஒன்று மழையை வேண்டிப் பாடுவது. மற்றது, இறைவனடியாரோடு வாழவேண்டிப் பாடுதல். திருவெம்பாவையின் 19 ஆவது பாடல் ஆண்டாள் காட்டிய பெண்கள் வாழ்வியலையே காட்டுகின்றது.

"எங்கள் பெருமான் உனக்கொன்று
உரைப்போம் கேள்
எம்கொங்கை நின்னன்பர் அல்லா
தோர் தோள்சேரற்க
எம்கை உனக்கல்லது எப்பணியும்
செய்யற்க
கங்குல்பகல் எங்கண் மற்றொன்றும்
காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன்
நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறு எமக்கு
ஏல்ஓர்எம்பாவாய்

இறைவனைப் பணிந்து வாழ்பவருடனே தம் வாழ்வைப் பெண்கள் இணைத்துக் கொள்ள வேண்டும் என்பதையே ஆண்டாளும் மாணிக்கவாசகரும் தமது பாடல்களிலே கூறிச்சென்றுள்ளனர். மனித வாழ்வுக்கு வழிகாட்ட வல்லது இறை அன்பே. இறைவனைப் பணிந்து வாழும் பயிற்சியை எல்லோருக்கும் கொடுக்க வேண்டியது பெண்களுடைய கடமை என்பதையே திருப்பாவையும் திருவெம்பாவையும் விளக்கியுள்ளன.

எமது எதிர்காலத் தலைமுறையினர்க்கு நல்வாழ்க்கைக்கான பயிற்சியை நாம் தாய்மை உணர்வுடன் அளிக்கவேண்டியுள்ளது. மாணிக்கவாசகர் இறைவன் தாயினும் சாலப் பரிந்து தன்னை ஆட்கொண்டதாகக் குறிப்பிட்டுள்ளார். தாய் தன்னுடைய குழந்தையின் பசி நேரத்தை முன் கூட்டியே கணித்து உரிய நேரத்தில் பாலூட்டுகின்றாள். அவளுடைய அத்தகைய பரிவினைக் காட்டிலும் மேலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிவுடன் எம்மை இறைவன் கண்காணிக்கிறார். இந்த அன்புநிலையை முழுமையாக மாணிக்கவாசகர் உணர்ந்திருந்தார். தன்னுடைய தீவினைகளையெல்லாம் அகற்றி வற்றாத ஆனந்தமாய தேனினைச் சொரிந்த சிவனை அவர் கண்டுகொண்டமையால் அந்த உண்மையனுபவத்தைப் பாடல்களாக வடிக்க முடிந்தது. இத்தகைய அனுபவ நிலையை அடைவதற்கு நமது வாழ்வியல் நடைமுறைகளில் இறை உணர்வு மிகுந்திருக்க வேண்டும். இதற்கான பயிற்சியைத் தாய்தான் ஊட்டமுடியும். எனவேதான் பெண்மையின் சிறந்த குணவியல்பான தாய்மைப் பண்பு மனித வாழ்க்கைக்கு இன்றியமையாததாயிற்று. வழிபாட்டு நடைமுறைகளைப் பேணி எதிர்காலத்தவரும் அதையுணர பயிற்றுகின்ற ஆற்றல் பெண்களிடமிருந்தே வெளிப்பட வேண்டும் என்ற இலக்குடனேயே மாணிக்கவாசகர் திருவெம்பாவையைப் பாடியுள்ளார். ஆண்டாள் காட்டிய வழியிலே சென்று பெண்களின் வழிபாட்டு நடைமுறையினைப் பாடல்களிற் பதிவு செய்துள்ளார். எனவே மாணிக்கவாசகருக்கு ஆண்டாள் ஒரு வகையில் வழிகாட்டியாய் அமைந்துள்ளார் எனலாம். எனினும் மாணிக்கவாசகருடைய திருவெம்பாவைப் பாடல்களின் தொகை ஆண்டாளின் திருப்பாவைப் பாடல்களின் தொகையுடன் வேறுபட்டுள்ளது. இதற்கு ஒரு காரணத்தைக் கூறமுடியும். இளம்பெண்கள் வழிபாட்டு நடைமுறைகளைத் தொடர்ச்சியாக இருபது நாட்கள்தான் கடைப்பிடிக்க முடியும். அதனால் இருபது பாடல்களாகத் திருவெம்பாவை அமைந்தது எனலாம். ஆனால் ஆண்டாளுடைய முப்பது பாடல் இக்கருத்தை மாற்றுகின்றது. முப்பது நாட்கள் பெண்கள் தொடர்ச்சியாக வழிபாடு செய்யமுடியும் எனக் காட்டுவதாயும் உள்ளது.

இன்னும் ஆண்டாள் காலத்திலே முப்பது என்னும் தொகை ஒரு திங்களின் அளவைக் குறித்துநின்றது போலும். மார்கழித் திங்களின் மதிநிறைந்த நன்னாளில் ஆண்டாள் காலத்துப் பெண்கள் மார்கழி நோன்பைத் தொடங்கி முப்பது நாட்கள் கடைப்பிடித்துள்ளனர். ஆண்டாளின் பாடல்கள் ஞானபுக காலத்தைக் கணித்துக் காட்டியுள்ளன. பாவைப்பாட்டு என்பது ஒரு பொழுது போக்குப்பாடல அன்று. அக்காலத்து வாழ்வியல் நடைமுறைகளைப் பிறகாலத்தவரும் அறியும வண்ணம் வாய்மொழியாகச் செய்யப்பட்ட இலக்கிய ஆவணம். காலத்தின் தேவை கருதி இது எழுந்தது. ஆண்டாளின் திருப்பாவையும் மாணிக்கவாசகரின் திருவெம்பாவையும ஓராண்டுக்கால வழிபாட்டு நடைமுறைகளை மார்கழி மாதத்தில் மக்கள் மனங்கொள்ள வேண்டிப் பாடப்பட்டவை. அடுத்த ஆண்டின் தொடக்கத்தில் வழிபாட்டுப் பயிற்சி பெண்களால் செய்யப்படவேண்டும என்பதை உணர்த்துபவை. இன்று வரை மார்கழி மாதம் முழுவதும் திருப்பாவைப் பாடல்கள் வைணவக் கோயில்களிலே ஓதப்படுகின்றன. தாய்மை உணர்வுடன் இறை வழிபாட்டை எல்லோரும உணர்ந்து கொள்ள வேண்டி மார்கழி நோன்பு மக்களால், சிறப்பாகப் பெண்களால் கடைப்பிடிக்கப்படுகின்றது. கால ஓட்டத்தைக் கருத்தில் கொண்டு மனித வாழ்வியலைச் சீரமைக்க மார்கழி நோன்பு வழிபாட்டு நடைமுறையாயிற்று. திருப்பாவையும் திருவெம்பாவையும் ஊரெங்கும் ஒலிக்கத் தொடங்கிற்று.

பரராசசிங்கம் கணேசலிங்கம்
விரிவுரையாளர்,
இந்து நாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# பண்பாட்டுக் கண்ணோட்டத்தில் நல்லூர்கள்

நல்லூர் என்ற இடப்பெயரானது இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளிலுள்ள பல ஊர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. நல்லூர் என்ற சொற்பதத்தினை முதலாகவும் இறுதியாகவும் கொண்டமைந்த இந்துத் திருக்கோயில்கள் இந்தியா, இலங்கை ஆகிய இரு நாடுகளிலும் அமைந்து விளங்குகின்றன. இப்பெயரினைக் கொண்டமைந்த ஊர்களில் அமைக்கப்பெற்றிருக்கும் ஆலயங்கள் பல தெய்வங்களுக்குரியதாக அமைந்துள்ளன. இந்நல்லூர்களில் இந்துத்தெய்வங்களது புராதனமான, வரலாற்றுச் சிறப்புமிக்க, பிரசித்தி பெற்ற திருத்தலங்கள் அமைந்து விளங்குவதைக் காணலாம்.

ஊர் என்ற பெயர் கொண்ட ஏழு இடப்பெயர்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் காணப்படுகின்றன என கலாநிதி இ. பாலசுந்தரம் தமது ''இலங்கை இடப்பெயர் ஆய்வு- 2 (வடமராட்சி தென்மராட்சி) (1989) எனக் குறிப்பிட்டுள்ளார். ஊர் என்ற சொல் மிகப்பழையதொன்றாகும். பண்டைய திராவிடர் தாம் குடியேறிய இடங்களில் ''ஊர்'' என்ற பெயரை இட்டு வழங்கியிருக்கிறார்கள். உலகப் பழைய நாகரிக கால இடங்களில் எல்லாம் 'ஊர்' ஈற்று இடப்பெயர்கள் காணப்படுகின்றன. ''ஊர்'' என்னும் சொல் திராவிட இசை சொற்களுக்கு பொதுவான ஒரு பழைய சொல்லாகும். துளு நாட்டிலேயும் 'ஊர்' ஈற்றுப் பெயருள்ள பல ஊர்களுள்ளன. பழந்தமிழ் இலக்கியங்களிலும் ''ஊர்'', ''ஊர'' என்ற சொற்கள் பயின்றுவரக் காணலாம். பல்லவர் காலம் முதலான இலக்கியங்களில் ஊர் ஈற்று இடப்பெயர்கள் பரவலாக இடம் பெற்றுள்ளன. தமிழகத்தில் ''ஊர்'' ஈற்று இடப் பெயர்களாகத் தஞ்சை மாவட்டத்தில் 518 இடங்களும் செங்கற்பட்டு மாவட்டத்தில் 462 இடங்களும், திருநெல்வேலி மாவட்டத்தில் 86 இடங்களும், பழந்தமிழ் இலக்கியங்களில் 120 இடங்களும் அமைந்திருப்பதாக மெய். சந்திரசேகரன் தனது, தஞ்சை மாவட்ட ஊர்ப் பெயர்கள் - (1983) என்ற நூலில் எடுத்துக் காட்டியுள்ளமை இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. இவ்வகையில் இலங்கையின் யாழ்ப்பாண மாவட்டத்திலே 'ஊர்' ஆற்றுப் பெயரினவாகக் குடைத்தனைக் கரையூர், கொற்றையூர், செட்டியாலூர், நல்லூர் (இரு இடங்கள்), பாசையூர், புத்தூர் என்ற ஏழு இடங்கள் அமைந்துள்ளன.

சைவசமய ஞானநூலாகிய சிவஞானபோதத்தை அருளிச் செய்த மெய்கண்டதேவர் பிறந்தருளும் பேறு பெற்றதும்

திருவெண்ணெய் நல்லூராகும். கும்பகோணத்துக்கருகே நல்லூர் என்னும் பெயருடைய ஊர் ஒன்று உளது. அமர்நீதி என்னும் அடியார் அவ்வூரிலே தொண்டு செய்து சிவப்பேறு பெற்றார் என சேக்கிழார் பெரியபுராணத்திலே கூறியுள்ளார். மண்ணியாற்றங்கரையில் முருகவேளின் பெயரால் அமைந்த சேய் நல்லூர் இந்நாளில் சேங்கனூர் என்று வழங்குகின்றது. சூரனோடு போர் செய்யக் கருதி எழுந்த முருகவேள் சிவபெருமானை வழிபட்டுச் சர்வசங்காரப் படைக்கலம் பெற்ற ஸ்தலம் சேய் நல்லூர் (சேய்ஞலூர்) எனக் கந்தபுராணம் கூறுகின்றது. மேலும் வட ஆர்க்காட்டிலுள்ள மற்றொரு சேய்நல்லூர், சேனூர் எனச் சுட்டப்படுகின்றது.

தமிழ் நாட்டை ஆண்ட அரசர் பலர் தம் பெயர் விளங்குமாறு பல நல்லூர்களை உண்டாக்கினார்கள். பாண்டி நாட்டில் வீரபாண்டிய நல்லூர், அரிகேசரி நல்லூர், மானாபரண நல்லூர், செய்துங்க நல்லூர், முதலிய ஊர்கள் பாண்டிய குலத்தைச் சேர்ந்த மன்னர் பெயரை விளக்கி நிற்கின்றன. சோழ நாட்டிற் பெருஞ் சோழ மன்னர்கள் உண்டாக்கிய நல்லூர்களைச் சாசனங்களில் காணலாம். முடிகொண்ட நல்லூர், அநபாயநல்லூர், திருநீற்றுச் சோழ நல்லூர் திருத்தொண்டத் தொகை நல்லூர், சிவபாதசேகர நல்லூர், கலிகடிந்த சோழநல்லூர், முதலிய நல்லூர்கள் சோழ மன்னருடைய விருதுப் பெயர் பெற்றபதிகளாகும். என ரா. பி. சேதுப்பிள்ளை தமது ''ஊரும் பேரும்'' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளமை இங்கு மனங் கொள்ளத்தக்கது.

இந்திய நாட்டில் அமைந்து விளங்குகின்ற நல்லூர்களுள் ஒன்றாக திருப்பந்தணை நல்லூர் விளங்குகின்றது. இந்நல்லூர் சோழநாட்டில் காவிரி ஆற்றின் வடகரையிலுள்ள தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்றாகும். இதனை 35 ஆம் தலமாகக் குறிப்பிடுவர். இத்தலத்திற்குச் சம்பந்தர் பதிகம் ஒன்றும், அப்பர் பதிகம் ஒன்றும் ஆக இரண்டு பதிகங்கள் உள்ளன. இறைவன் பெயர் பசுபதிநாதர், இறைவி பெயர் காம்பன்ன தோளியம்மையாகும். அம்மையார் ஆடிய பந்து வந்து அணைந்த நல்லூர் என்ற காரணத்தால் ஊர்ப்பெயர் பந்துஅணைநல்லூர் என வழங்கலாயிற்று. இப்போது பந்தண நல்லூர் எனவும் பந்த நல்லூர் எனவும் மக்கள் இவ்வூரைக் குறிப்பிடுகின்றனர். இத்தலம் தேவகன்னியர்களும் காமதேனுவும் பூசித்த தலமாகக் கூறப்படுகின்றது.

திருக்கலய நல்லூர் தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்றாகும். காவிரியின் தெற்குப் பகுதியிலுள்ள தேவாரத் தலங்களுள் இது 68 ஆம் தலமாகும். இக்காலத்தில் இவ்வூர் சாக்கோட்டை என்று வழங்கப் பெறுகிறது. அரிசிலாற்றின் தென்கரையில் உள்ள இத்தலத்தில் திருக்கோயில் சிறியதாக அமைந்துள்ளது. திருக்கோயிலின் அருகே, தாமரைப் பொய்கை உள்ளது. இங்கு அரிசிலாறு தீர்த்தமாக விளங்குகின்றது. இவ்வூர் கல நல்லூர் எனப்பட்டதற்கு வெவ்வேறு காரணம் புராணமரபில் கூறப்படுகின்றன. இத்தலத்திலுள்ள இறைவன் பெயர் அமிர்தகலாநாதர். அவர் அமிர்த கலை ஈசுரர் எனவும் கூறப்பெறுவர். இறைவியின் பெயர் அமிர்தவல்லி அம்மை என்பதாகும். கலய நல்லூர் இயற்கை அழகு தவழும் அமைந்துள்ள காட்சியினை 'அரும்பருகே சுரும்பருவ அறுபதம் பண்பாட, அணி மயில்கள் நடமாடும் அணிபொழில் சூழ் அயலின், கரும்பருகே கருங்குவளை கண் வளரும் கழனிக் கமலங்கள் முகமலரும் கலய நல்லூர்' என்று பாடியிருப்பது இன்பம் மிகுவிப்பதாக உள்ளது. இத்தலத்திற்கு நான்முகன் வந்து வழிபட்டுச் சிறப்புற்றான் என்றும் கூறுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணம் -தஞ்சாவூர் பேருந்து வழியில் வாழைப் பழக்கடை என்னும் ஊருக்குத் தென் மேற்கே ஒரு கிலோ மீட்டர் தொலை வில் இருக்கும் தேவாரத் திருப்பாடல் பெற்றது திருநல்லூராகும். இவ்வூரைக் குறித்த வரலாறுகள், திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் திருப்பதிகங்களாலும் பெரியபுராணத்தாலும் கமலை வைத்திய நாததேசிகரால் இயற்றப் பெற்ற திருநல் லூர்ப் புராணத்தாலும் கல்வெட்டுக்களா லும் அறியக் கிடக்கின்றன. திருக்கயிலா யம் என்று சிறப்பித்துக் கூறும் திருவூர் களுள் இதுவும் ஒன்றாகும். கோச் செங் கட்சோழன் திருப்பணியாகிய மாடக் கோயில் இங்குளது. இத்திருக்கோயிலில் விளங்கும் பெருமான், பொன்மயமான ஒளியோடு திகழ்கின்றார். மூன்று மணிக்கு ஒருமுறை நிறம்மாறி ஐந்து வண்ணங்க ளோடு காட்சியளிக்கும் இப்பெருமான் பஞ்சவருணேசுவரர் என்னும் பெயர் பெற்றார்.

திருநல்லூர்ப் பெருமணமானது சோழ நாட்டில் காவிரியின் வடகரையில் உள்ள ஐந்தாம் தலமாகும். பிரமன் சீர்காழிக்கு வரும்போது இடையிலிருந்த இவ்வூரின் பெருமையினை அறிந்து நல்லூர் என அழைத்தார் என்று வரலாறு கூறுகிறது. நல்லூர் என்பது ஊரின் பெயர். பெரு மணம் என்பது இவ்வூரிலுள்ள திருக்கோ யிலின் பெயராகும். இங்குள்ள சுவாமியின் பெயர் சிவலோகத் தியாகர்; அம்பிகை யின் பெயர் திருவெண்ணீற்றுமையம்மை என்பதாகும். திருஞானசம்பந்தரின் மனை வியார் பிறந்த ஊர் ஆதலின் ஆச்சாள் புரம் என்ற பெயரும் ஏற்பட்டது. அது இக்காலத்து ஆச்சாபுரம் எனப் பலராலும் வழங்கப் பெறுகிறது. திருஞானசம்பந்த ருக்குத் திருமணம் இத்தலத்தில்தான் நிகழ்ந்தது. திருமணத்திற்கு வந்திருந்த திருநீலநக்கர், முருகநாயனார், திருநீல கண்ட யாழ்ப்பாணர், சிவபாத இருதயர், மணப்பெண்ணின் தந்தையாராய நம்பி யாண்டார்நம்பி, முத்துச்சிவிகை தாங்கி யோர் மற்றும் திருமணத்திற்கு வந்திருந் தோர் யாவரும் ஒரு சேரக் சோதியுள் கலந்து முத்திபெற்றனர். திருஞானசம் பந்தரும் மனைவியுடன் சோதியுள் கலந்து முக்தி பெற்ற ஸ்தலமாகக் கூறப்படுகின் றது.

திருவெண்ணெய் நல்லூர் நடு நாட்டி லுள்ள சைவத் திருப்பதியாகும். சுந்தர மூர்த்தி நாயனாரை இறைவன் தடுத்தாட் கொண்டு. ''பித்தா பிறைசூடி'' என்ற திருப்பதிகத்தைப் பெற்ற தலம் இதுவா கும். இங்குள்ள ஆலயத்துக்கு அருட்டுறை என்று பெயர். இறைவனுக்குக் கிருபாபு ரீசுவரர்: வேணுபுரீசுவரர். தடுத்தாட் கொண்டவர். ஆட்கொண்ட தேவர் என்ற திருநாமங்கள் வழங்குகின்றனர். அம்பிகை வேற்கண்ணியம்மை மங்களாம்பிகை என்ற திருநாமங்களை உடையவர். அந்தணர் அவையில் கிழவராகச் சென்ற இறைவன் சுந்தரமூர்த்தி நாயனாரைத் தமக்கு அடி மையென்று ஆவண ஓலை காட்டி வென்ற இடம் இது என்று கூறப்படுகின்றது. இது வரை இந்திய நாட்டில் நல்லூர்களாக விளங்கிய திருத்தலங்கள் மற்றி சுருக்க மாக எடுத்துக் கூறப்பட்டது.

''திராவிட தேயத்துப் பழம் பெயர் பெற்றிருக்குந் தானங்கள்'' எனும் பொருள் பற்றி எழுதிய திரு. எஸ். டபிள்யு. குமார சுவாமி அவர்கள் நல்லூரினையே முதற் கண் எடுத்துக் காட்டுகின்றார்கள். ''ஈழத் திலேயும் நல்லூர் எனப் பெயரிய கிரா மங்கள் ஐந்துள்ளதாகக் கூறப்படுகின்றன. மற்றையநாலு நல்லூர்களும் பூனகரியிலும், குருநாகற் பகுதியிலும், கழுத்துறையிலுள் ளனவாகக் கூறப்படுகின்றன. சிங்களம் நாட்டிலுள்ளன ஆங்குப் பூர்வத்திற்குடி யேறிய திராவிடரால் இடப்பட்டுப் பின்னர் சிங்களவராலே வழங்கப்படுகின்றமையின்

நல்லூ ர, நல்லூ ரெ, நல்லூ ருவ எனச் சற்றே விகாரப்பட்டிருக்கின்றன'' என திரு. எஸ். டபிள்யு குமாரசுவாமி என்னும் அறிஞர் குறிப்பிட்டிருப்பது பொருள் பொதிந்த கருத்தாக அமைகிறது.

''கோயில் என்றால் சிறப்பாக இந்தியாவிலுள்ள சிதம்பரத்தைக் குறிப்பது போல, 'நல்லூர்' என்றால் சிறப்பாக இலங்கையிலுள்ள நல்லூர்க் கந்தசுவாமி கோயிலைச் சுட்டிநிற்கின்றது என்றால் மிகையாகாது. நல்லூரை நல்லை, நல்லை நகர் என்னும் பெயர்களாலும் சுட்டி அழைப்பர். யாழ்ப்பாணத்திலுள்ள ஊர்களிலே நல்ல ஊர் நல்லூராகும். 'நல்ல — ஊர்' சைவ அனுஷ்டானங்களுக் கெல்லாம் ஒரு குன்றாக விளங்குகின்றது. நல்லூர் நல்ல ஊராக விளங்கியமையை நல்லூர்க் கந்த சுவாமி கோயில் மீது பாடப்பெற்ற தல இலக்கியமாகிய ''நல்லை நான்மணிமாலை''யில் குகதாசர் ச. சபாரத்தின முதலியார், பின்வருமாறு போற்றிப் பாடியுள்ளார்.

''ஆறு முகனீயடியார்க் கிரங்கியவர்
தேறு முறையருளுந் தெய்வதநீ - வேறு துணை
இல்லேன் மிடியனைத்து மில்லார்க்கு வானமைந்தாய்
நல்லூர்ப் பதியினைந்து''

நல்லூர் என்ற பெயருக்கான விளங்கக்கள் பலவாறு விளக்கப்பட்டுள்ளன.

''சீர்விளங்கு எமப்பதிக்குஞ் செப்புகின்ற சொற் பெயரே
யூர் விளங்க நாமமா நல்லூரே''

என வருணிக்கப்படுகின்றது.

நல்ல ஊர் எனச் சுட்டப்படும் இப்பெயரானது 'நல்லூர்' என அழைக்கப்படலாயிற்று. கனகசூரியன் நல்லூர் நகரைச் சிறந்த இராசதானி ஆக்க பெருமுயற்சி செய்தான். இராசவீதிகளும், அரண்மனைகளும், அவற்றைச் சூழ்ந்து குதிரைப் படை, யானைப்படை கொட்டாரங்களும் சிங்கார வனமும், பட்டாலும் பருத்தி நூலாலும் நுண்ணிய தொழில் புரிமக்கள் இருக்கைகளும் தச்சர், கொல்லர், ஓவியக் காரர், பொன் செய்வினைஞர், இந்தின வாணிகர், புலவர், பாணர், இவர்களுக்கு வெவ்வேறிருக்கைகளும், வேதமோதும் அந்தணர் மந்திரங்களும் மருத்துவர், சோதிடர் வைகும் வளமனை வீதிகளும் அமைந்து நல்லூரை நல்ல ஊராகப் பிரபல்யமுறச் செய்தான் என குல. சபாநாதன் என்பவர் ''இலங்கையின் புராதன சைவாலயங்கள் - 1. நல்லூர்க் கந்தசுவாமி (1971) ''என்ற நூலில் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார். மேலும் வெவ்வேறு தொழிலாளர் வாழ்ந்த வீதிகள் அவர்களின் பெயரால் இன்றும் வழங்கப்படுகின்றன. மேலும் இவர்களுக்கெனப் பல குளங்களும் தலைநகரில் அமைக்கப் பெற்றன. அக்குளங்களாக அடியார்க்கு நல்லார் குளம் அல்லது கன்னாதிட்டிக் குளம், அம்மைச்சி குளம் அல்லது அம்பச்சிகுளம், அஞ்சுதேவன் குளம் அல்லது வட்டக்குளம், ஆரியகுளம், இலந்தைக் குளம், இளம்பிள்ளையார் கோவிற்குளம், உப்புக்குளம், கற்குளம், சின்னக்குளம், தாமரைக்குளம், தேவரீர் குளம் (தாராக் குளம்), நரியன் குண்டுக் குளம், நாயன்மார்குளம், நெடுங்குளம், பண்டாரக்குளம பூதராயர் அல்லது கல்லவிராய குளம், பரவைக் குளம், பாற்குளம், பிரப்பங் குளம், பிராமணக்கட்டுக்குளம், புல்லுக் குளம், அல்லது புளுக்குளம், புல்லுக்குளம் மணிக் கூட்டுக் கோபுரத்தடி), மக்கிக் கிடங்குக் குளம், மக்கியக் குளம் யமுனாரி, வண்ணான்குளம் (இப்பெயருடன் மூன்று குளங்கள் உண்டு) முதலிய குளங்கள் ஆங்காங்கே வாழும் மக்களுக்கு நீர் வசதிகளை அளித்து வந்தன. நல்லூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத் தமிழ் அரசர்கள் காலத்தில் நீர்வளம், நிலவளம் மிக்கபிரதேசமாக விளங்கியதை அறியமுடிகின்றது.

நமது நாடாகிய இலங்கையில் கருணைக் கடலாகிய முருகன் கதிர்காமத்திலும், நல்லூர், செல்வச் சந்நிதி, கந்தவனக் கடவை, மண்டூர், சித்தாண்டி, வெருகல் முதலிய புண்ணிய ஸ்தலங்களிலும் கோவில் கொண்டு அருள் பாலித்து வருகின்றான். நல்லூர் என்றதுமே இலங்கை நல்லூர்க் கந்தன் நம்முன் தோன்றுகின்றது.

இலங்கை - யாழ்ப்பாணம் - நல்லூரின் மையப் பகுதியிலே நல்லூர்க் கந்தசுவாமி கோவில் அமைந்துள்ளது. இக்கோயிலைச் சுற்றியும் இவ்வூரின் பெயருடன் இணைத்தும் பல கோவில்கள் இன்றுவரை சுட்டி அழைக்கப்பட்டு வருகின்றன. அக்கோயில்களாக நல்லூர் - சந்திரசேகரப் பிள்ளையார் கோவில், கைலாசநாத சுவாமி கோவில் (கைலாசப் பிள்ளையார் கோவில்) பண்டாரக் குளம் மருதவளவுப் பிள்ளையார் கோவில், நல்லைநாதர் கோவில், சிவஞானப் பிள்ளையார் கோவில், நல்லைநல்லூர் - தெற்கு - கற்பக விநாயகர் கோவில், பாணன் குளம் நாச்சி அம்மன் கோவில், முத்து விநாயகர் கோவில், சிவன் கோவில், இலங்கை நாயகியம்மை கோவில் நல்லூர் வடகீழ் வீதி — ஸ்ரீ மனோன்மணியம்மன் கோவில், அத்தியடி நடராஜ வீரகத்தி விநாயகர் கோவில், சிவஞான விநாயகர் கோவில், சிவஞான வைரவர் கோவில், இராஜராஜேஸ்வரியம்மன் கோவில், சட்டநாதர் சிவன் கோவில், வெயிலுகந்தப் பிள்ளையார் கோவில், பூதவராயர் கோவில் ஆகியன விளங்குகின்றன.

நல்லூர் - யாழ்ப்பாணம் பட்டணத்தினுள்ள ஓர் ஊராகும், ஆரியச் சக்கரவர்த்திகள் என்று கூறப்படும் யாழ்ப்பாணத் தமிழ் அரசரின் (கி. பி. 1216 — 1621) அரசிருக்கையாகப் பன்னெடுங்காலம் பேர் புகழுடன் விளங்கிய ஊராக நல்லூர் விளங்குகின்றது. பதினைந்தாம் நூற்றாண்டிலேயே நல்லூர் தலைநகராக விளங்கியது. தமிழுக்கும் சைவத்திற்கும் அருந்தொண்டுகள் ஆற்றிய யாழ்ப்பாணத் தரசர்களது நேரடிப் பரிபாலனத்தில் இருந்து வந்ததும், அவர்களது முக்கிய வணக்கத் தலங்களுள் ஒன்றாக விருந்த நல்லூர்க் கந்தசுவாமி கோயிலாகும். இக் கோவில் ஆரியச் சக்கரவர்த்தியின் முதலமைச்சராக விளங்கிய புவனேகவாகு என்பவனால் கட்டப்பட்டதென ஒரு சாரார், கூறுவார், இன்னொரு சாரார், யாழ்ப்பாண அரசைக் கைப்பறறிய செண்பகப் பெருமான் என்னும் புவனேகவாகுவினால் 1454 இல் கட்டப்பட்டதெனக் கூறுவர். எது எவ்வாறாயினும், புவனோவாகு என்பனது பெயர் மகோற்சவங்களில் ஆலயக் கட்டியத்தில் கூறப்பட்டு வரும் வழக்கம் இன்றும் இவ்வாலயத்தில் இருந்து வருவது குறிப்பிடத்தக்கதாகும், மேலும் ஆரியச் சக்கரவர்த்திகள் சைவ சமயிகளாக விளங்கினர். இவர்களது அமைச்சர்களும், குடிமக்களும் சைவசமயிகளாகவே இருந்தனர். இதனால் இம்மன்னர்கள் தங்களதும் தங்கள் மக்களதும் சமயக் கடமைகளை நிறைவேற்றுவதற்காகத் தங்கள் அரசனைச் சுற்றியும், சுற்றுப் புற ஊர்களிலும் பல சிவாலயங்களைக் கட்டுவித்தனர்.

யாழ்ப்பாணத் தமிழ் அரசர் காலத்தில் நல்லூர் இராசதானியாக விளங்கியதை வரலாற்று நூல் நன்கு எடுத்துக் கூறியுள்ளன. இவ்விராசதானியின் அமைப்புப் பற்றி **யாழ்ப்பாண** வைபவமாலையில் வரும் வர்ணனை இங்கு நோக்கத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாலு மதிலும் எழுப்பி வாசலும் ஒழுங்காவிடு
வித்து மாடமாளிகையும், கூட கோபுரங்களையும்
பூங்காவையும், பூங்காவின் நடுவிலே ஸ்நான
மண்டபமும், முப்படைக் கூபமும் உண்டாக்கி, அக்
கூபத்தில் யமுனா நதி தீர்த்தமும் அழைப்பித்துக
கலந்துவிட்டு நீதி மண்டபம் யானைப் பந்தி, குதிரை
லாயம், சேனா வீரரிருப்பிடம் முதலியன கட்டுவித்து...—
கீழ்திசை வெய்யிலுகந்த பிள்ளையார் கோயிலையும்
மேற்றிசைக்கு வீர மாகாளியம்மன் கோவிலையும்
தெஎதிசைக்கு கயிலாய பிள்ளையார் கோயிலையும்,
வட திசைக்கு சட்டநாதேஸ்வரர் கோயில் தையல் நாயகி
அம்மன் கோயில் சாலை விநாயகர் கோயிலையு அமைப்பித்தனர்''

மேற்கூறப்பட்ட வர்ணனைகள் இன்று நல்லூர் இராசதானியினைக் காணவிழைவோருக்கு மிகையாகவோ, கற்பனையாகவோ கருத இடமளிக்கலாம். அதில் ஓரளவு உண்மையிருப்பினும் அவற்றை முற்றாக வரவேற்று உண்மைக்கு மாறானவை எனக் கருதி ஒதுக்கிவிட முடியாது. இந்நகர் பற்றி யாழ்ப்பாண வைபவமாலையில் மட்டுமன்றி, போர்த்துக்கேய ஆவணங்களிலும் ஓரளவு குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போதைய நல்லூர்ப் பிராந்தியத்தில் யாழ்ப்பாண மன்னர் காலக் கட்டிடங்கள் எவையும் முழுமையாக இல்லாவிட்டாலும் அங்குள்ள மந்திரிமனை, சங்கிலியன் தோப்பு, இராசாவின் தோட்டம், பண்டார மாளிகை, பண்டாரக்குளம் போன்ற பெயர்களும் இவ்விடங்களில் அழிந்த நிலையில் உள்ள கட்டிடச் சிதைவுகளும் அக்கால நல்லூர் இராசதானியை நினைவு படுத்துவனவாக உள்ளன.

யாழ்ப்பாணத் தமிழரசர்கள் ஆண்ட தலைநகர் பற்றியும் பல்வேறு வகையான சிந்தனைகள் அறிஞர்கள் மத்தியிலே காணப்படுகின்றன. வல்லிபுரத்திற் கிடைத்துள்ள அழிபாடுகளை மையமாகக் கொண்டு முதலியார் இராசநாயகம், சுவாமி ஞானப்பிரகாசர் ஆகியோர் இக்காலத்தில் இப்பகுதி முக்கியம் பெற்ற துறைமுக வசதிகள் கொண்ட இடமாகி விளங்கியதாக எண்ணி யாழ்ப்பாண இராச்சியத்தின் முதற்றலைநகராகிய 'சிங்கை நகர்' இஃதென்ற முடிவுக்கு வந்தன. பின்னர் சப்புமால் குமாரயாவின் காலத்திற்றான் நல்லூரும் அதனுடன் இணைந்த யாழ்ப்பாணப் பட்டினமும் தலைநகராக எழுச்சி பெற்றன என்பதும் இவர்களது வாதமாகும். இவ்வாறு இவர்கள் கருதுவதற்கு மிகப் பழைய தலைநகராகச் சிங்கை நகரும் அதன் பின்னர் யாழ்ப்பாணப் பட்டினமும் இறுதியாக நல்லூரும் ஆவணங்களில் குறிக்கப்பட்டுள்ளமையும் ஒரு காரணமாகும்.

இப்போது ஆராய்ச்சியாளரின் முன்னுள்ள கேள்வியாதெனின் சிங்கை நகர், யாழ்ப்பாணம், நல்லூர் ஆகியன ஒரே தலைநகரின் வெவ்வேறு வடிவங்களா அல்லது இவை தனித்தனி இடங்களின் பெயரா? என்பதாகும். இராசநாயகமுதலியார், சுவாமி ஞானப்பிரகாசர் போன்றோர் சிங்கநகரும், நல்லூரும் வெவ்வேறு இடங்களே எனத் திட்டவட்டமாகக் கூறினாலும் பரணவித்தானாவோவெனில் சிங்கள நூல்களை மேற்கோள் காட்டி, இவற்றுள் 'யாபாபடுன' எனவரும் குறிப்பு யாழ்ப்பாணத்தைக் குறிப்பதால். அறிஞர் மத்தியில் 'சிங்கை நகர்' என்ற பெயர் வழக்கிலிருக்க, பாமர மக்கள் மத்தியில் வழக்கிலிருக்க யாழ்ப்பாணம் என்ற பெயர் வழங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாயிற்று என்கிறார். ஆரம்பத்தில்சிங்கை நகர் என்று பெயர் பெற்ற இடமே பின்னர் 'நல்லூர்' என அழைக்கப்பட்டதென்பது நடேசனின் கருத்தாக அமைகின்றது. போர்த்துக்கேய வரலாற்றாசிரியரான குவேறோஸ் பாதிரியார் அக்காலத்தில் நல்லூரைத்தவிர வேறொரு நகரம் காணப்படவில்லை எனவும் அது போர்த்துக்கேயருடைய நகரமும் அங்காடியுமிருந்த இடத்திலிருந்து 'அரை லீக்' (ஏறக்குறைய ஒன்றரை மைல்) தூரத்தில் இருந்ததென்று கூறுவதை மேற்கோளாகவும் கொண்டு இந்திரபாலா இம்மூன்று பெயரும் அருகருகாக காணப்பட்ட இடங்களுக்கு இடப்பட்ட பெயராகும்.

யாழ்ப்பாண நகரம், கோட்டைப் பகுதியை அண்டிப் போர்த்துக்கேயராலும் பின்னர் வந்த டச்சுக்காரராலும் விஸ்தரிக்கப்பட்டது. எனினும் நல்லூர் இக்காலப் பகுதியிலும் தனது முக்கியத்துவத்தினை முற்றாக இழந்துவிடவில்லை நல்லூரைக் கைப்பற்றிய போர்த்துக்கேயரும் சில காலம் நிருவாக மையமாக நல்லூரைக் கொண்ட பின்னர் தான் தற்கால யாழ்ப்பாண நகரப்பகுதியைக் கோட்டையை அண்டி நிருமானித்தனர்.

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் மகோற்சவம் ஆரம்பித்து விட்டால். அதன் எழுச்சி யாழ்ப்பாணத்தில் மாத்திரமல்ல, இலங்கை முழுவதிலும் மாத்திரமல்ல, கடல் கடந்து வெளியூர்களில் வதியும் யாழ்ப்பாணத்தவர்களிடம் மாத்திரமல்ல, குகனடியார்கள் வாழும் உலகம் முழுவதிலுமே காணப்படுகின்றது. திருவிழா நிகழுங் காலத்திலே நல்லூர்க் கோயில் பூலோக கைலாசமாகக் காட்சியளிக்கின்றது. தெருவீதிகளால்லாம் புனித வீதிகளாக மாறுகின்றன. திருவிழா வேளையில் எந்த மயமும் கந்தமயமாகவே காட்சியளிப்பதை அவதானிக்க முடிகின்றது.

தென்னிந்தியாவில் தமிழரசர்கள் வலிமை பெற்றிருந்த காலவேளைகளில் கடல் கடந்த இலங்கை மீது படையெடுப்புகள் மீண்டுந் தொடங்கின. கி. பி. 10ஆம் நூற்றாண்டளவில் பூநகரிப் பிரதேசம் சோழரின் ஆட்சிக்குட்பட்டிருந்தது என்பதற்கு ஆதாரங்களுள்ளன. அவ்வேளையில் அப்பிரதேசத்தின் சோழப் பிரதிநிதியாக இருந்த புவனேகவாகு பூநகரியில் இன்று நல்லூர் என்ற பகுதியில் தனது மாளிகையினை அமைத்திருக்க வேண்டும். உண்மையில் இன்று கிடைக்கின்ற ஆதாரங்களிலிருந்து பூநகரியில் இன்று இருக்கின்ற நல்லூர் என்ற பிரதேசமே தமிழர் அரசின் புராதன நல்லூர் ஆகும் எனக் கொள்வதில் தவறு இல்லை என க. குணராசா தமது 'ஈழத்தவர் வரலாறு' (1996) என்னும் நூலில் எடுத்துக் காட்டியுள்ளமை இங்கு சிந்திக்கத்தக்கது.

தென்னிந்தியாவில் பல ஊர்களுக்கு நல்லூர் எனப் பெயருள்ளது. ஆகவே, அத்தகைய ஒரு பெயர் பூநகரியிலுள்ள இந்தப் பிரதேசத்திற்கும் சோழரால் இடப்பட்டிருந்தது எனக் கொள்ளலாம். முதலாம் பராந்தகன் ஆட்சியில் தான் தமிழ்நாட்டிலுள்ள சோழ மண்டலமும் மண்ணியாறும் இதன் தென் எல்லையிலுள்ள நல்லூரும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களாகக் கூறப்பட்டுள்ளன. குஞ்சரமல்லன் என்ற பராந்தகனின் சிறப்புப் பெயர் மண்ணியாற்றின் மறுபெயராக அழைக்கப்பட்டது. பூநகரியில் இராசதானிக்குரிய கட்டிட அழிபாடுகளின் தென்னெல்லையில் சோழ மண்டலமும், வடவெல்லையில் மண்ணியாறும் அதற்குச் சற்று வடக்காக நல்லூர் என்ற இடமும் காணப்படுகிறது என ப. புஸ்பரட்ணம் தெரிவித்துள்ள கருத்துக்கள் இங்கு மனங் கொள்ளத்தக்கன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் வடபகுதியில் கி. பி. 8ஆம், 9ஆம், 10ஆம், நூற்றாண்டுகளில் சோழச் செல்வாக்கு ஏற்பட்டதை உறுதிப் படுத்தும் மாருதப்புரவல்லியின் ஐதீகம், பராந்தகன், உத்தமசோழன் ஆகியோர் காலப்படை எடுப்புகள் அண்மையில் பூநகரிப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட முற்காலச் சோழக்கலை மரபுக்குரிய சிவ தேவாலயம் ஆகியன ஈழம் முதலாம் இராஜேந்திரனால் சோழப் பேரரசனின் ஒரு மாகாணமாக (ஒன்பதாவது மாகாண மாக - மும்முடிச் சோழ மண்டலமாக) ஆக்கப்பட முன்னரே சோழச் செல் வாக்கு இங்கு நிலைகொண்டதை எடுத்துக் காட்டுகின்றன. இக்கருத்தினை உறுதிப் படுத்துவதாக அமைவதுதான் கோட்டை யிற் கண்டுபிடிக்கப்பட்ட முதலாம் இரா ஜேந்திரனின் காலக் கல்வெட்டில் வரும் 'நல்லூர்' என்ற பெயராகும். நல்லூர் என்ற பெயர் சோழர்காலத்திற் செல்வாக் குள்ள பெயராக விளங்கியது.

தொகுத்து நோக்கின் 'நல்லூர்' என்ற பெயரினை முதலும் ஈறுமாகக் கொண்டமைந்த ஊர்கள் பல இந்திய இலங்கை நாடுகளில் காணப்படுகின்றன. இவ்வூர்களில் மிகவும் தொன்மையான வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த திருத்த லங்கள் பல அமைந்து விளங்குகின்றன. இந்திய நல்லூர்களுள் திருப்பந்தணை நல்லூர், திருக்கலய நல்லூர், திருநல்லூர், திருநல்லூர்ப் பெருமணம், திருவெண் ணெய் நல்லூர் ஆகியன முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன. இலங்கையில் அமைந்து விளங்குகின்ற நல்லூர்களில் யாழ்ப்பாணம் - நல்லூர், பூநகரி - நல்லூர் ஆகியன சிறப்புற்று விளங்குகின்றன. இவ்விடங்களில் முறையே புராதனமான கந்தன், சிவன் தேவாலயங்கள் அமைந்து விளங்குகின்றமை இங்கு குறிப்பிடத்தக்க தாகும். மேலும் இலங்கை - யாழ்ப்பாணம் - நல்லூர், யாழ்ப்பாணத் தமிழ் அரசர் ஆட்சிக் காலத்தில் சிறந்த தலைநகராக விளங்கியுள்ளது.

உ

## தேர்த் திருவிழா

சூரிய சந்திரர்கள் — சில்லாகவும் வேதங்கள் — குதிரைகளாகவும், பூமி தேராகவும் அதில் இவர்ந்து, மேருவை வில்லாகவும், விட்டுணுவை அம்பாகவும், அக்கினியை அம்பின் கூர்வாகவும் கொண்டு சிவபெருமான், திரிபுரசுந்தரர்களைத் தமது திருப்புன்முறுவலால் எரித்தருளினார். இதன் பாவனையாக அமைந்ததுதான் தேர்த் திருவிழா. திரிபுர சங்காரத்து உண்மைக் காட்சியை உணர்த்தி ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் கெடுத்தற்காக தேர்த் திருவிழா நடைபெறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— க. சொக்கலிங்கம், எம். ஏ.
(சொக்கன்)

# பழையரிற் பழையனாம் பரமன் சிறுவன்

## முருக வழிபாட்டின் தொன்மை

கி. மு. 2000 ஆண்டளவில் பெருங்கற் பண்பாடு தமிழகத்திலும் அதனை அண்மித்த இலங்கையிலும் நிலவியதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. தமிழகத்திலே திருநெல்வேலி, ஆதிச்ச நல்லூர் ஆகிய இடங்களிலும் இலங்கையிலே வளவ கங்கைப் பள்ளத்தாக்கு (தென்கரை), வரணி, வல்லிபுரம், (வடகரை) பொன்பரிப்பு, (மேற்குக்கரை) கதிரைவெளி, (கிழக்குக்கரை) என்பவற்றிலும் தொல் பொருளாய்வு நிகழ்த்தியோர் பெருங்கற் பண்பாட்டின் எச்சங்களாய்க் கண்டெடுத்தவற்றுள், காவடிச் செதில்கள் (வேல்கள்) சேவற் சிலைகள் என்பனவும் அடங்கும். இவை கொண்டு முருக வழிபாடு கி. மு. 2000 ஆண்டுகளுக்கு முன்னரும் இடம் பெற்றிருந்தது என்ற முடிவிற்கு ஆய்வாளர் வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

அண்மைக்கால ஆய்வுகளின்படி சங்க காலம் என்பது, கி. பி. 300 ஆண்டுக்கு முற்பட்டுத் தோன்றி, கி. பி. 300 வரை நிலவியிருக்கலாம் என்று கொள்ளப்படுகின்றது. இக்காலப் பிரிவினைப் பேராசிரியர் க. கைலாசபதி 'வீரயுகம்' என்பர். போரும் அதனோடிணைந்த வீரம், மண்ணாசை (நிலப்பசி), கொடை, புகழ் வேட்கை, வீரச்சாவைப் பாராட்டுதல், அவ்வாறு இறந்தோர்க்குக் கல்நாட்டி வழிபடல் முதலாம் பண்புகளும் செயற்பாடுகளும் சங்ககாலப் பிரிவிலே மேலோங்கிக் காணப்பட்டமை உண்மையே. எனவே சங்ககாலத்தினை 'வீரயுகம்' எனப் பேராசிரியர் க. கை. மதிப்பீடு செய்தது பொருத்தமேயாகும்.

வீரயுக காலத்திற்கு உகந்த கடவுள் வீரம் பொருந்தி விளங்குவதே இயற்கை. இவ்வியற்கையும் அது தொடர்பான நோக்கும் ஒன்றுசேர்ந்து வீரயுகத்தில் முருகக் கடவுளுக்கு முதன்மை வழங்கின.

வீரத்தோடு இளமையும் அழகும் பொருந்தியவனாதலால் முருகக் கடவுள் சங்ககாலத்து அகவாழ்வாகிய காதலோடும் இணைக்கப்பட்டான். தலைவனும் தலைவியும் கண்டு காதல்கொண்டு, ஒருவரின்றி மற்றவர் இல்லை என்னும் அளவிற்கு உயிரொன்றியுள்ளமையை அறியாத தலைவியின் தாயோ செவிலித் தாயோ தம் மகளுக்கு ஏற்பட்ட (காதல்) நோய்க்குக் குன்றில் வாழ் முருகனே காரணன் என்று கருதி அவனுக்கு வழிபாடு நிகழ்த்துவதும், வேலனைக் கொண்டு (பூசாரியைக் கொண்டு) வெறியாட்டு நிகழ்த்துவதும் சங்க (அகத்திணை) இலக்கியங்களிலே பரவலாகப் பேசப்படுகின்றன.

தமிழராகிய நாம் திராவிடர் என்னும் பேரினத்தின் வழிவந்தோர் எனக் கொள்ளப்படுவதை இவ்விடத்தில் நினைவுகூர்



★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வது பொருத்தமாகும். திராவிடர் தாய் வழிச் சமூகத்தினர். தாய்வழிச் சமூகம் பெண்ணிற்கு முதன்மை அளிப்பது. இவ் வகையில் அது தனது முழுமுதற் கடவுளாய்க் 'கொற்றவை' என்னும் பெண்ணணங் கைக்கொண்டமை இயல்பேயாகும். வேட்டுவ வாழ்க்கைக் காலத்திலே காட்டில் வாழ்ந்தோர் இக்கொற்றவையைத் தலைவியாய் ஏற்றுக்கொண்டமைக்கு அவளுக்கு வழங்கிய 'காடு கிழாள்' (கிழாள் - தலைவி) என்ற பெயரே சான்று. இதனோடு அவளின் பழைமையினைக் குறித்திடப் 'பழையோள்' என்ற சொல்லும் பயன்பட்டது. இப்பழையவளின் திருமகனாய்த் தோன்றியவன் முருகன் என்பதை,

## 'இழையணி சிறப்பிற் பழையோள் குழவி'

என்னும் திருமுருகாற்றுப் பாடலடி சிறப்பாக எடுத்துரைக்கக் காணலாம்.

முருகனின் முதன்மையான படைக்கலம் வேல். ஆதிகால மனிதன் முதலிலே கரடுமுரடான கல்லினைத் தனது போர்க் கருவியாய் (விலங்குகளோடு போர் நிகழ்த்தும் கருவியாய்) பயன்படுத்தினான். பின்பு கல்லைச் செப்பம் செய்து முக்கோண உருவில், (நுனியிற் கூர்மையுடையதாய்) ஆக்கிப் பயன்படுத்தினான். கல்லோடு கோலையும் அவன் விலங்கு வேட்டைக்குப் பயன்படுத்தியிருப்பான். உலோகம் பயன்பாட்டுக்கு வந்தகாலத்தில் முக்கோணக் கல்லுருவில் நுனிப்பகுதியை ஆக்கி, கோலுக்கு மாற்றாக உலோகத் தண்டை அடிப்பகுதியாய்க் கொண்டு வேல் உருவாக்கப்பட்டது. வில், அம்பு, வாள், ஈட்டி முதலியன கண்டுபிடித்துப் பயன்படுத்த முன்பு மனிதன் பயன்செய்த போர்க்கருவி வேலாகவே இருந்திருக்கும். எனவே வீரத்திருமகனாகிய முருகனுக்கு வேலைப் படைக்கலமாகக் கொடுத்தமை விளங்கிக்கொள்ளத்தக்கதேயாம். ஆக, வீரவழிபாட்டிற்கும் காதல் வாழ்விற்கும் ஓர் இலட்சிய வடிவினனாய், உருவகிக்கப்பட்ட பழந்தமிழ்க் கடவுள் முருகனே எனலாம்.

## பரிபாடல், திருமுருகாற்றுப்படை தவிர்ந்த மற்றைய சங்க நூல்களிலே முருகன் பற்றிய செய்திகள்

பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என்ற பதினெட்டு நூல்களும சங்ககாலத்தன எனக் கொள்ளப்படுகின்றன. இவை தனி ஒரு புலவரின் நூற்கள் அல்ல; புலவர் பலர் யாத்தவற்றைத் தொகுத்தனவாகும். ஏறக்குறைய ஆறு நூற்றாண்டு இடைவெளியில் வாழ்ந்த புலவர்கள் வெவ்வேறு காலங்களைச் சேர்ந்தவர்கள் என்பது வெள்ளிடைமலை. எனவே பாடு பொருளில் — செய்தியில் — கருத்தில் ஒத்த பண்பு இருக்கும் என்று கொள்வது கடினமே. இவ்வாறு நோக்குகையில் பரிபாடலும். திருமுருகாற்றுப்படையும் சங்க காலத்தின் பிற்பகுதியிலே தோன்றியவை என்பது ஆய்வாளரின் முடிபு. இம்முடிவிற்கு அவர்கள் பல அக, புறச் சான்றுகளைக் காட்டுகிறார்கள். ஈண்டு அகநானூறு புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து முதலாம் சங்க நூல்களிலே முருகன் பற்றிய செய்திகள் சிலவற்றை முதலிற் காண்போம்.

வீரமுடையோன் எதிரியின் மீது போர் மேற் செல்கையிலே மிகுந்த சீற்றத்துடனேயே காணப்படுவான். இந்தச் சீற்றம் யாரோடு ஒப்பிடக் கூடிய சீற்றம் எனில், முருகப்பெருமானுடனேயே என்று புலவர் கருதினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''முருகற் சீற்றத்து உருகெழு குரிசில்
(பொருநராற்றுப்படை)

முருகற் சீற்றது உருகெழு குரிசில்
(புறநானூறு 16)

செருமிகு சேஎய் (புறம் 16)

என்பன இதற்குச் சான்றுகள். சேய் என்பது மகன், இளைஞன், சிவந்த நிறத்தினன் என்ற பொருள்களைத் தந்து அவை யாவும் முருகனைக் குறிப்பனவாய் அமைதல் காணலாம்.

அவன் சூரபன்மனை வதைத்த செய்தியும் அவனுடைய படையின் ஆற்றலும் பின்வருமாறு சிறப்பிக்கப்படுகின்றன.

சூர்நவை முருகன் சுற்றத் தன்னநின்
கூர்நல் லம்பிற் கொடுவிற் கூளியர்
(புறம் 23)

சுற்றம் — (படையினராகிய) சுற்றம்)
கூளியர் — பூதக்கணங்களை ஒத்த படையினர்)

சேர மன்னன் ஒருவனின் படைவீரர் பொருது புறங்கண்டு அழித்த பகைவரின் பழைமையான மூதூருக்கு உவமையாக, முருகன் (தமது படையுடன் சென்று) வென்றழித்த நாடு கூறப்படுகின்றது.

மெலிவுடை நெஞ்சினர் சிறுமை கூரப்
பீர்இவர் வேலிப் பாழ்மனை நெருஞ்சில்
காடுறு கடுநெறி ஆக மன்னிய
முருகு உடன்று கறுத்த கலிஅழி மூதூர்
உரும்புஇல் சுற்றத்து அன்ன நின்
திருந்துதொழில் வயவர் சீறிய நாடே.
(பதிற்றுப்பத்து 26)

முருகன் நினைப்பதை முடித்தலிலும் வல்லவன் என்பதை

முருகு ஒத்தியே முன்னிய முடித்தலின்
(புறம் 51)

முருகு — முருகன், முன்னிய — நினைப்பன

என்ற பாடலடி கூறுகின்றது.

முழுமுதற் பரமனின் மகனான முருகன், செந்தில் என்ற திருப்பதியில் (திருச்செந்தூர்) எழுந்தருளி இருப்பான் என்பது பின்வரும் பாடலடிகளாற் புலனாகின்றது.

வெண்டலைப் புணரி உலைக்கும் செந்தில்
நெடுவேள் நிலைஇய காமர் வியன் துறை

நெடுவேள் — முருகன் (புறம் 55)

இத்தகைய வீரம், சீற்றம், செரு வென்றி (போர் வெற்றி) என்பவற்றுக்கு எடுத்துக்காட்டவல்ல இறையோனாய் விளங்கும் முருகன் காதலரின் வாழ்விலே பெறுகின்ற தாக்குறவினை நற்றிணை முதலாம் அகத்திணை நூல்கள் நன்கு எடுத்தியம்புகின்றன.

''வழிச்செல்வோரை மயக்கி அலைக்கழிக்கும் சூரர மகளிர் (சூர்-மயக்கம். சூரரமகளிர் – மயக்கும் மோகினிகள்) ஆடிக் களிக்கின்ற, அருவி பாயும் அழகிய குன்றின் தலைவன் அவன். அவன்மீது காதல் கைம்மிக்குள்ளாள் தலைவி. அவளைப் பீடித்த நோய் அதுதான். அதனைத் தீர்க்க வல்லவன் அத்தலைவனே. ஆனால் தலைவியின் தாயோ முருகனாகிய உன்னாலேயே. அவள் நோயுற்றாள் என்று கருதி உன்னை வேண்டினாள். முருகா: உண்மை உனக்குத் தெரிந்திருந்தும் தாயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னவள் வேலன் மூலம் வேண்டிய வேண்டுதலுக்கு அருள்வானாய், அதனை ஏற்று வந்தனை. நீ காத்தற் கடவுள்தான். எனினும் தலைவிக்கு உற்ற நோயினைத் தலைவனால் அன்றி உன்னால் தீர்த்து வைத்தல் இயலாதென்றறிந்தும் முன்வந்தமையால் பேதையாயினை'' என்பது நற்றிணைப் பாடல் ஒன்றின் சாரம். (தாய், வேலன் என்ற பூசாரியைக் கொண்டு வெறியாட்டுவித்து மடைவைத்து முருகனை அழைத்து வேண்டுவது அக்கால வழக்கு).

**கார்நறும் கடம்பின் கண்ணி சூடி**
**வேலன்வேண்ட வெறிமனை வந்தோய்**
**கடவுள் ஆயினும் ஆக**
**மடவை மன்ற வாழிய முருகே:**

(நற்றிணை 34)

''ஊரில் வயதால் முதிர்ந்த வேலனுக்குத் தலைவி அடைந்த நோய் பற்றி அறிவுறுத்தப்படுகின்றது. அவன், வெறியாடியும் நோய் தணிதற்கான தெய்வப் படிமம் (கன்னம் எனப்படும்) தூக்கியும், கழற்சிக்காயை உருட்டியும் குறிபார்த்தும் முடிவாக நோய்க் காரணம் முருகு எனவே கூறுவான். அவ்வாறு கூறினால் இவரை வருத்தியவனாகிய தலைவனுக்கு அது பொருந்தாதே.' (ஆகவே வெறியாட்டைத் தவிர்க்க) என்று தோழி தாய்க்குக் கூறுவதாய் ஐங்குறுநூற்றிலே பாடல் அமைந்துள்ளது.

**பொய்யா மரபின் ஊர்முது வேலன்**
**கழங்கு மெய்ப்படுத்துக் கன்னம் தூக்கி**
**முருகென மொழியு மாயின்**
**கெழுதகை கொல்லிவள் அணங்கி யோற்கே.**

(ஐங்குறுநூறு 245)

இக்கருத்தினை மேலும் தொடரும் இரு பாடல்களை ஐங்குறுநூற்றில் காணலாம். (246, 247).

குறிஞ்சிப்பாட்டு கபிலர் பாடியது. இது பத்துப்பாட்டில் அமைந்த ஒரு பாட்டு. போர்க்களத்திலே அம்புபாய்ந்த யானையின் உடலிருந்து குருதி பாய்வதற்கு உவமையாக, நெடுவேள் (முருகன்) மயக்கியதால் நோயுற்றவராய் கருதப்படும்பெண்களுக்காய், அவனது முன்றிலில் (ஆடுகளத்தில்) மறிகளை அறுத்துப் பலியிடும்போது பெருகும்குருதி கூறப்படல் காணலாம்.

**புண்உமிழ் குருதி முகம் பாய்ந்து இழிதரப்**
**புள்ளி வரிநுதல் சிதைய நில்லாது**
**அயர்ந்து புறங்கொடுத்த பின்னர் நெடுவேள்**
**அணங்குறு மகளிர் ஆடுகளம் கடுப்ப.**

(குறிஞ்சிப்பாட்டு)

முருகனின் முன்றிலிலே வேலன் மட்டுமன்றி மகளிரும் வெறியாடுவதாகிய செய்தி பத்துப்பாட்டில் மற்றொரு பாட்டாகிய பட்டினப்பாலையில் வருகின்றது.

**செறிதொடி முன்கை கூப்பிச் செவ்வேள்**
**வெறியாடு மகளிரொடு செறிய**

(பட்டினப்பாலை)

## முருகனின் முன்பு வெறியாடுதலும் பலியிடுதலும்

தாயர் தமது மகளிரின் நன்மையைக் கருதியும் மற்றையோர் தமது கருத்தினை முற்றுவிக்க எண்ணியும் முருகன் முன்பு வெறியாடுதலும், மறியறுத்துப் பலியிடுதலும் தொன்மையான வழக்கங்கள் என்பதற்கு மேலே எடுத்துக்காட்டிய பாடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் சான்றாகின்றன. இவை காலத்தால் முற்பட்ட செய்திகள். எனினும் பின்வந்த திருமுருகாற்றுப்படை, சோழர் காலத் தெழுந்த திருத்தொண்டர் பெரிய புராணம் என்பவற்றிலும் இவை தொடர்ந்து கூறப்படுதல் குறித்துக் காட்ட வேண்டுவதாகும். பழமுதிர்சோலை என்னும் படைவீடுடைய பதியின் அண்மையில் உள்ள ஊர்கள்தோறும், சிறிய தினையரிசியைப் பூக்களோடே கலந்து ஆட்டுக் கடாவை (மறியை) அறுத்து; சேவற் கொடி நிறுத்தி விழா எடுப்பதாகிய செய்தி திருமுகாற்றுப்படையில் வருகின்றது.

**சிறுதினை மலரொடு விரைகு**
**மறியறுத்து**
**வாரணக் கொடியொடு வயின்பட**
**நிறுத்தி**
**ஊரூர் கொண்ட சீர்கெழு விழவினும்.**
(திருமுருகாற்றுப்படை)

பெரியபுராணம் எழுந்த காலம் சைவ சித்தாந்த நெறி தலையெடுத்து மேலோங்கிய காலம், சிவபெருமானே முழுமுதற் கடவுள் என்ற கருத்து வலியுற்று, பத்திமார்க்கத்தோடு ஞானமார்க்கமும் இணைந்து உணர்வுநிலையும் அறிவுநிலையும் கைகோத்துச் சென்ற காலம். ஆனால் எக்காலத்திலும் பழைமையான நம்பிக்கைகளும், அவற்றோடு கூடிய செயல்முறைகளும் முற்றாகக் கைந்நெகிழ்த்தப்படும் என்பதில்லை. அதிலும் படிப்பறிவற்ற காட்டு மக்களாகிய வேட்டுவர் தொன்மை மரபைச் சிக்கெனப் பிடித்தவர்களாய்ப் பலியிடலும், வெறியாடலும் கொண்டு முருகனை வழிபடல் இயற்கையே.

எனினும் பெரியபுராண ஆசிரியரான சேக்கிழார் சுவாமிகள், வேட்டுவ வாழ்க்கையை உள்ளது போலக் காட்ட முற்பட்டாராயினும் முருகப்பெருமான் திருமுன்னர் பலியிட்டு வழிபடல் அவருக்கு உவப்பில்லை. எனவே கோழிச்சேவல்களையும் மயில்களையும் நேர்த்திகளாய் முருகன் சந்நிதியில் விடுத்ததாகஅவர் கூறுகின்றார். கண்ணப்பராகிய திண்ணனாரின் தந்தையான நாகனும், தாயும் பிள்ளைப் பேற்றினைக்கருதி அவ்வாறு செய்தார்களாம். ஆனால் வெறியாட்டு நிகழ்வதனை அவர் அணங்காடல், என்ற சொற்றொடரால் எடுத்துக்காட்டுவர்.

**வாரணச் சேவ லோடும் வரிமயிற்**
**குலங்கள் விட்டுத்**
**தோரண மணிகள் தூக்கிச் சுருள்மணிக்**
**கதம்பம் நாற்றிப்**
**போரணி நெடுவே லோற்குப் புகழ்புரி**
**குரவை தூங்கப்**
**பேரணங் காடல் செய்து பெருவிழா**
**எடுத்த பின்றை**
(கண்ணப்பநாயனார் புராணம், பெ. பு.)

## பரிபாடல் பரவிடும் செவ்வேள்

சங்ககாலத்திலே நிலத்துக்கு ஒரு தெய்வம் என்ற முறைமை நிலவிய தாய்த் தொல்காப்பியப் பொருளதிகார நூற்பா ஒன்று உரைக்கிறது.

**மாயோன் மேய காடுறை உலகமுஞ்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்**
**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல்**
**எனச்**
**சொல்லிய முறையாற் சொல்லவும்**
**படுமே**
(தொல். அகத்திணையியல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூற்பாவின்படி காடும் காடு சார்ந்த நிலமுமாகிய முல்லைக்கு மாயோனாகிய திருமாலும், மலையும் மலை சார்ந்த நிலமுமாகிய குறிஞ்சிக்கு சேயோனாகிய முருகனும், வயலும் வாயல்சார்ந்த நிலமுமாகிய மருதத்திற்கு வேந்தன் எனப்படும் இந்திரனும், கடலும் கடல்சார்ந்த நிலமுமாகிய நெய்தலுக்கு வருணனும் தெய்வங்களாவர். பாலையாகிய வறண்ட நிலப்பகுதி தற்காலிகமானதே. முல்லை, குறிஞ்சி நிலங்களில் மழைபொய்த்து, பயிர்பச்சை கருகி, அவற்றின் வளம் குடிபோகையில், அந்நிலப்பகுதி பாலையென அழைக்கப்பட்டதாகச் சிலப்பதிகாரம் உரைக்கும்.

உரையாசிரியர் நச்சினார்க்கினியர் மேற்குறித்த நூற்பாவின் உரையிலே, நெய்தல் நிலத்திலே வலைவளந்தப்பினால் மீனவமகளிர் சுறவுக்கோட்டினை (சுறா மீன் கொம்பினை) வருணனாய்ப் பாவனைசெய்து பரவுக்கடன் செலுத்தியமைக்குப் பட்டினப்பாலையிலிருந்து எடுத்துக் காட்டு வழங்குவர்; பாலைத்தெய்வமாகச் சூரியன் வழிபடப்பட்டமைக்குக் கலித்தொகையிலிருந்து எடுத்துக்காட்டுத் தருவர். சிவன் பற்றிய செய்தியை இந்நூற்பா குறிப்பிடாவிடினும் அகநானூறு, புறநானூறு, கலித்தொகை, நற்றிணை முதலாம் நூல்களிலே அவர் பற்றிய பல செய்திகள் வருகின்றன; கொற்றவை பற்றியும் ஆங்காங்கே பேசப்படும்.

ஆனால் பரிபாடலிலே திருமால் (மாயோன்), செவ்வேள் (முருகன்) ஆகியோரைப் பரவி அவர்களின் பெருமைகளையும், அவதாரம், திருவிளையாடல் முதலியவற்றையும் அடியார்கள் அவர்கள்மீது செலுத்தும் பக்தி, வேண்டுதல் என்பனவற்றையும் தனித்தனிப் பாடல்களால் விரித்துக் கூறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

திருமாலுக்கு எட்டுப் பாடல்களும், செவ்வேளுக்கு (முருகனுக்கு) முப்பத்தொரு பாடல்களும், காடுகாளாகிய கொற்றவைக்கு ஒரு பாடலும், வையை ஆற்றுக்கு இருபத்தாறு பாடல்களும், மதுரைக்கு நான்குமாக 70 பாடல்கள் கொண்டது பரிபாடல் எனத் தனிப்பாடல் ஒன்று கூறுகிறது. இவ்வெண்ணிக்கையின் அளவு கொண்டு நோக்கினால் பரிபாடல் எழுந்த காலத்தும் முன்பும் முருகனுக்கு தமிழகம் வழங்கியிருந்த முதன்மைப்பாடு நன்கு புலனாகும். மகாமகோபாத்தியாய உ. வே. சுவாமிநாதையர் தேடி ஆராய்ந்து தொகுத்து, பரிமேலழகர் உரையுடன் வெளியிட்ட பரிபாடலிலே, செவ்வேளுக்கு எட்டும், திருமாலுக்கு ஆறும், வையைக்கு எட்டும் ஆக 22 பாடல்களே உள்ளன.

சங்க நூல்கள் அகம் (காதல் ஒழுக்கம்), புறம் (சிறப்பாக வீர ஒழுக்கம்) என்று இரு திணைகளாய்த் தொகுக்கப் பட்டிருப்பினும் அவ்வரையறைக்குள் அடங்காது, பரிபாடல் அகம், புறம் என்னும் இரு ஒழுக்கம் சார் செய்திகளையும் உள்ளடக்கியுள்ளதோடு, தெய்வங்களைப் பரவும் நெறியினையும் பாடுபொருளாய்க் கொண்டுள்ளது. இவற்றோடு ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்றும் மூவகைப் பாக்கள் கொண்டு சங்கப் பாடல்கள் யாக்கப்பட்டிருக்க, அவற்றினின்று வேறுபட்டு, பரிபாட்டு என்றும் ஒருவகை யாப்பினைக் கையாண்டு பரிபாடல் இயற்றப்பட்டுள்ளது.

''காமங் கண்ணிய நிலைமைத் தாகும்'' என்ற தொல்காப்பியச் செய்யுளில் 121ஆவது நூற்பாவின்படி அறம் பொருள் இன்பம் என்ற மூன்றனுள் இன்பத்தையே நுதல் பொருளாகக் கொண்டு கடவுள் வாழ்த்து, மலைவிளையாட்டு, புனல் விளையாட்டு முதலியவற்றுள் வரும்......''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் சில இயல்களுக்கு உரை வழங்கிய பேராசிரியரின் கூற்று. பரிபாடலைப் படிக்கையில் இவரின் கருத்துப் பொருந்துவதே என்ற முடிவுக்கே வருவோம். திருமால், செவ்வேள் ஆகிய கடவுளரைப் பாடும் புலவர்கள் இடையிலே காமம் கண்ணிய அகத்திணைச் செய்திகளையும் இணைத்துள்ளனர். அதேவேளை,

**யாம் இரப்பவை**
**பொருளும் பொன்னும் போகமும் அல்ல நின்பால்**
**அருளும் அன்பும் அறனும் மூன்றும்**
**உருளிணர்க் கடம்பின் ஒலிதா ரோயே**

(பரி. 5)

என்றும்,

**பிணிமுகம் ஊர்ந்த வெல்போர் இறைவ**
**பணியொரீ, நின்புகழ் ஏத்தி**
**அணிநெடுங் குன்றம் பாடுதும் தொழுதும்**
**அவை யாமும்எஞ் சுற்றமும் பரவுதும்**

என்றும் காமக்கடந்து, உலகின்பம் ஒருவி முருகனுக்கே ஆட்பட்டு அவன்அருள் வேட்கின்ற பாங்கும் பத்திப்பா மரபிற்குத் தோற்றுவாயாவதும் உளங்கொள்ளத் தக்கதே.

கடுவன் இளவெயினனார் (5), நல்லந்துவனார் (8), குன்றம்பூதனார் (9, 18), கேசவனார் (14), நல்லழுகியார் (17), நப்பண்ணனார் (19), நல்லச்சுதனார் (21) ஆகிய புலவர்கள் எழுவர் பாடிய எட்டுப் பாடல்கள், முருகனைப் பரவல் காணலாம். இவற்றுக்கு யாழும், (பண்) இசையும் வகுத்தோர் இன்னார் எனத் தரப்பட்டுள்ளமை கொண்டு இப்பாடல்கள் யாழின் பக்கவாத்தியத்தோடு பண்ணொன்ற இசைபாடி, பத்திக்கு அநுபானமாய் அமைந்தன என்பது புலனாகிறது. பிற்காலத்திலே திருமுறைகளுக்குப் பண்ணிசை வகுக்க இவை வழிகாட்டின என்பதும் ஒன்று.

## பரிபாடலின் நிலைமாறு காலம்

சங்கப் பாடல்களிலே ஆங்காங்கு வேத, ஆகம, சாத்திர புராணக் கருத்துக்களும் செய்திகளும் மிக அருந்தலாக வருவதையும், வடசொற்களும் மிகக் குறைவாகவே இடம்பெறுவதையும் (பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை வடசொற்கள் நூற்றுக்கு இரண்டு விழுக்காடு அமைந்துள்ளன என்பர்) காண்கையில், வடவரான ஆரியரின் வருகையும் அவர்களின் தாக்குறவும் அக்காலத்திலேயே ஓரளவு தொடங்கிவிட்டன எனக் கொள்வது தவறாகாது. பரிபாடற் காலத்திலோ இவை அதிக அளவு நுழைய முற்படுவதையும் அதற்கு எதிரான கருத்துப் போராட்டம் நிகழ்வதையும் பரிபாடலிலிருந்து ஓர் அகச்சான்று கொண்டு நிறுவலாம்.

வள்ளிமீது காதல் கைம்மிக்கு, களவிலே முருகன் அவளைக் கூடுகின்றான். கற்பின் வழிநின்று முன்னரே அவனைத் திருமணம் புரிந்த தேவசேனை - தெய்வயானை அவன்மீது ஊடல் கொள்கின்றாள். இந்தச் செய்தியைச் சொல்லவந்த புலவர், ''களவு தொடராத் திருமணத்தைத் தொடர்வதும் தலைவர் பரத்தையர் வழிச்செல்வதும், அதனால் அடிக்கடி ஊடல் நிகழ்வதும் சிறப்பானவையல்ல. களவுக் காதலில் ஊடலுக்கே இடம் இல்லை. இது தமிழருக்குரிய வழக்கு. இதனை- இந்தத் தமிழ் வழக்கினை ஆராயாதார் களவுக் காதலின் திறனை உணரவும் மாட்டார்.; முருகன் எழுந்தருளிய திருப்பரங்குன்றத்தால் பெறத்தக்க இன்பமாகிய பயனையுங்கொள்ளார்'' என்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடவருடைய (பேசிச் செய்யும்) திருமண முறைமைக்கும், தமிழருடைய களவுப் புணர்ச்சிக்குமிடையே ஏற்படும் முரண்பாடும், கருத்துப்போராட்டமும் (ஆரிய வழக்குக்கள் சிறிது சிறிதாக நுழைவதனையும், அதனை எதிர்த்துத் தமிழர் (புலவர்) கருத்துப் போராட்டம் நிகழ்த்துவதையும்) பின்வரும் பாடல் அடிகளால் நன்கறியலாம்.

**நான்மறை விரித்து நல்லிசை**
**விளக்கும்**
**வாய்மொழிப் புலவீர் கேண்மின்**
**சிறந்தது**
**காதற் காமம் காமத்துச் சிறந்தது**
**விருப்போர் ஒத்து மெய்யுறு புணர்ச்சி**

(இடையில் எட்டு அடிகளிலே கற்பு மணமும், பரத்தைப் பிரிவும், ஆதனால் தலைவி ஊடல் கொள்வதும் அதன் தொடர்ச்சியும் குறைபாடும் கூறப்படுகின்றன.)

.... **அதனால்**

**அகல்தல் அறியா அணியிழை நல்லார்**
**இகல்தலைக் கொண்டு துனிக்கும்**
**தவறில்அரித்**
**தள்ளாப் பொருளியல்பின் தண்டமிழாய்**
**வந்திலார்**
**கொள்ளார் இக்குன்றுப் பயன்.**
(பரி. 9)

எனினும் பரிபாடற் காலத்திலேயே தமிழ்க் கடவுளாகிய முருகன் ஆரியமயப் படுத்தப்படுவதையும், அவனுடைய அவதாரம் முதலியன பௌராணிகக் கற்பனைக்கு உள்ளாவதையும் காணலாம். திருமுருகாற்றுப்படையிலும் இதன் தொடர்ச்சி உள்ளது. இவற்றைப் பின் வந்த கந்தபுராணக் கதையோடு ஒப்பிடுகையில் முருகன் கந்தசுவாமியாக, சுப்பிரமணியக் கடவுளாக உருக்கொள்ளும் வளர்ச்சிநிலை நன்கு புலனாகும்.

## பரிபாடல் குறிக்கும் முருகன் அவதாரம்

திரிபுரம் எரிசெய்தவரும், தேவர்கள், தங்கள் வேள்வியில் அளித்த அவிர்ப்பாகத்தினை உண்டவரும், பசிய விழியினருமான சிவபெருமான், உமாதேவியாரோடு இனிதுகூடி மகிழ்ந்திருந்தார், அதுகாலை உமாதேவியாரிடம் உண்டான கருவினைச் சிதைக்குமாறு இந்திரன் சிவபெருமானை வேண்ட, அப்பெருமானும் அவ்வாறே கருவினைச் சிதைத்து, சிதைத்த கருவினை ஏழு முனிவர்களிடம் அளித்தார். அதனைப் பெற்ற அவர்கள் யாகாக்கினியில் இட, ஆகவனீயம், காருகபத்தியம், தட்சிணாக்கினி என்னும் மூன்றுவகைத் தீக்கடவுளரும் (தீ அக்கினி) அதனைக் கொண்டு சென்று அருந்ததி தவிர்ந்த ஏனைய ஆறு கார்த்திகைப் பெண்களிடம் பகிர்ந்து அளித்தனர். கார்த்திகை மங்கையர் அக்கருக் கூறுகளை உண்டு, சரவணப்பொய்கையிலே ஆறு குழந்தைகளைப் பெற்றெடுத்தனர்.

அந்த ஆறு குழந்தைகளும் பிறந்த அன்றே இந்திரன் அவற்றை அழிக்கப் படையுடன் வந்து தாக்கினான். அதுகாலை ஆறு குழவிளும் ஒருருவும் ஆறு முகங்களும் கொண்டு இந்திரனை எதிர்த்துப் போரிட்டு அவனை முறியடித்தனர். அந்த ஆறுருவும் ஓர் உருவான ஆறுமுகக் கடவுளே முருகன் என்பது, கடுவன் இளநாகனார் என்னும் புலவர் பரிபாடல் ஐந்தாம் பாட்டிலே முருகனின் அவதாரம் பற்றிக் கூறியுள்ள செய்தியாகும்.

முருகன் கிரவுஞ்சகிரியைப் பிளத்தல் கடலிலே ஒளித்த சூரபன்மனை அங்குத் தானும் சென்று வேல் செலுத்தி வதைத்தல் முதலாய செய்திகள் முருகனவதாரத்தைத் தொடர்ந்து பேசப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமுருகாற்றுப்படையும் முருகன் அவதாரமும்

பத்துப்பாட்டின் காப்புச் செய்யுள் போன்று அமைந்து முருகப்பெருமானின் மகத்துவங்களை விரித்துக்கூறும் திருமுருகாற்றுப்படையும் சங்ககாலத்தின் பிற்பகுதியிலே தோன்றிய நூலேயாகும். நக்கீரர் என்ற புலவர், பிற சங்க இலக்கிய நூல்களிலே தாம் இயற்றிய பாடல்களின் மூலம் அறியவரும் மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரரும் அல்லர். கி. பி. ஏழு அல்லது எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த இறையனார் களவியலுரையாசிரியர் நக்கீரரும் அல்லர் என்பது பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்களின் கருத்து. திருமுருகாற்றுப்படையிலே வரும் பௌராணிகச் செய்திகளும் இலக்கண முடிபுகளும் சொல்லாட்சிகளுமாகிய பலவற்றினையும் ஆராய்ந்த அவர், திருமுருகாற்றுப்படையினை இயற்றியவர் சங்க காலத்தின் பிற்பகுதியிலே வாழ்ந்த ஒருவராதல் வேண்டும் என்ற முடிவிற்கு வருகின்றார். அவர் கருத்து ஏற்கக்கூடியதே.

புறநானூறு, முருகன் உறைபதியாகச் செந்திலைக் கூறுவதை முன்னரே கண்டோம். பரிபாடல் திருப்பரங்குன்றத்தை மையமாகக் கொண்டு முருகன் பெருமைகளைக் கூறுவதையும் கண்டோம். திருமுருகாற்றுப்படையோ திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர் சோலை என்று ஆறு படைவீடுகளிலும் எழுந்தருளி அருள்பாலிப்பவன் முருகன் என்று பேசுகின்றது. (குன்றுதோறாடல் என்பது தனித்ததொரு படைவீடன்று ஒவ்வொரு குன்றும் முருகன் ஆடரன்புரிய இடந்தரும் குன்றாகும் எனப் பொருள் கொள்வர்) பன்னிரு திருமுறைகளுள், பதினோராந் திருமுறையில் இடம்பெறும் இந்நூல் முருகனடியார்கள் பலரின் நித்திய பாராயண நூலாய் விளங்குவதும் ஒரு தலை.

திருமுருகாற்றுப்படை மூன்றே பாடலடிகளில் முருகன் அவதாரம் பற்றிக் கூறும் அது வருமாறு;

**நெடும்பெரும் சிமயத்து நீலப்**
**பைஞ்சுனை**
**ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப**
**அறுவர்ப் பயந்த ஆறமர் செல்வ**

(திருமுருகாற்றுப்படை)

இந்த அடிகளுக்கு நச்சினார்க்கினியர் எழுதிய பதவுரை, சிறப்புரைகள் வருமாறு:

அடி 1; நெடிய பெரிய இமவானுச்சியில் தருப்பை வளர்ந்த சுனையிடத்தே.

அடி 2: விசும்பும் வளியும் தீயும் நீரும் நிலனுமாகிய ஐவருள் தீ தன் அங்கையில் ஏற்ப

அடி 3: அருந்ததி ஒழிந்த அறுவராலே பெறப்பட்ட ஆறு வடிவு பொருந்திய செல்வ.

('நீலப்பைஞ்சுனை' என்றது சரவணப் பொய்கையை. நச்சினார்க்கினியர் நீலம் என்பது நீலநிறமுடைய தருப்பை எனப் பொருள் கொண்டு, நீலம் ஆகுபெயர் என்பார்.)

சி. உரை: (அடி 3) அங்ஙனம் அஸ்கியின் கண் (தீயில்) இட்டுச் சத்தி குறைந்த கருப்பத்தினை முனிவரெழுவரும் வாங்கித் தம் மனைவியர்க்குக் கொடுப்ப, அருந்ததியொழிந்தார் விழுங்கிச் சூன் முதிர்ந்து, சரவணப்பொய்கையிற் பதுமப் பாயலிலே பெற ஆறுவடிவாக வளர்ந்தமை கூறிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுரையினை நோக்க, இது நச்சினார்க்கினியர் பரிபாடல் மூலம் தாம் அறிந்த செய்தியை விரித்துல் கூறியதே எனக் கொள்ள இடம் தருகின்றது. அஃதுஎவ்வாறெனினும் முருகன் சாதாரண மனிதர் போன்று கருமூலம் உருவானவன் என்ற கருத்துச் சங்ககாலத்தின் பிற்பகுதியில்நிலவிற்று என்றே கொள்ளவைக்கின்றது.

## சங்கமருவிய காலம் முதல் சோழர் காலம் வரை முருகன் பற்றிய செய்திகள்

சங்க இலக்கியங்கள் சங்கமருவிய காலத்தில் தொகுக்கப்பட்டவை என்பது ஆய்வாளர் முடிபு. சங்கமருவிய காலம் கி.பி 300 தொடக்கம் 600 வரையுள்ள காலம் என்பர் பேராசிரியர் வி. செல்வநாயகம் (தமிழ் இலக்கிய வரலாறு - சுருக்கம்). இவ்வாறு தொகுக்கப்பட்டவற்றுள்ளே குறுந்தொகையும் அடங்கும். அதன் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாரதம் பாடிய பெருந்தேவனார் என்ற புலவர் யாத்துள்ளார். அந்தக் காப்புச் செய்யுள் இது;

**தாமரை புரையுங் காமர் சேவடி**
**பவனத் தன்ன மேனித் திகழொளி**
**குன்றி ஏய்த்த உடுக்கை குன்றின்**
**அஞ்சுபட எறிந்த செஞ்சுடர் நெடு வேல்**
**சேவலங் கொடியோன் காக்க**
**ஏம வைகல் எய்தின்றால் உலகே.**

'இப்பாடலின்படி செவ்வேளாகிய முருகன், தாமரைபோன்ற அழகிய திருவடிகளையும், பவளம் போன்ற சிவந்த திருமேனியையும் குன்றி மணியினை ஒத்த ஆடையையும் உடைய அழகனாய், (கிரவுஞ்ச) மலையானது அஞ்சும் வண்ணம் பிளந்த சுடர்விட்டு ஒளிரும் வேலினைத் தாங்கியவனாய் உள்ள சேவற் கொடியோன். இவன் காத்தருள்வதனாலே இவ்வுலகம் எப்பொழுதும் காப்புடையதாயிற்று'' என்பது இதன் பொருள்.

## சிலப்பதிகாரத்தில் முருகன்

கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனோடு தொடர்புபடுத்தி அதன் காரணமாகச் சிலப்பதிகாரத்தைக் கி. பி. இரண்டாம் நூற்றாண்டாகக் கொண்டதை மறுத்து அது கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் தோன்றியது என ஆய்வாளர் நிறுவியுள்ளனர். இதன்படி சங்கமருவிய காலத்தது எனக் கொள்ளப்படும் அக்காப்பியத்தில், 'அறுமுகச் செவ்வேளின் அணிதிகழ் கோயில்' பேசப்படுகின்றது. வஞ்சிக்காண்டத்துக் குன்றக் குரவையிலே முருகன் பற்றிய பின்வரும் செய்திகள் வருகின்றன. (கோவலனைச் 'செவ்வேளுக்கு' ஒப்பிடுவர் இளங்கோ)

1. சீர்கெழு செந்தில், திருச்செந்கோடு (திருச்சீரலைவாய்), சுவாமிமலை (வெண்கோடு), திருவேரகம் ஆகிய பதிகளை நீங்காத இறைவனின் (முருகப்பெருமானின்) திருக்கரத்தேந்திய வேலானது' முன்பொருகால் கடலிற் புகுந்து சூரபன்மனைத் தண்டித்தது. அழகிய திருமுகங்கள் ஆறும், பன்னிரு கைகளும் கொண்ட இணையற்ற அவனின் வேலன்றோ பிணிமுகம் என்னும் யானை (இவ்வியானை பற்றிப் பரிபாடல், திருமுருகாற்றுப்படை ஆகியனவும் பேசும்) ஏறி, இந்திரன் போற்றும் வண்ணம் அவுணர்தம் பெருமையை அழித்தது? சரவணப் பொய்கையிலே தாய்மார் அறுவரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முலையுண்டவனது திருக்கைவேலே மலையாய்க் கிடந்த (கிரவுஞ்சன்) அவுணனது மார்பைப் பிளந்தது.

2. இத்தகைய மேன்மைமிகு பெருமானை அன்னை வெறியாடும் வேலனைக் கொண்டு அழைத்தமை, யான் மிளகு வளர் வளமலையானால் உற்ற விகர நோயினை அறியாமையாலன்றோ? (சங்ககால அகத்திணை மரபின் தொடர்ச்சியை இப்பாடலும் தொடர்ந்துவரும் நான்கு பாடல்களும் சுட்டுகின்றன.

3. வேலன் (பூசாரி) வந்து வெறியாடும் கொடிய பலிக்களத்திலே மயில்மீது, அழகிய அணிகள் அணிந்த வள்ளியோடு, ஆல் அமர் செல்வனின் மகனார் வருவராயின், அப்பெருமானிடம் மலைநிலத்தலைவனோடு மணம்புரிந்துவைக்குமாறு அவரிடம் வேண்டுவோம். இக்கருத்தினை அடுத்துவரும் மூன்று தாழிசைகளிலும் இளங்கோவடிகள் தொடர்கின்றார். அப்பாடல்களில் முருகன் பற்றிய செய்திகள் மேலும் சில வருகின்றன. மலைமகள் மகன், கயிலை நன்மலையிறைமகன், குறமகள் (வள்ளி) குலமகள் (தெய்வயானை) இருவரோடும் கூடிய ஆறுமுகன், கடம்பு சூடி, வேற்படை (உடம்பிடி) ஏந்தியோன் என்பனவே அவை.

சங்கமருவிய காலத்தின் பிற்பகுதி தொடக்கம் சோழர்காலம் வரை சைவம், வைணவம் என்பன தலையெடுத்த நிலையில், முறையே சிவபெருமானையும், விட்டுணுவையும் (திருமாலையும்) சைவரும் வைணவரும் தத்தம் முழுமுதற் கடவுள்களாகப் போற்றி ஏகதெய்வக் கோட்பாட்டில் தலைப்பட்டனர் என்றே கூறல் வேண்டும். விநாயகர், முருகன் ஆகியோர், சிவன் - உமையின் புதல்வர்கள் என்ற அளவிலேயே சமயகுரவராலும் அவர்களைத் தொடர்ந்துவந்த சைவப் புலவர்களாலும் (பொய்யடிமை இல்லாப் புலவர்) கருதப்பட்டு மதிப்பிற்குரியவராயினர்.

''நங்கடம்பனைப் பெற்றவன் பங்கினன்''
(அப்பர் சுவாமிகள்)

''பெற்றும் உகந்தது கந்தனையே''
(திருஞானசம்பந்தர்)

முதலாம் பாசுர அடிகள் மூலம் இவ்வுண்மை புலனாகும்.

## நாயக்கர்காலமும், கந்தபுராணம், பிள்ளைத் தமிழ்கள், காவடிச்சிந்து, திருப்புகழ் முதலியவற்றின் தோற்றமும்:

நாயக்கர் காலம் என்பது கி. பி. 14 ஆம் நூற்றாண்டில் தொடங்கி ஐரோப்பியர் வருகைக்கு முற்பட்ட 17ஆம் நூற்றாண்டின் இறுதிவரையுள்ள காலமாகும். அப்பன் - அம்மை வழிபாட்டிலே, சத்தியாகிய அம்பாளுக்குச் சமத்துவம், சில சந்தர்ப்பங்களில் முதன்மை அளித்தல் ஆகிய போக்குகள் இக்காலத்தில் உருவாக நாயக்க மன்னர்கள் அறிமுகஞ் செய்த நவராத்திரி வழிபாடு காலாயிற்றோ என்பது ஆராயத்தக்கது. இதேகாலப்பிரிவில் இந்துக்களாயினும் பிறமொழியாளரான (தெலுங்கர்) நாயக்கரின் ஆதிக்கத்தினின்று தமிழைக் காக்கவும், தமிழரின் பழம்பெருங் கடவுளான முருகனின் வழிபாட்டுக்குப் புத்துயிர் அளிக்கவும் வேண்டிய தேவை ஏற்பட்டதாலோ என்னவோ முருகன் சுப்பிரமணியனாக, சண்முகனாகக் கொள்ளப்பட்டுப் பரம்பொருளாய்-சிவனே கந்தன்; வேறல்லன் என ஏற்கப்படுகின்றான்.

'ஆதலின் நமது சத்தி அறுமுகன்
அவனும் யாமும் பேதகம் அன்றால்......
கந்தபுராணம்

## யாம் என்றவர் சிவன்

தமிழர்க்கே உரிய மதமாய்ப் பத்தாம் நூற்றாண்டிலிருந்து உருவாகி வளர்ந்து வந்த சைவ சித்தாந்தக் கோட்பாட்டின் அடிப்படையில், (பரம் பொருள் கருவாகி உருவாவதில்லை; பிறவான் இறவான்). வடமொழிக் காந்தத்தைத் தழுவிக் கச்சியப்ப சிவாசாரியார் செய்தருளிய கந்த புராணம்,

**''அருவமும் உருவமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்**
**பிரமமாய் நின்றசோதிப் பிழம்பதோர் மேனியாகிக்**
**கருணைகூர் முகங்களாறும் கரங்கள்பன் னிரண்டுங் கொண்டே**
**ஒருதிரு முருகன் வந்தாங் (கு) உதித்தனன் உலகம் உய்ய''**

(பரிபாடலும் திருமுருகாற்றுப் படையும் கருப்பத்திலிருந்து பிறந்தவனாய் முருகனைக் கொள்ள, கந்தபுராணமோ அவனைச் சிவபெருமானின் நெற்றிக்கண்ணிலிருந்து தோன்றிய தீப்பொறியில் (காமத்தின் அழிவில்) உதித்தவன் என்கிறது.)

என்று முருகனை - கந்தசுவாமியைப் - பரம்பொருளாகவே காட்டலாயிற்று. குமரகுருபரசுவாமிகள், பகழிக்கூத்தர் அருணகிரிநாதர், அண்ணாமலைரெட்டியார், முதலாம் முருகனடியார்கள் அப் பெருமானின் பெருமைகளை விரித்து, அவனைத் தமிழர்க்கே உரிய தனிப்பெருங் கடவுளாய் மீண்டும் சைவ உலகிலே உலாவ விட்டனர். ஔவைப்பாட்டியின் கதைகள் முருகனின் என்றும் மாறா இளமைத் திறங்களைப்பத்திபூர்வமாய் நினைவில் நிறுத்த உதவின.

## முருக வழிபாடு இன்று

கந்தபுராணபடனம் யாழ்ப்பாணத்திலே கந்தபுராண கலாசாரம் ஒன்றையே உருவாக்கியுள்ளது என்பது பண்டிதமணி அவர்களின் முடிந்த முடிபு. இங்குள்ள தமிழரிற்பலர்முருகப் பெருமானையே கலியுக வரதனாய்க் கொண்டு முதன்மையளித்து வழிபட்டுவருகின்றனர்.

தமிழால் வைதாரையும் வாழவைப் போன்: என்ற அருணகிரியாரின் கூற்று, இறையனார்களவியலுரையிலே சுப்பிரமணியக்கடவுள் தமிழ்ச் சங்கத் தலைமை நடாத்திய கதையின் எதிரொலி என்றே கொள்ளத்தோன்றுகின்றது.

வெறியாடி வேண்டுதல் புரிந்த தமிழினம் காவடி எடுத்துக் கந்தனை மட்டுமே வழிபடுவது முருகவழிபாட்டின் தொன்மையின் தொடர்ச்சி என்று கொள்ளலாமோ எனச் சிந்திக்கவைக்கின்றது. அன்றியும் முருக வழிபாட்டின் பழம்பெரும் மரபினை இன்று நினைவூட்டுவதாய், வேத ஆகம வழியைக் கடைப்பிடியாது வாய் கட்டி நடத்தும் மௌன வழிபாட்டுமுறை கதிர்காமம், திருக்கோயில், சந்நிதி முதலாம் முருகன் பதிகளில் தொடர்வதையும் நாம் கவனத்திற் கொள்ளலாம்.

**முருகனே செந்தி முதல்வனே மாயோன்**
**மருகனே ஈசன் மகனே - ஒருகைமுகன்**
**தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்**
**நம்பியே கைதொழுவேன் நான்.**



★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேற்கோட் சான்றுகள்

1. சங்க நூல்கள், திருத்தொண்டர் பெரிய புராணம், கந்தபுராணம்.
2. இந்து நாகரிகம் — பாகம் 1, க. சொக்கலிங்கம். எம், ஏ.
3. 'சங்க இலக்கியங்களில் மருதத் திணையின் இலக்கிய, சமூக, ஒழுக்கவியல் நியமங்கள் பற்றிய ஓர் ஆய்வு' (முதுதத்துவமாணிப் பட்டத்திற்கென யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு 1997 இல் சமர்ப்பித்த (அச்சேறாத) ஆய்வேடு. வாசுகி சொக்கலிங்கம்'
4. தமிழ் இலக்கிய வரலாறு (சுருக்கம்), வி. செல்வநாயகம், எம். ஏ.
5. பரிபாடற் சொற்பொழிவுகள்
6. சிலப்பதிகாரம்
7. தொல்காப்பியம் — பொருளதிகாரம்.


" நல்லைக் குமரன் " மலரை எழுச்சியுறும் சைவசமயத்துக்கு உந்து சக்தியாக என்றும் விளங்க வாழ்த்துகிறோம்!

தனி இடம் !! "22கரட் நகைகளுக்கு" தனிச் சிறப்பு !!

# சிவானி நகை மாளிகை
# SIVAANI JEWELLERS

305, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

305, Kasthuriar Road,
JAFFNA.

திருமதி கலைவாணி இராமநாதன்
சிரேஷ்ட விரிவுரையாளர் இந்துநாகரிகத்துறை,
தலைவர், சமஸ்கிருதத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

# "சைவாலய வழிபாட்டு மரபில் - சிவாச்சார்யார் மகத்துவம் நிலைபெற...."

சிவாலய வழிபாட்டு மரபில் சிவாச்சாரியார்கள் பணியும் பங்களிப்பும் இன்றியமையாதனவாகும். வேத சிவாகமங்களை ஐயம் திரிபறக் கற்றல், அறுதொழில்களையும் திறம்பட ஆற்றுவதும் சிவாச்சார்யார்கட்குரிய சிறப்பான அம்சமாகும். அவர்கள் இளமையிலிருந்தே கிரியை மரபுகளில் ஊறித் திளைத்தவர்களாகவும், அர்த்த ஞானம் உணர்ந்து கிரியைகளை விளங்கிச் செய்யும் மாண்பு மிக்கவர்களாகவும் விளங்குவதும் அவசியமானது. ஒவ்வோர் கிரியைகளிலும் பக்தி என்பது இழையோடுவதுடன் பாவனை பல்மடங்கு விருத்தியடைந்து பெருகுமிடத்து பார்ப்போரும் மெய்மறந்து அக்கிரியைகளில் லயித்துவிடக் கூடியளவிற்கு சிவாச்சார்யார்களது திறமைகள், தெய்வீக ஆற்றல் என்பனவும் ஓர் உண்மைச் சிவாச்சார்யாரிடத்து வெளிப்பட்டுத் தோன்றும்.

நிறைந்த அனுபவமும் ஆற்றலும் அருள்நோக்குமுடைய சிவாச்சார்யார்கள் சைவசித்தாந்தம், சமஸ்கிருத வியாகரணம் திருமுறைகள், தமிழ்மொழி ஆகியவற்றிலும் பாண்டித்திய முடையவர்களாவார்கள். சைவசித்தாந்தக் கிரியாபாதத்தில் கூறப்படும் வேதாகமக் கருத்துக்களைத் துருவி ஆராய்ந்து கிரியாஞானத்துடன் ஆலயங்கள் பலவற்றிலும் உற்சவம், பிரதிஷ்டை, விசேட விழாக்கள் போன்ற கிரியாதர்மங்களை நன்கு ஆற்றக்கூடிய சிரேஷ்ட சிவாச்சார்யார்கள் சிலரும்இன்று நம்மிடையே இருக்கின்றார்கள். அவ்வாறே அத்தகையோரது வழிகாட்டலிலும் அனுபவத்திலும் பயிற்சி பெற்று குருகுலக்கல்வி மரபிலும் தேர்ச்சி பெற்று பல்கலைக்கழகத்திலும் வடமொழியிலும் இந்துநாகரிகத்துறையிலும் உயர்வான கற்கைநெறியினைப்பூர்த்தி செய்த பல இளம் சிவாச்சார்ய பரம்பரை ஒன்றும் இன்று சைவ உலகில் உருவாகி வருவது மிகவும் வரவேற்கத்தக்கதொரு வளர்ச்சியாகும்.

சிவாச்சார்ய லட்சணம் பற்றி சுப்பிரபேதாகமம் கூறுமிடத்து:

''...க்ரியாதி ஞானபர்யந்த சாஸ்த்ரேஷு-க்ரத நிச்சய''

என்பதில் ஆலயக் கிரியாமுறைகள், விதிகள் என்பனவற்றை நன்கு ஆராய்ந்த பின்பே அந்தந்த ஆலயங்கட்குரிய கிரியாபாதங்களை நிச்சயம் பண்ணவேண்டும் எனக்குறிப்பிடும். எனவே சிவாகம கிரியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் நன்கு கற்றவராயும், மிகுந்த தேர்ச்சி யுள்ளவராகவுமுள்ள சிவத்தை நாள்தோறும் கிரியாபூர்வமாக அர்ச்சிப்பவர்கள் சிவ - ஆசாரம் உடையவர்கள். சிவாச்சார் யார்களாகும் தகுதிபடைத்தவர்கள் என்பதனை சிவாகமங்களும் எடுத்துக்கூறும்.

''குருப்பிரம்மா குருவிஷ்ணு குருதேவோ
மகேஸ்வரஹ
குருராட்ஷாத் பரப் பிரம்மோ
தஸ்மை ஸ்ரீ குருவே நமஹ//''

என்றவாறு ஒருவருக்கு சிறந்த குருவாகவும் இருக்கும் தகுதிபடைத்தவர்கள் சிவாச்சார்யார்கள். அவர்கள் நல்ல மனிதர்களை, சமூகத்தை உருவாக்குவதில் பிரம்மாவாகவும், அத்தகைய உயர்ந்த சைவாசாரமுள்ள சமூகமக்களை ஒருமைப்பாட்டுடன் கட்டி வளர்த்துக் காப்பாற்றுவதில் விஷ்ணுவாகவும், சிவாலயங்களிலும், சுற்றுப்புறங்களிலும், சைவ சமூகத்தவரிடையே நிகழும் தீமைகளை துட்ட குணங்களை அழிப்பதில் மகேஸ்வரராகவும், தம்மைப் பாவனை செய்து சைவ சமூகத்தவர்க்கே உயர்ந்த குருத்துவமாக விளங்கும் உன்னத ஸ்தானத்தில் இருப்பவர்களாவார்.

சிவாலய உற்சவகால மகோற்சவ கிரியாதிகளில் தவறுகள் எதுவும் நேரிடாது நிகழ்த்தும் ஆற்றல் வாய்ந்தவர்கள் 'பிராமணர்கள்' எனப்படுவர். பிராமண இலக்கியங்களும் இவர்களை அதியுன்னதநிலையில் வைத்துக்கூறும். 'பிராமணர்கள் அவனியில்' நடமாடும் தெய்வங்கள் 'எனவும் அதனால் நல்லொழுக்கம், ஆன்மீக அறிவு, முதிர்ச்சி, மக்களை உயர்நிலை அடைவித்தற்கு (தி)யாகங்களை ஆற்றுதல், முதலியன பிராமணர்களிடம் இயல்பாகவே அமையவேண்டிய பண்புகள் எனப் பிராமணங்கள் கூறுகின்றன. மக்களும் அவர்கட்குப்பொருள் கொடுத்தல், மரியாதை அளித்தல், அவர் உயிர்க்குத் தீங்கு நேராது பாதுகாத்தல் முதலிய கடப்பாடுகளை உடைவயர்களாவார்.

வேத, ஸ்மிருதி நூல்களிலும் பிராம் மணவர்ணத் தவர்க்குரிய கடமைகள் விளக்கப்பட்டுள்ளன. ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், கற்றல், கற்பித்தல், என ஆறு கடமைகள் அவற்றில் பிரதானமானவை. இவையனைத்தும் தற்காலங்களில் அந்தணரது ஆன்மீக வாழ்வில் பெரும் சிரமங்கட்குள்ளாகியிருக்கின்றன. 'அந்தணத்துவம்' அல்லது பிராமணத்துவம் என்பது பிறப்பு வழியாக வரும் அறிவுத் தொடர்ச்சி என்றபடி குருத்துவ மரபு முன்னொரு காலம் உயர்வடைந்திருந்தது. தற்காலத்தில் அப்பெருமை அருகிவருவதாகப் பலரும் விசனப்படுவதுண்டு பிரம்மத்தை அறிந்தவன் 'பிராமணன். என்றும் அனைவரையும் 'பிராம்மணத்துவம்' அடையச் செய்வதே இந்து சமயத்தில் அதியுன்னத ஆன்மீக லட்சியம் என்றார் சுவாமி விவேகானந்தர். சிருஷ்டிகர்த்தாவான பிரம்மாவே வேதங்கட்குப்-பிரணவத்திற்குப் பொருள் தெரியவில்லை என்ற தவறுக்காக முருகக் கடவுளால் தண்டனை பெற்றதனைக் கந்தபுராணமும் எடுத்துக்காட்டும்.

''முப்போதும் திருமேனி தீண்டும்பேறு'' பெற்றவர்கள் அந்தணோத்தமர்கள் அவர்கள் தானும் அறவழி வாழ்ந்து பிறரையும் அறவழியில் ஒழுகச் செய்பவர்களாக இருக்கவேண்டும்.

**''அந்தணர் என்பர் அறவோர் மற்**
**றெவ்வுயிர்க்கும்**
**செந்தண்மை பூண்டொழுகலால்''**

—திருக்குறள்

என்றவாறு 'அறம்' செய்பவர்களே அந்தணர்கள் பிற உயிர்களிடம் அன்பு செலுத்துபவர்களே அந்தணர்கள். அவர்களது பணி ஆலயத்துடன் மட்டும் நிறைவுறுவதில்லை. அவ்வேலை ஆலயத்தினூடாக அதனை அண்டி வாழும் சமூகத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரிடமும் அறஒழுக்கத்தையும் மனித நேயத்தையும் மாண்புறச் செய்யும் உத்தம கைங்கரியமாகும். சிவாலயங்கள்பலவற்றில் இன்று அறம் காவலர் சபைகள் அமைக் கப்பட்டுள்ளன. அவர்களது பணியும் அறத்தை ஆலயத்திலும் சமூகத்திலும் பரிபாலிக்கும் உன்னத மார்க்கத்தை வலியுறுத்துகின்றது. எனவே நிர்வாக சபைகளும் ஆலயத்தின் வருமானத்தை அளவிடுதலும், கணக்கு வழக்குப் பதிதலும் ஆலயங்களைப் புனரமைப் பதுடனும், நிற்காது சிவாச்சாரியார்களது நலன்களையும் பேணி கௌரவிப்பதுடன் சமுதாய அறப்பணிகளையும் முன்னெடுக் கப்பாடுபட வேண்டும்.

சிவாச்சார்யார்களும் தேவஸ்தானப் பணிகளுடன் இணைந்து அறம்காவலர் தரும கைங்கரியங்களை ஊக்குவிக்கவேண் டும். பொதுமக்கள் துயரங்களில் பங்கு கொண்டு அவர்கட்காக வாரத்தில் ஒரு நாள் 'மக்கள் நலப் பிரார்த்தனை' நாளாகப் பிரகடனப்படுத்தி அந்நாளிலே நோயுற்றோர், ஏதிலிகள், இடம்பெயர்ந் தோர் என்றின்னோரன்ன அனைவரையும் பிரார்த்திக்குமாறு தூண்டுதல் நன்றாகும். பசிப்பிணி தீர தேவஸ்தானத்தினூடாக அன்னதானப்பணி, ஆதரவற்றோர் இல் லங்கட்கு சென்று ஆன்மநலப் பிரார்த்த னையில் ஈடுபட்டு அவர்களை ஆதரித்தல், வைத்திசாலைகளில் தீராத நோயுற்றவர் பால் அன்பும், பரிவும் கொண்டு இறைவ னிடம் வேண்டுதல், வீபூதிப் பிரசாதமளித் தல், போன்றவற்றால் சிவாச்சார்யர்களது சமூகப்பணி மனிதநேயப் பணியாக மலரமுடியும். இப்படியான சில இடங் கட்கு அந்தணர் செல்வது 'ஆசௌச மாகும்' எனவும் ஒரு கருத்து நிலவுகின்றது. தீட்டான வீடுகட்கும், வைத்தியசாலை கட்கும் செல்லுவதால் தமது ஆசாரத்திற்கு இழுக்கு எனப் பலர் கூறியுமுள்ளனர். ஆனால் சாஸ்திர விரோதமான எத்த னையோ சம்பவங்களில் அவர்கள் தம்மை ஈடுபடுத்துவதைவிட இத்தகைய தர்மகா ரியங்கள் ஒருபோதும் இழுக்கென்று கருத முடியாது. உதாரணமாக அந்தர்ணகள் 'கடல்கடக்கக்கூடாது' என்பது சாஸ்திர விதி, ஆனால் இன்று அந்த மரபு மாற வில்லையா? அவ்வாறே காலத்தின் தேவை க்கேற்ப மாற்றக்கூடியவற்றை மாற்றுவ தில் தருமத்தைப் பேணுவதில் நிச்சயம் தவறிருக்க முடியாது.

சிவாச்சார்யார்கள் தமது செல்வத்தில் தானதருமம் செய்ய வேண்டுமென்பது இவற்றின் பொருளல்ல. ஆலய அறங்கா வலர்கள் மூலம் இது போன்ற பல பணி களை முன்னெடுக்கத் தூண்டுதலாக இருக்கலாம். கிராமத்தில் நன்னீர்க்கிணறு அமைத்தல், சிறுவர் பாடசாலை அமைத் தல், இலவச மருத்துவமுகாம் ஏற்படுத் தல், ஆலயங்களில் வாரத்தில் ஒரு நாள் உபநிடதம், கீதை, திருமந்திரம், திருக் குறள் முதலியவற்றைப் படித்துப் பொருள் சொல்லல் என்பனவற்றில் ஆலய நிர்வா கத்திற்குப் போதிய ஒத்துழைப்பு வழங்க லாம். 'பதிபுண்ணியத்தில் பசு புண்ணி யம் செய்யக்கூடாது' எனவும் சிலர் அபிப் பிராயப்படுவர். அது முற்றிலும் பொருத் தமற்றதாகும். மக்கள் சேவை மகேசன் சேவை' எனவும் 'நடமாடும் கோயில் நம் பர்க்கொன்றீயின் படமாடும் கோயில் பகவர்கதாமே' எனத் திருமந்திரமும் அடி யார் சேவை, ஆதரவற்றோர் பணிக்கு அதிக முதன்மையளித்துள்ளன.

ஆலயம் கட்டுவதைவிட ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் கோடிபுண்ணி யம் எனவும், 'அநாதைப் பிரேத கருமங் களும் அனேககோடி புண்ணியம்' எனவும் கூட எங்கள் இந்துமத சாஸ்திரங்கள் தான் சொல்லியுள்ளன. எல்லா உயிர்களி லும் நான் அந்தர்யாமியாக இருக்கிறேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— ஆதலால் ஓர் ஏழைக்கு உணவிடும் போது ஒருவன் எனக்கு உணவளித்தவனாகின்றான்' எனக் கீதையிலும் கண்ணன் கூறுகின்றான். ஆலயத்தில் பூசைகள் எவ்வளவு முக்கியமோ அவ்வளவிற்கு ஆத்மசேவைகளும் அவசியமானவை என்பதே சைவசித்தாந்த சாரமாகவுமுள்ளது.

**'சிவஞானச் செயலுடையோர் கையில்**
**திலமனவே தானம் செய்திடினும்**
**நிலைமலைபோல் குவியும்... அவரைச்**
**சரியைகிரியை யோகம் சாரப்**
**பண்ணமே**
**...நவமாகும் தத்துவஞானத்தை நல்கி**
**நாதனடிக் கமலங்களை நணுகுவிக்கும்**
**தானே''**

(சித்தியார்)

என்ற சித்தாந்த நூலின் சிந்தனையும் இதனையே வற்புறுத்துவதாக அமைகின்றது.

மேலும் எங்கள் சிவாச்சார்யர்களது அறிவின் வளர்ச்சிக்கு இந்து சமூகமும் நன்றாக உதவ முன்வரவேண்டும். சிவாச்சார்யகுருபாரம்பரியத்தில் நம்பிக்கையும் மதிப்பும் மிக்க பெரியோர்கள், அறிஞர்கள் இணைந்து அவர்களது குருத்துவ உயர் கல்வி வளர்ச்சிக்கான நிறுவனம் ஒன்றை உருவாக்க வேண்டும். வடமொழி வளர்ச்சிக்கான உயர்கல்வி நிறுவனமாக யாழ் பல்கலைக்கழகம் அமைகின்றபோதும் அது அறிவுத் துறைசார்ந்த ஆராய்ச்சி பூர்வமான கல்வியையே பெரிதும் சார்ந்துள்ளது. அந்தணத்துவ குருத்துவ மரபியல் சார்ந்த வைதிகக் கல்வி வளர்ச்சியில் இன்று பல குருகுலங்கள் மிக உன்னத பணியாற்றி வருகின்றன. ஸ்ரீ பரமேஸ்வரன் வேதாகம ஆய்வு நிறுவனம், தர்மசாஸ்தா குருகுலம், ஸ்ரீ வித்யா குருகுலம் போன்ற பல நிறுவனங்களிலிருந்து இளம் சிவாச்சார்ய பரம்பரை உருவாகி வருவது சிறப்பான ஓர் வளர்ச்சியாகும்.

இத்தகைய பல நிறுவனங்களுடன் இந்துக் குருமார் ஒன்றியம் 'நியந்திரி' என்னும் கல்விசார் அமைப்புக்கள், இந்து சமயப் பேரவை, அகில இலங்கை இந்து மாமன்றம், இந்து இளைஞர் பேரவை, சைவ வித்தியா விருத்திச்சங்கம், யாவும் ஒன்றாக இணைந்து இந்து சமய மரபில் சைவத்தின் உயர் பீடமாக விளங்கும் ஒரு சமஸ்கிருத சிவாச்சார்ய பயிற்சிக் கல்லூரி ஒன்றினை ஏற்படுத்த முன்வரவேண்டும். மேற்குறிப்பிட்ட நிறுவனங்களில் வைதிகக் கல்வி, கிரியாமரபுகளில் பயிற்சி பெற்றுப் படிப்பை முடித்து வெளியேறுவோரில் அதி திறமை வாய்ந்தவர்களை போட்டிப் பரீட்சை அடிப்படையில் அக் கல்லூரிக்குத் தெரிவு செய்யலாம். அப்படியொரு வளர்ச்சி ஏற்படுமிடத்து எமது ஆலயங்களும், அங்கு பணியாற்றும் சிவாச்சார்யார் உயர்கல்வித் தகைமையும், புலமையும் சைவத்தின் உயர் விழுமியங்களையும், ஆலயகலாசார மரபின் மேன்மையையும் மேலும் கௌரவமான முறையில் செயற்றிறன் வாய்ந்த இயக்க சக்தியாக மாற்றிவிடும்.

பரம்பரையாக பிறப்பின் அடிப்படையில் உருவாகும் குருமார்களும் காலப் போக்கில் இங்ஙனம் உயர் வைதிக சைவக் கல்விப் பாரம்பரியமுடையவர்களாகவும், தகுதி வாய்ந்தவர்களாகவும் உருவாக இந்நிறுவனம் உதவக்கூடியதாயிருக்கும் என்பதில் ஐயமில்லை. அதன் பயனாக ஏனைய சமயங்களில் காணும் குருத்துவ பயிற்சிக் கல்லூரிகள், பிரிவேனாக்கள், செமினரிகள் போன்று சைவ பாரம்பரிய கலாசார மரபிலும் இம்முறை மிகச் சிறந்த நற்பலனைத் தரமுடியும். இது ஓர் ஆலோசனையாகவே இங்கு கூறப்படுகின்றது. அதன் வழி எங்கள் சிவாச்சார்ய குலமும் சகல இனத்தவராலும் வேற்று நாட்டவராலும் போற்றத்தக்க மேன்மை பெறுவார்கள் என்பது திண்ணம்.

''சைவ நீதி விளங்குக — சிவாச்சார்யார் மேன்மை ஓங்குக''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி சற்சொரூபவதி நாதன்
ஒலிபரப்பாளர்

# வள்ளி மணாளன்

இறைவன் திருநாமங்களைக் கூறுவ தால்பெறும் ஆனந்தம் பேரானந்தமாக உள்ளது. முருகன் அடியார்கள் அவனது நாமங்களை அடிக்கடி ஓதி ஆனந்தக் கடலில் மூழ்குகின்றனர்.

**அஞ்சுமுகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்**
**வெஞ்சமரில் அஞ்சலென வேல்தோன் றும் - நெஞ்சில்**
**ஒரு கால் நினைக்கின் இருகாலும் தோன்றும்**
**முருகா என்றோதுவார் முன்"**

ஆறுமுகனின் அளவற்ற திருநாமங் ளில் சரவணபவன். முருகன் குமரன் கந்தன், குகன், வேலாயுதன, மயில்வாக னன், சேவற்கொடியோன், வள்ளி மணா ளன் என்ற பெயர்கள் அடிக்கடி அடியார் களால் போற்றித் துதிகக்ப்படுபவையாகும் இத் திருநாமங்களுள் வள்ளி மணாளன் என்ற பெயரின் சிறப்புப் பற்றிச் சிறிது சிந்திப்போம்.

முருகனுக்கு விண்ணுலகில் ஒரு தேவி தெய்வயானை. மண்ணுலகில் ஒரு தேவி வள்ளிப்பிராட்டி. முருகன் ஞானசக்தி, வள்ளி இச்சாசக்தி, தெய்வயானை கிரியா சக்தி இதன் தத்துவத்தை எளிதாக விளங்கிக் கொள்ளலாம். உலகில் நிகழும் எல்லா நிகழ்வுகளுக்கும் காரணம் இச்சை, கிரியை, ஞானம் ஆகிய மூன்றின் சேர்க் கையே. இச்சை என்றால் ஆசை அல்லது எண்ணம் ஆகும்.

ஒரு செயலைச் செய்வது கிரியை, செயலாக்கும் அறிவு ஞானம், இம் மூன்றின் தொகுப்பே வள்ளி, தெய்வயானை உடன் தோன்றும் முருகன். உலகவழக்கில் இச் சைக்கே முதலிடம் கொடுக்கப்படு கிறது. இதனாலேயே வள்ளிக்கு முதலிடம் வள்ளி, தெய்வயானை சமேதராக முருகன் காட்சி தருகிறார் என்கிறோம் செயலும், அறிவும் இச்சையால் தான் தோன்று கின்றன இதனால் ஞானமாகிய முருகன் எண்ணமாகிய வள்ளியைக் காதலித்தார். கிரியையாகிய தெய்வயானையை விட இலக்கியத்தில் வள்ளிக்குத்தான் ஏற்றம் கொடுக்கப்பட்டுள்ளது.

சமய நெறியில் வள்ளி முக்திக்குத் தயாரான உயிராக சித்திரிக்கப்படுகிறார். வள்ளியின் மீது முருகன் கொண்ட காத லுக்கு அளவேயில்லை. அருணகிரியார் தம்மை வள்ளியாகவும், முருகனை தலை வராகவும் எண்ணி மகிழும் போது

**பணியா என வள்ளி பதம் பணியும்**
**தணியா அதி மோக தயாபரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றார். முருகன் வள்ளியைக் கண்டதும் அவள் காலில் விழுந்து எழுந்து "உனக்குஎன்ன உபசாரங்கள் வேண்டும், என்ன ஊழியம் செய்ய வேண்டும்" என்று கேட்டாராம் இந்த அன்பை வெறும் மோகம் என்ற வார்த்தையால் விபரித்து விடக்கூடாது. மோகதயாபரன் என்று அருணகிரியார் குறிப்பிட்டது கருணைவடிவானவன் என்ற அர்த்தத்தில் தான். இந்த வள்ளி எங்கு பிறந்தாள் வள்ளி மலையில், தொண்டை நாட்டில் வள்ளி பிறந்தாள் என்கிறது கந்தபுராணம், நாகர் கோவிலுக்கு அருகே இருக்கும் வள்ளிமலைதான் வள்ளி பிறந்த ஊர் என்பர் ஒரு சிலர், இலங்கையில் கதிர்காமத்துக்கு அருகே வேடுவர் குலத்தில் வள்ளி பிறந்ததாக நாம் நம்புகிறோம். அவள் எந்த ஊரில் பிறந்தால் என்ன? மண்ணில் பிறந்தாள், வள்ளிக் கிழங்கு விளையும் குழியில். பிறந்தாள் என்பதில் அபிப்பிராய பேதமில்லை "அகந்தைக் கிழங்கை அகழ்ந்தெடுக்கும்,, என்றர் குமரகுருபரர் ஆணவக் கிழங்கால் பிறவி எடுத்தாள் வள்ளி அதனை எடுத்துக் காட்டும் விதத்தில் அவளுக்கு வள்ளி என்று பெயர்.

கவண் வீசிக் கல் எறிந்து வள்ளி தினைப்புலம் காத்த காட்சியை அற்புதக் காட்சியாக நாம் மனக்கண்முன் காண்கிறோம். பறவைகளை அவள் கவண் வீசி விரட்டினாள் பருவப்பாவையாக வள்ளி சித்திரிக்கப்படுகிறள். பக்குவம் அடைந்த ஜீவன் என்பது இதன் அர்த்தம் தினைப் புலம் என்பது விளைகள் நிறைந்த இடமாகும். பரணில் அவள் ஏறி நின்றாள் என்பது ஜீவ முக்திநிலை - உயர்ந்த தவ நிலை. இங்கு பறவைகள் என்று குறிப்பிடப் படுவது, காம, குரோதம் எனப்படும் தீய எண்ணங்கள் இறைவன் எண்ணத்தால் தீய குணங்கள் விரட்டப்படுவதை கவண் வீசுதல் குறிக்கிறது எனக் கொள்ளலாம். பக்குவம் அடைந்த உயிரைத்தேடி முருகன் வேட உருவில் வருகிறான். முருகனை பல பிறவிகளிலும் நினைத்திருந்து பக்குவம் பெற்ற ஜீவனாக வள்ளி இருந்தும் அவனை அவள் ஏறெடுத்துப் பார்க்கவில்லை, ஏற்றுக் கொள்ளவும் இல்லை. இது உயிரின் இயற்கை, ஆம் பற்றறுத்துச் செல்வதற்கு பக்குவமடைந்த ஆன்மாவுக்கும் தயக்கம் உண்டு. இரட்சிக்க வந்த இறைவனை அவள் காமுகனாக முதலில் நினைத்து ஏசுகின்றாள். வேடுவர் வேடத்தில் வந்த முருகனை வள்ளி 'வேடா போடா' என்று ஏசுகிறாள் வேங்கை மரமாகி அவன் நின்றபோது அதனை வெட்ட வேடுவர் முற்பட்டபோது வள்ளி தடுக்கின்றாள். முருகன் மீது அவள் வைத்திருந்த அன்பு அவ்வாறு செய்ய வைத்தது. கிழவர் வடிவத்தில் முருகன் வந்தபோது வள்ளி கடுஞ்சொல் பேசுகிறாள் முருகனோ அவற்றை நன்கு ரசிக்கிறார். திட்டிப் பேசிய வள்ளியை எட்டிப் பிடிக்கிறார். வைது பேசிய வள்ளியை வாழ வைத்தவன் முருகன் இதனாலேயே நாம் அவனைக் கலியுகவரதன் என்கிறோம். கலியுகத்தில் கடவுளை ஏசாதவர்களை விரல்விட்டு எண்ண முடியும். வள்ளி பெற்ற நிலையை இந்த யுகத்தில் வையும் மனிதர்கள் பெற முடியும் என்ற நம்பிக்கையை அவன் ஏற்படுத்துவதால் கலியுகவரதனாகப் போற்றப்படுகின்றான். எத்தனை பிழைகள் எத்தனை குறைகள் இருப்பினும் அவற்றைப் பொறுத்து அருள்பவன் முருகன் என்பதையே வள்ளி மணாளனாக அவன் உணர்த்தி நிற்கின்றான். வள்ளி பெற்ற கலையை அடியார்கள் அனைவரும் அவர்கள் எந்த முறையில் வணங்கினாலும் பெறுவர் என்று அவன் செய்தி கூறுகின்றான். இன்றைய உலகில் இன்னல்களுக்கு உட்பட்ட முருகன் அடியார்கள் அவனை வையத்தான் செய்வர்- ஆனால் வைதாலும் தொடர்ந்து அன்புடன் பக்தி செலுத்தினால் துன்பம் நீங்கி அவர்கள் முத்தி பெறுவர் என்ற நம்பிக்கை நாமம்தான் வள்ளி மணாளன் என்றும் நலந்தரும் நாமம்.

"மொய்தார் அணி குழல் வள்ளியை
வேட்டவன் முத்தமிழால்
வைதாரையும் அங்குவாழவைப்பான்"

# மக்கள் வங்கி

உங்கள் வாழ்நாள் முழுவதும் நிழல்போல் உங்களைத்
தொடர்ந்து வரும் " மக்கள் வங்கி "
மக்கள் சேவையில் 36 ஆண்டுகளைத் தாண்டிவிட்டது !

- 60 இலட்சம் வாடிக்கையாளர்கள் ! !
- 400க்கும் மேற்பட்ட கிளைகள் ! !

இந்த உன்னத நம்பிக்கைப் பிணைப்பில் நீங்களும் சேருங்கள் ! ! !

வங்கியின் வழமையான சேவைகளுடன்,

- பாடசாலை மாணவர்களுக்கான விசேட சேமிப்புத் திட்டம்
  " மாணவர் மறுமலர்ச்சி "
- மகளிருக்கான திட்டம்
  " மகளிர் அதிர்ஷ்டக் கணக்கு "
- ஆசிரியர்களுக்கான விசேட வைப்பு மற்றும் கடன் திட்டம்
  " குருசேத "
- சுகாதார சேவையிலுள்ள தாதியருக்கான விசேட வைப்பு மற்றும் கடன்திட்டம்
  " சுவ செவன "
- தொழில் அற்றோர் சுயதொழில் தொடங்குவதற்குத் திட்டம்
  " சுயதொழில் ஊக்குவிப்பு கடன் "
- முதியோருக்கான திட்டம்
  " முதிய பிரஜைகள் யாத்திரைக் கணக்கு "
- வருடந்தோறும் சேமிப்புக் கணக்குகளுக்கு அதிர்ஷ்டலாபப் பரிசு வழங்கும் திட்டம்

இன்னும் பலப்பல திட்டங்கள்!! அனைத்தும் உங்கள் வளர்ச்சிக்கே!!
இலட்சோபஇலட்சம் மக்களின் வங்கியாகிய மக்கள் வங்கியின்
வாடிக்கையாளராகி நலம் பல பெறுவீர் !!!

மக்கள் மனமறிந்த வங்கி

**மக்கள் வங்கி**

பிரதேச தலைமை அலுவலகம்
யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூரானின் மகிமையையும் அருளையும் தமிழ்கூறும்
நல்லுலகமெல்லாம் மணம் கமழச் செய்யும்
" நல்லைக் குமரன் " மலர் போற்றுதற்குரியது.
வளர்க நல்லைக் குமரன் மலர்.

# கல்யாணி கிறீம் ஹவுஸ்

**73, கஸ்தூரியார் வீதி, — யாழ்ப்பாணம்**

★ ஐஸ்கிறீம் வகைகள்

★ புறுட்சலட் ஐஸ்கிறீம் — ஐஸ் ஜெலி

★ சொக்லட் கிறிப்ஸ் — ஸ்பெசல் ஐஸ்கிறீம்

**மற்றும்**

★ குளிர்பான வகைகள் — சிற்றுண்டி வகைகள்

*அனைத்தையும்*
*சுவைத்து மகிழ்ந்திட*
*யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்*
*விஜயம் செய்யுங்கள்*

# KALYANI CREAM HOUSE

**73, KASTHURIAR ROAD,**

**JAFFNA.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லைக் குமரன் மலர் இனிதே
ஆண்டு தோறும் முருகன் புகழ்பாட வாழ்த்துகிறோம்.

# லொயலாஸ்

**195, பிரதான வீதி, — 4ம் குறுக்குச் சந்தி, — யாழ்ப்பாணம்.**

*திருமண வைபவங்களா, பூப்புனித நீராட்டு விழாக்களா, மற்றும் உங்கள் வீட்டில் எந்தவொரு வைபவங்களாயினும் அதனை திறம்பட நடத்தித்தர உடனே நாடவும்.*

- குத்துவிளக்கு
- பிளாஸ்ரிக் கதிரை
- குஷன் கதிரை
- சொக்கட்டான் பந்தல்
- சைவமணவறை
- பீங்கான்
- ரம்ளர்
- சமையல் பாத்திரங்கள்

**இன்னும் பல உள்ளன மிகுதிக்கு நேரில் சந்திக்கவும்**

**“ எங்கள் சேவை உங்கள் தேவைக்கே ”**

---

*அடியவர் எல்லோரையும் அருள்தர நோக்கிடும்*
*அழகு முருகனுக்கு அரோகரா !*

# DCS JAFFNA

## THE PREMIER COLLEGE OF COMPUTER TECHNOLOGY

In the North
Will make you Feel
At Home
In the Computer Millennium

DIPLOMA AND CERTIFICATE COURSES
WEEKDAYS AND WEEKEND CLASSES
FOR COURSE DETAILS
CONTACT

Director (Administration)
DCS-Computer Training Section
124/2, Palaly Road,
Thirunelvely,
Jaffna.

DCS
P. O. Box 144
Jaffna.
Telephone: 021-2596
021-2604



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லைக் குமரன் அருளை உலகமெலாம் பரவும் வகை
முன்னின்று செயற்படும் " நல்லைக் குமரன் " மலருக்கும்
அதன் ஆட்சிக் குழுவுக்கும் எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

கண் வைத்தியர்களின் சிபார்சுக்கேற்ப
சிறந்த தொழில் நுட்பவியலாளரினால்
குறித்த நேரத்தில் சிறந்த முறையில்

**மூக்குக்கண்ணாடி**

**வழங்குபவர்கள்**

**தொலைத் தொடர்பு & பக்ஸ் சேவை**

உங்களின் பேரபிமானம் பெற்ற எரிக் கணேஷ்
மூக்குக் கண்ணாடியகத்தினரின் மற்றுமோர் இணைசேவைதான்

**தொலைத் தொடர்பு & பக்ஸ் சேவை**

எங்களை நாடி வருவோரின் தொலைத் தொடர்பு, பக்ஸ்
வசதிகள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

T. P. & Fax No. **2486**

**எரிக் கணேஷ்**

**இல. 566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

---

நாலரைக்கு நாதமணி கேட்கையில்
முருகா! நாமம் ஒலித்திடும் ஞானமெல்லாம்
ஈழநலம் காக்க மண்ணில் நீ இருக்கிறாய் — எங்கள்
இதயத்தின் ஓசையுள்ளே நீ உறைகிறாய்.

மலர் மலர் என்று பல வர்ண டிசைன்களில்

**அதை நாடுவது மங்கையர்**

மலர் மலர் என்று பலவித டிசைன்களில்
பட்டு, பருத்திப் புடைவைகள்,
தயார் நிலையில் பலவித புதிய ஆடைகள்

**அதை நாடுவது இளைஞர்கள் மங்கையர்**

**விஜயம் செய்து பாருங்கள்**

மொத்த, சில்லறை வியாபார ஸ்தாபனம்

**மலர் புடவையகம்**

18 (67A), பெரியகடைவீதி, — யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லைக் குமரனே ! ஞான நற்குருவோனே
நின்பதம் பணிந்திட நிறையருள் செய்யும் வேலா !!
நின்வரம் நிலைத்திட நின்றருள் செய்யும் ஐயா.

**கௌரி அழகு மாடம்**

"நல்லைக் குமரன்" மலருக்கு
எமது உளம் கனிந்த வாழ்த்துக்கள்

* அழகுசாதனப் பொருள்கள், எவர்சில்வர், பிளாஸ்ரிக்,
அலுமினியப் பாத்திரங்கள்
* நங்கையர் விரும்பும் நவநாகரிக லேஸ், தையல் நூல் வகைகள்
* பள்ளிச் சிறார்களின் பாடசாலை உபகரணங்கள், பாக் வகைகள்
* இன்னும் எத்தனையோ அத்தனையும்

மொத்தமாக நியாய விலையில் பெற்றிட

**கௌரி அழகு மாடம்**

316, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

---

பால் மணக்கும் கந்தனுக்கு அரோகரா !
அர்ச்சனை கந்தனுக்கு அரோகரா ! !
நல்லூர் முருகன் அவன் ஆறுமுகனாம்
தேரேறி அடியார் துயர் துடைப்பானாம்.
"நல்லைக் குமரன்" மலருக்கு எமது உளம் கனிந்த வாழ்த்துக்கள்

**ARCHANA JEWELLERS**
**AND MACHINE CUT CENTRE**

22 கரட்
தங்கப் பவுண் நகைகளை
நம்பிக்கையுடன் வாங்குவதற்கு
மக்கள் தேடி வரும் ஸ்தாபனம்

**அர்ச்சனா ஜுவல்லர்ஸ்**
**பட்டம் வெட்டும் நிலையம்**

உரிமை:— சி. சிவமூர்த்தி

118, கஸ்தூரியார் வீதி, — யாழ்ப்பாணம்.
176/1, நாவலர் வீதி, — யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் முருகா

முருகன் எங்கள் இறைவன் — அவன்
தமிழ் உலகை ஆளும் தலைவன்
அழகன் எழில் குமரன் — அவன் வீர
வேல் கொண்டே வினை அழிப்பவன்

**GENERAL MERCHANT**
**AND**
**TRANSPORT AGENT**

யாழ் மாநகராட்சி மன்ற
சைவ சமய விவகாரக்குழு வெளியிடும்
**" நல்லைக் குமரன் " மலர்**
சிறப்போடு தொடர்ந்து வெளிவர வேண்டுமென
உளமார வாழ்த்துகிறோம்.

தொலைபேசி இல. *021 — 2661*
*021 — 2046*

Fax வசதியும் உண்டு.

எம்மிடம் வேணிநாடு, வேணி உப்பு, வேணி உழுத்தம் பருப்பு
தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்,
கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்ட சிறந்த பொருள்கள்
இல்லத்தரசிகளுக்கு ஓர் வரப்பிரசாதம்
அத்துடன் உள்நாட்டு, வெளிநாட்டு நேரடித் தொலை பேசி
வசதிகளை உடனுக்குடன் பெற்றுத்தரும் நிறுவனம்.

கிளை நிறுவனம்:

**அப்பன் வர்த்தக நிலையம்**
256A, மருத்துவமனை வீதி,
யாழப்பாணம்.

# வேணி களஞ்சியம்

165, காங்கேசன் துறை வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரவேலை கையில் ஏந்திய பாலமுருகா !
நாடெங்கும் இன்னல் தொடுதப்பா
அலையலையாம் பக்தர் கூட்டம் முருகா
நாட்டின் இருள் ஓட்டிட வேண்டுகிறோம் வேலவா

# MENAN TRADING CO.

No. 82, 4th Cross Street, Colombo - II
No. 208, Prince Street, Colombo - II

**GENERAL MERCHANTS**
**&**
**COMMISSION AGENTS**

DEALERS IN LOCAL FOOD PRODUCTS

யாழ். மாநகராட்சி மன்ற சைவசமய
விவகாரக்குழு வெளியிடும்

*" நல்லைக் குமரன் " மலர்*

சிறப்போடு வெளிவர வேண்டுமென
உளமார வாழ்த்துகின்றோம்.

## மேனன் ரேடிங் கோ.

## M. T. C.

T. P. 324092


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் முருகனின் அருள் வேண்டி நிற்கும்

# PUNITHA JEWELLERY MART

# புனிதா நகை மாடம்

22 கரட் தங்கத்தில் உருவாக்கப்பட்ட புதிய
டிசைன் ஆபரணங்களைப் பெற்றுக்கொள்ள நாடவும்
அன்றும் இன்றும் நம்பிக்கை நாணயத்தில்
முன்னணி வகிக்கும்

## GENUINE 22CT GOLD JEWELLERY

239, Kasthuriyar Road,
Jaffna.

239, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**Branch:**
Shree Luxme Jewellers,
171/3, Sea Street,
Colombo - 11.

கிளை:
ஸ்ரீ இலக்ஷிமி யுவலர்ஸ்,
171/3, செட்டியார் வீதி,
கொழும்பு - 11.

T. P. **074-710905.** Residence: **074-510241**

---

நல்லைக் குமரா போற்றி சேவற்கொடியோனே போற்றி போற்றி
"நல்லைக் குமரன்" மலருக்கு எமது உளம் கனிந்த வாழ்த்துக்கள்

**மனங்கவர் டிசைன்களில்**

- மங்கையர்க்கான ஆடை வகைகள்
- ஆடவர்களுக்கான உயர் ரக ஆடை வகைகள்

**வண்ண வண்ண டிசைன்களில்**

- குழந்தைகளுக்கான ஆடைகள்
- பட்டுப் புடவைகள்
- சல்வார் கமீஸ் சாறி வகைகள்

இவை அனைததிற்கும்
இன்றே விஜயம் செய்யுங்கள்

# LALITHA TEX

No. 5, 6 நவீன சந்தை.
உட்புறம்,
யாழ்ப்பாணம்.

No. B3, புடவை மாளிகை,
சந்தை வீதி,
வவுனியா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீபதிசர்மா கிருஷ்ணானந்தசர்மா
விரிவுரையாளர் - சமஸ்கிருதத்துறை,
பல்கலைக்கழகம்.
யாழ்ப்பாணம்.

# திருமுறைகளில் கிரியைகள் பற்றிய சில சிந்தனைகள்

இறைவழிபாட்டின் மூலம் மக்களை ஆன்ம ஈடேற்றம் அடைவதற்கு வழிகாட்டுகின்ற சனாதன தர்மம் நமது இந்துமதம். காலந்தோறும் வேத சிவாகமங்களை முதனூலாகக் கொண்ட வைதிக மரபு திருமுறைகள் மெய்கண்ட சாஸ்திரங்கள் என்பவற்றினூடாக மேன்மையுற்று எமது ஆன்மீக வாழ்விற்கு உறுதுணை புரிந்து வந்துள்ளது.

யாம் இச்சரீரம் பெற்றது இறைவனை வணங்கி முத்தி இன்பம் பெறுதற் பொருட்டே என அறைகூவி எமது சமயத்தின் காவலனாக வாழ்ந்த நல்லை நகர் நாவலர் அவர்களும் பரமசிவன் அருளிச் செய்த வேத சிவாகமங்களை முதனூலாகக் கொண்ட திருமுறைகளிலும், சிவஞான போதம் முதலிய நூல்களிலே பேசப்பட்டது மான வைதிக சித்தாந்த சமயத்தை வளர்ப்பதற்கு பல நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

வேதாகமங்கள் பல்கிப் பெருகி இருப்பதினாலும் இவற்றைக் கற்றுத்தெளிந்து உணருவது சிரமமானதாலும் கருணைக் கடலாகிய சிவபிரான் நம்மீது கொண்ட பெருங் கருணையினால் மக்கள் ஓதி உணர்ந்து நற்கதி அடையும் பொருட்டு சமயக்குரவர்களையும் சந்தான குரவர்களையும் இப்புவியில் அவதரிக்கச் செய்து அவர்களின் வாயிலாகத் திருமுறைகளையும், மெய்கண்ட சாஸ்திரங்களையும் வேதாகம சாரமாக நமக்கு வழங்கி அருளியுள்ளார்கள். சிவபோகத்தை அடைவதற்கு உரியவழிகளாக சன்மார்க்க முறை, அன்புநெறி என இரு வழிகள் கூறப்படுகின்றன.

வேத நெறியாகிய வைதிக நெறி — சன்மார்க்க நெறி — அறிவுநெறி, சைவம் சிவநெறி -- அன்புநெறி — அருள்நெறி. அறிவு நெறியாகிய வைதிகநெறி அருள் நெறியாகிய சைவத்திற் சென்று முற்ற வேண்டும். சைவத்துறையை அடையாதவர்களுக்கு வீடு இல்லை. வேதநெறியிற் செல்லாதவர்கள் சைவத்துறையை அடையாதவர்கள் என்ற பண்டிதமணியின் கூற்றானது வைதிக சைவ நெறியின் சிறப்பினை தெளிவாகப் புலப்படுத்திக் காட்டுகின்றது. ''வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்க'' என்ற சேக்கிழாரது கூற்றும் இங்கு மனங் கொள்ளத் தக்கதாகும். சம்பந்தர் சுவாமிகள் ''வேதமொடு சைவ நெறி விளங்க வந்த கவுணியர்'' எனச் சிறப்பிக்கப் படுகின்றார். அவர் இறைவனை ''அன்பு நெறி பெருகுவித்த ஆண்டகையார்'' எனப் போற்றுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விதம் அமைந்த நமது சமய வாழ்க்கையிலே வேள்வி, யாகம், தபம், தீர்த்தம், தோத்திரம், தியானம், விரதம், பூஜை, ஆராதனை என கிரியை மரபுகள் பலவாறு விரிந்து காணப்படுகின்றன. கிரியைகள் யாவற்றிற்கும் பக்தி அடிப் படையாக அமைகின்றது.

கிரியை மரபினை நோக்கும்போது வேதங்களிலே தேவர்களைக்கூவி விளித்து அழைக்கும் செயலே ஒரு கிரியையாக அமைகின்றது.

''அம்மையே அப்பா ஒப்பிலா மணியே''

''பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா'' என இவ்விதமாக இறை வனை விளித்தழைக்கின்ற மரபு திரு முறைகளிலும் பலவாறு காணப்படுவதனை நாம் நோக்கலாம்.

வேத காலத்தில் வேட்பவன் ''நான் உனக்கு நெய், பால், தேன் என்பனவற்றை ஆவியாகச் சொரிகின்றேன். நீ எனக்கு நீண்ட ஆயுளையும் வீரர்களான புத்திரர் களையும் பசு முதலிய செல்வங்களையும் தா'' என வேண்டுகிறான். கிரியைகள் பலன்களை அவாவிச் செய்யப்படும் நிலை யினை—அதாவது வேண்டிய விருப்பத்தை அடைவதற்கான - காமிகக் கிரியைகளைச் செய்யும் நிலையினை இது சுட்டுகின்றது. கிரியைகள் பற்றி விளக்குகின்ற ஆகமங் களும் துணை நூல்களும் கிரியைகளினால் ஏற்படும் பலன்களையும் விரிவாகச் செப்பு கின்றன. இவற்றை நோக்கும்போது மக்களின் வழிவழிதொன்றுதொட்டு நிலவி வந்த சிந்தனைகள் இன்றும் வளர்ச்சி பெற்று நிலைத்து உள்ளதை நாம் உணர முடிகின்றது. இறைவன் வேண்டுவார் வேண்டுவதை அருளுபவன் இதனையே ''சஏவ பகவானீசக ஸர்வா பீஷ்டப்ர தாஸ்யதி'' என மறைகளும் ''வேண்டுவார் வேண்டுவதை ஈவான் கண்டாய்'' என திருமுறைகளும் கூறுகின்றன.

தெய்வம் ஒன்றிற்கு பல பெயரிட்டு வழிபடும்முறை யசுர் வேதத்திலேயே காணப்படுகின்றன. சைவத்தின் தாரக மந்திரமான ''ஓம் நமசிவாய'' என்பது யசுர் வேதத்தில் காணப்படும் சதருத் திரியம் என்ற பகுதியிலே காணப்படு கின்றது.

ஒரு நாமம் ஒருருவம் இல்லாத பரம் பொருளுக்கு ஆயிரம் திருநாமம் செப்பி வழிபடும் இம்மரபு. இதிஹாஸ புராணங் களிலே சிறந்து கிரியைகளில் மேலும் வளர்ச்சி பெற்றுள்ளது.

''அந்தமில் குணத்தவர்கள் அர்ச்சனை கள் செய்யவமர்கின்றவர்''

''நீற்றினை நிறையப்பூசி நித்தமா யிரம் பூக்கொண்டு தேவர்கள் லட்ஷ நாமங் கள் கூறி அர்ச்சனை செய்து தொழுவர்'' என இவ்வாறாக திருமுறைகளிலும் பல வாறு கூறப்பட்டுள்ளவற்றையும் நாம் அறிய முடிகிறது.

சிவனை ''மேதபதிம்'' ''ஆவோ ராஜானமத்வரஸ்யருத்ரம்'' என யாகாதி பதியாக வேதங்கள் கூறுகின்றன. இவ்வி தம் யாகத்தின் மூலம் அக்கினி மூட்டி அவி சொரிந்து வணங்குவதனை.

''கேள்வியர் நாடொறு மோது நல் வேதத்தர் கேடிலா வேள்வி
செயந்தணர்''

''மண்ணிற் பெருவேள்வி வளர் தீப் புகை நாளும்''

''மறைவேள்வி பயின்றார் பாவத்தை
விடுத்தார்''

''அந்தியோடு தய மந்தணாளரா
னெய்யால் வேட்டும்''

என இவ்விதம் பலவாறாக திருமுறை சிறப்பித்துக் கூறுகின்றன.

அடுத்து இறைவனுக்குரிய மந்திரங்களை உரிய முறைப்படி ஜபம் செய்து வழிபாடு செய்தலாகும். மந்திரம் என்பது நினைப்பவனைக் காப்பது எனப் பொருள் படும். திருமுறைகளும் ஓம் என்னும் பிரணவப் பொருளினுள்ளே அடங்குகின்றன. ஓம் என்னும் இந்த மஹா மந்திரம் சப்த கோடி மஹா மந்திரங்களிற்குள்ளேயும் சிறந்தது. எல்லாச் சமய நெறிகளுக்கும் ஆதாரமானது, முதன்மையானது. இருக்கு மந்திரம் கொண்டும் மறைபாடியும், ''வேதத்தின் எண் பொருள்களால் வேதியர்கள் போற்றிப் பணிவார்கள்'' ''கீதத் திசையோடும் கேள்விக் கிடையோடும்'' என மந்திரங்கள் மூலம் வழிபாடியற்று கின்றமை பற்றியும் திருமுறைகள் பலவாறு கூறுகின்றன.

திருமுறைகள் நிறைந்த மந்திரசக்தி வாய்ந்தவை ''கண்ட பெரு மந்திரமே மூவர் பாடல்'' என உமாபதி சிவாச்சாரியார் மூவர் பாடல்களையும் விளித்துக் கூறுகின்றார். மந்திரங்களுட் சிறந்த காயத்ரீ மந்திரத்திற்கு ஒப்பாக ''ஓயாதே உள்குவார் உள் இருக்கும் உள்ளானை'' ......எனும் பாடலை அருளாளர்கள் குறிப்பிட்டுக் கூறுவதனையும் நாம் அறியலாம்.

மேலும் இறைவழிபாட்டிற்குரிய பஞ்சோப சாரங்கள் பற்றியும் திருமுறைகளில்

நறைமலிதருமளறொடு முகை
நகுமலர் புகை மிகு வளரொளி
நிறை புனல் கொடுதனை நினைவொடு
நியதமும் வழிபடுமடியவர்.
தீபமாலை தூபமுஞ் செறிந்த கையராகி
பெரும் புனல் காலை மூழ்கிப் பித்தர்க்
குப் பத்தராகி
அரும் பொடுமலர்கள் கொண்டங்கார்
வத்தை உள்ளேவைத்து
விரும்பி நல்விளக்குத்தூபம் விதியினா
லிடவல்லார்க்கு ...... தூய காவிரி
யினன்னீர்
கொண்டிருக் கோதியாட்டி குங்குமக்
குழம்பு சாத்தி

இவ்வாறு இறைவனுக்குரிய உபசாரங்களை உளளன்புடன் பக்தியோடு சமர்ப்பித்து வழிபடும் முறைகள் பற்றி தெளிவாகக் கூறப்பட்டுள்ளதைக் காணலாம். மேலும் கிரியைமுறையிலுள்ள பஞ்சகவ்ய திரவியங்கள் பற்றியும் ''தேனெய்பாறயிர் தெங்கிளநீர் கரும்பின் தெளிபானஞ் சாறு முடியார்'' ''பானெய் சேரானாஞ்சுமாடி கண்டாய்'' என கூறப்பட்டுள்ளவற்றையும் காணலாம்.

இப்புவியிலே மனிதப்பிறவி எடுத்தவர்கள் பெறும்பயன் அன்புடனே சிவனடியார்களைத் தொழுதலும், திருவமுது செய்வித்தலும், சைவாகமவிதிப்படி செய்யப்படுகின்ற சிவபிரானுடைய திருவிழாக்களைத் தரிசித்தலுமேயாகும் என்ற உண்மையைப் புலப்படுத்தி இறைவனுக்குரிய விழாக்களையும் விரதங்களையும் கூறி, கும்பாபிஷேகம் முதலிய நைமித்திகக் கிரியைகளைப் பற்றியும் திருமுறைகளில் பலவாறு கூறப்பட்டுள்ளதையும் காணலாம்

''அடலானேறூரு மடிகளடிபரவி
நடமாடல் காணாதே''

''ஐப்பசி ஓண விழாவுமருந்தவர்கள்
துய்ப்பனவுங்''

''தளத்தேந்தின முலையாள் தையலார் கொண்டாடும் விளக்கீடும்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் ஆதிரை நாள், தைப்பூசநாள் மாசிக்கடலாடு நாள் போன்ற விழாக்களும்

''கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச்சர மமர்ந்தான்

பெருஞ்சாந்தி காணாதே......என பெருஞ் சாந்தியாகிய கும்பாபிஷேக விழாக்கள் பற்றியும் கூறப்பட்டுள்ளதையும் காண லாம்.

மேலும் வேட்டலின்போது யாவற் றையும் அர்ப்பணிக்கும் நிலை தெய்வீக பக்குவ நிலையை ஏற்படுத்துகின்றது. இத்தன்மை ''அன்றே எந்தன் ஆவியும் உடலும் உடமை எல்லாமும் குன்றே அணையாய்என்னை ஆட்கொண்டபோதே கொண்டிலையோ என திருமுறைகளில் கூறப்படுவது அர்ப்பணிப்புத் தன்மையை யும் சரணாகதி பக்தி நிலையையும் புலப் படுத்துகின்றன.

புராணங்களில் கூறப்பட்ட சிவனு டைய அட்டமூர்த்தங்கள் பற்றியவரலா றுகள் விழாக்களாகவும் விரதங்களாகவும் இன்றுவரை கடைப்பிடிக்கப்பட்டு வருகின் றதை நாம் காண்கிறோம். இவை பற்றிய விடயங்களும் பலவாறு திருமுறைகளில் கூறப்பட்டுள்ளதையும் நாம் காணலாம்.

தமிழாகமம் எனச் சிறப்பித்துச் கூறப் படும் திருமந்திரம் ''எய்திய சீர் ஆகமத் தில் இயம்பிய பூசனைக் கேற்ப'' வடமொ ழியிலுள்ள ஆகமப் பொருளைத் தரவே திருமூலர் தோன்றியதாகச் சேக்கிழார் கூறுகிறார். தண்ணிலார் சடையார் தாம் தந்த ஆகமப் பொருளை மண்ணின் மிசைத்திருமூலர் திருவாக்கால் தமிழ் வகுப்ப வந்த இந்நூல் வேதாகமங்களைக் கொண்டெழுந்த வைதிக சைவ முதன் னூலாகும்.

வேதத்தைப் பசுவாகவும் திருமுறை களை நெய்யாகவும் கூறி வேதத்தின் பயனைச் சைவமாகிய திருமுறைகளிலும், மெய்கண்ட சாஸ்திரங்களினாலும் பெறப் படலாம் என்பதனை ''வேதம் பசுவதன் பால் மெய்யாகமம் நால்வர் ஓதும் தமிழ தனினுள்ளுறு நெய்'' என உமாபதி சிவாச் சாரியார் குறிப்பிடுகிறார்.

திருமுறைகளிலே கிரியை முறைகள் பற்றி விரித்து கூறப்பட்டவிடயங்களை நோக்கும் போது வேத சிவாகமங்களின் வழி வந்த கிரியை முறைகளினுடைய சிறப்பினையும் வளர்ச்சியினையும் உய்த் துணர முடிகின்றது. இத்தகைய சிறப்புக் களைக் கொண்ட திருமுறைகளை சொல் லியபாட்டின் பொருள் உணர்ந்து சொல் வார் - செல்வர் சிவபுரம் என்ற கூற்றினை உணர்ந்து பொருள் அறிந்து உரியமுறைப் படி ஓதி மனத்தின் கண் மாசிலனாகி தூய்மை, அவாவின்மை, அன்பு முதலிய நற்குணங்களுடன் எங்கும் நிறைந்த ஆண் டவனை - உயிர்களிடத்து ஜீவலிங்கமாக இருக்கின்ற பரம் பொருளை, உணர்ந்து மக்களிடையே அவனைக் கண்டு நெக்குரு கித் தொண்டு செய்யும் சமயவாழ்வு வாழ்ந்து கிரியைகளின் பொருளுணர்ந்து ஞான வழியைப் பற்றி இகபர சுகங்களை அடைந்து ''யாம் இச்சரீரம் பெற்றது இறைவனை வணங்கி முத்தி இன்பம் பெறும் பொருட்டேயாம்'' என்பதற் கிணங்க நற்கதியை அடைவதற்கு முயல் வோமாக.

## உசாத்துணை நூல்கள்


1. பேராசிரியர் கா. கைலாஸநாதக்குருக்கள் — வடமொழி இலக்கியவரலாறு
2. ஸ்ரீ. காசிவாசி செந்திநாதையர் — தேவாரம் வேதசாரம்-சைவ வித்தியானுபாலன யந்திரசாலை சென்னை.
3. சுவாமி சித்பவானந்தர் — திருவாசகம் விளக்கவுரை ஸ்ரீராம கிருஷ்ணத போவனம்
4. பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணன் — சைவசமய மரபில் ஆகமங்கள், பண்டிதமணி நினைவுப்பேருரை 1995.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகஜோதி,
கா. கணேசதாசன் (ச. நீ.)
ஓய்வுபெற்ற அதிபர்.

# பேதமில்லா இனிய நெறியே சைவம்

''புயற்காற்று அடிக்கும் போது அரச மரம் இன்னது ஆலமரம் இன்னது என்று வித்தியாசம் கண்டுபிடிக்க முடியாது. அது போல பக்தி என்னும் புயற்காற்று ஒருவனுக்குள் அடிக்கும் போது அவனிடம் ஜாதி, பேதம் இருக்க முடியாது'' என்று பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர் உபதேசித்துள்ளார்.

ஜாதி, சமய, இன, நிற பேதங்கள் எதுவும் தோன்றாது. எல்லாமே இறைவனின் படைப்புக்களே என்ற எண்ணம் மேலோங்கும் போது வேற்றுமை, வெறுப்பு, பகைமை என்ற தீய எண்ணங்கள் தூர விலகிவிடும். அவன் என்னவன், அவன் அந்நியன் என்ற எண்ணம் இல்லாத தெய்வீக உணர்வு மேலோங்கி நிற்கும். அன்பு என்னும் உயர்பண்பால் உலகத்தை நேசிக்கும் மாண்பு மிகுந்துவிடும். சைவசமயத்தின் அடிப்படைத்தத்துவமே அதுதான்.

உலகம் ஓர் குடும்பம், இறைவன் எமது தந்தை. நாம் எல்லோரும் சகோதரர்கள் என்ற மனப்பான்மையுடன் வாழ வேண்டும் என்று தான் எமது சமயத்தில் தோன்றிய அவதார மூர்த்திகளும், ஞானிகளும், சித்தர்களும், யோகிகளும் கூறியுள்ளனர். ஆண்டவன் படைப்பில் அனைவரும் சமம். ஆண்டவன் படைத்த உலகம் புனிதத்தன்மை உடையதாகவே இருக்கின்றது. நாம் ஒருவர் மேல் ஒருவர் அழுக்காறு கொண்டு வேற்றுமை காட்டி வாழ்வதாலல்லவோ ஆண்டவனின் புனித உலகை நிம்மதியில்லாத வஞ்சக உலகம் என்று தூற்றும்படி செய்து விட்டோம்.

ஆலயங்களில் இடைவிடாது பூஜை, ஆராதனைகள், திருவிழாக்கள் நடக்கத்தான் செய்கின்றன. பல கோடிக்கணக்கான மக்கள் தவறாது ஆலயம் சென்று வழிபடுகின்றனர். எல்லா இல்லங்களிலும் தங்கள் இஷ்ட தெய்வங்களின் படங்களை வைத்து விளக்கேற்றி காலையும், மாலையும் இறைவனை வணங்கத் தவறுவதில்லை. ஆனால் இறைவனது படைப்பில் துயருறுவோரின் துன்பத்தை பகிர்ந்து கொள்ளுவோரும், கஷ்டப்பட்டு கவலைப்படும் சகோதரர்களைப் பற்றி கவலைப்படுவோரும் மிகவும் குறைவாகும். எல்லா உயிர்களிலும் இறைவன் இருக்கிறான் என்பதை உணர்ந்து தொண்டு செய்வதால் இறைவனை அடையலாமேயன்றி ஆலயவழிபாட்டால் மட்டும் அடையமுடியாது

ஏழைகளிடமும், எளியோரிடமும், எல்லோரிடமும் இறைவனுக்கு எவ்வளவு அன்புள்ளதென்பதை தேசபக்த ஞானியான சுவாமி விவேகானந்தரின் கீழ்க்கண்ட வேத வாக்கியங்களைக் கொண்டு ஊகித்துப் பார்ப்போமாக

..ஓர் ஏழையின் ஜாதியையோ கொள்கையையோ இனத்தையோவேறு, எதையுமோ நினையாமல் அவனிடத்தில் சிவனைக்கண்டு பணிபுரிந்து வாருங்கள். அப்படி பணிபுரிபவனிடத்தில் சிவபிரான் கொள்ளும் மகிழ்ச்சியை. தனது பிம்பத்தை கோயிலில் வழிபடுகிறவனிடமும் கொள்வதில்லை.''

எவன் ஏழைகளுக்காக கண்ணீர் வடிக்கின்றானோ அவனை நான் மகான் என்பேன்.

சண்டாளன், கல்வியறிவற்றவன்
தாழ்த்தப்பட்டவன், மூடன் எல்லோரும்
உன் உடன் பிறந்தவர்கள்
அவன் உன் இரத்தக்கலப்புள்ளவன்
என்பதை மறவாதே.

— சுவாமி விவேகானந்தர்

''எமது முழுமுதற் கடவுள் செம்பொருளாகிய சிவம்,, அன்பே வடிவானது. சிவசம்பந்தமான எமது சமயமும் அன்பே வடிவமானது. அன்பே சிவம் என்கின்றது திருமூலத் திருமுறை, எமது சமயம் வெறும் சாத்திரமன்று. அது அனுபவக் களஞ்சியம். சமூகத்தோடு ஒன்றி ஊறித் திளைத்தது. சமூகத்திற்கு இனியது, ஏற்றது. சமூகத்துடன் இணைபிரியாதது. பேதமில்லா சமூக சமத்துவம் நல்கும் இனிய நெறியே சைவம், இதனை நமது மக்கள் நன்கு உணர வேண்டும், சிவமும் சக்தியும் போன்றன சைவமும் சமூகமும், இரண்டும் பிரிக்கமுடியாதவை. ஏற்றத்தாழ்வுடைய சமூகம் செம்மையான சமூகமன்று சிவ சமூகமன்று. தாழ்வு மனப்பான்மை சைவத்தில் இருத்தல் தகாது. சைவ சமூகத்திலும் இருத்தல் தகாது. ஏற்றத் தாழ்வும் தாழ்வுமனப்பான்மையுமுள்ள சமூகம் செம்மையான சமூகமன்று, அதைச் சைவசமூகமென்று சொல்லல் ஆகாது. அங்கே சைவம் இராது.

இவ்வாறு புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் எழுதியுள்ளார்.

ஆகவே வாழ்வில் ஆணவச் செருக்கற்றது சைவம். வறுமையிலே செம்மை பெற்றது சைவம். இம்மைக்கும் மறுமைக்கும் வழிவகுப்பது சைவம். ஒக்காரும் மிக்காரும் தாழ்ந்தோரும் யாவரும் ஒன்றுபட்டு இவ்வுலகில் வாழும் படி சைவம் எமக்கு கூறுகின்றது.

அன்பு வடிவான சிவம், ஆன்மாக்களாகிய நம்மை அன்பு வடிவமாகப் படைத்திருக்கிறார்.

''அன்பென்று கொட்டு முரசே மக்கள் அத்தனை பேரும் சமமாம்'' என்ற மக்கள் கவி பாரதியின் வாக்கிற்கமைய அன்பு செய்து வாழப்படைத்திருக்கிறார். நாம் நம்மீது அன்பு செலுத்தினால் இவ்வுலகம் அழகு பெறும். சமூகம் தழைத்தால் சைவம் செழிக்கும். சைவம் செழித்தால் மனிதவாழ்வு மலர்ச்சியடையும் இவ்வுலகமே நமக்குச் சிவலோகமாகிவிடும்.

ஆண்டவன் படைப்பில் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற பாகுபாடு மற்ற மதங்களை விட இந்து மதத்திலேயே அதிகமாக இருந்து வருகிறது. இன்றைய காலத்தில் சைவம் ஒரு புறம் சைவர்களின் வாழ்வு மறுபுறம். நாமமது சைவரெனக் கொண்டிங்கு வாழ்கின்றோம். எமது சமயக் கோட்பாடு ஒன்று வாழ்க்கை நடைமுறையில் வேறொன்றாய் வாழ்கின்றோம், எமது சமயம் ''அன்பே வடிவானது'' ''அன்பே சிவம்'' என்று பெருமை பேசிக் கொள்கின்றோம். உண்மையை உணர்ந்தோமேயானால் நாம் வெட்கப்பட்டு தலை குனிய வேண்டி வரும். மனிதன் மேல் மனிதன் அன்பு காட்டி சாதி பேதமின்றி உயர்வு தாழ்வு இன்றி மன நிறைவு பெற்ற அன்பு வடிவான சைவசமூகத்தை



★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் கட்டியமைக்க வேண்டும். இன்றேல் எமது சைவமதம் நாளுக்கு நாள் தேய்ந்து கொண்டு போய் விடும். சிவனது சாபமும் எமக்குக் கிடைக்கலாம்.

நமது மூதாதையர்கள், நமது நால்வர்கள் காட்டிய பாதையை நாம் திரும்பிப்பார்க்க வேண்டும். பேதமில்லா இனிய சைவநெறியைக் காணலாம்.
உதாரணமாக

**"சங்கநிதி பதுமநிதியிரண்டுந் தந்து**
**தரணியொடு வானாளத்தருவரேனும்**
**மங்குவாரவர் செல்வமதிப்போமல்லோம்**
**மாதேவர்க்கே காந்தரல்லராகில்**
**அங்கமெல்லாங் குறைந்தழகு தொழு நோயராய்**
**ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்**
**கங்கைவார் சடைக்கரத்தார்க் கன்பராகில்**
**அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே**

என்ற திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச் செய்த தேவாரத்தில் அவர் சிவனடியார்களிடம் பேதமில்லை, உயர்வு தாழ்வு என்ற வேற்றுமை இல்லை. சிவனடியார்கள் யாராக இருந்தாலும் அவர்களை சிவனென நினைத்து வணங்க வேண்டும் என்ற கோட்பாட்டை எமக்கு விளக்கியுள்ளார்.

மேலும் நாம் மறுமலர்ச்சியடைய வேண்டுமெனில் பெரிய புராணத்தை அகக்கண் நோக்குவோம். இதற்கு ஒரு உதாரணம் மாத்திரம்.

**"அன்பினால் உருகி இனிய காளத்தி**
**அப்பருக்கு ஊனமுதூட்ட**
**வெம்பியே வேடர் கண்ணப்பர் அழுவார்**
**விம்மியே சைவகோ சரியார்**
**என்போடு வெந்த தசைதிரு முன்னர்**
**ஏற்குமோ வெனக் கசிந் தழுவார்**
**எம்பெருமான் இவ்விருவர்க்கும் சமமாய்**
**இன்னருள் சுரந்து வீற்றிருந்தார்"**

வேட்டைத் தொழில் புரிந்த வேடனின் அன்பும் ஆலயப் பூசை செய்த வேதியனின் அன்பும் இறைவன் சந்நிதியில் சமமே. இருவரும் சைவமதத்தினரே. இருவரும் இறைவனுக்கு இனியவர்களே. இதுவே சைவம் கூறும் தத்துவம். இத் தத்துவத்தை சைவத்தின் செம்மையினை அதன் சமத்துவ வாழ்வை கடைப்பிடித்து வாழ்வாங்கு வாழ வேண்டும். பெரிய புராணம் காட்டும் பாதையில் சென்று பேரின்பப் பெருவாழ்வைப் பெறுவோமாகுக.

நல்லவர் என்பதற்காக அன்பு செய்வது வெறும் வியாபாரமாகும். உண்மையான அன்பு தியாகம் செய்யும். பலன் தேடாது உலகத்தில் அன்பை விட அதிக பலம் வாய்ந்ததும் கிடையாது. அதிக பணிவுடையதும் கிடையாது. அன்பே சிவம்.

**"மேன்மை கொள் சைவநீதி**
**விளங்குக உலக மெல்லாம்"**

உ

## நல்லைக் குமரனே

முல்லை மணம் முகிலாய்ப் பரவ
கொல்லைக் குறத்திதனை யணைத்து
சொல்லை நான் தொலைத்து நிற்க
நல்லைக் குமரா — நீ வீதியுலா வருவாய்!

— இராம ஜெயபாலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— மதிவாணர் செ. மதுசூதனன்

# மேன்மை கொள் சைவ நீதி

கடவுளால் ஞானியர் மூலம் வெளிப் படுத்தப்பட்ட ஆப்த வாக்கியங்களின் தொகுப்பே வேதங்கள். எல்லா மதங்க ளும் நல்லவையே· மதங்களை உருவாக்கி யவர்களின் நோக்கம் நல்லதாகவே அமைந் திருந்தது. சமுதாயம் சிறப்புற்றோங்க வேண்டும். ஆன்ம ஈடேற்றம் பெறவேண் டும் என்ற சீரிய கருத்திலேயே அவை அமைந்திருந்தன. அவரவர்களின் கால தேச வர்த்தமான அடிப்படைகளுக்கிணங் கவே கொள்கைகள் வகுக்கப்பட்டன.

மரக்கறியுணவுகள் தாராளமாகக் கிடைக் கக் கூடியதான இடங்களிலே வாழ்ந்த மக்கள், புலாலுணவைப் பெரிதும் புறக் கணித்து ஒதுக்கித் தங்கள் மத நெறிகளை உருவாக்கினர். இவற்றுட் சைவம் முக்கிய இடம் பெறுகின்றது. சைவ உணவு என் றாலே தாவர உணவுகளையே குறிப்பிடு கின்றன. புலாலுணவையுண்டு வாழ்ந்து வந்த பாலைவனம் போன்ற இடங்களில் தோன்றிய மதங்களில், புலாலுணவை ஒதுக்கி வாழ வழிகாட்டுவது இயலாததா யிற்று.

மறை பொருளாகிய கடவுளையும், ஆன்மீக வாழ்க்கையையும் விளக்குவதற்கு அறிஞர்கள் தோன்றினார்கள். அவர்கள் தங்கள் ஞானத் தெளிவிலே கண்ட உண் மைகளைப் போதித்துச் சமூக வாழ்க்கை சீர் பெற உழைத்தார்கள். அந்த வகை யிலே சைவப் பண்பாட்டிலே வாழ்ந்த மக்கள் கடைப்பிடித்த சீரிய நெறியே ''சைவம்'' என்றாயிற்று. இச்சைவம் ஆண்' பெண் உருவம் கலந்த வடிவின னான பெண்ணுருவப் பாதியன், பிறவா யாக்கைப் பெரியோன். ஐம்பூதங்கள் இரு சுடரோடு (சூரியன் + சந்திரன்) இயமா னன் என்னும் எட்டுவகையும். உயிரும் யாக்கையும் கட்டி நிற்போனும், கலை யுருவினனும், படைத்து விளையாடும் பண்பினோனும், துடைத்துத் துயர் தீர் தோற்றத் தோனும், தன்னில் வேறு, தானொன்றிலேனும் அன்னோன் இறை வன் என்றும், படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில் புரியும் அவனே சிவன் என் றும் கடவுளை உருவகப்படுத்தி வழிபட வைத்தது.

இதனை

**"இருநிலனாய், தீயாகி, நீருமாகி,**
**இயமானனாய் எறியும் காற்றுமாகி,**
**அருநிலைய திங்களாய், ஞாயிறாகி**
**ஆகாயமாயட்ட மூர்த்தியாகிப்**
**பெருநலமும், குற்றமும், பெண்ணும் ஆணும்**
**பிறர் உருவும், தம்முருவும் தாமேயாகி**
**நெருநிலையாய், இன்றாகி, நாளையாகி,**
**நிமிர் புன்சடையடிகள் நின்றவாறே"**

என்று அப்பர் பெருமான் பாடியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லறவாழ்வையே மேம்படுத்து கிறது சைவநெறி. அகிம்சை நெறியை உன்னதமாகக் கொண்டுள்ள சமணம், பௌத்தம் போன்றவை துறவறவாழ் வையே பெரிதும் போற்றுகின்றன. அவை கடவுள். ஆன்மாவென்ற கொள்கைகளில் மாறுபாடடைகின்றன. சிவனென்ற பெய ரிலுள்ள தெய்வவடிவத்தை தொழுவது தான் சைவம் என்பதல்ல. அன்பு, அகிம்சை நேர்மை, நல்லொழுக்கம், சாத்வீக குணங் களை வளர்க்கும் தாவர உணவு வகை களை உண்ணுதல், தூய்மையானமுறையில் வாழ்தல் ஆகிய வழிகளைக் கைக்கொள்ள உருவாக்கப்பட்டதே சைவநெறி.

அதற்காகச் சைவமே மெய்நெறி, உண்மையான சமயம் என்று வற்புறுத்த வில்லை. சைவம் மற்றைய மதங்களை அகச்சமயம், புறச்சமயம், புறப்புறச்சமயம் என்று வகுக்கின்றதே யொழியப் புறக்க ணித்து ஒதுக்கவில்லை. இதற்குத்

**''தத்தஞ் சமயத் தகுதி நில்லாதாரை**
**அத்தன் சிவன் சொன்ன ஆகம**
**நூல்நெறி**
**எத்தண்டமும் செய்யும், அம்மையில்**
**இம்மைக்கே**
**மெய்த்தண்டம் செய்வதல் வேந்தன்**
**கடனே''**

என்ற திருமூலர் வாக்கு நல்ல சான் றாகும், அத்துடன் ''ஒன்றது பேரூர் வழியாறதற்குள'' என்றும் சொன்னார். எல்லாமதங்களிலுமுள்ள நல்ல கொள்கை களையெல்லாம் உள்வாங்கித் தன்னுள் ஏற்றுக் கொள்ளும் தன்மை சைவத்தி லுண்டு. இதனை;

(அ) மனமது நினைய வாக்கு வழுத்த மந்திரங்கள் சொல்ல இனமலர் கொண்டங் கிச்சித்த தெய்வம் போற்றிச்சின முதல கற்றி வாழுஞ் செயலறமானால் யார்க்கும் முனமொரு தெய்வமெங்குஞ் செயற்கு முன்னிலையா மன்றே''

என்றும்;

(ஆ) ''யாதொரு தெய்வங் கொண் டீர், அத்தெய்வமாகி யாங்கே மாதொரு பாகனார் தாம் வருவர்''

என்றும் சிவஞான சித்தியாரில் சிறப் பித்துச் சொல்லப்படுகின்றது.

''இல்லறமல்லது நல்லறமன்று'' என் பதற்கிணங்க வாழ்ந்து, ஜீவகாருண்யம். சமரசநோக்கம் ஆகியவற்றைக் கடைப் பிடிப்பதனால், இது ''மேன்மை கொள் சைவநீதி'' என்று கூறவைக்கின்றது.

## கந்தனே காட்சி தாராயோ

சிங்கார வேலவனே! சிவசங்கரன் மைந்தனே!
சிறந்த நல் வாழ்வு தந்து எனை ரட்சிப்பாய்!
மங்காமல் என் வாழ்வு மாட்சிமை பெற்றிடவே
மாயோன் மருகனே! மயிலேறி வருவாய்!
ஓங்கார ரூபனே! ஒருமுறை காட்சி தாராயோ?
ஓலமிட்டலறினேன் ஓடோடி வருவாய் நீ
பொங்காத நாளில்லை! போற்றாத நாவில்லை!!
பொலிவோடு வருவாய் வினை நலிவுற்றிடவே!

— சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி விக்னேஸ்வரி சிவசம்பு
விரிவுரையாளர்,
இந்து நாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

# முருகவழிபாடும் அருணகிரிநாதரும்

முருகவழிபாடு மிகவும் தொன்மை யானது மைவரை உலகமாகிய குறிஞ்சி நிலத்திலே சேயோனாகிய முருகனைப் பண்டைத் தமிழர்கள் வழிபட்டு வந்தனர். முருகன் பழையோன் என்னும் கொற்ற வையின் மகன். முருகனுக்கு சேவல், ஆட்டுக்கடா, மற்றும் குருதிகலந்த வெள் ளரிசி முதலிய பலிப் பொள்ருகளைப் படைப்பதும் அக்கால மக்களது வழக்க மாக இருந்தது. அவன் இடையறாது அலை எழுப்பும் செந்திற் பதியிலே அமர்ந் தருளுவதாகப் பழந்தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. அழகு, இளமை, வீரம் முதலாகிய இயல்புகள் நிரம்பிய முருகனை வீரமறவரான அரசர்களுக்கு உவமை கூறுவதும் தமிழ்ப் புலவர்களது வழக்கமாக இருந்து வந்தது.

திருஞானசம்பந்தர் சிவபெருமானின் மாட்சிமைகளை உரைக்கும்போது ''பெற் றும் உகந்தது கந்தனையே'' எனப் போற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இத் தகைய சிறப்புமிக்க முருகனின் வரலாற் றினைப் பின் வந்த கச்சியப்பரும் வட மொழி ஸ்கந்தபுராணத்திலிருந்து தமிழாக் கிக் கந்தபுராணம் எனும் பெரு நூலாக ஆக்கியளித்துள்ளார்.

ஈழத்திலும் முருக வழிபாடு மிகவும் பழமை வாய்ந்த ஒன்றாகக்கொள்ளப்பட்டு வந்திருக்கின்றது. இங்கு, கி. மு. 2 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த 'துட்டகாமினி' என்ற சிங்களப் பேரரசன் கதிர்காமத் திருத்தலத்திற்குச் சென்று முருகனை வழி பட்டதாக ''கந்தஉபத'' எனும் சிங்கள நூல் கூறுகின்றது. அவனது காலந் தொடக்கம் சிங்கள அரசர் பலரும் முருக னைத் தமது குல தெய்வமாகப் போற்றி வந்துள்ளனர். இவ்வகையில் கிழக்கு மாகா ணத்திலே மாமண்டூர், திருக்கோயில், ஆகிய திருப்பதிகளும் யாழ்ப்பாணத்தில் மாவிட்டபுரம், நல்லூர், செல்வச்சந்நிதி ஆகிய திருத்தலங்களும் முருக வழிபாட் டின் பழமைக்குத் தக்க சான்றுகளாகும். மேலும் 13 ஆம் நூற்றாண்டிலே கதிரை மலைப்பள்ளு இயற்றப்பட்டது. இதன் ஆசிரியர் யார் என்பது தெரியவில்லை. இவ்வாறு மிகப் பழமையும் செழிப்பும் நிறைந்த முருக வணக்கத்தின் பின்னணி யிலே தோன்றியவர் அருணகிரிநாதர். இவர், வடமொழி, தென்மொழி அறிவு, சமயதத்துவ ஞானம், இசைப்புலமை, கவித்துவ ஆற்றல். உள்ளுணர்வு, மற்றும் முருகனின் திருவருள் கைவரப் பெற்ற நிறைவு ஆகிய பல்வேறு சிறப்புக்களும் ஒருங்கு சேரப் பெற்றுச் சொல்வல்லவராய் வளர்ந்து, முதிர்ந்து கனிந்த அப்பெருந் தகை ஈடிணையற்ற பக்திப் பனுவல் களை அருளிச் செய்துள்ளார். இவ்வகை

யிலே அருணகிரிநாதர் முருகப்பெருமானது பக்தியிலே தோய்ந்தவராய் திருப்புகழ், திருவகுப்பு, கந்தரந்தாதி, கந்தரனுபூதி, கந்தரலங்காரம், வேல்விருத்தம், மயில் விருத்தம், சேவல்விருத்தம் போன்ற நூல்களை ஆக்கியுள்ளார்.

முருகப்பெருமான் ஒருவரையே பாடிய பரமவிரத நிலையை உலகுக்கு உணர்த்தியவர் அருணகிரிநாதர். இவர் பதினைந்தாம் நூற்றாண்டில் அருணயம்பதியில் அவதரித்தவர். முருகனின் கருணை முழுவதும் பெற்ற சிறப்பு மிக்கவர், இவ்வகையில் இவரது பக்தி அளவிடற்கரியது. இக்கருத்தினைப் பின்வரும் பாடல் விளக்கி நிற்கின்றது.

**வாக்கிற் கருணகிரி வாதவூரர் கனிவில்
தாக்கீற்றிரு ஞானசம்பந்தர் - நோக்கிற்கு
நக்கீர தேவர் நயத்துக்குச் சுந்தரனார்
சொற்குறுதிக் கப்பரெனச் சொல்"**

முருகக்ப் பெருமானுடைய திருவருள் பெற்றோர் பலர் அவர்ளது வரிசையிலே நக்கீரர், சிகண்டிமுனிவர், பொய்யாமொழி, சிதம்பரசுவாமிகள், குமரகுருபரர், ஔவையார் ஞானவரோதயர் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள் மேலும், செவ்வேள் பரமனுடைய செங்கனிவாயால் பிரணவ ஞான உபதேசம் பெற்றவர்களாக மூவர் கொள்ளப் படுகின்றனர். அவர்கள் சிவபெருமான், அகத்தியமுனிவர், அருணகிரிநாதர் ஆவார். இவ்வகையில் தேவசிரேட்டர் சிவபெருமான் முனிசிரேட்டர் அகத்தியர், நரசிரேட்டர் அருணகிரிநாதர் என்னும் இக் கருத்தைப் பின்வரும் பாடல் விளக்குகின்றது.

**வேலா சரணம் சரணம் என்மேல்
வெகுளாமல் இனி
மேலாயினுங் கடைக்கண்பார்
பருப்பத வேந்தன் மகள்
பாலா குறுமுனியார்க்கும்
திருப்புகழ்ப் பண்ணவர்க்கும்
ஆலாலம் உண்டவர்க்கும் உப
தேசித்த என் ஆண்டவனே**

முருகப் பெருமானின் கருணை வெள்ளத்தில் முற்றாகத் தோய்ந்தவர் அருணகிரிநாதர். அவருடைய வாக்கும் நோக்கும் முருகனையே குறித்து நின்றது. சிறந்த புலவராகிய முருகன் அருணகிரிநாதரையும் சிறந்த கவிஞராகவே ஆக்கிவிட்டார். இலக்கிய வரலாற்றிலே அருணகிரிநாதர் ஒரு புது அத்தியாயத்தைத் திறந்து வைத்துள்ளார். இவ்வகையில் இவராலேயே சந்தப் பாட்டுப் பாடும் மரபு தொடக்கப் பட்டது. 15ம் நூற்றாண்டில் இவர் பாடிய திருப்புகழ் அனுபூதி வேல்வகுப்பு என்பன சிறந்த சந்தப்பாடல்களால் ஆனவை. அவற்றைப் படிப்போரும் பக்திப் பரவசத்தில் மூழ்குவர்.

முருகன் தனக்கு உபதேசித்த கருணைத் திறத்தை அருணகிரிநாதர் பல பாடல்களில் குறிப்பிடுகின்றார். இதற்கு எடுத்துக் காட்டாக.

**"எட்டிரண்டு மறியாத என் செவியில்
எட்டிரண்டும் இதுவாமலிங்க மென
எட்டிரண்டும் வெளியா மொழிந்த குரு
முருகோனே"**

எனும் பாடலைக் குறிப்பிடலாம்.

அருணகிரிநாதர் முருகன் மீது அளவற்ற பக்தி கொண்டிருந்தவர். அவர் தமது பக்தி மேலீட்டால், முருகனை எங்கே எவ்வேளையில் அழைத்தாலும் அவர் ஓடிவருவார் எனவும் அவ்வாறு வரும்போது வள்ளிநாயகியுடன் வருவார் என்றும் கூறுகின்றார். இதன் மூலமாக முருகனது கருணையின் எளிமையும் அரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணகிரியாரின் தவத்தின் அருமையும் நன்கு புலனாகின்றது. இக்கருத்தினை அணி செய்யும் வகையில் பின்வரும் பாடல் அடிகள் அமைந்துள்ளன.

**"எங்கே நினைப்பினும் அங்கே என்முன் வந்து எதிர் நிற்பனே,, "நீலச் சிகண்டியில் ஏறும் பிரான் எந்த நேரத்திலும் கோலக்குறத்திடயுன் வருவான்,,**

அருணகிரிநாதர் பதினாறாயிரம் திருப் புகழ்ப்பாடல்களைப் பாடியருளியவர். அப் பாடல்கள் அரிய சந்தங்கள் நிறைந்தவை வேதசாரமாக, தத்துவ இரத்தினங்கள் நிறைந்தவையாக மந்திரமயமாக விளங்கு வன. இதனை.

**"வேதம் வேண்டாம் சகல வித்தை வேண்டாம்- நாத கீதம் வேண்டாம் ஞானநூல் வேண்டாம்- ஆதி குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் தாள் போற்றும் திருப்புகழைக் கேளீர் தினம்,,**

என அருணகிரிநாதர் விளக்குகிறார்.

பொய்ம்மையாளரைப் பாடாதே எந்தை புகழ்பாடிய புலவர்களுக்கு எடுத் துக் காட்டாக விளங்கும் மெய்மை விளக் கிய வித்தகர் அருணகிரிநாதர். திருப்புகழ், திருவகுப்பு, அலங்காரம், அநுபூதி, அந்தாதி ஐந்தும் அமைந்த கலை அமுதத் தைத் தெய்வானையிலிருந்து மொழிந்த அருணகிரிநாதர் குருவாயமைந்த குகனைக் கருதா மறவாநெறி காண எனக் கிருதாள் வசைந் தரவென்றிசைவாய்" என்று வேண்டி வணங்கிய முறையை நாம் ஆழ்ந்து நோக்குவோமாயின் இறை புகழ் எடுத்தாள அவன் அருளவேண்டும் எனும் பேருண்மையை நாம் அறியக் கூடி யதாய் இருக்கும். மேலும் அறம், பொருள் இன்பம் வீடு, எனும் நான்கும் அமைந்த திருநூல்களை அருணகிரிநாதர் திருவருள் வயமாகத் தந்தனர் என்பதை அவர்பா டிய பாடல்களில் நாம் காணமுடிகின்றது.

அருணகிரிநாதர் முருகன் மீதுபாடிய பாடல்கள் தனி இன்பம் பயப்பன. அவை பக்தி பழுத்த மனத்திலிருந்து கனிந்து அமுதூறிய பாடல்கள். அத்தகைய பாடல் களைப் பக்தியோடு படிக்கும் போது அன்பு மலரும். இவ்வகையிலே அவர் முருகன் திருவருளால் பெற்ற இன்ப அனுபவ நிலையை பெருமிதத்தோடு குறிப் பிடுகிறார். சனகாதி முனிவர்கள் நால் வருக்கும் கல்லால விருட்சத்தின் கீழ் இருந்து இறைவன் உபதேசித்த மௌன மொழியினை முருகப் பெருமான் அருண கிரிநாதருக்கு உபதேசிக்க அவர் அந்தப் பேருண்மையினை கந்தரனுபூதியிலே பாடுகின்றார். அப்பாடல் பின்வருமாறு.

**"செம்மான் மகளைத் திருடும் திருடன் பெம்மான் முருகன் பிறவான் இறவான் சும்மா இரு சொல் அறஎன்றலுமே அம்மா பொருளொன்றும் அறிந்திலனே"**

மனித இயல்புகள் எண்ணில் அடங் காதவை. அருண கிரிநாதர் அந்த இயல் புகளை எல்லாம் நன்கு அறிந்தவர். அவர் பாடிய பாடல்கள் வெவ்வேறு இயல்புக ளுக்கு ஒத்தனவாக அமைந்திருப்பது அற் புதமானது.

முருக பக்தர்களுள் தலைசிறந்தவர் அருணகிரிநாதர். இவர் தமிழகத்திலே திரு வெண்ணா மலையில் பிறந்தவராயினும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர்காம ஷேத்திரமே முருகனுக்கு உகந்த தலம் என்பதை மனத்தில் கொண்டு, கதிர்காமப் பகுதியில் வேடன் அருளிய பூசனையும் உவந்தேற்றவர் என்ற விபரத்தையும் அழகு மயிலினது நடனத்திற் கேற்ற தாளம் பொருந்திய விபரத்தையும் தாம் பாடிய திருப்புகழில் குறிப்பிடுகிறார்.

அருணகிரிநாதருக்கு முருகப் பெருமானே ''முத்தைத் தரு.........'' என அடியெடுத்துக் கொடுத்துத் திருப்புகழ் பாட உதவினார். அவரது நாவில் முருகனே தமது வேலைக் கொண்டு பிரணவ அட்சரத்தைப் பொறித்தார் என்றும் அப்பொழுதிருந்தே அவர் பாடத் தொடங்கினார் என்றும் கூறப்படுகின்றது. அருணகிரிநாதரது திருப்புகழ் முழுவதும் தாள அமைதி பொருந்தப் பாடப்பட்டவை. இசை தொடர்பான சகல சந்தங்களும் அமைந்தவை. 7 தாளங்களும் 5 ஜாதியோடு சேர்ந்து 35 தாளங்களுக்கும் இன்னும் கதி பேதங்களால் வரும் 175 தாளங்களுக்கும் லட்சியமாகக் காணப்படுவது திருப்புகழ். இதில் இன்னோசை, சொல் திறன், தானசந்தங்கள் என்பன யாவும் நிரம்பி உள்ளன. திருமுறைகளில், வைத்து எண்ணத்தகுவது திருப்புகழ் ''அருணகிரிநாதர்'' என்று முருகனால் அழைக்கப்பட்ட பெருமைக்குரியவர் இவர். இவ்வகையில் முருகப் பெருமான் அருணகிரிநாதருக்கு குரு மூர்த்தியாக வந்து உபதேசிக்க அவர் திருப்புகழ் பாடினார்.

அருணகிரிநாதர் திருப்புகழில் குறிப்பிட்ட தலங்களில் ஈழத்துக் கதிர்காமமும் ஒன்றாகும். பெருமான் அசுரர்களை அடக்கி வாகை சூடுவதற்கமர்ந்த இடம் கதிர்காமம் என்று குறிப்பிடுகிறார்கள். அருணகிரியும் பல பாடல்களிலே கதிர்காமச் சிறப்பை விளக்கியுள்ளார். எடுத்துக் காட்டாக.

**''இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்**
**பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே**
**குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா**
**கறையானைக் கிளையோனே கதிர் காமப் பெருமாளே''**

என்ற பாடலைக் குறிப்பிடலாம்.

திருப்புகழில் வேதாகம புராண இதிகாசக் கருத்துக்கள் அடங்கியுள்ளன. மேலும் சைவசித்தாந்தக் கருத்துக்கள் பல செறிந்திருக்கும் பாடல்களும் காணப்படுகின்றன. முருகன் அடியார் ஒருவர் முருகனது இருப்பிடம் எது? என்று வினவுவது போலவும் அதற்கு முருகப் பெருமான் விடை அளிப்பது போலவும் காட்டித் திருப்புகழ்ப் பெருமையைக் கூறுகின்றார். அத்தகைய பாடல் பின் வருமாறு

**''பொருப்பது பொடிப்பட விடுத்திரு கைவேலா**
**இருப்பிடம் உனக்கெது எனக்கருளியம் பாய்**
**உருக்கநல் விழுக்குலம் ஒழுக்க மிலரேனும்**
**திருப்புகழ் படிப்பவர் மனத்தினிலிருப் பாய்''**

மேலும் அருணகிரிநாதர் ஆறுபடை வீடுகள் பற்றியும் திருப்புகழிலே மிகவும் சிறப்பித்துப் பாடியுள்ளார் காம, குரோத லோப, மோக, மத, மாற்சரியம் எனும் ஆறு பகைகளையும் ஒட்டும் சக்தி ஞான வேலுக்கு உண்டு. எனவே தான் இப்பகைகள் ஆறினையும் போக்க முருகன் ஆறு படைவீட்டில் எழுந்தருளியுள்ளான். எனத் திருப்புகழ்ப்பாடல்கள் தெளிவாக்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருணகிரிநாதர் தனது வாழ்வில் ஏற்பட்டதோல்விகளையும் துன்ப துயரங்களையும் இடர்களையும் மட்டுமன்றி பிறர்படும் துன்பங்களையும் தனது சுய அனுபவம் போல் உணர்ந்து உருகிப்பாடுகின்றார். எனவே தான் அத்தகைய பாடல்கள் காலங்கடந்து நின்று உருகாத மனத்தையும் உருக்கி இழகாத சிந்தையையும் இழக்கி விடும் தன்மையுடையனவாகக் காணப்படுகின்றன.

அருணகிரிநாதரது வாழ்க்கையிலே இளமைப்பருவம் சிற்றின்பசுகானுபவங்களிற் கழிந்தது அதன் காரணமாகப் பஞ்சமும் பிணியும் அவருக்கு ஏற்பட்டன. இதனால் உலக வாழ்வில் வெறுப்புக் கொண்டிருந்தார். எனவே தான் உண்மையுணர்ந்து ஞானம் பெற்றவராய் புதிய பாதையிலே சென்றார். அவ்வாறு செல்கையிலே தமது இறந்தகால வாழ்வை நினைத்துக் கழிவிரக்கம் ஏற்பட அவற்றைச் சொல்லில் வடித்து எதிர்கால மக்களுக்கு ஆலோசனைகளையும் கூறுகிறார். இது அவரது கருணைத் திறத்தினைக் காட்டுகின்றது. மேலும் அவர் தனது பாடல்களில் முருகனையே முடிவான வணக்கக் கடவுளாகப் போற்றியுள்ளார்.

எடுத்துக் காட்டாக உமைபாலா, மாலோன் மருகா, சிவனார் மைந்தா, தனியானை சகோதரனே என்றெல்லாம் பாடுவதைக் குறிப்பிடலாம்.

இவ்வாறாக அருணகிரிநாதர் முருகப் பெருமானது வழிபாட்டில் ஒன்றியவராய் முருகனது பெருமைகளை எடுத்துக் கூறி அப்பெருமானிடம் எம்மை ஆற்றுப்படுத்தியுள்ளார். எமது குற்றங்களையும் துன்பங்களையும் மிகவிரிவாக எடுத்துக் கூறி தம் மேல் ஏற்றி அக்குவேறு ஆணிவேறாகப் பாடி அவற்றைப் போக்கி அருள வேண்டும் என்று விண்ணப்பம் செய்திருக்கிறார். மேலும், திருவடியைப் புகலாக்கி மரணமில்லாப் பெருவாழ்வுக்கு வழியைக் கூறியிருக்கிறார். சிறப்பாகக் கூறினால் வெவ்வேறு பக்குவத்தினருக்கும் ஏற்ற வகையிலே, வெவ்வேறு பாடங்களைப் பாடித் தந்துள்ள பெருந்தகை ஆவார். ❊

**உசாவியவை:-**

❊ அருணகிரிநாதர் ஆண்டுவிழா சிறப்புமலர்
இந்து இளைஞர் மன்றம்
யாழ்ப்பாணம் - 1975

❊ மலேசியா சிங்கப்பூர் சுற்றுப் பிரயாணச் சொற்பொழிவுகள்
செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
இந்து இளைஞர் சங்கம்
தெல்லிப்பழை - 1971

❊ திருப்புகழ்

❊ சைவ இலக்கியச் சோலை - சாயபு மரைக்காயர் மு.

❊ சைவசமய வளர்ச்சி. டாக்டர் இராஜா மாணிக்கனார் மா.

❊ வாழ்வியற் களஞ்சியம்

❊ கலைக் களஞ்சியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர்
தலைவர், இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

# சண்டேசுவரர் வழிபாடு

எமது பண்பாட்டு மரபிலே ஆலயங்கள் தொன்மைக் காலம் முதல் சமயவாழ்வு மேன்மை பெற உதவி வருகின்றன. ஆலயங்களில் கிரியைகள் ஒழுங்காக நிகழ்த் தப்படுவதற்கும் வழிபாடு செம்மையாக இடம்பெறுவதற்கும் ஆகமங்களும் அவற் றைச் சார்ந்த பத்ததிகளுமே மூலமாக அமைகின்றன. ஆலய அமைப்பிற்கும் அங்கு வழிபாட்டிற்கென நிறுவப்படும் விக்கிரகங்களின் உருவாக்கத்திற்கும் ஆகம விதிமுறைகளே வழியமைத்துத் தருகின் றன. ஆலய வழிபாட்டில் விநாயகர் வழி பாடு முதன்மை பெறுவது போன்று சண் டேசுவர வழிபாடு அந்தமாக அமைகின்றது சிவவழிபாட்டின் பயனைப்பெற வழிவகுப் பது சண்டேசுரவரின் வழிபாடு ஆகும். சிவபூஜா பலனைப்பெற எம்மை ஆற்றுப் படுத்துவதும் இவ்வழிபாடே எனில் மிகை யில்லை. எனவே சிவாலயங்கள் தோறும் சண்டேசுவரர் சந்நிதி இன்றியமையாத இடத்தைப் பெறுகின்றது. சிவனருள் பெற்றுய்ய எமக்குத் துணைபுரியும் இவ்வ ழிபாட்டின் மகிமையை நாம் அறிந்து கொள்வது அவசியமாகும்.

சமய வழி நிற்போர் இறைவன் மீது அளவற்ற பக்தியும் நம்பிக்கையும் கொண்டு விளங்க வேண்டுமென்பதையும் உலகியல் இன்ப துன்பங்களிலிருந்து விடு பட்டு நாம் சிவவழிபாட்டில் உறுதி பெற வேண்டும் என்பதையும் மனம் ஒரு வழிப் பட்டு இறைதியானத்தில் நாம் ஈடுபட வேண்டுமென்பதையும் எமக்குத் தினமும் அறிவுறுத்தி நிற்பவர் சண்டேசுவரர் ஆவார். சிந்தனையை சிவமயமாக்குவ தற்கும் வழிபாட்டினால் சிவஞானம் கைகூடுவதற்கும் வழி காட்டி நிற்பவர் சண்டேசுவரர்.

''சிவனவனென் சிந்தையுள் நின்ற
அதனால்
அவனருளாலே அவன் தாள் வணங்கி''
என்றும்

''சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி
நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்''
என்றும்

திருவாசகத்தில் இடம்பெறும் மாணிக் கவாசக சுவாமிகளின் திருவாக்குகள் சண்டேசுவரருக்குச் சாலப் பொருந்துவன. மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரண சுத்தியுடன் சண்டேசுவரரின் வழியாக நாம் சிவவழிபாட்டில் ஈடுபட்டு சிவனது திருவருளுக்குப் பாத்திரராக வேண்டும் என்பதே ஆலய வழிபாட்டின் மரபாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்டேசுவரரின் பூஜை பற்றியும் வழிபாடு பற்றியும் ஆகமங்கள் கூறுகின்றன சிவாலயத்தில் விளங்கும் பிரதான மூல மூர்த்திக்குச் செய்ய வேண்டிய அனைத்துப் பூஜைகளும் ஏனைய பரிவாரங்களுக்கு முரிய பூசைகளும் நிறைவேறிய பின் சண்டேசுவரர் ஆலயம் சென்று சிவபெருமானது நிர்மால்யங்களான பத்ரபுஷ்பம், மாலை, பரிவட்டம், நைவேத்தியம் முதலியவற்றுடன் சண்டேசுவரரது திருவுருவத்திற்கு அபிஷேகஞ் செய்து அருச்சித்து தியானிக்க வேண்டும் என்பது ஆகம மரபாகும். தியானத்தின் போது ஸ்தாபன முத்திரை முதலியவற்றைக் காண்பித்து அவரது அங்கங்களைப் பூசித்து, ஈசுவரரது நிர்மால்யங்களை நிவேதனஞ் செய்து, சகல உபசாரங்களையும் வழங்கி ஸ்தோத்திரஞ்செய்து மூலமந்திர ஜபஞ் செய்து, ''பரமசிவனது பாதக் கமலங்களைச் சிந்திப்பவராகிய சண்டேசுவரா! உமக்கு நமஸ்காரம்! பெருமானே! தாங்கள் பரமசிவனை சேவித்த பலனைத் தந்தருள வேண்டும்'' என வேண்டி மூன்று முறை கைகளைத் தட்டி சிவாச்சாரியர் பிரார்த்தித்தல் மரபாகும். அவரை அடியொற்றி பக்தர்களும் பிரார்த்தனை செய்வர். திருக்கோயிலில் சிவதரிசனமும் வழிபாடும் செய்ததன் பின்னர் சண்டேசுவரரின் தரிசனத்துடன்நமது வழிபாடு நிறைவுபெறும். சண்டேசுவரரை தரிசனஞ் செய்யாது சிவதரிசனமும் வழிபாடும் நிறைவு பெறாததோடு அவற்றின் பயனும் நமக்குச் சித்திக்காது என்பது நம்பிக்கையாகும். எனவே அவரது தரிசனம் மிகவும் இன்றியமையாததாகும்.

சண்டேசுவர மூர்த்தியின் ஆலயம் தனித்தும் வடக்கு ஆவரணத்தில் தென் திசை நோக்கிய வாறும் மூலத்தானத்து அபிடேகத் தீர்த்தம் விழும் கோமுகியை அடுத்தும் இருக்கும். சிவாலயத்தில் என்றும் சண்டேசுவரர் சிவத்தியானத்தில் இருப்பதால் அவரே சிவதரிசனப் பலனையும் எமக்கு அருளிவருகின்றார்.

மகோற்சவ காலங்களில் இறுதியாக சண்டேசுவர உற்சவத்தை நிகழ்த்துவது மரபாகும். சண்டேசுவரரை விதிப்படி வஸ்திரம் ஆபரணம் மாலை முதலிய சிவநிர்மால்யங்களால் அலங்கரித்து, பூசித்து சிவிகையிலாவது கேடகத்திலாவது ரிஷபத்திலாவது எழுந்தருளச் செய்து சகல வாத்திய கோஷங்களுடனும் திருவீதியை வலம் வந்து அவரது ஸ்தானத்தில் தாபித்து சிவோற்சவப் பலனைத் தந்தருளும்படி பிரார்த்திக்க வேண்டும். இவ்வுற்சவத்தை பக்தியுடனும் மனஉறுதியுடனும் செய்பவர்களே சிவோற்சவ பலனை அடைவர்.

சிவாலயம், விநாயகர் ஆலயம், முருகன் ஆலயம், சூரியன் ஆலயம், அம்பிகை ஆலயம் ஆகிய ஐந்து தனி ஆலயங்களில் சண்டேசுவரர் வெவ்வேறு திருப்பெயர்களுடனும் திருவுருவப் பேதங்களுடனும் அருள்புரிகின்றார்.

1. சிவாலயத்தில் - த்வனிச்சண்டர் அல்லது வீரசண்டர்

2. முருகன் ஆலயத்தில் - சுமித்திர சண்டர்

3. விநாயகர் ஆலயத்தில் - கும்பசண்டர்

4. சூரியன் ஆலயத்தில் - தேஜஸ்சண்டர்

5. அம்பாள் ஆலயத்தில் -சண்டிகேஸ்வரி அல்லது யமுனி சண்டி

என்ற திருநாமங்களில் விளங்கியருள்கின்றார்.

சண்டேசுவரரின் திருவுருவத் தோற்றம் பின்வருமாறு அமையும். ''இரண்டு கண்களுடன் பொன்மை வர்ணத்தையுடை

யவராயும் ஜடாமகுடத்தால் அலங்கரிக்கப் பட்டவராயும் வலதுகையில் பரசையும் இடதுகை ஊறு ஹஸ்தமாகவும் வலது கால் தொங்கும் நிலையில் கொண்டவரா கவும் இடது கால் படுக்கையாகக் கொண்டு இருப்பவராகவும் பூனூலுடங்கூடியவரா கவும் சிறந்த காந்தியுடன் கூடியவராகவும் விளங்குபவர் சண்டேசுவரர் ஆவார்.

திருத்தொண்டர் புராணமாகிய பெரியபுராணத்தில் சண்டேசுவரரின் புரா ணம் இடம்பெறுகின்றது. இதற்கு முன் னோடியாக விளங்கிய திருத்தொண்டத் தொகை

**மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க**
**வெகுண்டெழுந்த தாதைதாள்**
**மழுவினால் எறிந்த**
**அம்மையான் அடிசண்டிப் பெருமானுக்**
**கடியேன்**

எனப்போற்றுவது மனங்கொள்ளத்தக்கது.

சேய்ஞலூரில் விசாரசருமர் அவதரி த்து ஆநிரைகளை மேய்த்தும் திருவாப் பாடி தலத்தில் தாபரமணலால் இலிங்கம் தாபித்து, திருமஞ்சனஞ் செய்யுங் காலத் தில் மறைந்திருந்து பார்த்த தந்தையான எச்சதத்தர் தம்காலால் பாற்குடங்களை இடறியதைக் கண்டு வெகுண்டு தம் அருகி லிருந்த கோலால் (தண்டம்) தண்டிக்க முற்படும் சமயம் சிவதியானத்தால் மழு வாகமாறி தந்தையின் காலைதுண்டித்தது. இருப்பினும் விசாரசருமர் மீண்டும் சிவத் தியானத்தில் ஈடுபடும் பொழுது சிவபிரான் இவரது பக்தியினைக் கண்டு ''சண்டேசப் பதம்'' தந்தருளினார். சண்டேசுவரர் சிவ பிரானுக்கு மகனார் என்ற முறைமையில் ஆட்கொள்ளப் பெற்றவர் என்பதனை;

**''வந்து மிகைசெய் தாதை தாள்**
**மருவால் துணித்த மறைச்சிறுவர்**
**அந்த உடம்பு தன்னுடனே**
**அரனார் மகனார் ஆயினார்**

எனவரும்

பெரியபுராணச் செய்யுள் விளக்கும். இதன் காரணமாகவே சேய்ஞலூர்ப் பிள் ளையார் எனச் சண்டேசுவரர் வழங்கப் பெறுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. திரு வாப்பாடி தலத்தில்தான் சண்டேசப்பதம் கிடைக்கப்பெற்றதென்பது பெரியபுரா ணத்துள் சண்டேசுவர நாயனார் புரா ணப் பகுதியிலும் தேவாரப் பதிகங்களி லும் குறிக்கப்படுகின்றது. ''சண்டியார்க் கருள்கள் செய்த தலைவர் ஆப்பாடி யாரை'' என்று அப்பரடிகள் அருளியுள் ளார்.

கலியுகத்தின்முன் கடந்த காலயுகங் களில் சண்டேசப்பதம் பெற்றவர்கள் பற்றி ஆகம நூல்களும் சிற்ப நூல்களும் குறிப்பிடுகின்றன. அவர்கள் சிறந்த பராக் கிரமங்களையுடையவர்களாக விளங்கினர் என்ற கருத்தும் உளது. நான்கு யுகங்களில் திகழ்ந்த சண்டேசுவரர் திருவுருவங்கள் பற்றியும் விபரங்கள் உள்ளன. சண்டேசு வரருக்கு உரிய பெயர்களில் சண்டர், வீர சண்டர், சண்டேசுரர், சண்டிகேசுவரர், சண்டேசுவர நாயனார், சேய்ஞலூர்ப் பிள்ளையார், சண்டநாதர், தொண்டர் நாயகம், சிவகணத்தலைவர், ஆதிசண்டர், சதுர்யுக சண்டேசுரவர்கள், சண்டீசன், தண்டேசுவரர், பிரசண்டர், விக்ராந்த சண்டர், விபுசண்டர், பிரம்மசண்டி' எனப் பலபெயர்கள் சண்டேசுவரருக்கு உள்ளன.

காசியப சிற்பநூலில் கிரதயுகத்தில் பிரசண்டர் என்னும் பெயருடன் விளங்கு வார் எனக் கூறப்படுகின்றது. வெண்ணிற

உடல், பதினாறு கரங்கள், யானை வாகனம், வலக் கரங்களில் சூலம், பரசு, வச்சிரம், கட்கம், கோசம், சூசிகை, தண்டம், அபயம், இடக்கரங்களில் கேடயம், பிண்டிபாலம், பாசம் மணி, வியாக்ரமுத்திரை, சூசிமுத்திரை, நாகம், வரத முத்திரை, ஆகியவற்றுடன் விளங்குவார்.

திரேதாயுகத்தில் எட்டுக்கரங்கள், இரத்தச்சிகப்பு நிறம், குதிரை வாகனம், வலக்கரங்களில் சூலம், பாசம், கத்தி, பரசு, இடக்கரங்களில் வரதம், கேடயம், பாலம், மணி இவற்றோடு காணப்படுவார்.

துவாபர யுகத்தில், நான்கு கரங்கள், பொன்னிறம், ஜடாமண்டலம், கோரைப்பற்கள், வலக்கரங்களில் மழுசூலம், இடக்கரங்களில் பாசம், அங்குசம் கொண்டு பத்ரபீடத்தில் விளங்குவார். உத்தர காமிகாகமம் 65 வது படலத்தில் நான்கு யுகங்களுக்குமுரிய சண்டேசுவர திருவுருவங்களைப் பற்றிக் கூறுகின்றது இதன்படி கலியுகத்தில் இவர் வலக்கரத்தில் மழுவும் இடக்கரத்தில் வரத முத்திரை அல்லது அஞ்சலி கரங் கொண்டு விளங்குவார். துவாபர சண்டேசுவரர், ஆதிசண்டேசுவரர், பிரம்ம சண்டேசுவரர், சதுர்முக சண்டேசுவரர், என உத்தர காரணாகமத்தின்படி பல நிலைகளில் இப்பெருமானை சிவாலயங்களில் பிரதிஷ்டை செய்வர். தாராசுரத்தில்துவாபர சண்டேசுவர வடிவம் விளங்குகின்றது.

சண்டேசுவரரின் சக்தி (சண்டசக்தி) நல்ல அமைதியான தோற்றத்தினளாகவும் பசுந் தளிர் நிறமுடையவளாகவும் அனைத்து அணி பூண்டவளாகவும் தர்ம நீதி என்ற பெயருடன் இருகரங்களுள் ஒன்றில் நீலோற்பவ மலரினை ஏந்தியும் இடக்கரம் வரத முத்திரையுடனும் விளங்குபவளாவாள். தீப்தாகமம் நால் வகை சண்டேசுவரர் பற்றிச் குறிப்பிடுவதோடு ஒவ்வொரு யுகத்திலும் முறைப்படி சண்டேசப் பதவியில் விளங்கியவர்கள் எனப் போற்றுகின்றது. சிவப்ரீதி என்ற செல்வம் பெற சண்டபூசை அவசியம் என இவ்வாகமம் கூறுகின்றது.

சிவாலயத்தில் தொனிச் சண்டர் இரு கரங்கள், சிவந்த நிறம், வலக்கரத்தில் மழுவும் வெண்ணிற ஆடையும் வெண்ணீறணிந்த மேனியும் சிவனடி சார்ந்த தியானமுடைய பத்தரும் ஆகத் திகழ்வார். விநாயகர் ஆலயத்தில் கும்போதர சண்டேசுவரர் நாற்கரங்கள், மழு, சூலம், மெல்லிய கூரிய கத்தி, தண்டம் ஆகியவற்றுடனும் சிவந்த நிறமும் பேரொளி மேனியும் கொண்டு பத்ரபீடத்தில் விளங்குவார். முருகன் ஆலயத்தில் சுமித்திர சண்டேசுவரர் இருகண்கள், இருதோள். சிவந்த நிறம், மலர்முகம், இளமையான உருவம், வலத்தோளில் கூடிய சக்தி, கூப்பிய கரங்கள் கொண்டவராய்த் திகழ்வார். அம்மன் ஆலயத்தில் சக்தி சண்டேசுவரி இருகண்களையுடையவளும் இருதோளினைக் கொண்டவளும் பசுமை நிறத்தவளும் மழுவேந்தியவளும் கடக முத்திரை கொண்டவளும் சடை முடியுடன் கூடியவளும் ஞானமே உருவானவளுமாக விளங்குவாள்.

சண்டேசுவர பூசையில் கையை மூன்று முறை தட்டுவதன் மூலம் அவரது கவனத்தை நம்பால் திருப்பிப் பூசைப் பயனைப் பெறுவதற்கே என்ற நம்பிக்கை உளது.

சண்டேசப்பதம் அருளிய காட்சியினை விளக்கும் திருவுருவங்கள் கங்கை கொண்ட சோழபுரத்திலும் மதுரை சிவாலயத்திலும் உள்ளன. இவ்வாறு இறைவனால்



★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்டீசப் பதம் பெற்ற சிறப்பினால் ஒவ்வொரு சிவாலயத்திலும் சண்டேசுவரப் பெருமானின் திருவுருவம் பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபாடு நிகழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது சிவாலய வழிபாட்டின் பயன் சண்டேசுவரர் வழிபாட்டோடு நிறைவு பெற்று அதன்வழி சிவபூசாபலனுக்கு நாம் பாத்திரராக வேண்டும்.

**அண்டர் பிரானுந் தொண்டர் தமக்கு
அதிபனாக்கி அனைத்து நாம்
உண்டகலமும் உடுப்பனவும்
சூடுவனவும் உனக்காகச்**

**சண்டீ சனுமாம் பதம் தந்தோம்
என்றங் கவர் பொற்றடமுடிக்குத்
துண்டமதிசேர் சாடைக் கொன்றை
மாலை வாங்கிச் சூட்டினார்.**

எனப் பெரிய புராணத்தில் சேக்கிழார் சண்டேசப்பதத்தின் பெருமையினைப் போற்றுகின்றார். சைவசித்தந்தம் போற்றும் குருலிங்க சங்கம வழிபாடும் இதன் வழி உணரற்பாலதாகும்.

*

## நல்லையின் கந்தனே! அடியார்க்கு அருளிட வா வா வா

நல்லையின் கந்தனே வா வா வா
வல்வினை நீக்கிட வா வா வா
விழிநீர் துடைத்திட வா வா வா
அழுகை ஓலங்கள் நிறுத்திட வா வா வா
(நல்லையின் கந்தனே)

அண்டினோரைக் காப்பவனே வா வா வா
சண்டைகள் ஓய்ந்திட வா வா வா
வானூர்தியும் வணங்கிட வா வா வா
மனங்கள் மகிழ்ந்திட வா வா வா
(நல்லையின் கந்தனே)

வறுமை ஒழித்திட வா வா வா
சிறுமை அகற்றிட வா வா வா
அப்பனே முருகா வா வா வா
அடியார்க்கு அருளிட வா வா வா
(நல்லையின் கந்தனே)

கார்த்திகையில் மலர்ந்தவனே வா வா வா
கருணையின் வடிவமே வா வா வா
அலங்காரக் கந்தனே வா வா வா
வள்ளி தெய் வானையோடு வா வா வா
(நல்லையின் கந்தனே)

அகதி நிலை போக்கிட வா வா வா
இகத்தில் நாம் சிறந்திட வா வா வா
இன்ப மயமானவனே வா வா வா
இசையினால் ஏற்றுகிறோம் வா வா வா
(நல்லையின் கந்தனே)

— மீசாலையூர் கமலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— மட்டுவில் ஆ. நடராசா

# சிறப்புமிகு சைவசித்தாந்தம்

கடவுள் உண்டு என்போர் ஆத்திகர் கடவுள் இல்லை என்போர் நாத்திகர். கட்புலனுக் கெட்டாத காரணத்தால் கடவுள் என்றொரு பொருள், இல்லை என்னும் நாத்திகருக்குக் கடவுள்உண் டென்று உணர்த்துவதெப்படி?

நாம் உபயோகிக்கும் பொருள்களை அளப்பதற்கு எண்ணல், நிறுத்தல், முகத் தல், நீட்டல் அளவைகள் பயன்படுகின்றன எம்மிடம் எத்தனை புத்தகம் இருக்கிற தென்பதை எண்ணலளவையாலும், எவ்வ ளவு மண்ணெய் உண்டென்பதை லீற்றர் என்னும் முகத்தலளவையாலும், எவ்வளவு அரிசி இருக்கிறதென்பதை 'கிலோ' என்னும் நிறுத்தலளவையாலும், எவ்வளவு சீலை இருக்கிறதென்பதை மீற்றர், என்னும் நீட்டலளவையாலும் அளந்தறிகின்றோம். அளவைகள் தாமே அளந்தறிய மாட்டா. அளவைகளைத் துணையாகக்கொண்டு அளந்தறிவது ஆன்மாவின் அறியுஞ் சத்தியேயாகும். அவை - பிரமாணம்.

அறிவதற்குத் துணையாகும் அளவை கள் எல்லாம் காண்டல், கருதல், உரை என்னும் மூன்று அளவைகளில் அடங்கும்.

சைவசித்தாந்தம் கூறும் முப்பொருள் களில் பதி மாத்திரமன்றி பசு பாசங்க ளும் வெளிப்படையாகக் காணப்படுவ தில்லை. அவை ஆகமம் (உரை) அனு மானம் (கருதல்) என்னும் இரண்டு அள வைகளுந் துணையாக ஆன்ம சிற்சத்தி யால் அளந்தறியப்படுகின்றன. ஆதலால் ஆன்ம சிற்சத்தியே பிரமாணம்.

காண்டல் ஒன்றுமே பிரமாணம் என்று கூறுவர் உலோகாயதர். ஆகமப் பிரமா ணத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென் பதை வலியுறுத்தும் ''மூத்தோர் சொன்ன வார்த்தை அமுதம்'' என்னும் முதுமொழி அவர்களுக்கு வேம்பாகக் கசக்கும்.

தாயொருத்தி தன் மகன் தயாள னுக்குத் தந்தை தயாபரன் என்கிறாள். தயாளன் தாய் கூறியதை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் அவன் தாயின் கூற்றை ஏற்றுக்கொள்ளவில்லை. அத னால் தாய்க்கு தன் கூற்றை நிரூபிக்க வேண்டிய தேவை உண்டாகின்றது. தந்தை மகன் இருவரது இரத்தப் பிரிவு களும் மரபணுக்களும் ஒத்த தன்மை உடையனவாக இருந்தால், தயாபரனும் தயாளனும் தந்தையும் மகனுமெனனச் கருதப்படுவர். அதனால் அவர்களது இரத்தமும் மரபணுக்களும் ஆய்வு செய் யப்படுகின்றன. அவற்றில் ஒத்த தன்மை கள் உண்டென்பது தெரிய வருகின்றது, அதன் மூலம் அவர்களிருவரும் தந்தையும் மகனுமென்பது உறுதியாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சம்பவத்தில் உண்மையை அறிவதற்குக் காண்டல் அளவை பயன்படவில்லை. ஆப்தவாக்கியமாகிய தாயின் உரையை மகன் ஏற்றுக்கொள்ளவில்லை. அனுமானப் பிரமாணங் கொண்டே தாயின் உரை உண்மையென உறுதிப்படுத்தப்பட்டதைக் காண்கிறோம். இது போலவே அனுமாணப் பிரமாணங் கொண்டு ஆகமப்பிரமாணத்தை வலியுறுத்துகின்றது. சைவசித்தாந்தம்.

ஒரு பொருள் தானாகவே தோன்றுமாயின் அது அழியாது; ஆக்கப்படுவதாயின் தோன்றி நின்று அழியும். 'அவனென்றும் அவளென்றும் அதுவென்றும் எம்மாற் சுட்டி அறியப்படும் உடம்புகளும் அவற்றைக் குறிக்கும் சொற்களுமாகிய இரு கூற்றுப் பிரபஞ்சத் தொகுதி தோன்றி நின்று அழிவதைக் காண்கின்றோம். அதனால் அவற்றை ஆக்குபவன் ஒருவன் வேண்டும் என்று கூறி கடவுள் உண்டென்னும் ஆகமப் பிரமாணத்தை வலியுறுத்துகின்றது சைவ சித்தாந்தம். கடவுள் உண்டென்பது நிருபிக்கப்பட்ட பின், படைத்தல், காத்தல், அழித்தல், தொழில்களை முறையே பிரமாவும் விட்டுணுவும் உருத்திரனும் செய்கின்றார்கள். இவர்களில் முதற் கடவுள் யார்? என்னும் வினா எழுகின்றது. இவ்வினாவுக்கு,

**"இறுதியாங் காலந் தன்னி னொருவனே யிருவ ருந்தம்
உறுதியி னின்றா ரென்னி னிறுதிதானுண்டாகாதாம்..."**

என விடை கூறுகின்றது சித்தியார்.

இறுதியாங்காலம் - சங்காரகாலம்

சங்கார காலத்தில் பிரமாவும் அவனது படைப்புக்களும் விட்டுணுவும் அவனாற் காக்கப்படுவனவும் அழிந்துபோக, சங்காரக் கடவுள் ஒருவனே அழியாது நிற்பன். பிரமா படைப்பதிலும் விட்டுணு காப்பதிலும் உறுதியாக நிற்பார்களானால் இறுதியாகிய சங்காரம் உண்டாகாது. அதனால் சங்காரக் கடவுளே முதற்கடவுள்'' என்பது சித்தியாரின் கருத்து.

பிரபஞ்சம் ஒடுங்கும் போது அதற்கு ஆதாரமாயிருக்கும் பொருள் சங்காரக் கடவுளேயன்றிப் பிறிதொன்றில்லை. அதனால் அச்சங்காரக் கடவுளே மீண்டும் பிரம விட்டுணுக்களைப் படைத்து, அவர்களுக்கூடாக ஒடுங்கிய பிரபஞ்சத்தைத் தோற்றுவித்துக் காக்கிறான்.

இவ்வாறு படைத்தல், காத்தல், அழித்தல்களைச் செய்யும் கடவுளை, கண்கெட்ட கடவுள் என்றும் கண்கண்ட தெய்வம் என்றும் இன்னும் பல்வேறு விதமாகவும் விமர்சனம் செய்கிறார்கள் சிலர்.

'கடவுள் படைத்தல் தொழிலைச் செய்யும்போது, உயிர்கள் சிலவற்றை எல்லோராலும் வெறுத்தொதுக்கப்படுவனவாகவும் சிலவற்றை செல்லப் பிராணிகள் ஆகவும் சிலரைச் செல்வர்களாகவும், சிலரை ஏழைகள் ஆகவும் சிலவற்றை மனிதனுக்குப் பயன்படும் பறவை, விலங்கு, மீன் முதலியனவாகவும் படைக்கிறான். இது நீதியா? என்று கேட்கிறார்கள் சிலர்.

'அவரவர் செய்த வினை காரணமாக, இறைவன் பல்வேறு விதமாகப் படைக்கிறான். அது நீதி - தான்' என்று கூறுகிறார்கள் சிலர்.

வினை காரணமாகவா! வினைப்பயனே இவ்விதமான ஏற்றத்தாழ்வுக்கு காரணமானால் இறைவன் தொடக்கத்திலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிழை விட்டு விட்டார். அவர் படைக்கும் போது எல்லா உயிர்களையும் ஒரேவித மாக வினை செய்யக்கூடியதாகப் படைத் திருக்க வேண்டும். அவர் அவ்வாறு செய்யவில்லை என்கிறார்கள் வேறுசிலர்.

பிழை செய்பவர் வணக்கத்துக்குரிய கடவுளாவாரா? ஆகார். அதனால் கடவுள் பிழை செய்துவிட்டார். என்போரும் நாத் திகரேயாவர். அவர்கள் நாத்திகர் ஆயி னும் ஆகுக: ஆத்திகர் ஆயினும் ஆகுக: அவர்கள் கூறுவது போல, கடவுள் இல் லாத உயிர்களை உண்டாக்கி அவற்றுக் குத் துன்பச் சுமைகளைச் சுமத்துபவராக இருந்தால், தான் உண்டாக்கிய உயிர்கள் அனைத்தையும் சமமாக நடத்தாது அவற் றுக்கிடையே பாகுபாடு காட்டும் அநீதி யாளராகவிருந்தால், அவர் போற்றுவதற் குரியவராகாது தூற்றுவதற்குரியவரேயா வர். ஆனாலும் கடவுள் உண்டென்று நம் புவோர், அவர்கள் எந்தச் சமயத்தவர் களானாலும் அவரைப் போற்றுவதற் குரியவராகவே கருதுகிறார்கள்.

சைவ சமயத்தவர் சிவன் சுகம் செய் பவர் என்கிறார்கள். அதனால் சுகம் செய்பவர் என்னும் பொருளைத் தரும் சங்கரன் என்னும் திருநாமத்தால் சிவனை அழைக்கிறார்கள். அவர் எப்படிச் சுகஞ் செய்கிறார் என்பதை நோக்குவோம்.

**"ஏகன் அநேகன் இருள்கன்மம் மாயையிரண்**
**டாகவிவ யாறா தியில்"**

என்கின்றது திருவருட்பயன்.

ஒருவனாகிய பதி, பலவாகிய பசுக் கள், ஆணவம், கன்மம், சுத்தமாயை, அசுத்தமாயை என்னும் ஆறுக்கும் தொடக்கம் இல்லை என்பது இதன் பொருள்.

இருள் - ஆணவம்

இவற்றில் பதியும் பசுவும் அறிவுள்ள சித்துப் பொருள்கள். ஆணவம், கன்மம், மாயை என்பன அறிவற்ற அசித்தாகிய சடங்கள்.

பதியும் பசுவும் சித்துப்பொருள்களே யானாலும் அவை ஒரே தன்மையுடைய வையல்ல. பதி இயல்பாகவே பாசங்கள் நீங்கியது. பசு பாசத்தாற் கட்டப்பட்டி ருப்பது. பதி இயல்பாகவே அறிவுடை யது. பசு அறிவிக்க அறிவது.

ஆற்றலும் அருளுமுடையானொருவன் பாசத்தாற் கட்டுண்டு மூர்ச்சையுற்றுக் கிடக்கும் ஒருவனைக் கண்டால், அவனை அக்கட்டிலிருந்து விடுவித்து, அவனுடைய மயக்கத்தை நீக்கி, அவனுக்கு அறிவு வரச் செய்வானல்லவா? அவனைப் போலவே அனாதியே ஆணவ இருளால் மறைப்புண்டு அறிவு இச்சை செயல் அற் றுக் கிடக்கும் ஆன்மாக்களுக்குப் பாசத்தை அறுத்து, அறியாமையை அகற்றி ஞானத்தைக் கொடுப்பதற்காக இறைவன் ஐந்தொழில் செய்கிறான். உயிருக்கு அறிவு விருத்தியடைதலே முத்திக்கு வழி.

மாயையிலிருந்து சொற் பிரபஞ்சத் தையும் பொருட் பிரபஞ்சத்தையும் தோற்றுவிக்கும் இறைவன், ஒவ்வொரு உயிருக்கும் அவ்வுயிர் செய்த வினைக் கிடான உடம்பையும் இன்ப துன்ப அனு பவங்களையும் அனுபவிப்பதற்கு வேண் டிய பொருள்களையுங் கொடுக்கிறான். அதனால் ஆன்மாக்களின் அறிவு இச்சை செயல்கள் விளக்கமுறுகின்றன.

சுத்த மாயையிலிருந்து தோன்றும் நால்வகை வாக்குகளும் உள்ளந்தக் கார ணங்களாகிய கலை, வித்தை, அராகம், புருடன் என்பனவும் அந்தக்கரணங்களா கிய மனம் புத்தி சித்தம் அகங்காரங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளும் ஞானேந்திரியங்களாகிய மெய், வாய் கண், மூக்குச் செவி என்பனவும் ஆன்மா வுக்கு சிற்றறிவை உண்டாக்குகின்றன. பாசமாகிய இக் கருவிகளால் வரும் ஞானம் பாச ஞானம். பாச ஞானத்தால் முத் தியடைவதற்குரிய வழியை அறிய முடியும்: முத்தியனுபவத்தைப் பெற முடியாது.

உயிர் உடம்பை எடுத்து, எடுத்த அப்பிறவியில் அனுபவிக்க வேண்டிய பழவினையாகிய பிராரத்தத்தை அனுபவிக் கும் போது மேலும் நல்வினை தீவினை களைச் செய்கின்றது. அவற்றின் பயனா கிய இன்ப துன்பங்களை அனுபவிக்கும் பொருட்டு மீண்டும் பிறக்கிறது. இவ் வாறு எண்ணற்ற காலம் பிறந்திறந்து வரும் உயிர், தீவினை பிறவிக்குக் காரண மாவதுபோல, நல்வினையும் பொன்விலங் காய்ப்பந்தப்படுத்தி, பிறவிக்குக் காரண மாகுமென்பதை உணர்கிறது.

இவ்வாற்றால் இருவினையொப்பு வரப்பெற்ற ஆன்மாவைப் பற்றிய ஆண வத்தின் குணங்கள், அவ்வான்மாவின் அறிவை விட்டுச் சிறிது சிறிதாக நீங்கும். இந்நிலை மலபரிபாகம் எனப்படும்.

இருள் நீங்க ஒளி தோன்றுவதுபோல ஆணவ மல சத்தி தேய, ஆன்ம அறி வின் கண்ணே திருவருட் சத்தியாகிய அருளொளி தோன்றும்: சிவபெருமானு டைய திருவடியை அடையவேண்டு மென்னும் எண்ணம் உண்டாகும். திரு வருட் சக்தி ஆன்மாவின் அறிவிற் பதியும் அளவுக்கேற்ப சத்திநிபாதம் மந்ததரம் மந்தம், தீவிரம், தீவிரதரம் என நான்கு வகைப்படும். தீவிரதர சத்திநிபாதரை விட்டு உலகப்பற்று முற்றாக நீங்கும்.

சத்திநிபாதம் - திருவருட்சத்தி பதிதல்

தீவிரதர சத்திநிபாதருக்குப் பரம் பொருளே குருவாய் எழுந்தருளி வந்து உண்மை ஞானத்தை உணர்த்துவர். ஞானம் பெற்ற உயிர் சிவபெருமானு டைய திருவடியை அடைந்து பேரின் பத்தை அனுபவிக்கும் என்கின்றது சைவ சித்தாந்தம்.

> **''அவனவ ளதுவெனு மனவமு**
> **வினைமையிற்**
> **றோற்றிய திதியே யொடுங்கிமலத்**
> **துளதா**
> **மந்தமாதி யென்மனார் புலவர்''**

என்பது சிவஞானபோத முதற் சூத்திரம். 'அவனென்றும் அவளென்றும் அதுவென் றும் பலவாய்ச் சுட்டியறியப்படும் சொல் லும் பொருளுமாகிய இரு கூற்றுப் பிர பஞ்சத் தொகுதி, தோன்றுதல், நிலைத் தல், ஒடுங்குதல் என்னும் முத்தொழில் உடைமையால் அது ஒருவனால் தோற் றப்பட்ட உள்பொருளேயாகும். அது தோன்றும் போதுதான் ஒடுங்குதற்குக் காரணமாய் நின்ற கடவுளினின்றும் ஆணவமலம் நீங்காமையால் அது நீங்குதற் பொருட்டு மீளத்தோன்றும். அதனால் அவையெல்லாவற்றையும் ஒடுக்கி மீளத் தோற்றுவிக்கும் சங்காரக் கடவுளே உல கிற்கு முதற்கடவுளாவாரென அளவை நூலுணர்ந்தோர் கூறுவர் என்பது இதன் பொருள்.

இதிலுள்ள 'மலத்துளதாம்' என்னும் கூற்று, மலம் இல்லாவிட்டால் பிரபஞ்சம் உளதாகாது என்னும் பொருளையும் தரு கிறது. எனவே முத்தியடைந்த உயிர் மீளப் பிறக்காது எனக்கூறியவாறாம். வீடு அந்தமில் இன்பத்து அழிவில் வீடு. சிவன் செயல் வீண் செயலுமல்ல, கொடுஞ் செயலுமல்ல, அருட்செயல்.

இவ்வாறு ஆப்த வாக்கியங்கள் கூறு வனவற்றை அனுமானப் பிரமாணங் கொண்டு நிறுவும் தனிச்சிறப்பு சைவ சித் தாந்த நூல்களுக்கு மாத்திரமே உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி சுகந்தினி சிறீமுரளிதரன்
விரிவுரையாளர் - இந்துநாகரிகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

# சமய வாழ்வு

ஒருவனது வாழ்க்கையைச் செம்மைப் படுத்துஞ் சாதனங்கள் பல. அவற்றுள் சமயமும் ஒன்றெனக் கூறுதல் மிகையாகாது. சமயம் என்பதற்கு எத்தனையோ வரைவிலக்கணங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ''மனிதன் தனது வாழ்க்கையிலேற்படும் இன்ப துன்பங்களில் இருந்து விடுதலை அடைவதற்குச் சாதகமாயுள்ள வாழ்க்கை வழி சமயம்'' என்றும், ''மனிதன் தன்கீழான சிந்தனைகளில் இருந்து விடுபட்டு நற்சிந்தனைகளிலாழ்ந்து வாழ எடுத்துக்கொள்ளும் பிரயத்தனமே சமயம்' என்றும் பலவாறாக விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. மனிதன் மனிதனாக வாழ வேண்டுமானால் சமயம் அவசியம். ''சமயத்தை சமுதாயத்திலிருந்து எடுத்து விட்டால் மிஞ்சுவது காட்டுமிராண்டிகளின் கூட்டமே'' என்று சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. சமயம் எனின் என்ன என்பதை யாவரும் பொதுவாக அறிந்திருக்கின்றனராயினும் சமயம் எனும் பொருளின் உண்மையான தாற்பரியத்தை பொதுமக்கள் யாவரும் சரிவர உணரவில்லை என்பதே உண்மையாகும். சிறுவயதில் சமயப் பதிகங்களையும் தேவாரங்களையும், கிரியைகளையும், புராணங்களையும் பற்றிக் கற்கும்போது பலர் இவைகளே சமயம் எனக்கொண்டு விடுகின்றனர். வளர்ந்து பெரியோரான பின்னரும் கூட இந்நோக்கு இன்றைய சமூகத்தில் நிலைத்து நிற்கின்றதைக் காண்கின்றோம். மேற்குறிப்பிட்டனவற்றில் விதிக்கப்பட்டவாறு கோயிலுக்குச் சென்று வழிபாடு நடத்துவோமாயின் சமயத்தின் கடமைகளை ஆற்றிவிட்டோம் எனக்கருத முற்படுகின்றனர் பலர்.

ஆயினும் சமூக வாழ்வில் ஈடுபட்ட ஒருவன் கோயில் வழிபாடுகளை மட்டும் விதிப்படி ஆற்றுகின்றமையினால் உண்மைச் சமயத்தைக் கடைப்பிடிப்பவனாகின்றான் என்று கூறிவிடமுடியாது. சமயம் பற்றி விளக்கமுற்பட்ட இந்தியதத்துவ அறிஞர் டாக்டர். இராதாகிருஷ்ணன் ''மறைபொருள்கள் பற்றிய கல்வியையும், கிரியைகள் அல்லது சடங்குகள் பற்றிய உண்மைகளையும் அறிதல் மட்டும் சமயமாகிவிடாது'' எனச் சுட்டுதல் காணலாம். மேலும் சமயம் என்பது ஒரு வாழ்க்கை வழி என விளக்கம் தந்துள்ளார். சமூக வாழ்க்கையுடன் சமயம் தொடர்புறுகின்ற வேளை அங்கு உண்மையைக் கண்டறிதலும் உண்மையை உய்த்து அறிதலும் உள்ளடங்கும் பிரதான அம்சங்களாகின்றன. இங்குதான் சமயம் எனும் பதத்தின் தாற்பரியமும் தெளிவாகின்றது.

மனித மனத்தைப் புனிதமாக்கி நல்ல மனப்பாங்கை அமைத்துக் கொடுப்பதில் சமயமானது முக்கிய இடத்தினை வகிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றது. இறைவழிபாடு தியானம் மற்றும் பல்வேறு சமயச் சம்பிரதாயங்களும் மேற் குறிப்பிட்ட தன்மையை மனிதனில் உருவாக்க முயல்கின்றன. மனிதன் இவற்றின் உபயோகத்தை நன்கு பயன்படுத்தி முக்கிய நோக்கான தனது உளத்தூய்மையை வலுவடையச்செய்ய முயலுதல் வேண்டும். சமயங்களின் உட்கிடைதான் மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழி கொடுத்துதவுகின்றது. இவ்வகையில் வழிகாட்டும் சமயவாழ்வானது ஊரறிய உலகறியப் பிறர் போற்றப் புகழ வாழும் வாழ்க்கையன்று. ஒவ்வொரு மனித உள்ளத்தின் புனிதப்பயணத்தின் முன்னேற்றமே சமயம் எனுமாற்போல் அமைவதாகின்றது. ஆன்ம ஈடேற்றத்திற்கு அவசியமானதெனக் கருதப்படுவதும் இதுவேயாகும். எவ்எவ் வழிகள் மூலம் உங்கள் மனதைத் தூய்மையானதாக்க முடியுமோ அவ்வவ்வழிகளை மேற்கொள்ளுங்கள் எனப் போதிக்கின்றது இந்துசமயம். இந்துசமயத்தைப் பின்பற்றுவோர் மட்டுமே ஈடேற்றத்தை அடைய முடியும் என அது கூறவில்லை. நதிகள் பலவாயினும் அவை இறுதியில் சமுத்திரத்தில் சங்கமிப்பது போல் அல்லது விளக்குகள் பலவாயினும் ஒளி ஒன்றே என்பது போல வழிகள் பலவாயினும் அடையும் இலக்கு ஒன்றே என்பதனை அடிநிலையாகக் கொண்டு திகழ்கின்றது. இறைவன் ஒருவனேயாவான் முனிவர்களும் ஞானிகளும் அவனைப் பல்வேறு பெயர்களால் வழிபடுகின்றனர் என்பதும் இந்து சமயம் காட்டும் தத்துவமாகும்.

சரீரங்கள் அனைத்திலும் மேம்பட்டது மானிட சரீரமாகும். இறைவனே மானிட சரீரத்தோடு தோன்றிப் பக்தர்களுக்கு அனுக்கிரகஞ் செய்துள்ளான் என்று புராணங்கள் கூறுகின்றன. இம்மானிட சரீரத்தைப் பெற்ற நாம் அதன் வாயிலாக இறைவனை அடைய முயற்சிக்க வேண்டும். நமது தேகத்தை தூய்மையுடையதாக வைத்திருக்க வேண்டும். அதேசமயம் உள்ளத்தையும் மாசு அடையாவண்ணம் பாதுகாக்க வேண்டும். உள்ளம் தூய்மையுடையதாக இருப்பின் அதுவே இறைவன் இருப்பிடமாக அமையும். ''இமைப்போது மென்னெஞ்சில் நீங்காதான் தாழ்வாழ்க'' என்று மணிவாசகரும் ''என் சிந்தை நீங்கா இறைவா போற்றி'' என்று வாகீசப் பெருமானும் திருவாய் மலர்ந்தருளியமை இதனை வலியுறுத்தும். ஆதலால் நாம் எம் உள்ளக்கோயிலில் இறைவனை இருத்தி இடையறாது வழிபடுவோமாகில் நாம் இப்பிறவித் துன்பத்திலிருந்தும் விடுபட்டு உய்வது திண்ணம் எனலாம்.

அடியார்களின் வாழ்க்கையை ஊன்றி ஆராயும் போது அப்பெருமக்கள் பால் அன்பெனுமாறு கரை புரண்டோடியதை யாண்டுங் காணலாம். அப்பரும், மணிமொழியாரும் பிறரும் பெற்ற அல்லலே - அந்த அல்லலிடைப் பிறந்த அமைதியே இன்று சைவத்தை வாழ வைக்கின்றன. சிலுவை ஏறி குருதி சிந்தி வதைப்பட்ட அந்த அன்பு நிலையே இயேசுவின் இரத்தமே இன்று உலக சமயமாக உருப்பெற்று ஓங்கி வருகின்றது. பெற்ற பெருஞ் செல்வத்தையும், உற்ற அரசையும் தங்கச் சிலை போன்று மங்கையையும் விட்டு, காடு சென்று துன்ப நீக்கத்திற்கு வழி காண விழைந்த அந்தபோதி நிழலின் பொன்றா ஒளி இன்று பௌத்தத்தை வாழ வைக்கிறது. இவ்வாறே எல்லாச் சமயங்களும் மாசு மூடப்படும் நிலையில் மாற்றப்பட்டிருப்பினும் அன்றைய அறப் பெரியாரது அன்பு வாழ்வே இன்றளவும் அச்சமயங்களை வாழ வைக்கின்றன.

**''அரனடிக் கன்பர் செய்யும்
பாவமும் அறமதாகும்
பரனடிக் கன்பிலாதார்
புண்ணியம் பாவமாகும்''**

என்னும் சித்தியார் கூற்றும் ஈண்டு சிந்திக்கத்தக்கது. இவ்வாறு அடியார்களின் வாழ்க்கையை ஆராய்ந்து பார்க்கும்போது சமய வாழ்விற்கு அன்பே அடிப்படையாக நின்று ஒளிர்ந்தது என்பது தெரியவருகின்றது.

சமய வாழ்வை மேற்கொள்வதற்கு இன்றியமையாது வேண்டப்படுவது கல்வி. கல்வி இன்றேல் கடவுள் இல்லை. சமயம் இல்லை என்று அன்றே அப்பர் கூறினார். ஆண்டவன் கற்றார் உள்ளத்தில்தான் வாழ்வார் என்றும், எனவே நாட்டுக்குக் கல்வி அவசியம் என்றும் காட்டுகின்றார்.

**''கல்லாதார் மனத்தணுகாக் கடவுள் தன்னைக்**
**கற்றார்கள் உற்று ஒரும் காதலானை''**

என்கிறார் அப்பர்.

கல்வி கற்பதோடு மட்டும் போதுமா? கற்றவர்கள் நாட்டில் இன்றும் பல கொடுமைகள் இழைக்கவில்லையோ? இன்றைய உலகில் வரும் இன்னல்களுக்கு படித்தவர்களேதான் காரணம். மணிவாசகர்கூட அதனால்தான் போலும்

''கற்றாரை யான் வேண்டேன்
கற்பனவும் இனி அமையும்''

என்றார். இது கொண்டு மணிவாசகர் கல்வியை வெறுக்கிறார் என்று கருதவில்லை. கல்வி மட்டும் போதாது. இன்னும் வாழ்வில் பல கொண்டு பல தள்ளி வாழ்வதே கல்வியின் பயனாகும் என்பது அவர் கருத்து. ''உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பல கற்றும் கல்லார் அறிவிலாதார்'' என்ற வள்ளுவர் கருத்தும் அதனால் எழுந்ததன்றோ! ஆகவே கல்வி கற்று அத்துடன் சமய அடிப்படைக் கருத்துக்களாகிய அன்பு, தன்னை ஒறுத்தல், சமூகத்தை வாழ வைத்தல், அனைத்தையும் மேற்கொள்ளவேண்டும். அவை உள்ளத்தில் இடம்பெற சில உளம் விட்டு அகல வேண்டும். அவை பொய், வஞ்சகம், வெஞ்சொல், புறங்கூறல், வீண் பொழுது போக்கல் முதலியனவாகும். அவற்றையெல்லாம் நீக்க வேண்டும் என்கிறார் அப்பர்.

''பொய்யனைத்தையும் விட்டவர் வுந்தி
யுள் மெய்யனை''

''வஞ்சமின்றி வணங்குமென் வைகலும்''

''வெஞ்சொல் இன்றி விலகுமின் நீடுற''

''பேச்சொடு பேச்சுக்கெல்லாம் பிறர்
தமைப் புறமே பேசக் கூசினேன்''

''பொழுதுபோக்கிப் புறக்கணிப்பதையும்''

என்றும் அப்பர் தம் தேவாரத்தில் ஆங்காங்கு குறிப்பிட்டுச் சென்றுள்ளார். எனவே இவையும் இவைபோன்ற பிற தீய செயல்களும் நீங்கினதே சமய வாழ்வு. அவ்வாழ்வே சமூகத்தை வாழவைப்பதாகும்.

பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும் என்று சொல்வதோடு நம் கடமை முடிந்துவிடவில்லை. எல்லோரும் ஓர் குலம் என்ற மனப்பண்பு நமக்கு வந்தாக வேண்டும். மணம் தரும் மலர்போல நம் மனத்தினைப் பக்குவப்படுத்தவே சமய வாழ்வு பயன்படுகிறது. சாதி என்றும் குலம் என்றும் பேசி மக்கள் இனத்தை வேறுபடுத்தும் பல கொடுமைகளைக் கண்டு கண்டு நைகின்றார் நாவுக்கரசர். அதுவும் சமயத்தின் பேரால் பல சாத்திரங்களை ஏற்படுத்திக் கொண்டு அச்சாத்திரங்களைப் பேசி அவற்றையே ஆதாரமாகக் கொண்டு குலமுறையும் சாதிமுறையும் காட்டும் கொடுமையைக் கண்டிக்கின்றார் அப்பர்.



★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சாத்திரம் பலபேசும் சழக்கர்காள்
கோத்திரம் குலமும் கொண்டு
என்செய்வீர்
பாத்திரம் சிவம் என்று
பணிவீரேல்
மாத்திரைக்குள் அருளும் மாற்
பேறரே"

என்பது அப்பர் வாக்கு ஆகவே சமய நெறியின் முன் எல்லா வேறுபாடுகளும் இல்லையாகக் கழிகின்றன. யாவராயினும் இறைவன் முன்பு ஒன்றே என்ற உணர்ச்சி ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் ஊற்றெடுத்து ஓடவேண்டும். தாழ்ந்தவனும் உயர்ந்தவனும் தேவனின் படைப்புக்கள், யாவரும் சமம் என்னும் உண்மையை நிலைநாட்டி சமமாக வாழும் நிலையை உண்டாக்கி எமது மனத்தைப் பக்குவப் படுத்தவே சமய வாழ்வு பயன்படுகின்றது.

அரிது அரிது மானிடராதல் அரிது, அதிலும் அரிது கூன் குருடு இன்றிப் பிறத்தல். சொல்லரும் பிறவிகளில் பிறந்திளைத்து ஆறு அறிவுடைய மானிடப் பிறவியை பெறற்கரிய பிறவியை பெற்ற நாம் நமது வாழ்க்கையை வளமுடையதாக இன்பமுடையதாக அமைக்க வேண்டும். ஈன்றாள் பசிகாண்பானாயினுஞ் சான்றோர் பழிக்குஞ் செயலை செய்யாது எல்லாப் பிறவிக்கும் பயனைத் தரக்கூடிய செயல்களைச் செய்வதன் மூலம் நிலையான வாழ்க்கைப் பயனை அடையமுடியும். தமிழ்மந்திரம் தந்த சிவயோகியாம் திருமூலர் பெருமான் இக்கலியுகத்தில் கூட எல்லோரும் மிக எளிதிலே செய்யக்கூடிய நான்கு கடமைகளை ஒரு அருமையான திருமந்திரத்தில் அமைத்துள்ளார். தமது நான்கு கட்டளைகளையும் யாவருமே மிகச் சுலபமாகச் செய்யலாம் என்று அவரே அறுதியிட்டுக் கூறுகின்றார்.

"யாவர்க்குமாம் இறைவற் கொரு
பச்சிலை
யாவர்க்குமாம் உண்ணும்
போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பசுவுக்கொரு
வாயுறை
யாவர்க்குமாம் பிறர்க்கு
இன்னுரைதானே"

திருமூலர் கூறியது அனைவருக்குமே பொருத்தமான நடைமுறைச் சமயக் கோட்பாடுகளாகக் கொள்ளத்தக்கவை. இவற்றைக் கடைப்பிடிக்கும்போது இல்லறத்தான் மானிடப் பிறவியால் கிட்டும் பேற்றினை பெறுபவன் ஆகின்றான் எனலாம்.

இறைவனை வழிபடும்போது இன்றைக்கு எத்தனையோபேர் எந்தெந்த வகையாகவோ வேண்டுகோளை விடுக்கின்றனர்' தாமும் தம்மைச் சேர்ந்தாரும் வாழவேண்டும் என்ற வேண்டுகோள்தான் பெரும்பாலும் காணப்படுகின்றது. ஆனால் அதுசமய அடிப்படைக்கு மாறுபட்டது. பண்ணார்ந்த பாட்டிசைத்துப் பரவிய தாயுமானவர் இறைவனை நோக்கித் தனக்காக வேண்டவில்லை. தனித்த சமூகம் வாழவும் வேண்டவில்லை. அனைத்துங்கும் அப்பால் சென்று அனைவரும் - உலகெலாம் அன்பில் வாழவேண்டும் - இன்புறவேண்டும் என ஏத்துகின்றார்.

"எல்லாரும் இன்புற்றிருக்க
நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்றறியேன்
பராபரமே"

என்றது அவர் உண்மை. ஆண்டவனைப் பொன்னும், பொருளும் போகமும் வேண்டவில்லை. அன்பு, அறன், அருள்

ஆகிய மூன்றையுமே வாழ்வுக்கு வேண்டிற்று. அந்த வேண்டுகோளையே ஒவ்வொரு சமயத்தவனும் வேண்டவேண்டும். அவ் வேண்டுகோள் சங்க இலக்கிய பரிபாடலில் காணப்படுகின்றது.

**"...................... யாம் இரப்பவை**
**பொருளும் பொன்னும் போகமும் அல்ல நின்பால்**
**அருளும் அன்பும் அறனும் மூன்றும்**
**அருள் இணர்க் கடப்பின் ஒலிதாராயே"**

இதுவரை கண்டவற்றால் "மனித வாழ்க்கையில் சமய வாழ்வு இரண்டறக் கலக்க வேண்டும். அக்கலப்பினாலே தான் மனிதன் முழு நிறைவுக்கான பக்குவத்தைப் பெறமுடியும் சமய வாழ்க்கை என்றால் மனிதவாழ்க்கையின் பக்குவ நிலையாகும்" என்பதை உய்த்துணர முடிகின்றது. எனவே இந்த முறையில் தனக்கென வாழாத் தனிப்பெருந் தன்மையிலே, நீக்க வேண்டிய குறைகளை நீக்கி, கொள்ள வேண்டிய நலன்களைக் கொண்டு தன்னை ஒறுத்து அப்பணியில் வாழினும் வீழினும் சோர்வடையாது கடமை ஒன்றையே கடைப்பிடித்து வாழின் தொண்டு செய்யின் அன்று சமயம் உண்மையில் வாழும் சமயத்தைப் பரப்ப விரும்புகின்றவரும், விரும்பவருகின்றவரும் வெறும் பேச்சில் இல்லாது செயலில் முன்னிற்க வேண்டும். செயல் பெரிது. "அரியவாம் சொல்லியவண்ணம் செயல்", என்றார் வள்ளுவர். எனவே அக்கொள்கைகளை. வாழ்வில் கடைப்பிடிப்பவரே உண்மையில் சமயத்தையும் சமூகத்தையும் வாழவைப்பவராவர் எனலாம்.

---

உ

## நல்லூரானே உணர்

"நல்லூரா உன் நினைவில் நாளும் இருந்தாற்தான்
சொல்லூரும் என் நாவில் என்றிடுவேன் - பல்லூரும்
ஓடிப் பெருகி என் கவிதை வாழுதற்கு
கூடிக்கலந்து கவி கூறு."

"அன்றோ எம் நதிகள் ஆரோகணம் பாடி
நன்றே சொல்லின எம் பெருமை — குன்றோனே
எப்படியோ எம் நதிகள் கிளை பிரிந்து நாகரிகம்
உப்பின்றிப் போவதை உணர்.'

— தி. திருக்குமரன்

மு. திருநாவுக்கரசு
ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி.

# மனிதப் பிறவியின் மாண்பு

மானிடப் பிறவியினைப் பெற்ற மனிதன் இப்பிறவி பற்றிபெருமை அடைகின்றானே அன்றி, இப்பிறவி எப்படி வந்தது இப் பிறவியைப் பெற காரண காரியங்கள் எவை? எல்லாப் பிறவிகளையும் விட அதி உயர்ந்த இப்பிறவியைக் பெற ஏதுவான மூல காரணிகள் எவை? என்று எண்ணுவதில்லை மறு மதத்தவர்கள் இது பற்றி எண்ணாமல் விட்டு விடநியாய முண்டு. ஆனால் ஒரு இந்து இதனை அலட்சியம் செய்து விட முடியாது. நம்மில் மிகப் பெரும் பாலோர் இது பற்றி என்றுமே எண்ணாத போதும், மகான்களும் யோகிகளும், சித்தர்களும், முனிவர்களும் அன்றும் இன்றும் இது பற்றி அயராது சிந்தித்த வண்ணம் இருக்கின்றனர்.

மேலை நாட்டு விஞ்ஞானிகள் அணுவைப் பிளப்பதிலும், அணு ஆயுதங்களைச் செய்து அவனியை எவ்வளவு விரைவில் எவர் அழிப்பது என்று கங்கணம் கட்டும் போது, நம் இந்து மத துறவிகளும், வேத விற்பன்னர்களும், நான் எங்கிருந்து வந்தேன்? எப்படி? எதற்காக? எனக்கு இவ் உடல் தரப்பட்டது இதனை வைத்து நான் எதனைச் சாதிக்க போகின்றேன்? இறுதியில் இவ் உடல் பிரிய இவ் உயிர் எங்கு செல்லப் போகின்றது? இப்படியான ஆராட்சியில் இறை உணர்வு உந்த வாழ்ந்த பெருமக்களின் வாழ்வும் அவர்கள் அவ்வப் போது அருளிய அரும் பெரும் உண்மைகளும், நம்மவரை மாபெரும் வியப்பில் ஆழ்த்தி நிற்கின்றது. மனிதனை விலங்கிடமிருந்து பிரித்து வைப்பது உள் உணர்வு தான் என கண்டனன் இந்து. இந்த உள் உணர்வை சிந்தனை என்றும், பகுத்தறிவென்றும், ஆறாம் அறிவென்றும் பல் தரப் பட்ட பெயர்களில் கூறுவர். இந்த ஆறாம் அறிவினை கண்டறிந்த மேலை நாட்டு விஞ்ஞானி அந்த ஆய்வுக்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டு இவ் அறிவு மானிடனுக்கு மட்டும் உரியது என கூறி விட்டான். மேலே சிந்திக்க அவனால் முடியவில்லை.

ஆனால் ஒரு இந்து இது பற்றி மேலும் ஆராய முற்பட்டான். அறிவினிலே கூட மாந்தர் கட்கிடையில் எத்தனை மாபெரும் வேறு பாடுண்டு; ஆறாம் அறிவு என்ற இந்த உள் உணர்வு பல்வேறு தரப்பட்டதாக விளங்குகின்றதே, இதன் மர்மமென்ன? ஒரு வெண்பாவை ஒரு முறை படித்ததும் மனப்பாடமாக்கிறான் ஒருவன். பிறிதொருவன் பல முறை படித்தும் சில வரிகளே நினைவில் கொள்கிறான். இன்னும் சிலர் எத்தனை தரம் படித்தும் எதுவுமே மனதில் நிற்பதில்லை. எனவே மேலை நாட்டு விஞ்ஞானியால் ஊகிக்க முடியாத வற்றை ஒரு இந்துவால் உணர முடிகின்றது. இப்படியாக மன நிலையில் மட்டுமல்ல, உடல், ஊக்கம், வல்லமை, பொலிவு, தோற்றம், ஆற்றல், இப்படியாக மனிதனுக்கு மனிதன் மிகப்பெரும் வேற்றுமையுடன் தோன்றுகின்றானே இதன் மர்மம் தான் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயின் மற்றும் தந்தையின் உடல், உள, சமூக நிலை தான் இதற்கெல்லாம் காரணம் என்பான் மேலை நாட்டு விஞ் ஞானி. ஆனால் அதே தாய்க்கும் அதே தந்தைக்கும் அதே ஊரில் பிறந்த ஏழு குழந்தைகளில் ஒன்று விஞ்ஞானியாகவும், ஒன்று கொலைகாரனாகவும், பிறிதொன்று மத போதகராகவும் இன்னும் ஒன்று ஊமையாக உரைஇழந்து நிற்பதையும் கண்டு அவ்விஞ்ஞானியால் விளக்கம் தர முடியவில்லை. ஆனால் இத்தகைய மர்மான விடயங்களை மக்கள் விளங்கும் வகையில் தக்க விளக்கம் தந்து நிற்பது இந்து மதம்.

ஒருவன் இப்புவியில் வாழும் வாழ்வு, அவன் மறுபிறவியில் எய்தும் ஏற்றத்தின் அளவுகோல் என்று சொல்வதுதான் இந்து மதம். இதன் உட்பொருளை ஊன்றி உணராத மேலைத் தேசத்தினர் இன்று இந்து மதம் சொல்வதை ஏற்கத்தான் வேண்டு மென்ற முடிவுக்கே வந்துள்ளனர்.

இதனை உலக வாழ் மக்கட்கெல்லாம் உணர வைக்கத் திருவுளம் கொண்ட முருகவேள் அறிவின் சிகரமாக விளங்கிய ஔவைப்பிராட்டியார் மூலம் அவனிக்கே அறிவித்த பாங்கு எண்ணி எண்ணி இன்புறத் தக்கது. இக் கருத்தை ஔவையார் மட்டுமன்றி அனுபூதிச் செல்வர்கள் பலரும் ஆராய்ந்து அறியத் தந்துள்ளனர்.

தாயுமானவர் என்னும் தத்துவம் பல சொன்ன மேதையும் கூட இக் கருத்தை

''எண்ணரிய பிறவிதனில் மானுடப் பிறவிதான்
யாதினும் அரிது அரிது காண்''

என ஓங்கி உரைத்ததோடு

''இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ
எதுவருமோ அறிகிலேன்'' என்று

ஒருபெரிய ஐயப்பாட்டையும் குண்டாகத் தூக்கி போடுகின்றார். இப்பிறவி முடிவுற்றதும் அடுத்து என்பனை எப்பிறவி தவஞானசீலரான தாயுமானவராலும் கூறமுடியவில்லை. ஆனால் அறிவின் சிகரமான ஔவைப்பிராட்டியோ இதனை ஒரு வகையில் தெளிவுபடுத்த முற்படுகின்றார். இதனை விரிவுபடுத்த இடம் போதாமையால், சுருங்கச் சொல்லின்-

-அரிதிலும் அரிது இம் மானிடப்பிறவி இதிலும் அரியது எது எனில் கூன், குருடு, செவிடு, பேடு நீங்கிப் பிறந்தோமே அது அரியது. இதைவிட மிக அரியது ஞானமும் கல்வியும் பெறுவது. இவை அனைத்தும் பெற்றவன் பேறு பெற்றவன். ஆனால் இவையனைத்தையும் ஒன்று சேரப்பெற்றவன் இவற்றால் ஒன்றைப் பெற்றாக வேண்டும். அப்படி அவன் பெறாது விடின் இவை அனைத்தும் பெற்ற பலன் எதுவுமில்லை. ஆக, இவையனைத்தையும் ஏன் பெற்றோம் என அதே ஔவை மூதாட்டியிடம் கேட்டால், அதற்கு அவள் சொல்லும் பதில் உனக்கு இத்தனையும் தரப்பட்டது ஏனெனில் ''தானமும் தவமும் தான் செய்வராகில் வானவர் நாடுவழி திறந்திடுமே'' என்று கூறுகின்றாள். இதில் இருந்து ஔவையாரின் மதிநலம் புரிகின்றது. வானவர் நாடு எனும் விண்ணுலகம் நண்ண வேண்டுமானால் அங்கு ''டபிள் லொக்'' போடப்பட்டுள்ளது. எனவே இரு கதவுகளை நீ திறந்தாலன்றி உட்பிரவேசிக்க முடியாது என்பதை மிக நுட்பமாகச் சொன்னது அவள் மதிநலம். இத்தகைய இரு பூட்டுக்களும் தான் எவை என கேட்கின் முதலாவது பூட்டு தானம் அடுத்தது தவம் - இவ்விரண்டு பூட்டையும் திறக்காதவன் வானவர் நாட்டுக்கு வழி அறியாது வருந்துவான் என்பதே இதன் உட்பொருள். நல்லதோர் மானிடன் கூன், குருடு, செவிடு, பேடு நீங்கிப்



★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்தானாயினும், நல்ல பண்பாளனாக வாழ்ந்தானாயினும், பாஸ்போட் அவனுக்கு இங்கு கிடைத்தாலும் கூட 'விஸ் என்னும் உட்செல்லும் அமைதியைத் தரும் வீசா கிடைக்க மாட்டாது. இதனால் விண்ணுலக வாழ்வு நிராகரிக்கப்படும். இதனால் அவன் மீண்டும் பிறந்தே ஆக வேண்டும்.

இந்தக் கருத்தை தன் நுண் அறிவால், விளக்கிய வள்ளுவனது குறள் எண்ண எண்ண இன்பம் பயப்பதாகும்.

''ஈதல் இசைபட வாழ்தல்
அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு''

இம்மண்ணில் பிறந்தோரது உடலோடு ஒன்றியிணைப் பிரியாது நிற்பது உயிர். இவ்வுயிர் பிரிந்ததும் உடல் பிணமாகி விடும். உடல் அழியும். ஆனால் உயிரோ அழிவதில்லை. இவ் உயிர் உடலை விட்டுப் பிரிந்ததும் அது வெறுமனே செல்வதில்லை. இத்தனை காலமும் உடலிடை ஒளிந்து நின்ற உயிர், இப்போ தனக்கு ''ஊதியம்'' தா என்று கேட்டு நிற்கும். இவ் ஊதியம் தான் எது? இவ் உடல் தான் சேர்த்து வைத்த பணம், பண்டம், நகை நட்டு, வங்கியில் இட்ட பணம், இவற்றை அந்த உயிர் ஒருபோதும் ஏற்பதில்லை. ஏற்கவும் முடியாது. அப்போது உயிர் கேட்கும் ஊதியம் தான் எது என ஆராயின், ஈதல் என்ற பதத்தால் நீ பதிலுபகாரம் பாராது, விளம்பர நோக்கமின்றி எதை எதை தருமதானமாக கொடுத்தாயோ, அத்தோடு நீ எப்படி வாழ்ந்தாய் என்பதையும் கணக்கில் சேர்க்கவேண்டும். இசைபட வாழ்ந்தாய் என்றால் அதனையும் உன் கணக்கில் சேர்க்கப்படும். இசைபட வாழ்ந்தால் என்ற பதம் பரந்து விரிந்து நிற்கின்றது. இனிமை மிக்கதாய் எல்லோரையும் இணைத்து இசைவிப்பதான பண்புள்ளதான அன்பு சேர் பண்பு மிகு வாழ்வினை நீ பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பி வாழ்ந்திருந்தால், இதுவும் உன் இறுதிக் கணக்கில் சேர்க்கப்படும்.

மறுபுறத்தே ஈதலை அறியான் வாழ்வு, இசைபட வாழான் வாழ்வு-பரமனை மதியான் வாழ்வு பகுத்துண்டு உண்ணான் வாழ்வு - பல் உயிர் ஓம்பான் வாழ்வு-பிரிந்து செல்லும் உயிருக்கு கொடுப்பதற்கு என்ன உண்டு.

இக் கருத்தையே ''காதற்ற ஊசியும் வாராது காணும் கடை வழிக்கே'' என்ற பட்டினத்துப் பிள்ளையின் பாடலும், பற்றித் தொடரும் இருவினைப் பாவ புண்ணியமே என்ற வாக்கும் விளக்குகின்றன.

எனவே மாதவம் செய்து மானிடனாகப் பிறந்த பின்பும் இப் பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ? எது வருமோ? என ஏங்கும் ஒரு இந்து வையத்து வாழ் வாங்கு வாழவும், வாழ்ந்து முடிந்ததும் ஏற்றமுறு மறுபிறவியினைப் பெறுவதற்கும் வழிகாட்டி நிற்பது நமது இந்து மதம்.

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்
நூலோர்
தொகுத்தவற்றுளெல்லாம் தலை

யோகேஸ்வரி சிவப்பிரகாசம் B.A.(Hons), A.I.B.(Sri Lanka)
முகாமையாளர், மக்கள் வங்கி, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

# வல்வினையின் வேர் தடிய

போர்! எத்தனை முயன்றும் முடிவு காணாது, தொடரும் போர்! போரின் உக்கிரத்தைத் தாங்க முடியாது அத்தனை பொருட்களையும் அப்படியே விட்டுவிட்டு, உயிர்காப்பதற்காய் ஓடினோம். இடம் பெயர்ந்தோம் ஆசையாய்ப் பார்த்துப் பார்த்துத் தேடிவைத்த, மிகக் கவன மாகப் பாதுகாத்து வைத்திருந்த பொருள் கள் அத்தனையும் அழிந்து விட்டன. பெற்றும் பேணி வளர்த்தவர்கள் கொலை யுண்டார்கள். ஆசை அருமையாய்த் தவ மிருந்து பெற்ற பிள்ளைகள் கண்முன்னே கொல்லப்பட்டார்கள், அல்லது காணா மற் போனார்கள், காக்க நினைத்த உயிர் - அல்ல அல்ல - உடல் ஒரு குண்டு வெடிக்க இருந்த இடந்தெரியாமல் கூழா கிப் போனது.

''இறைவா'' என்ன பாவம் செய் தோம்? எங்களைக் காப்பாற்று, நாங்கள் எங்கள் வீடுகளுக்குப் போக வேண்டும்.'' இதுதான் பெரும்பாலோரின் பிரார்த் தனையாக இருந்தது. இறை சிந்தனை அற்றோருமிருந்தனர். போர் நிற்க வேண்டும், சாந்தியும் சமாதானமும் ஏற் பட வேண்டுமென்றும் சிலர் பிரார்த்தித் தனர்.

பலரின் பிரார்த்தனையை இறைவன் ஏற் றுக்கொண்டான் போலும், என்ன கார ணங் கூறினாலும் அது அவனது அருள் தான். 1996 ஏப்ரலில் மீண்டும் நாம் வாழ்ந்த இடத்திற்கு வர முடிந்தது, ஆனால் ஏற்பட்டிருந்த அழிவுகளும் இழப் புகளும் மனதிற்கு வலி கொடுத்தன.

''இண்டைக்கு நல்லூர் திறந்தாச்சாம் பூசை நடக்குதாம்''

பலரும் இப்படிப் பேசிக்கொள்கிறார் கள். நல்லூர் என்றால் அங்கு இடங் கொண்ட நல்லைக்கந்தன் கோவிலைத் தான் குறிக்கும்.

வலிகாமத்தைவிட்டு அனைவரும் இடம் பெயர்ந்து சென்றிருந்த ஆறு மாதங் களும் நல்லைக்கந்தனைக்காணாத தவிப்பில் அவனைக் காணச் சென்றேன், பூசை முடி யும் நேரம் ஆறுமுகனுக்கு ஐயா அர்ச்சனை செய்து கொண்டிருந்ததார். அழிவுகளை யும், இழப்புக்களையும், அட்டவணை யிட்டு அவனிடம் முறையிட்டுக்கொண்டி ருந்தது என் மனம்.

'ஏன் இப்படியெல்லாம் நடக்கிறது?'' வேதனையோடு அவனிடம் கேட்டேன், அவன் மந்தஹாஸத்துடன் அமர்ந்திருந் தான்.

ஐயா திருநீற்றையும் அர்ச்சனை மலர் களையும் தந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பாருங்கோ, கோயிலுக்குள்ளை வந்து மணி கேட்டதும் நடந்ததெல்லாம் கனவு போலை போய் ஏதோ முந்தியிருந்த மாதிரியே இருக்குது,'' ஐயா கூறினார்.

உண்மை,

யாருமே அதை மறுக்க வில்லை. என்மனமும் முற்று முழுதாக அக்கூற்றை அங்கீகரித்தது, அங்கே நிற்கும்போது அப்படியோர் உணர்வுதான் ஏற்பட்டது. நடந்து முடிந்தவை கனவாகத் தான்தெரிந்தன, சிந்தித்தும் பார்த்தேன்.

எங்கள் வாழ்வில் நடந்தவை அனைத்தும் கனவுபோலத்தான் ஆகிவிடுகின்றன. நான் இறந்து விட்டால் என்னை அறிந்தவர்கள் இருக்கும் வரை என்னை அவர்கள் நினைக்கக் கூடும். அதன்பின் அனைத்தும் மறைந்துவிடும், இந்தக்கனவு வாழ்விலே எத்தனை ஆசாபாசங்கள், போட்டி பொறாமை, சண்டைசச் சரவு, ஏமாற்று, மோசடி, போர் ………

திரும்பி எதிர்த் திசையில் பார்க்கிறேன் ஆறு முகங்களும் அணி முடிகளாலும், பட்டாடையும் பொன்னாபரணங்களும், அணி மணித் தண்டைகளுமாய் வள்ளி, தெய்வ நாயகிசகிதம் காட்சி தந்த முருகன், அத்தனையையும் விலக்கி ஆண்டியாய் அங்கே நிற்கின்றான், பழனியாண்டவனை நோக்கி என் கரங்கள் குவிகின்றன, அத்தனையையும் விலக்கியதன் மூலம் அவன் விளக்கியது என்னவோ ?

மெஞ்ஞானம் பெற அனைத்தையும் துறக்க வேண்டுமென உணர்த்துகிறானோ? பொன்னும் பொருளும் பொய்மாயை? அவற்றைத் துறந்தால் ஆனந்தமடையலாம் என்பதை உணர்த்த ஆண்டியாய் காட்சி தருகிறானா?

நொந்திருக்கும் உள்ளங்களுக்கு, ''நீ இழப்புகள் என்று நினைப்பவை இழப்புகளல்ல, மாயத் தோற்றங்களின் மறைவு மட்டுமே, நீ மெய்யென்று நினைத்தவை அனைத்தும் பொய், வெறும் மாயை'' எனக் கூறுவது போலத் தோன்றியது.

''மாந்தர் குடி வாழ்க்கை மண்ணின்
கலம் போலச்
சாந்துணையுஞ் சஞ்சலமேதான்''

என்னும் ஔவையார் அருளிய நல்வழியின் வரிகள் நினைவிற்கு வந்தன.

''ஏகம் சத்'' ''உள்ளபொருள்
ஒன்றே''
''அஹம் பிரஷ்மம் அஸ்மி'' ''நான்
பிரம்மமாக இருக்கிறேன்''

என்ற உபநிடத தத்துவ உபதேசங்கள் மனதுள் பளிச்சிடுகின்றன.

நான் ஆகிய ஆத்மா பிரம்மம் தான். ஆனால் மலங்களால் சூழப்பட்டு அது பிரகாசிக்க முடியாது கிடக்கிறது.

ஒரு பொருளுங் காட்டா திருளுருவங்
காட்டும்
இரு பொருளுங் காட்டா திது.

என்று திருவருட்பயன் கூறும்

இருளானது பிறபொருள்களைக் காணவிடாது. ஆனால் தன்னைக் காட்டும் மலங்களோ தன்னையுங்காட்டாது. பிற பொருள்களையுங் காட்டாது. இருளிலுங் கொடிய மலங்களை அழித்தால் ஆன்மா விடுபட்டு வீடுபெறும். மாயா மலங்களை அழிப்பது ஞானசக்தி அந்த ஞானசக்தியே முருகன் கைவேலாக விளங்குகிறது. வேலை நாம் முருகனாகக் கண்டு வணங்குகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வினை ஓட விடுகதிர் வேல்
மறவேன்''

என்கிறது கந்தரனுபூதி. வேலிலிருந்து பிறக்கும் கதிராகிய ஞானசக்தி வினையை ஓட்டி விரட்டும்.

''பகர்வேல் தனை விடுத்து
சூர் தடிந்தாய்
அன்றே தொழும் அடியேம்
வல்வினையின் வேர் தடிந்தாய்''

என்று கந்தபுராணம் கூறும். வல்வினையை அது எப்படி அழிக்கிறதென்பதைக் கச்சியப்பர் ''வல்வினையின் வேர் தடிந்தாய்'' என அழகாகக் கூறுகின்றார். வேரோடு அழித்தால் மீண்டும் தோன்றும் சாத்தியமே இல்லையே.

ஆனால் அயில்வேல் அரசனே வந்து எம்வினை நீக்கி மலங்களின் பிடியிலிருந்து விடுவித்தாலன்றி அவற்றின் பிடியிலிருந்து விடுபடுதல் அரிது.

எவ்வளவு உபதேசங்களைக் கேட்டும் வாசித்தும் நிதர்சனமாக நிலையாமையைக் கண்டும் எம்மால் அந்த மாயையிலிருந்து விடுபட முடியவில்லையே. உதாரணமாக கோவிலை விட்டு வெளியே வந்ததுமே மீண்டும் அதுவே விசாரமாய், எங்கெங்கு சென்று என்னென்ன பொருள்கள் சேர்க்கலாமென்ற அங்கலாய்ப்பில் அலையப்போகிறேன்.

**தெய்வ மென்பதோர் சித்தமுண்டாகி
முனிவி லாததோர் பொருளது கருதலும்
ஆறுகோடி மாயாசக்திகள்
வேறு வேறுதம் மாயைகள் தொடங்கின**

என்ற போற்றித் திருவகவல் இந்நிலையைத் தான் விளக்கியதோ?

அப்படியல்லாது அத்தனை சுலபமாக நிலையாமை பற்றிய ஞானம் ஏற்பட்டு பக்குவப்பட முடியுமானால் இந்த உலகம் இப்படியிருக்குமா? போரிடக் காரணமே இல்லாது போக, அனைத்தும் அனைவருக்கும் உரியதென்ற நிலையில் உலகம் அமைதியும் ஆனந்தமும் பக்திமயமாகவுமல்லவா இருக்கும்!

**ஆசைப்படப்பட ஆய்வரும் துன்பங்கள்
ஆசைவிடவிட ஆனந்தம் ஆமே**

என்று திருமந்திரம் கூறுகின்றது.

அவனருளாலேதான் அவனை உணரலாம். இருவினை நீக்கி எம்மை ஆட்கொள்ள அவன் வரவேண்டும்.

ஆணவ அழுக்கடையும் ஆவியை
விளக்க அநு
பூதிஅடைவித்ததொரு பார்வைக்காரனும்

என அருணகிரியாரும்

இதனையே கூறுகிறார். நாம் வேதனைகளிலிருந்து விடுபட்டு வீடு பேறடைவதற்கு அவனது அருள் நோக்கு சித்திக்கும், ஞானவேல் எம் வினையை வேரறுக்கும் நாள் வரவேண்டும் என வரம்வேண்டி அனுதினமும் முருகப் பெருமானைப் பிரார்த்திப் போமாக.

## நல்லை முருகனே

முந்தை வினை தீர்க்கும் முருகப் பெருமானை
சிந்தை கொள்வாய் மனமே
பந்த பாசம் கடந்த கந்தமுருகேசனை
வந்தனை செய்வோம் தினமே!
தில்லை நடம் புரிந்து அல்லல் போக்கும் அருள்
வல்ல சிவனார் மகனே!
எல்லை கடந்து நின்று தொல்லை தீர்த்தருள்வாய்
நல்லைப் பதிவாழ் முருகனே.

மட்டுவில்,
— வாசுகி சதாசிவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரம்ஸ்ரீ காரை கு. சிவராஜசர்மா

# முருகன் பெருமை

முருகன் தமிழர் கடவுள், அறிவுக் கடவுள், தமிழ்ப் பெண்ணாகிய வள்ளியை மணந்த மாப்பிள்ளை. அகஸ்திய முனிவருக்கு தமிழைப் போதித்த ஆசான். சிவபெருமானுக்கு பிரணவத்தின் பொருளை உபதேசம் செய்தார். அருணகிரிநாதருக்கும் உபதேசம் செய்தார்.

சிவம் - சத்து. உமை - சித்து, முருகன் ஆனந்தம். இது தான் சோமாஸ்கந்த முகுர்த்தம். விநாயகர் சிவபுத்திரனாக இருந்தும் சிவனுக்கும் உமைக்கும் இடையில் விநாயக மூர்த்தி அமைவதில்லை. முருகனே அமைந்துள்ளான். இதனால் முருகன் ஆனந்த வடிவம் என்பதும் அப்பரம் - பொருளை வழிபட்டோர் ஆனந்தம் பெறுவர். இந்த ஆனந்தத்தை அருளவல்ல மூர்த்தி ஒன்றேயாம். இதனால் முருகனுக்குரிய அர்ச்சனை மந்திரம் ஒன்று ''ஆனந்தாய நம'' என்று கூறுகின்றது. கலியுகத்தில் வரங்களை அருள்பவர் கலியுகவரதன் கந்தனே.

கருணை வடிவமாகிய முருகன் வாள், வேல் முதலிய ஆயுதங்களை ஏந்தியிருப்பது கொடுமையின் அடையாளம் அன்று. வேல் என்பது ஞானம்; வாள் கூர்மை அறிவுக்கு மூன்று இலக்கணமுண்டு. ஆழம், அகலம், கூர்மை. வேலின் அடிப்பகுதி ஆழமாக இருக்கின்றது. நடுப்பகுதி விசாலமாக இருக்கின்றது. நுனிப்பகுதி கூர்மையாக இருக்கின்றது. ''ஆழ்ந்த கன்ற நுண்ணியனே'' என்று மாணிக்கவாசகர் கூறுகின்றார்.

கந்தனின் பெருமையினை நிலைநிறுத்த இந்து மதம் பல வழிகளைக் கையாண்டுள்ளது. கதை, பாட்டு, நாடகம், கூத்து, கந்தபுராணப் படிப்பு போன்று பல்வேறு வடிவங்களில் பக்தர்களைக் கவர்ந்து இழுத்து சமய நீதித் தத்துவத்தினைப் போதிக்கின்றது. இதன் மூலம் நல்ல சமுதாயத்தை உருவாக்க முடியும் என்று முருக பக்தர்கள் கூறுகின்றார்கள்.

முருகனை சூரபத்மன் கூட யுத்தம் முடிகின்ற நேரத்தில் புகழ்ந்து கூறுகின்றான்.

**கோலமா மஞ்ஞை தன்னில்**
**குலவிய குமரன் தன்னை**
**பாலன் என்றிருந்தேன் அந்நாள்**
**பரிசிலை உணர்ந்திலேன் யான்**
**மால் அயன் தமக்கும் ஏனை**
**வானவர் தமக்கும் யார்க்கும்**
**மூலகாரணமாய் நின்ற**
**மூர்த்தி இம் மூர்த்தியன்றே**

கந்தபுராணம்

சிறு பிள்ளையாக கைலையங்கிரியில் விளையாடிக் கொண்டு இருந்தவரை பாலன் என்று நினைத்தேன். அந்த நேரம் முருகனின் பெருமை எனக்குத் தெரியவில்லை. திருமால், பிரமன் போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவர்களுக்கும் மூலமாக இருக்கின்றவர் முருகன், அல்லவா? என்பதை எனக்குத் தெரியவில்லையே என்று வருந்துகின்றான்.

முருகனின் திருஉருவம், சிவந்தமேனி அபய வரதத்துடன் கூடிய கரங்களும் மார்பில் சாய்ந்த வேலும் திருவடியில் மயிலும் தாமரை ஏந்திய கரத்துடன் வள்ளிதேவி வலத்திலும் நீலோற்பவம் ஏந்திய கரத்துடன் தெய்வயானை இடத்திலும் தோளில் அருணகிரிநாதர் கிளிவடிவத்திலும் அமையப் பெற்றிருக்கிறது. இறைவன் மூன்று திருக்கண்களை உடையவன். சந்திரன், அக்கினி, சூரியன் என்ற மூன்று சுடர் பூக்களே, மூன்று கண்கள் முருகன் இமையா நாட்டமுடையவன். தாமரை சூரியனைக் கண்டு மலர்வது. நீலோற்பவம் என்ற குமுதம் சந்திரனைக் கண்டு மலர்வது. இறைவனை அடுத்து இருப்பவர்களின் வாழ்வு சுருங்காது. முருகனின் வலப் புறத்தில் விளங்கும் வள்ளி தேவியின் திருக்கரத்தில் தாமரை வல நேத்திரமாகிய சூரிய ஒளி பட்டு அறுபது நாழிகை சுருங்காமல் மலர்ந்த வண்ணமாக இருக்கும். இடது புறத்தில் தெய்வயானை அம்மையின் கரத்தில் உள்ள நீலோற்பவம் இட நேத்திரமாகிய சந்திர ஒளிபட்டு அறுபது நாழிகையும் மலர்ந்தே இருக்கும். முருகப் பெருமானை உள்ளன்புடன் உபாசனை செய்பவர்களின் வாழ்வு என்றைக்கும் மலர்ந்து இருக்கும் என்பதை உணர்த்துகிறது. இரண்டு தேவிமார்களின் கரங்களிலும் தாமரையே இருப்பது போன்று அமைந்து இருப்பது பொருத்தமற்றது.

தெய்வயானை - கிரியாசக்தி (செயல் திறன்) வள்ளிநாயகி - இச்சாசக்தி (விருப்பத்தின் ஆற்றல்) இந்த இரண்டையும் இசைவித்துக் கொள்ளும் ஞான சக்தியை முருகக்கடவுளின் வேலாயுதம் குறிக்கின்றது. முருகவேளின் வலப்புறத்தில் வள்ளி நாயகி, இடப்புறத்தில் தெய்வயானை அவருடைய திருக்கரத்தில் வேலாயுதம்.

மனிதர்களுக்கு இன்றியமையாத தேவைகள் மூன்று இம்மை, மறுமை, வீடு என்பன. இந்த மூன்று நலன்களையுந் தரவல்ல தெய்வம் முருகவேள் எம்பெருமான் தன் வலப்பக்கத்தில் அமர்ந்துள்ள வள்ளி இம்மண்ணுலகில் அவதரித்தவர். அவர் மூலம் இக வாழ்வைத் தருவார். தன் இடப்புறத்தில் அமர்ந்துள்ள தெய்வயானையம்மை மூலம் சுவர்க்க இன்பம் தருவார். தன் திருக்கரத்தில் அமைந்துள்ள வேலாயுதத்தால் வீடு பேற்றினை வழங்குவார். கூற முடியாத அளவு பெருமைகள் வாய்ந்த முருகப் பெருமானை எப்பொழுது, எப்படி வணங்கி அருள் பெறுவது? காலத்திற் செய்கின்ற கருமங்கள் ஒன்றுக்கு ஆயிரமாகப் பெருகி நன்மை செய்யும். ''பருவத்தே பயிர் செய்'' என்ற பழமொழியை உணர்க. புண்ணிய விரத நாள்களில் செய்கின்ற தானத்திற்கும் ஜெபதவத்திற்கும் நிரம்பிய பலன் உண்டு. விரதங்கள் இருந்து. பெருமானை வழிபடுவது தொன்று தொட்டு வந்த பழக்க வழக்கம்.

இந்து மதம் விரதங்களை விபரமாகக் கூறுகின்றது. பலவிதமான விரதங்கள், வழிபாடுகள், கிரிகை முறைகள் என்பன உலகில் வேறு எந்த மதத்திலும் இல்லாத அளவுக்கு இந்து மதத்தில் உண்டு, அத்தனையும் அர்த்தபுஸ்டி உள்ளவை. விஞ்ஞானமயமானவை. ''முழுவதும் உண்மை''என சமீபத்தில் வாழ்ந்த யோகர் சுவாமிகள் கூறியுள்ளார். அவற்றில் மிக கடுமையான விரதம் முருகனுடைய கந்த சட்டிவிரதமே. ஐப்பசிமாத சுக்கில பட்சப் பிரதமை முதல் சட்டி ஈறாக வரும் ஆறு நாள்களும் கந்தசட்டி விரதம் அனுஷ்டிக்கப் படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுநாட்களும் உபவாசம் இருப்பது உத்தமம். மாலையில் பால் பழம் உண்ணலாம். அல்லது முதல் ஐந்து தினங்களும் ஒரு நேரம் சாப்பிட்டு சட்டி (இறுதி நாள்) உபவாசம் இருக்கலாம். அடுத்த நாள் பாரணை செய்தல் வேண்டும். இதுவும் முடியாதவர்கள் காலை உணவை விடுத்து மத்தியானம் உணவை உண்டு இரவு இலகுவான பலகாரங்களை உண்டும் இருக்கலாம். மாதம் தோறும் சுக்கில பட்ச சட்டியில் பழம், பால், மிளகு உண்டு விரதம் இருப்பது உத்தமம்.

விரதம் அனுட்டிக்கும் பொழுது விடியுமுன் நித்திரை விட்டெழுந்து காலைக் கடன்களை முடித்தல் வேண்டும். தோய்த்து உலர்ந்த வஸ்திரம் தரித்து அயலில் உள்ள ஆலயம் செல்லல் வேண்டும். அங்கு நடைபெறும் விசேட ஆராதனைகளில் கலந்து கொள்ளல் வேண்டும். தியானம் செய்தல் புராண படலம்கேட்டல் வேண்டும்.

மனம் பொறிவழி போகாது நிற்றல் வேண்டும். அதாவது உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனதை அலைய விடாது மனம், வாக்கு காயம் என்னும் மூன்றினாலும், வழிபடல்வேண்டும். தனிய உபவாசம் மட்டும் இருப்பதால் பயன் குறைவு. அதுவெறுமனே பட்டினி இருத்தலேயன்றிவிரதம் அல்ல.

சட்டிக்கு அடுத்த நாள் காலை பாரணை செய்தல் வேண்டும். முருகனுக்கு முகங்கள் ஆறு. ஆறுபடை வீட்டில் உறையும் முருகன் எனவே சட்டிவிரதமும் ஆறு நாள்கள். ஆறு ஆண்டுகளுக்குத் தொடர்ந்து இருத்தல் வேண்டும். முருகனின் கவசம் ஆறு, கந்தசட்டிக் கவசம் ஆறையும் தினமும் பாராயணம் செய்தல் வேண்டும். ஆறு கவசத்தையும் ஒருதரம் படித்தால் போதும். ஆறுதரம் படித்தால் அதிவிசேடமாகும்.

மிகுந்த நோய்வாய்ப் பட்டவர்கள் படுக்கையில் இருந்தவாறே ஆறு முறை செய்தால் அல்லது முப்பத்தாறுமுறை பாராயணம் செய்தால் அதிகபலன் கிடைக்கும். ஒருமுகப்பட்ட உள்ளத்துடன் அன்போடு ஓதியோர் மிகப் பெரியபலனைப் பெறுவர். இது பிறவிப் பிணிக்கு மருந்து. அட்சர சுத்தியுடனும், ஆசாரத்துடனும் சொல்வது நல்லது. இயலாதவர்கள் தம் ஆற்றலுக்கு ஏற்ப பாராயணம் செய்தால் பரம் கருணைக் கடலாகிய முருகப் பெருமானின் கடைக்கண் அருளைப் பெறமுடியும்.

**"துதிப்போர்க்கு வல்வினை போம்,**
**துன்பம் போம் நெஞ்சிற்**
**பதிப்போர்க்கு செல்வம் பலித்து கதித்**
**(து) ஓங்கும்**
**நிஷ்டையும் கை கூடும் நிமலர் அருள்**
**கந்தர் சஷ்டி கவசம் தனை"**

சட்டி கவசத்தை படித்து வணங்கினால் முருகன் அருளினால் கொடிய தீய வினைகள் எல்லாம் போகும். துன்பமும் இல்லாமல் சென்று விடும். மனதில் பதித்து வணங்கினால் பொருள்களாக வந்து சேரும். தியானம் செபம் என்பன சித்திக்கும் என்று காப்புச் செய்யுள் கூறுகின்றது.

மேற்படி விரதத்தை கைக்கொள்ளும் போது எங்கள் உடலில் பாரிய மாற்றங்கள் ஏற்படுகின்றது. என்று ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். உடலில் உள்ள அழுக்குகள் நீங்கும். சீரண உறுப்புக்களாகிய குடல்கள் பலம் பெறும். உடலில் இருக்கின் நச்சு நீர் மறைந்து விடும். உடலின் எடை குறையும், கொழுப்புச்சத்துக் கரையும், உடலில் உள்ள சளித்தன்மை நீங்கும். ஊளைச்சதை என்கின்ற வேண்டாத சதை கரைந்து விடும். இதனால் உடல்

அழகு பெறும், இளமை நீடிக்கும். அது மாத்திரம் இல்லாமல் மூளை புதிய உத்வேகத்துடன் செயற்படும். சிந்தனைத் தெளிவு உண்டாகும். இப்படியான மாற்றங்களை கண்கூடாகவே பார்க்க முடியும் என்று ஆய்வாளர்கள் மட்டுமன்றி விரதம் அனுட்டித்தவர்களும் கூறுகின்றார்கள்.

உபவாசத்திற்கும், உடல் நலத்திற்கும் தொடர்புண்டு. சதா உண்டு உண்டு வயிற்றை நிரப்புகின்றோம். உணவுகளைச் சமிபாடடையச் செய்யும் கருவிகளுக்கு மாதத்திற்கு ஒருநாள், ஆண்டுக்கு ஆறு நாளாவது ஓய்வைக் கொடுக்க வேண்டாமா? ஓய்வு தருவதால் மிகுந்த உடல் நலம் உண்டாகும். உபவாசத்திற்கு மறுநாள் உடம்பு மிக்க ஆரோக்கியமாக இருக்கும்.

ஏன் நாம் விரதம் இருக்க வேண்டும். பட்டினி வேறு விரதம் வேறு. உணவு இன்றி உபவாசம் இருப்பதனால் மனம் முதலிய கருவிகள் ஒடுங்கும். அதனால் தியானம் புரிய நிரம்ப வசதி உண்டு. நன்றாக செபதபம் புரியவும் இறைவனை ஒரு மனதுடன் வழிபடவும் முடியும். ஆதலால் உபவாசத்தை எல்லோரும் கந்தசட்டியில் மேற்கொள்வது உத்தமம். சட்டிவிரதம் இருக்கும் பெண்கள் தாய்மைப் பேற்றினை அடைவர் ''இதனை சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும்'' என்று முன்னோர்கள் கூறிவைத்துள்ளார்கள், எனவே ஆண்கள், பெண்கள் இருபாலரிலும் பிள்ளைப்பேறின்மை நீங்க சட்டி விரதம் ஒருகொடையாகும்.

இகபர நலன்களை எளிதில் தரவல்லது முருக விரதம். எனவே எல்லோரும் முருகனை வணங்கி பேரின்பப் பெரு வாழ்வைப் பெறுவோமாக. ❊

## வாழி வாழி

நல்லைக் குமரன் மலர் மலர் வாழி
யாழ் மா நகர சபை வாழி
எல்லை இல்லாப் பிரபஞ்ச
ஏகப் பொருளே நீ வாழி
அழகுச் சுடர் ராம் வேல் வாழி
ஆய்வுப் பொருள் தந் தோர் வாழி
பழகு தமிழின் சுவை வாழி
பண்பும் அறனும் மிகவாழி
உலகிற் சைவம் மிகப் பொலிய
உவந் தே மிகவும் தொண்டாற்றி
திலகமாக மிகப் பொலியும்
யாழ் மண் வாழி வாழி யவே!

— மட்டுவில் சி. சதாசிவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்மணி தெல்லியூர் செ. நடராசா

# இளைஞர் வாழும் வழி

எங்கள் மண்ணை வளமுறச் செய்தவனுக்கு அன்பு, ஆதரவு, ஆண்மை, உணர்வு, ஆக்கப்பண்பு, தர்ம வழி, உண்மை, இகழ்ச்சி விலக்கல், பண்புடைமை, பகைவிலக்கல், தேவையறிதல் பணிவு, பொறுமையுடைமை, சேவை நோக்கு, முன்னோர் அடிச்சுவடுகள் அறிந்து சிந்தித்து நடத்தல், தெய்வசிந்தனை, அருள் அமுதவாக்குகளை கற்றறிந்து நடத்தல், பிறவி விதி ஆதியுணர்தல், ஆறுபகை நீக்கி ஆறையுணர்ந்து வாழும்வழி தெரிந்து நடத்தல், கடைத்தேறும் வழியைத் தெரிதல், கண்கண்ட தெய்வங்களையுணர்ந்து அத்தெய்வங்களைப் போற்றிச் செயலாற்றி வாழ்தல் ஆதியாம் சகலதும் நிறைந்த இளைஞர் இன்று தேவை.

ஆண்டவன் படைப்பில் எத்தனையோ மனிதரை ஜீவராசிகளை நாம் காண்கின்றோம். எங்குநோக்கினும் முரண்பாடுகள் தான் நிரம்பி வழிகின்றன. இந்நிலைமையை இப்படியே பார்த்துக்கொண்டிருந்தால் எவராலும் எங்கள் சமுதாயம் நிமிர்ந்து நிற்க இடமிருக்காதென்பதுதெளிவாகும். இந்த நிலைமை தொடர்ந்தும் நீடிக்க வேண்டுமா? நீடிப்பதுதான் எங்கள் வாழ்வுக்கு உரமும் வாழ்வும் தருமா? செய்யக்கூடியது என்ன என்று காணவழியில்லையா? இன்றைய இளைஞர் வாழும் வழிதான் எது? எப்படி!! நிலைமை திருந்த வழி எது?

மனிதப் பிறவியானது நால்வகைத் தோற்றமும் எழுவகை பிறவியுமுறையாக அமைந்த ஜீவராசிகளின் தோற்றத்திலே மிக மேலானதாகும் என அறிவுடையோர் எடுத்தாளுவர். இந்த மானிடப் பிறவியிலும் செல்வச் சீமான் - ஏழை, அறிவுடையோர் - அற்றோர் (அசடர்) பண்புடையோர், பண்பற்றோர், நோயற்றோர், - நோயாளி என்றெல்லாம் பார்க்கின்றோம். பகலும் இரவும் மாறி மாறி வருவது போல தனி மனிதனிடத்தும் இன்பமும் - துன்பமும், சுகமும் கஷ்டமும் மாறிமாறி வருவதைக் காண்கின்றோம். இதற்கெல்லாம் காரணம் உண்டா? உண்டு. அவைதான் தொல்வினைகள் இதனைக் கண்டறிந்தவர்கள் பெரியோர்கள். ஞானவழி நின்ற மானிடச் செம்மல்கள். விதிவழி வாழ்க்கை அமைகின்றது. எதனை விதைத்தோமோ அதனையே நாம் அறுவடை செய்ய முடியும். அப்படி விதைத்ததை இப்பிறவியில் அறுவடை செய்கின்றோம். துன்பம் வந்தபோது நல்லவர்கள் கூட தெய்வத்தை நோகிறார்கள். கருணையே வடிவமான இறைவன் தன்னை நம்பி வழிபடுவோருக்கு துன்பந் தருவானா? தண்ணருள் புரியும் தயாநிதி பெருமான், வாழ்வுக்கு வழிகாட்டியாக - தந்தை தாயாக - சிவமும் சக்தியும் இருக்கின்றனர். இது தெய்வநிலை. மானிட நிலையில் பிள்ளைகளுக்கு தந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் தாயும் உளர். மானிடப் பிறவி எடுத் தவர்களுக்கு அவர்களது தாயும் தந்தை யும் தான் முதற் தெய்வமுகூர்த்தங்கள். முந்நூறு நாள்கள் சுமந்து -தன் சுகங்களை மறந்து குழந்தையைப் பெற்றெடுத்து - பேணிப் பாதுகாத்து வளர்க்கும்தாய்க்கு மேலாக ஒரு தெய்வத்தை இவ்வுலகில் காண முடியுமா? அத்தாய்க்குத் துணை நிற்கும் தந்தைக்கு மேல் கருணையுங்ளங் கொண்ட ஒருவரை பார்க்க முடியுமா? பெற்றெடுத்தவள் - பேணி வளர்ப்பவள் சொல்வதென்ன?

''நான் வெறுங்கோயில் நற்பிதா மந்திரம்;
போற்றித் தொழடா பொருளெலாம் புரியும்''

என்று போதிக்கின்றார். கண்கண்ட தெய் வங்கள் தாயும் தந்தையும். தாய்மார் பலர் நிற்கும் கூட்டத்திலே ஒரு குழந் தையை விட்டால் அது தன் தாயைக் கண்டு பிடித்து சேருதல் இயற்கை. அது போல நாம் முன் செய்த வினைகள் - செயற்பாடுகள் இப்பிறவியில் நம்மைத் தேடி வந்தடைந்து விடுகின்றன. நாம் செய்த செயல்களுக்கு ஏற்பவேதான் இப்பிறவியிலும் பலன்களை அடைகின் றோம். நல்வினைகளை முன் செய்தவன் இப்பிறவியில் நற் பலன்களையும் தீயபலன் களை முன் செய்தவன் தீய பலன்களையும் அடைகின்றான். உலகிலே தாயே கோயில். தந்தையே மந்திரம். தாய்க்கும் தந்தைக் கும் மேல் எத்தெய்வமும் இல்லை என்பது வேதங்கள் முதல் முனிபுங்கவர் ஈறாக அத்தாட்சிப்படுத்துகின்றன. மாதாமறைந் தகாலையில் பட்டினத்தார் - திருவெண் காடர் பாடிய பாடலை ஒருமுறை பாருங்கள். இன்றைய இளைஞர் வீண்கா லம் போக்காது நல்வாழ்வு வாழ அது வழி காட்டும் ''அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம், தந்தை சொல் மிக்கமந்திர மில்லை'' தாயிற் சிறந்தொரு கோயிலு மில்லை, என்று அறிவுரைகளை அள்ளித் தந்த தமிழ் மூதாட்டி ஔவையாரின் வாக்குகளை உற்றுணர்க ''ஓம்'' என் னும் பிரணவ ரூபியான பிள்ளையாரை வழிபட்டு - தன் இளமை நீக்கி முதுமை பெற்று - மக்கள் நல்லவழி வாழ எத்தனை யோ நன்முத்துக்களை ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி முதலாம் நூல்கள் பலவற்றால் தெளியவைத்து வழி காட்டிவைத்தவள் நம்மூதாட்டி. தமிழ் பெருவாட்டியை மறக்காது இன்றைய இளைஞர் வாழ வேண்டும்.

வாழ்வில் இளமைமுதலே தர்மவழியில் வாழப்பழக வேண்டும். எங்கள் சொந்த வாழ்வில் நமக்கு நாம் செய்ய வேண்டிய கடமை, பிதாமாதாக்கள் விடயத்தில் செய்ய வேண்டிய கடமை, வாழ்வில் துணைவி - துணைவன் அமைந்தகாலையில் அவர்களுக்கு நாம் செய்ய வேண்டிய கடமைகள், பிள்ளைகள் தொடர்பாக நாம் செய்ய வேண்டிய கடமைகள், அயலவர் இனபந்துக்கள் - நண்பர்கள் - ஏழைகள் தரித்திர நிலையில் வாழ்வோர் - சொந்த நாட்டுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் யாவும் நன்கு சிந்தித்து செயற்பட்டுவருதல் இன்றைய இளைஞரின் தலையாய கடனா கும். தர்ம வழி வாழ்வது உலகத்தையே பிரகாசிக்கச் செய்யும். மண்ணும் விண் ணும் மகிழ்ந்து வழி காட்டும் சிறந்த பண்பு தர்மவாழ்க்கை. அவ்வைப்பாட்டி அன்று சொன்னாள் ''அறஞ்செயவிரும்பு'' என்று இதனை உற்றுணர்ந்து வாழ்வது இளைஞர் கடன் 1935 ம் ஆண்டு முதல் ''இந்துசாதனம்'' பத்திரிகையிலும் வீர கேசரி, ஈழகேசரிபத்திரிகைகளிலும் ஔவை யின் பாடல்களுக்கு சிறுசிறுகட்டுரைகள் வெளிவந்துள்ளன. அவற்றை இன்றைய இளைஞர்அவசியம் படித்தறிய வேண்டும். தர்மவழியில் வாழ்வு அமைந்தாற்றான்இம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைக்கும் மறுமைக்கும் பயன் படவாழலாம் என்பதை இளைஞர் உணர்ந்து கொள்வத வசியம். மக்கள்குலச் சேவையால் இம்மையில் மட்டுமன்றி மறுமையிலும் அருளைப் பெற்று அறவாழ்வு வாழ உதவும். தாம் செய்த அற்பதர்மத்தின் பலனை கோடி கோடியாகப் பெற்றவர்கள் — இப்பிறவியிலேயே கைமேல் பலன் பெற்றவர்கள் உளர் என நூல்கள் கூறுகின்றன. உதாரணமாக பாண்டவர் துணைவி திரௌபதியின் வாழ்வில் நடந்தசம்பவங்கள் உணர்த்தும். குளத்தில் நீர் விளையாட்டில் ஈடுபட்டிருந்த கண்ணன் தான் வெளி வராதிருந்த போது - அறிவால் நிலைமையை உணர்ந்த திரௌபதிதன் மேலாடையில் ஒருசாண் புடவையை கிழித்து கண்ணன் இருந்தபக்கமாக எறிந்தார். அதனை எடுத்து தன்னை மறைத்துக் கொண்டு கரையேறிய கண்ணன் பின்னொரு காலத்தில் அவள் துரியோதனன் சபையில்பட்ட துயரகாலத்தில் கோடி கோடியாக ஆடைகொடுத்து அவள் மானத்தைக் காப்பாற்றிய சம்பவம் பாரதத்தில் வருகின்றது. இதனை இன்றைய இளைஞர் அவசியம் படிக்க வேண்டும். தர்ம வழி வாழ வேண்டும்.

உண்மைக்கு - சத்தியத்திற்கு என்றுமே உயர்வு உள்ளது. வள்ளுவர் அமுதத்தில் இந்த உண்மைக்கு அவர் உயர்வான இடம் தந்துள்ளதை இளைஞர் அவசியம் கற்று உணர்ந்து வாழவேண்டும். எந்த இடத்திலும் உண்மை பேசி உயர்வு பெறலாம். மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற சிந்தனைகள் என்றும் உள்ளத்தில் ஒளிர வேண்டும். கல்வியைக் கற்றுத்தரும் ஆசான் தெய்வத்துக்குச் சமம். குரு வழிபாடு இல்லாத கல்வி பயன்தர மாட்டாது. வாழ்வில் உயர்வு பெற ''எழுத்தறிவித்தவன் இறைவன்'' என்ற உணர்வும் தூய நெறியும் அமைதல் அவசியம். உலகிலே பிறரிடம் கையேந்தி வாழும் இகழ்ச்சி வாழ்வை நீக்கி நல்வாழ்வுக்கு வழி காட்டும் குரு தெய்வமாவார். பிறரிடம்''ஏற்பது இகழ்ச்சி'' என்பதை மறக்காது இன்றைய இளைஞர் வாழவேண்டும். வாழ்வில் பகையில்லாது வாழவேண்டும். உள்ளத்திலே - வெளியிலே பகையை வளர்க்கக் கூடாது. காமக்குரோதமதலோப மோக மாந்தர்யங்களை விலக்கி வாழ வேண்டும். இதற்கு குரு காட்டும் வழியில் ஒழுக வேண்டும். நான் என்னும் ஆணவத்தை உணர்வால் அழித்து வாழ வேண்டும். அகங்கார மமகாரங்கள் அழிந்தால் மனிதனாக வாழ முடியுமென்பதை இளைஞர் உள்ளத்தில் கொண்டு வாழ வேண்டும்.

துன்பமின்றி-இன்பமாக, அமைதியாக, பிறர் போற்ற வாழவேண்டும். தன்னுயிர் போல் மன்னுயிரைமதித்து வாழவேண்டும். அடக்கமாக, பணிவாக, பண்பாக வாழவும் வேண்டும். ''அடக்கம் அமரருள் உய்க்கும்'' என்பதை நன்குணர்ந்து வாழப்பழக வேண்டும். குருவை வணங்கிப் பெறும் அறிவு உயர உயர அடக்கமும் உயர வேண்டும். எளிமையான வாழ்வை கடைப்பிடிக்க வேண்டும். ஆடம்பரமும் அகம்பாவமும் உடைய வாழ்வு இளைஞருக்கு வேண்டாம். பற்றை நீக்கி பொறுமையாக வாழவேண்டும். பற்றை நீக்கினால் பிறவியும் நீங்கும். இறைவன் துணையும் இருக்கும். தெய்வம் உண்டு - அது துணை நிற்கும் என்று வாழவேண்டும். உலகிலே ஒரு பொருள் சக்தியும் சிவமும். இரண்டும் ஒன்றுதான். தாயும் தந்தையும் என்று உலகியலில் காட்சி தருவது இந்த உண்மையை உணர்த்தவேதான். இதனை இன்றைய இளைஞர் உணர்ந்து வாழ வேண்டும். பிழை செய்தால் அப்பா அடிப்பார். வலிக்கும் பொழுது அழும் குழந்தையினை தாய் அணைப்பாள். இங்குதான் தாய் தந்தையின் மகத்துவம் விளங்கும்.

வாழ்வில் ஒருபோதும் வீணாகாமல் மலர்ச்சியுடன், பொருளுடன் வளமாக வாழ வழிகாட்டும் ஒரு தெய்வம் நல்லைப்



★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதியில் இருக்கிறார். அவர் வாழும் இடத்திலே கூத்துக் கும்மாளமடிக்கும் இளைஞர் அடக்கமாக, அமைதியாக, பணிவோடு, அன்பான வாழ்வு வாழ அவர் வழிகாட்டுவாராக: ஆன்மாக்கள் மும்மலக் கல்லில் இருவினைக் கயிற்றால் கட்டுண்டு இருப்பதை விடுத்து வீடுபேற்றைத் தருகின்றவர் முருகன் - அழகன். அகப்பகை-புறப்பகை இரண்டையும் அழித்து நற்பேற்றைத் தரும் முருகன் வாழும் இடம் இந்த நல்லூர்ப்பதி. இதனை உணராது இவர் வாழும் அகத்து வீதியிலேகொட்டமடித்து, கும்மாளம் போட்டு, வீணாகவிதண்டா வாதம் பேசி துள்ளித் திரியும்இளைஞர் கூட்டம் அமைதியாக வாழப் பழகவேண்டும். மேலே குறிப்பிடப்பட்ட ஆறு பகைவர்களையும் ஒழித்துவாழப்பழக வேண்டும். இந்த ஆறு பகைவர்களையும் அழிக்கும் வல்லமையுள்ள முருகனை உள்ளத்திலே கொண்டு வாழப்பழக வேண்டும்.

உள்ளத்திலே தணியைத்தேக்கி ஆறுமுகனை வழிபடவேண்டும். முருகனுடைய ஆறெழுத்தை தினமும் ஓதிவரும் அடியவருக்கு அவன் அருள் நிறையும். எங்கள் உடம்பிலே உள்ள ஆறு ஆதாரங்களான மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்பனவற்றை முருகவேள் உறையும் ஆறு திருத்தலங்களாக ஞானவான்கள் காட்டியுள்ளர். திருப்பரங்குன்றம், சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்ச்சோலை என்பன முறையே அந்த ஆறு ஆதாரங்களையும் குறிக்கும் திருத்தலங்களாகும். இத்திருத்தலங்களில் முருகன்வீற்றிருந்து அருள்பாலிக்கின்றான். உள்ளத்திலே அம்முருகனை வேண்டுதல் செய்து இத்திருத்தலங்களை தரிசிக்கலாம். வினைகள் கருகி நாம் நலம் பெற்று வாழ வேண்டும் என்றால் அனுதினமும் அவனை வேண்டி உளத்தால் வழிபடல் வேண்டும். ஆலயவழிபாடு உயிரை உயர்த்தும் தன்மையது. எங்கும் இறைவன் இருப்பினும் ஆலயத்தில் அவனை வழிபடுதல் சாலச் சிறந்தது. இதனையே தமிழ் மூதாட்டியும் ''ஆலயந்தொழுவது சாலச்சிறந்தது'' என்று கூறிவைத்தாள். அம்மூதாட்டி காட்டிய அருள்வழியில் இன்றைய இளைஞர் வாழ வேண்டும் - நல்லைப்பதியிலிருக்கும் முருகனை வழிபடுங்கள். உங்களுக்கு எல்லாம் கிடைக்கும். ஐம்புலன்களையும் அடக்கி, மௌனமாக நின்று உளத்தாலே அவனை வணங்கிவாழ வேண்டும். ஞானத்தை அடைந்து உய்யும்வழி மௌனமாக இருந்து தானடங்கி அவனை அகத்தே கொண்டு வாழப் பழகுவோமாக. இதுவே இன்றைய இளைஞர் நல்வாழ்வு வாழ உதவும். இறைவனது பெருங்கருணை நமக்குக்கிடைப்பதற்கு அவன் ஆறு எழுத்தை நாம் உளத்தே சேமித்து என்றும் வாழப்பழக வேண்டும் இறைகருணையை நினைந்து வாழ வேண்டும்.

சுபம்

உ

## கந்தனே! பந்தவினையறு

தொல்லை வினைதீர்க்கும் நல்லைக் கந்தன்
இல்லை யெனாது வரமீந்தருள் புரிவான்
கல்லை யொத்த மனமும் கசிந்துருக வருவான்
நல்லை யிலமர்ந்த நம் வள்ளி மணாளனே!

— சைவப் புலவர் இராசையா ஸ்ரீதரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி மாலினி வேதநாதன் B. A. (Hons)

# நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயம்

"அலை யெறியு மாழ்கடலைத் தாண்டி யிந்த
அருட்கடலை நீந்தவரு மடியார்க் கென்றும்
இல்லை யென்னா தின்னருளை ஈந்துவக்கும்
ஈஸ்வரியா ளுவந்துறையு நயினாதீவு''

இந்து மகா சமுத்திரத்தின் 'நித்திலம்' என வர்ணிக்கப்படும் இலங்கைத் தீவின் வடக்கே உள்ளது யாழ்ப்பாணக் குடா நாடு. இக் குடாநாட்டிற்கு ஒளி வீசும் வைரங்களாக விளங்குபவை அதன் தென் மேற்கே உள்ள சப்த தீவுகளாகும். இத் தீவுகளில் வரலாற்றுப் புகழையும் அம்பிகையின் அருட்கடாட்சத்தையும் கொண்டு பிரசித்தி பெற்று விளங்குவது நயினாதீவு எனப்படும் சிறிய தீவு ஆகும். இன மத பேதமின்றி இலங்கை மக்கள் எல்லோருக்கும் இது ஒரு பூர்வீக யாத்திரை ஸ்தலமாக உள்ளது. உருவால் சிறியதாயினும் அருட் பொலிவால் சிறந்து விளங்கும் இத் தீவானது பழைய காலம் தொட்டே பல்வேறு நாமங்களால் அழைக்கப்பட்டு வந்தது, என்பதற்குப் பல சரித்திர சான்றுகள் கர்ணபரம்பரைக் கதைகள் ஆதாரமாக உள்ளன.

நாக நயினாதீவு, நாகதீப, மணித்தீவு, மணிபல்லவம், பூந்தோட்டம், நாவலந் தீவு, நாகேஸ்வரம், பிராமணத் தீவு, போன்ற பல பெயர்கள் இத் தீவிற்குண்டு. நயினாதீவு என்னும் பெயர் நயினாபட்டர் என்னும் பிராமணர் தமிழ் நாட்டிலிருந்து வந்து இங்கு குடியேறியதைத் தொடர்ந்து இத்தீவுக்கு இடப்பட்டதெனக் கூறுவர். இவரே இங்கிருந்த நாகம்மாள் கோவிலின் முதல் அர்ச்சகர் எனவும் கூறப்படுகின்றது. வையா பாடலில் நாகநயினாதீவு எனக் கூறப்பட்டுள்ளது 'நாக' என்ற பெயர் பழைய காலத்தில் மன்னர்களுக்கு இருந்திருக்கிறது. 'நாக' என்று காணப்படும் பெயர்களை உற்று நோக்கும் போது உண்மையில் ஒரு வம்சப்பெயராக மட்டுமன்றி நாக வழிபாட்டின் சின்னமாகவே விளங்கியிருக்கும் எனக் கருதலாம். விஜயன் என்ற மன்னனும் அவன் தோழர்களும் அவன் தந்தையால் துரத்தப்பட்டு இந்தியாவிலிருந்து வந்த போது இங்கு வாழ்ந்தவர்கள் இயக்கர், நாகர், என வரலாறு கூறுகிறது. நாகர் என்ற ஒரு வம்சத்தவர் வாழ்ந்தமையால். நாகதீப என அழைக்கப்பட்டிருக்கலாம். நாகர் என்பவர் திராவிடர் எனவும் வரலாற்றாசிரியர் பொதுவாகக் கூறுவர். கி.பி. 3ஆம் நூற்றாண்டு வரை அதாவது பௌத்தமதம் பரவிய காலகட்டத்தில் ஈழநாக, மகாநாக, அபயநாக போன்ற பெயர்கள் வழக்கிலிருந்திருக்கின்றன. ஈழத்தில் பௌத்த மதம் பரவ முன்பே இந்நாக வழிபாடு வேரூன்றியிருந்தமையை இது எடுத்துக் காட்டுகிறது. பிராமிக் கல்வெட்டுக்களிலும் பௌத்தமதத்திற்கு அளிக்கப்பட்ட தானங்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளது.. இத் தானத்தை வழங்கியவர்களின் பெயர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கும் போது சிவகுமார, விஷ்ணு, விசாக, கந்த போன்ற இந்துமதக் கடவுளரின் பெயர்களைக் கொண்டவையாக உள்ளன. இதனால் பௌத்த மதம் இங்கு வந்த போது நாக வணக்கமும் இந் நாட்டு ஆதிவழிபாடாக இருந்ததாகத் தெரிகிறது. இவ்வழிபாட்டு முறைகளோடு பின்னர் இந்துக் கடவுளரின் வழிபாடும் சங்கமித்திருக்கும் என பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் அவர்கள் ஆராய்கிறார். கி. பி. 2ஆம் நூற்றாண்டில் தொலமியின் குறிப்புகளிலும் இலங்கையில் நாக வழி பாடு இருந்தமை பற்றிக் கூறப்படுகிறது. சம காலத்தில் தமிழகத்திலும் நாக வழி பாடு இருந்துள்ளன என்பதை மலைபடு கடாம், சிறுபாணாற்றுப்படை. பெரும் பாணாற்றுப்படை போன்ற சங்கச் செய் யுட்கள் எடுத்துக்காட்டுகின்றன.

'பாம்புறை மருதின் ஓங்கு சினை நீழல்
பலி பெறு வியன்களம் மலிய வேற்றி'

இது மருத மரத்தின் கீழ் உள்ள புற்றிலுள்ள பாம்புக்கும், மரத்திலுள்ள தெய்வத்திற்கும் கொடுக்கப்பட்ட நிவே தனம் பற்றி பெரும்பாணாற்றுப்படையில் கூறப்பட்டதாகும்.

தமிழகமும், இலங்கையும் தொன்று தொட்டு கலாசாரப் பண்புகளால் பின் னிப் பிணைந்தவை. எனவே நாகவழி பாடும் இரு இடங்களிலும் சம காலத் தில் இருந்திருக்கின்றன என்பது தெளி வாகின்றது. நாக வழிபாட்டுக்குரிய இட மாக இருந்ததால் 'நாகதீப' என அழைக்கப்பட்டிருக்கலாம் எனக் கருத இடமுண்டு. நாட்டின் பெரும் பகுதியை உள்ளடக்கிய பதம் இன்று நயினாதீவை மட்டும் குறித்து நிற்கின்றது.

மணிமேகலை என்னும் இலக்கியம் காட்டும் மணிபல்லவம் என்ற பெயரும் நயினாதீவையே குறிக்குமென்பர். ''ஒரு சிறுதீவு காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து தெற்கே முப்பது யோசனைத் தொலை வில் உள்ளது. அங்கே தன்னைத் தரிசிப் பவர்களுக்குப் பழம் பிறப்பின் செய்தி யைத் தெரிவிக்கும் புத்த பீடிகை ஒன்றும், கோமுகி என்னும் பொய்கையும் இருந் தன. மணிமேகலை தன் பழம் பிறப்பை இப்புத்த பீடிகையால் உணர்ந்தாள். அமுதசுரபி என்னும் பாத்திரத்தை தீவ திலகையின் உதவியால் இக்கோமுகியிலே பெற்றாள் எனக் கூறப்பட்டுள்ளது. கி.பி 2 ம் நூற்றாண்டளவில் இப்பெயர் வழங் கப்பட்டிருக்கலாம்.

தமிழகத்துச் சிதம்பரம் கோயிலுக் குத் தேவையான பூக்களைப் பெறுவ தற்கு நயினாதீவுத் தில்லை வெளியில் ஒரு பூந்தோட்டம் அமைக்கப்பட்டு பூக்கள் சிதம்பரத்திற்கு எடுத்துச் செல்லப்பட் டன. தில்லைக் கோயிலுக்கு பூப் பெறப் பட்ட இப்பூந்தோட்டம் 'தில்லைப்பூந் தோட்டம்' என வழங்கப்படலாயிற்று. காலப்போக்கில் இப்பூந்தோட்டம் அழிய, அங்கு அந்தத்தில்லை வெளி பெரும் பரப்பளவுடையதாக இன்றும் காணப்படு கின்றது.

முற்காலத்தில் இறைவன் சந்நிதியும் இறைவி சந்நிதியும் ஒரே ஆலயத்தில் வெவ்வேறாக இருந்தன என்றும் இறை வன் நாகேஸ்வரன், நாகதம்பிரான், நாக நயினார் எனவும், இறைவி நாகேஸ்வரி, நாகம்மாள் என அழைக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இவ்வாலயம் ஏழு வீதி களையும், கோபுரங்களையும், விலையு யர்ந்த செப்புத்தேர், பவளத்தேர்களைக் கொண்டு இருந்ததாக ஐதிகம். அந்நி யர் ஆட்சிக் காலத்தில் சைவக்கோயில்கள் இடிக்கப்பட்டபோது இவ்வாலயமும் முற் றாக அழிக்கப்பட்டது. நாகேஸ்வரன் என அழைக்கப்பட்ட சிவலிங்கத் திருவுரு புளி யந்தீவில் பிரதிட்டை செய்யப்பட்டதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வும் கருதப்படுகிறது. இறைவனும் இறைவியும் கோயில் கொண்டருளி இருந்த இடம் நாகேஸ்வரம் எனவும் அழைக்கப்பட்டது.

ஒல்லாந்தர் நயினாதீவை ''ஹார்லெம்'' என்று வழங்கினர். பிராமணகுலத்தவர் அதிகமாக வாழ்ந்தபடியால் பிராமணத் தீவு எனவும் அழைக்கப்பட்டது.

எனவே இச்சிறிய தீவானது காலத்துக்கு காலம் பலராலும் பல பெயர்களால் அழைக்கப்பட்டாலும் தற்போது தமிழ் மக்களால் நயினாதீவு அல்லது நயினை எனவும் சிங்கள மக்களால் நாகதிப 'நாக்தி வயின' எனவும் அழைக்கப்பட்டு வருகின்றது.

நயினா தீவிற் சிறந்த துறைமுகங்களும் யாத்திரைத் தலங்களும் இருந்தமையால் வெளிநாட்டார் பலரையும் இத்தீவு கவர்ந்திருக்கும் என்பதில் வியப்பொன்றுமில்லை. நயினாதீவில் காலத்துக்குக் காலம் கிரேக்க, உரோம, இந்திய, சீனப்பழைய நாணங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. சீனாவின், கி.பி 12 ம் நூற்றாண்டளவில் செய்யப்பட்ட பெரிய சாடிகள் கண்டு பிடிக்கப்பட்டன. 1ம் பராக்கிரமபாகுவின் காலத்திற்குரியதான கல்வெட்டுகள் இரண்டு இன்றும் கோயிலில் உள்ளன. இவற்றை விட வரலாற்று நூல்கள் இலக்கிய நூல்கள் என்பன இத்தீவின் பழமையையும் புதுமையையும் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

நயினாதீவில் புத்தமத வழிபாடும் பல நூற்றாண்டுகளாக இருந்து வந்தமை மணிமேகலை புத்த பீடிகையைத் தரிசித்த வரலாற்றால் அறிய முடிகிறது. மணி மேகலாத் தெய்வம் மணி மேகலையை மணி பல்லவத்திற் கொண்டு வந்த செய்தியை.

''பூங்கொடி தன்னைப் பொருந்தித் தழீஇ
அந்தரம் ஆறா ஆறு அயந்து யோசனைத்
தென் திசை மருங்கில் சென்று திரை உடுத்த
மணி பல்லவத்திடை மணி மேகலா தெய்வம்
அணி இழை தன்னை வைத்து அகன்றது''

என மேகலை கூறுகின்றது.

புத்தர் பெருமான் மூன்று முறை இலங்கைக்கு விஜயம் செய்த போது ஒரு முறை நாகதீபமுக்கு வந்ததாக மகாவம்சம் கூறுகிறது. பௌத்த மதத்தினரால் இங்கு 1939 ம் ஆண்டளவில் ஒரு சமாதிக் கோயிலும் 1947 ம் ஆண்டில் விகாரையும் கட்டப்பட்டது. இங்குள்ள புத்த விக்கிரகமும் 1954 ல் பர்மாவிலிருந்து கொண்டு வரப்பட்டு 1958 ல் கோயில் புனருத்தாரணம் செய்யப்பட்டது. பௌத்த யாத்திரிகர்கள் இங்கு வந்து தரிசித்துச் செல்லும் போது அம்பிகையையும் 'பத்தினித் தெய்யோ' என வழிபாடாற்றிச் செல்வர். ஆபுத்திரன் அட்சய பாத்திரத்தை கோமுகிப் பொய்கையில் இட்டுச் சென்றான் எனவும் கூறப்படுகிறது.

மகாபாரதத்தில் அர்ச்சுனன் மணிபுரத்திற்கு வந்து நாக கன்னியை மணந்து பப்பிரவாகனைப் பெற்றான் என இதிகாச வரலாறு கூறுகிறது. இன்றைய நாகபூஷணி அம்மன் கோயில் அமைந்திருக்கும் இடத்தின் பெயர் பப்பிரவாகன்சல்லி என்பதாகும்.

நெடுமுடிக்கிள்ளி எனும் சோழ மன்னன் மணிபல்லவத்திற்கு வந்து பீலிவளை என்பாளை மணந்து தொண்டைமான் இளந்திரையனைப் பெற்றான் என யாழ்ப்பாணச் சரித்திரம் கூறுகிறது.



★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய பெரும் வரலாற்றுப்புகழ் வாய்ந்த நயினாதீவிலே நாகபூஷணி ஆனவள் தனது தெய்வீக அருள் ஒளியால் பக்தர்களைத் தன்பால் ஈர்த்து அருள்பாலித்துக் கொண்டிருக்கிறாள். இந்த ஆலய வழிபாடு அல்லது ஆலய நிர்மாணிப்பு எப்பொழுது தோன்றியதென்பது இன்னமும் ஆராய்ச்சிக்குரிய விடயமாகவே உள்ளது.

நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் மூலஸ்தானத்திலே சுயம்பு வாய் அமைந்துள்ள ஐந்து தலைச் சர்ப்பத்தின் தொன்மை பற்றி ஆராய்ந்த சிற்ப சாஸ்திர ஆராய்ச்சியாளர் திரு. எம். நரசிம்மன் அவர்கள் ஆராய்ச்சி முடிவில் ''இது பதினான்காயிரம் பழமை உடையது'' எனக் கூறினார். இலங்கை இந்தியாவில் வேறெங்கும் பார்க்க முடியாத வகையில் பிரத்தியட்ச சான்றாக இது அமைந்துள்ளது எனவும் கூறப்பட்டது. நாகத்தோடு இணைந்த அம்மனும் பின் பிரதிட்டை செய்யப்பட்டு வழிபாடாற்றப்பட்டு வருவதாக ஏற்றுக்கொள்ளலாம். நாகத்தால் பூசிக்கப்பட்ட அம்மை நாகபூஷணி எனப் பெயர் பெற்றாள்.

இவ்வாலய அம்மனின் அருளாட்சி பற்றிய நாட்டார் வழக்கியல் கதைகள் தொன்று தொட்டு வழங்கி வருகின்றன. முன்னைய காலத்தில் ஒரு நாகம் அம்பிகையைப் பூசிப்பதற்காகப் புளியந் தீவிலிருந்து பூக்கள் கொண்டு வருவதாகவும், அவ்வாறு வரும் பொழுது ஒருநாள் கருடன் பாம்பைக் கொல்வதற்கு முயற்சிக்க பாம்பு ஒரு கல்லைச் சுற்றிக்கொண்டதாகவும் கருடன் இன்னுமொரு பாறையில் இருந்ததாகவும் அவ்வழியால் மரக்கலத்தில் சென்ற வைசிகன் பாம்பின் குறிப்பறிந்து கருடனை விலகும்படி கேட்க கருடன் அவனிடமுள்ள செல்வத்தை நாகம்மாள் கோயிலுக்குக் கொடுத்தால் விலகுவேன் என்று கூற, அவனும் அவ்வாறே செய்ய கருடன் விலகியதாகவும், நாகமும் அன்னையை வழிபட்டதாகவும் கூறப்படுகிறது. இப்பொழுதும் கருடனிருந்த கல், பாம்பு சுற்றிய கல் என்பதை அடியார்கள் நம்பிக்கையுடன் தரிசித்து வருகின்றார்கள். அந்த வைசிகனால் கொடுக்கப்பட்ட செல்வத்தால் ஆலயம் சிறப்பாகக் கட்டப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

போர்த்துக்கேயர் காலத்தில் இங்கிருந்த சைவக் கோயில்கள் பலவற்றை இடித்தழித்த போது, நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்தையும் அழிக்கத் தவறவில்லை. முற்றாக இடித்துத் தகர்க்கப்பட்டது. சைவ மக்களால் அம்பாள் விக்கிரகம் மேற்குக் கரையிலுள்ள ஆலமரப் பொந்தில் ஒழித்து வைக்கப்பட்டது. இந்த மரம் ''அம்பாள் ஒளித்த ஆல்'' என வழங்கப்பட்டதாகவும் ஐதீகமொன்றுண்டு. இக் கோயிற்கற்களை ஊர்காவற்றுறையில் சங்குமாவடி என்ற இடத்தில் கோட்டை கட்டப்பயன்படுத்தி உள்ளனர். கோயிலுக்கு அண்மையில் உள்ள காணியில் குளம் வெட்டுவதற்காக வெட்டிய போது தரையின் கீழ் பழைய கட்டிடங்கள் காணப்பட்டன. பூசைக்குரிய வெண்கலப் பொருள்களும் கண்டெடுக்கப்பட்டன, இதிலிருந்து பழைய ஆலயம் முற்றாகத் தகர்க்கப்பட்டிருக்கலாம் எனப் புலனாகிறது.

யாழ்ப்பாணக் கச்சேரியில் சைவ சமயக் கோயில்களை 1882 ஆம் ஆண்டு பதிவேட்டில் பதிந்துள்ளனர். இதில் ஆலயம் பற்றி பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. ''இராமலிங்கர் இராமச்சந்திரர் 1788ல் கட்டியது. மனேச்சர் இராமலிங்கர் கார்த்திகேசரும் பிறரும், கல்லுக்கட்டடம். ஆண்டுக்கொரு முறை ஆனி 10ம் தேதி தொடக்கம் 20ம் தேதி வரை 10 நாள்கள் திருவிழா கோயில் வீதியில் மக்கள் அம்பாளைக் காவிக் கொண்டு வலம் வருதல் அல்லது தேரில்வருதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவிழாக்காலங்களில் 10,000 பேர் வரை யாழ்ப்பாணத்திலும் அயலிலுள்ள தீவுகளிலிருந்தும் வருகின்றனர்.'' எனக் காட்டப்பட்டுள்ளது. இதிலிருந்து இப்பொழுதுள்ள ஆலயம் இரண்டாவது ஆலயமாக மீண்டும் கட்டப்பட்டதாயிருக்கலாம்.

சக்தியின் அருட்பொலிவுள்ள சக்தி பீடங்கள் அறுபத்து நான்கு எனக்கூறப் படுகின்றது, நயினையம்பதி புவனேஸ்வரித் தாயின் பீடமாக உள்ளது. பர்மாவிலிருந்து தர்மசோழ மகாராசா புத்திர சோகத்தால் வருந்தி நாகவழிபாடாற்றி புத்திரப்பேறடைய நாகதீவு வந்தார் எனக் கூறப்படுகிறது. நாகபூஷணி அம்பாளை வழிபட்டு வரும் அடியார்கள் தம்பிறவிப் பெருங்கடலை நீந்தற் பொருட்டு கடலைக் கடந்து வருகின்றார்கள். அவர்களுக்கு அருட்கரம் நீட்டி தன்பால் ஈர்த்து கேட்பவற்றைக் கேட்ட வண்ணமே கொடுத்து ஆட்கொள்ளுகின்றாள் அன்னை பராசக்தி.

நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் அடியார்களின் உதவியோடு காலத்திற்குக் காலம் பல திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன. இவ்வாலயத்தில் காணப்படும் பிரசித்தி பெற்ற சிற்பத்தேர் ஆனித் திங்கள் 1957ம் ஆண்டுவெள்ளோட்டம் நடைபெற்றது தேர்த்திருப்பணிச் சபையின் தலைவராக திரு. ம. ஸ்ரீகாந்தா (முன்னாள் வடமாகாண அதிபதி) அவர்களும் காரியதரிசியாக திரு. வே. சுந்தரம்பிள்ளை (விவேகானந்தா அச்சகம்) அவர்களும் மற்றும் பல உறுப்பினர்களும் சிற்பத்தேர் உருவாகுவதற்கு அயராது உழைத்தனர். அழகமைந்த தேராக உருவாக்கி, தேருக்கு மணியும், முடியும் எடுக்க இந்தியா சென்ற திரு. வே. சுந்தரம்பிள்ளை அவர்கள் அங்கேயே அம்பாளின் திருவடி நிழலை அடைந்தமை ஆலய வரலாற்றில் மறக்க முடியாத தொன்றாகும். இலங்கையில் வேறெங்கும் காணமுடியாத வரலாற்று அம்சங்களைக் கொண்ட இத்தேர் இந்தியச் சிற்பிகளைக் கொண்டு உருவாக்கப் பட்டதாகும். இச்சிற்பத் தேரில் காணப் படும் சிற்பங்கள் பெரும் பாலும் அம்பாளின் ஆலய வரலாற்றைப் பிரதிபலிப்பனவாகவே அமைந்துள்ளன.

ஆலய வரலாற்றிலே பல அனர்த்தங்கள் ஏற்பட்ட போதும் அம்பிகையின் அற்புதத் தேர் அழியாமல் இருந்தமை அவளின் அற்புத சக்தியை வெளிப்படுத்தி நிற்கின்றது. ஏனைய சிறிய தேர்கள் எரிக்கப்பட்டு அழிக்கப்பட்டாலும் கூட இப்பொழுது புதிய தேர்கள் இரண்டு விநாயகருக்கும் முருகனுக்கும் செய்யப்பட்டுள்ளன.

கோவில் நிர்வாகமானது தற்போது பரம்பரை உறுப்பினர்களுடன் ஆலய வழிபடுநர் சபையால் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களையும் கொண்ட அறங்காவலர் சபையால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. ஆலயச் சுற்றுப் பிரகாரத்திலே விநாயகர், முருகன், வைரவர், சூரிய சந்திரர் நவக்கிரகம், புவனேஸ்வரி அம்மன், சண்டேஸ்வரி அம்மன் ஆகிய பரிவார மூர்த்திகளுடன் அறுபத்து மூன்று நாயன்மார்களின் உருவச் சிலைகளும் வைக்கப்பட்டு வழிபாடாற்றப்பட்டு வருகின்றது. அழகிய அமைதி நிறைந்த ஆலயச் சூழ அடியார்களைக் காந்தம்போல் கவரச்செய்கிறது.

இங்கு ஆறு காலப் பூசை நிதமும் நடைபெற்று வருகின்றது. மகோற்சவத் திருவிழா பதினைந்து நாள்கள் நடைபெறுகின்றது. ஸ்ரீசக்கர பூசை, நவராத்திரி விழா, தைப்பூச விழா, ஆடிப்பூரவிழா என்பன சிறப்பாக நடைபெற்று வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலைகடல் பிரயாணத்தால் அலுப்புற்று வரும் அடியார்க்கு அன்னமளித்து ஆறுதலளிக்கும் ''அமுத சுரபி'' அன்னதான சபை அன்னதானம் வழங்கு வதற்கு அள்ளி வழங்கும் அருட்கொடையோர். அல்லும்பகலும் அயராது அன்போடு பாடுபடும் அம்பிகை அடியார்கள், அன்னதான சபையினரின் சேவை அனைத்து மக்களாலும் பாராட்டப்பட்டு வருகின்றது. தாக சாந்தி நிலையங்களால் செய்யப் பட்டு வரும் சேவையும் வெகு சிறப்பாக நடைபெற்று வருகிறது.

கல்யாண மண்டபம் ஒன்றும் பக்தர்களின் வசதி கருதி கட்டப்பட்டுள்ளது. பிற இடங்களில் இருந்து வரும் அடியவர்கள் தங்கிநின்று வழிபடக் கூடியதாக உள்ளது. இதனை விட வேறு பல மடங்களும் யாத்திரிகர் வசதி கருதிக் கட்டப் பட்டுள்ளன.

நயினையின் மைந்தர்கள் பலர் சிறந்த கவிஞர்களாக விளங்கினர். விளங்குகின்றனர். இவர்களால் பக்தி ரசம் ததும்பும் பல பாக்கள் அன்னை பூரணியைத் துதித்துப் பாடப்பட்டுள்ளன.

''அம்பிகையைச் சரண் புகுந்தால்
அதிக வரம் பெறலாம்''

எனச் சரணாகதி அடைகின்றனர். உறவினரெல்லோருள்ளும் தன்னலமற்ற தனிப் பேரன்பு செய்பவள் தாய் ஒருத்தியே. ஆகவே உலகப்பொருள்கள் அனைத்தினதும் தோற்றத்திற்கும் காரணமாக அந்த சக்தியைத் தாயாக உறவுபடுத்திக் கொள்ளும் போது அவள் நமக்கு மிக மிக நெருங்கியவளாகித் தானாகவே வந்து எம்மை ஆட்கொள்ளுகின்றாள்.

ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்து இவ்வுலகமெங்குமாய் நிற்கின்ற அந்த அன்னை நமக்கு இகபர சுகம் இரண்டையும் தந்து அருளுகின்றாள்.

**''பெற்றதா லன்னை பெறுமுயி**
**ரனைத்தும்**
**பேணலா லன்னை பெற்றிடுவோர்**
**உற்றதா லன்னை விரும்பிய**
**வனைத்தும்**
**உதவலா லன்னை யெக் கலையும்**
**சொற்றதா லன்னை யுலகொடு வானுந்**
**தொழுதலா லன்னை யென்றெண்ணும்**
**பற்றதாங் கருணை பொழிதலா**
**லன்னை**
**பராபரை நாகபூ ஷணியால்''**

*(நயினை மான்மியம்)*

## கந்தனே! பந்தவினையறு

வந்தித்து நின்று வழிபடும் அடியார் வினை
பந்தித்து நின்றிடினும் பரிதி முன்பனிபோல் விலகும்
சிந்தித்து நின்று சேவிப்போம் வாரீர்!
முந்தித்த பிறவிப்பிணி முழுவதும் போமே!

சிந்தையில் எந்நாளும் சிவகுமாரனை எண்ணி
முந்தை வினை போக்கிடவே முருகா வருவாயென்று
கந்தனே! கார்த்திகேயனே! கார்மயில் வாகனனே கார்!
பந்த வினையற நீ தங்கரதமேறி வருவாய்!

— சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமாகாண

# புற்று நோய் - எயிட்ஸ் நோய் தடுப்புச் சங்கம்

புற்றுநோய் சார்பான எமது பணிகள்

★ நோயாளர்களை இனங்காணல் - குறிப்பாக ஆரம்ப நிலையில் இனங்காண நடவடிக்கைகள் மேற்கொள்ளல்

★ இனங்காணப்பட்ட நோயாளர்கள் உடன் தகுந்த சிகிச்சை பெற வழிவகுத்தல்.

★ ஆதரவற்ற நோயாளர்களுக்கும், இளம் நோயாளர்களுக்கும் சாத்தியமான வழிகளில் உதவுதல்.

★ சமூகநல நிறுவனங்களுடன் இணைந்து சங்கச் செயற்பாடுகளை விரிவுபடுத்துதல்.

★ புற்றுநோய் சார்பான சமூக சுகாதாரக் கல்வியை சகல மட்டங்களிலும் பிரசாரம் செய்தல்.

எயிட்ஸ் நோய் சார்பான எமது பணிகள்

★ இந்நோய் சார்பான சுகாதாரக் கல்வியை உரிய இலக்கினர்கள் மத்தியில் மேற்கொண்டு - வருமுன் காத்தல் நடவடிக்கைகளை ஊக்குவித்தல்.

எம் பணிகள் சிறக்க நிதியுதவியை வேண்டுகிறோம். புதிய அங்கத்தவர்கள் எம்முடன் இணைந்து செயற்பட அழைக்கின்றோம்.

நன்றி

## வடமாகாண

# புற்று நோய் - எயிட்ஸ் நோய் தடுப்புச் சங்கம்

இல. 228, கண்டி வீதி, — யாழ்ப்பாணம்.

மூவிரு முகங்கள் போற்றி
முகம் பொழி கருணை போற்றி
சேவலும் மயிலும் போற்றி
திருக்கை வேல் போற்றி போற்றி

மங்கள வைபவங்களுக்கு ஏற்ப பட்டுப் புடவைகள், பட்டு வேட்டிகள்,
உள்நாட்டு - வெளிநாட்டு சாறிவகைகள், பிளவுஸ் துணிகள்,
பஞ்சாபி சூட், ஸ்கேட் அன பிளவுஸ்

ஆடவர்களுக்கேற்ப சேட்டிங் - சூட்டிங், ரீசேட், றெடிமேட் ஆடைகள்
மற்றும் பல வண்ண ஆடைகளைத் தெரிவு செய்ய

**ஜவுளி உலகின் முன்னோடிகள்**

# ஜி. எஸ். லிங்கநாதன் அன் கோ.

13, 14 பெரியகடை, — யாழ்ப்பாணம்.

---

வேலைக் கையில் ஏந்திய வேலவனே !
தோள் வலிகக காவடிகளோடு வந்தோம்
உடல் வெமபிட உருண்டோடி வணங்குகின்றோம்
போற்றிப் பாடி முருகா உன திருவடியை
இறைஞ்சுகினறோம் அருள் வேண்டி.

**நவீன நங்கையர்க்கு நவீன கால**
**டிசைன்களில் காண நாட்டம்**

நாம் அதி நவீன டிசைன்களில்
அழகாக 22 கரட் தங்கத்தில் வடிவமைத்து
தங்க ஆபரணங்களைச் செய்வதற்கு
சிறந்த பெயர் பெற்ற ஸ்தாபனம்

# கணேச நகையகம்

194, கஸ்தூரியார் வீதி, — யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெசீபா ஏஜென்சி

ஞான ஒளி பரப்பும்
"நல்லைக் குமரன்" மலர் சிறப்புடன் மலர, மலர
என வாழ்த்துகின்றோம்.

* பல் வர்ண பெயின்ட் வகைகள்
* பலவித கட்டிடப் பொருள்கள்
* S. Lon பைப் வகைகள்
* இரும்புக் கம்பிகள்

தாராளமாகப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்

மிற் சுயி சீமெந்தின் பிரதான விநியோகஸ்தர்கள்

# ஜெசீபா ஏஜென்சி
# JEISHEBA AGENCY

**132,** ஸ்ரான்லி வீதி, — யாழ்ப்பாணம்.

T. P. No. **2407**

---

"தமிழ்த் தெய்வம் முருகனைப் போற்றி வாழ்வோம்"

பாலர் வகுப்பு முதல் பட்டதாரி வகுப்பு வரையான
சகல நூல்களுக்கும்

* பிறந்த தின வாழ்த்து மடல்கள்
* திருமண வாழ்த்து மடல்கள்
* வாராந்த – மாதாந்த சஞ்சிகைகள்
* காகிதாதிகள் - அலுவலக, பாடசாலை உபகரணங்கள்

ஆகியவற்றுக்கும்

**யாழ். / கொழும்பு சகல புதினப் பத்திரிகைகளுக்கும்**

யாழ். நகரில் கலையகமாக **மிளிரும்** தாபனம்

# பூபாலசிங்கம் புத்தகசாலை

தொலை பேசி: **422321**

340, செட்டியார் தெரு,
கொழும்பு.

4, ஆஸ்பத்திரி வீதி, (பஸ் நிலையம்)
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணி எண்ணி நினைத்து நான் செய் கருமம் எல்லாம்
பண்ணி முடிக்க நின்னருள் வேண்டுகின்றேன் முருகா
கோல மயில் மீதிலே வீதிவரும் மணவாளா
ஆடி வரும் அடியார்க்கு அளித்திடுவாய் வேண்டு வரம்.

# அம்பிகை ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்

# AMBIGAI HARDWARE STORES

112, Stanley Road, — Jaffna.

**எங்களிடம்**

* கம்பி வகைகள்
* மாபிள் வகைகள்
* பெயின்ற் வகைகள்
* கல்வனைஸ் (அன்ரனா) பைப் வகைகள்
* இரும்பு சீற் வகைகள்
* பிளைவுட் கதவு, பலகை வகைகள்
* அஸ்பெஸ்டஸ் சீற் வகைகள்
* சீமெந்து மற்றும்
* கட்டிடப் பொருள்கள் எதுவானாலும் சரி

இவை அனைத்தையும் மலிவு விலையில்
ஒரே இடத்தில்
மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள நாடுங்கள்

## அம்பிகை ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்

112, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் எம்பதியிலே தோன்றி நானிலத்தோர் மகிழ்ச்சியுற
எண்ணரிய ஆடல் செயும் நல்லூர் முருகா! சரவணபவா!!
நலிவடைந்து தஞ்சமுற மண்ணையும் எம்மையும் காத்திட்ட கந்தா
சிரந்தாழ்த்தி வருகின்றோம் இரத்து நல்லருள் செய்வாய் தேரேறி வந்து.

# லிங்கன்
# கிறீம் ஹவுஸ்

**119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

லிங்கன் என்றால் நினைவுக்கு வருவது
" ஐஸ்கிறீம் "

சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட

ஸ்பெஷல் ஐஸ்கிறீம்
சொக்லேட் ஐஸ்கிறீம்

* நட்ஸ் ஐஸ்கிறீம் * புரூட்சலட் ஐஸ்கிறீம்
* ஜெலி ஐஸ்கிறீம் * வெனிலா ஐஸ்கிறீம்

* மட்டன் றோல் * பட்டர்கேக் வகைகள்
* மிக்ஸர் * லட்டு * மஸ்கட்

அங்கர் பட்டர் * ஸ்பெஷல் பீடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லைக் குமரனே ! நற்றமிழ்க் காவலனே !
வல்வினை வருந்தாமே வளநல்லை வந்தித்தோம்
நல்லூர் முருகா!!! நம் நாட்டு நலமுயர தனியமுதாம்
"நல்லருள்" நிறைநதருளெம் ஆறுமுகப் பெருமானே!

தற்கால நங்கையர் விரும்பும் வினோதமான டிசைன்களில்
அழகாக அதி நவீன முறையில் செய்யப்பட்ட
தங்க ஆபரணங்களுக்கு சிறந்த ஸ்தாபனம்.

**22 கரட் தங்க நகைகள் குறித்த காலத்தில்
உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.**

# வினோ நகைப் பூங்கா

185, கஸ்தூரியார் வீதி, — யாழ்ப்பாணம்.
தொலை பேசி: 2824

---

நல்லைக் குமரா ! வள்ளி மணாளா !!
அல்லற்படும் மக்களை அரவணைத்துக் காப்பாற்றுவாய்
சேவற் கொடியோனே போற்றி! போற்றி !!

## இளைஞர், மங்கையரை கவர்ந்து இழுப்பது ஆடை அலங்காரம்

பஞ்ச வர்ணக் கிளியோவென பல வர்ண, டிசைன்களில்
பட்டு, பருத்தி என்ன! எதுவானாலும் தெரிவுகளுக்கு
நம்பிக்கையான ஸ்தாபனம்.

# அலங்கார் ஆடையகம்

23, நவீன சந்தை, (உட்புறம்) — யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லைக்கந்தனின் அருள் யாவருக்கும் கிட்டுவதாக

# CORAL TASTY PRODUCTS



புதிய மெருகுடன்

* ஜாம் (விளாம்பழம், ஸ்டோபரி, அன்னாசிப் பழம், Mixed Fruit)
* நெல்லிரசம் * ஊறுகாய் * சோஸ் என்பவற்றுடன்
* கோடியல் வகைகள்

(Grapes, Pineapple, Mixed Fruit, Orange)
Icing Sugar, அரிசிமா, மோர் மிளகாய் என்பன யாழ். குடாநாடு பூராகவும் கிடைக்கும்.

**திருகு மூடியுள்ள ஜாம் போத்தல்கள்**
எம்மால் கொள்வனவு செய்யப்படும்.

Coral Tasty — சுவையின் மகாராஜன்

## CORAL TASTY FOOD INDUSTRIES

## கோறல் ரேஸ்ரி ஃபூட் இன்டஸ்றீஸ்

கேணியடி வைரவ கோவிலடி அருகாமையில்
ஆடியபாதம் வீதி, — திருநெல்வேலி.

---

நல்லைக்குமரன் மலர் சிறப்புடன வெளிவர
எமது வாழ்த்துக்கள்

**பாட்டா BATA பாட்டா**

மொத்தமாக பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்

# "பாட்டா" "BATA"

மொத்த விற்பனை நிலையம்

**350, பலாலி வீதி,**

**கந்தர் மடம், — யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்றும் மக்கள் விரும்பிப் பாவிப்பது
## அண்ணா தயாரிப்புகளே !

அண்ணா தயாரிப்புக்கள் என்றும் தரத்தில் சிறந்தது.

எமது தயாரிப்புக்களாக

❋ அண்ணா கோப்பி ❋ குரக்கன்மா ❋ அண்ணா பற்பொடி
❋ ஆட்டாமா ❋ அண்ணா பத்தி ❋ வறுத்த அரிசிமா
❋ அண்ணா ரொபி வகை ❋ பச்சை அரிசிமா ❋ உழுந்துமா

மற்றும்

கர்ப்பிணித் தாய்மாருக்கும் சிறார்களுக்கும் ஏற்ற
போசாக்கு நிறைந்த சத்துமா

**ஜீவாகாரம்**

எம்மிடம்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

# அண்ணா கோப்பிக் கடை

நவீன சந்தை, — யாழ்ப்பாணம்.

---

தூக்கு காவடி என்னே முருகா ! பாற் காவடி என்னே முருகா !
உருண்டெழுந்து வந்தோமையா அடி அழித்து வந்தோமையா
அல்லற்படும் உயிர்களுக்கு ஆறுதல் கொடுத்தருள்வாய்
வெற்றிவேல் முருகையா !

# குலம் கிறீம் ஹவுஸ்

226, ஆஸ்பத்திரி வீதி. — யாழ்ப்பாணம்.

சுகாதார முறைப்படி தயாரிக்கப்பெற்ற

ஸ்பெஷல் ஐஸ் கிறீம் ❋ சொக்லெட் ஐஸ் கிறீம்

